# திருக்கனின் கடிதங்கள்



சி.எஸ். லூயிஸ்

மொழிபெயர்ப்பாளர்
கிரேஸ் ரோஸலின் விஜய்

# திருக்கனின் கடிதங்கள்

சி.எஸ். லூயிஸ்

Version 1.0
Oct 2024

மொழிபெயர்ப்பாளர்
கிரேஸ் ரோஸலின் விஜய்

# முகவுரை

நான் இப்பொழுது வழங்குகிற இந்தக் கடிதத் தொடர்பு, எப்படி என் கைகளுக்குள் வந்தது என்று, பொது மக்களுக்கு விளக்கிச் சொல்லும்படியான எந்த எண்ணமும், எனக்கு இல்லை.

பிசாசுகளைக் குறித்த இரண்டு சமமான, எதிரெதிரான பிழைகளுக்குள், நம்முடைய மனித இனம் விழுகிறது. ஒன்று, அவைகள் இருப்பதை நம்ப மறுப்பது, மற்றொன்று, அவைகள் இருப்பதை நம்புவதோடு சேர்த்து, அளவுக்கதிகமான ஆரோக்கியமற்ற ஆர்வத்தை அவற்றில் காண்பிப்பது. இந்த இரண்டு பிழைகளைக் குறித்தும், சமமான அளவு, பிசாசுகளே மகிழ்ச்சியடைந்து, ஒரு உலகப்பற்றுள்ளவனையும், ஒரு மந்திரவாதியையும், ஒரே விதமான மகிழ்ச்சியோடு போற்றுகின்றன. இந்தப் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, இந்த வகையான எழுத்துப் படிவத்தின் பாணி, ஒருமுறை அந்த சாமர்த்தியத்தைக் கற்றுக்கொண்ட எவராலும், மிக எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகும். ஆனால், நட்பிணக்கமில்லாதவர்களோ, உணர்ச்சிவசப்படக்கூடிய மனிதர்களோ, இதைத் தவறாக பயன்படுத்துவார்கள் என்றால், அவர்கள் என்னிடமிருந்து அதை கற்றுக் கொள்ளமுடியாது.

சாத்தான் ஒரு பொய்யன் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளும்படியாக, வாசகர்கள் அறிவுறுத்தப்படு-கிறார்கள். திருக்கன் சொல்லுகிற எல்லா விஷயங்களையும், அவனுடைய சொந்த கோணத்திலிருந்துகூட, உண்மையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்தக் கடிதங்களில் குறிப்பிடப்-பட்டிருக்கிற எந்த மனிதர்களையும் அடையாளப்படுத்து-வதற்கு, நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை; ஆனால்,

ஃபாதர் ஸ்பைக் அல்லது அந்த நோயாளியின் தாயாராக சித்தரிக்கப்பட்ட கதாபாத்திரங்கள், முழுவதும் உண்மையாக இருப்பதற்குரிய சாத்தியங்கள், மிகக்குறைவாகும். உலகத்தில் இருப்பதைப்போலவே, நரகத்திலும் விரும்புகிறவைகளைக் குறித்த கற்பனையான சிந்தனைகள் உண்டு.

முடிவாக, இந்தக் கடிதங்கள் எந்த காலகட்டத்தில் எழுதப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்த, நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதை சொல்லிக்கொள்ள வேண்டும். பதினேழாவது கடிதம், ரேஷன் முறையில் உணவுகள் வழங்கப்படுதல் தீவிரமாவதற்கு முன்பாகவே எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. ஆனால் பொதுவாகவே, கால அளவீடு என்கிற, அந்த மிக மோசமான செயல்முறை, இந்த பூமியின் காலகட்டத்தோடு எந்த வகையிலும் தொடர்புடையதாகத் தெரியவில்லை. மேலும், நானும் அதைத் திரும்ப வழங்கும்படியான முயற்சிகளை எடுக்கவில்லை. ஐரோப்பிய போரின் வரலாறு, அது அவ்வப்போது உருவாகி, ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய மனநிலையில் முட்டுக்கட்டையை ஏற்படுத்துகிறது என்பதைத் தவிர, அதைக் குறித்து திருக்கனுக்கு பெரிதான ஆர்வம் எதுவும் இல்லை என்பது நன்றாகவே தெரிகிறது.

சி.எஸ். லூயிஸ்
மக்தலென் கல்லூரி
ஜூலை 5, 1941

# பொருளடக்கம்


கதாபாத்திரங்கள்............vii
கடிதம் 1............1
கடிதம் 2............7
கடிதம் 3............13
கடிதம் 4............19
கடிதம் 5............25
கடிதம் 6............31
கடிதம் 7............37
கடிதம் 8............43
கடிதம் 9............49
கடிதம் 10............56
கடிதம் 11............62
கடிதம் 12............68
கடிதம் 13............74
கடிதம் 14............81
கடிதம் 15............87
கடிதம் 16............94
கடிதம் 17............100
கடிதம் 18............106
கடிதம் 19............113
கடிதம் 20............119
கடிதம் 21............126
கடிதம் 22............132

**கடிதம் 23**......138
**கடிதம் 24**......145
**கடிதம் 25**......152
**கடிதம் 26**......159
**கடிதம் 27**......166
**கடிதம் 28**......173
**கடிதம் 29**......180
**கடிதம் 30**......188
**கடிதம் 31**......195

# கதாபாத்திரங்கள்

**திருக்கன் (Screwtape)**

உலகத்திலுள்ள மனிதர்களின் ஆத்துமாக்களை நரகத்து-க்கென்று பிடிக்கிற வேலைகளை கவனித்துவருகிற மூத்த பிசாசு, நரகத்திலிருக்கிற சோதனைத் துறையின் துணை-ச்செயலாளர், எட்டியினுடைய மாமா.

**எட்டி (Wormwood)**

இளைய சோதனையாளனாகிய ஒரு பிசாசு, நரக பயிற்சிக் கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரி, திருக்கனுடைய மருமகன்.

**நோயாளி (The patient)**

முப்பது வயதைக்கடந்த இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு மனிதன். தன் வயதான தாயை கவனித்து வருபவன்.

**பாதாளத்திலிருக்கிற நம் பிதா (Our Father Below)**

நரகத்தை ஆட்சி செய்பவன், சாத்தான் என்று அழைப்படுபவன். திருக்கனும் மற்ற பிசாசுகளும், இவன் சார்பாக வேலைசெய்து, ஆத்துமாக்களை நித்திய அழிவுக்கென்று பிடிக்கிறார்கள்.

**எதிரி (The Enemy)**

கிறிஸ்தவத்தின் கடவுள். திருக்கனுடைய பார்வையில், எதிர்க்கப்படவேண்டிய ஒரு சக்தி. அவர் நம் பார்வைக்குத் தெரியாத பிரசன்னம் உடையுவர். அவர் நித்தியமானவர்,

துவக்கமில்லாதவர். அவரிடமிருந்துதான், அன்பு, ஜீவன், வாழ்வு (existence), ஆகிய எல்லா நன்மைகளும் வருகின்றன.

### கசப்பன் (Glubose)

நோயாளியின் தாய்க்கு நியமிக்கப்பட்ட பிசாசு. இவனோடு சேர்ந்து வேலை செய்து, வளர்ந்துவருகிற நோயாளியின் விசுவாசத்தைத் தடுக்கும்படியாக, திருக்கன் எட்டிக்கு ஆலோசனைச் சொல்லுகிறான்.

### உலகப்பிரகாரமான நண்பர்கள் (The worldly friends)

இவர்கள் பணம், புத்தி, மேலோட்டமான அறிவு மற்றும் தெளிவாக எல்லாவற்றையும் சந்தேகப்படுகிற குணமுடைய மக்கள் அடங்கிய சமூகவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நோயாளி ஒரு சிறு காலகட்டத்துக்கு இவர்களோடு இணைந்து இருக்கிறான். இவர்கள் கிறிஸ்தவர் அல்லாதவர்களும், நோயாளியைக் கெடுத்து, அவன் ஆத்துமாவை நரகத்துக்கு பிடித்துக்கொள்ளும் எட்டியின் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படக்கூடிய மிகச் சரியான நபர்களும் ஆவர்.

### நோயாளியின் தாய் (The patient’s mother)

இவள் ஒரு வயதான, மற்றவர்களை காயப்படுத்தும் வார்த்தைகளைப் பேசும் நாக்குடையவள். சில நுணுக்கமான சாப்பாட்டு பழக்கவழக்கங்களின் மூலம் தன்னைச் சுற்றியிருக்கும் மனிதர்களிடம் பிரச்சனைக்குரிய வகையிலே அதிகாரம் செய்பவள்.

### சிரங்கன் (Scabtree)

பாதாளத்திலிருக்கிற நம் பிதாவின் படையைச் சேர்ந்த இன்னொரு பிசாசு.

## ஒழுங்கீனன் (Slubgob)

பிசாசுகளுடைய பயிர்ச்சிக் கல்லூரியின் தலைவன். இவன் அந்த வேலைக்குத் தகுதியற்றவன் என்றும், அவனை அந்தப் பதவியில் நியமித்ததிலிருந்து, அந்தக் கல்லூரி பல துண்டு-களாக உடைந்துவிட்டதாகவும் திருக்கன் எண்ணுகிறான்.

## தடுக்கன் (Triptweeze)

எட்டியினுடைய நோயாளியின் முன்னேற்றத்தைக்குறித்து திருக்கனிடம் அறிவிக்கிற மற்றொரு பேய்.

## சேரியன் (Slumtrimpet)

நோயாளி விரும்புகிற பெண்ணுக்கென்று நியமிக்கப்பட்ட பிசாசு. அவளுடைய மதம் குறித்த மூடிமறைக்கப்பட்ட பார்வை, நோயாளியைக் கெடுப்பதற்கு, மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று திருக்கனுக்கு இவன் அறிவிக்கிறான்.

## தவளையன் (Toadpipe)

திருக்கனுடைய உதவியாளர் வேலைக்கு நியமிக்கப்பட்ட ஒரு பிசாசு. 22ஆம் கடிதத்திலே, அன்பு மற்றும் பரலோகம் ஆகியவற்றின் மோசமான குணங்களைப் பற்றி, திருக்கன் உணர்ச்சிக் கொந்தளிப்போடு பேசியதன் விளைவாக, ஒரு பூரானாக மாறிவிடுவதால், அந்தக் கடிதத்தை அவன் சார்பாகத் தவளையன் எழுதி முடிக்கிறான்.

# கடிதம் 1

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி எதை வாசித்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீ வழிநடத்துவதையும், அவன் தன்னுடைய உலக பற்றுள்ள நண்பனை அடிக்கடி சந்திக்கும்படியாக நீ பார்த்துக்கொள்வதையும் பற்றி சொன்னதை நான் குறித்துக் கொண்டேன். ஆனாலும் நீ சிறிதளவு புத்தியற்றவனாய் இருக்கிறாய் அல்லவா? எதிரியின் பிடியிலிருந்து அவனை விலக்கி வைக்க, வாக்குவாதம் செய்வது தான் வழி என்று நீ நினைப்பதுபோல் இது இருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அவன் வாழ்ந்திருந்தால் அது உண்மையாக இருந்திருக்கக்கூடும்; அந்த காலங்களில் மனிதர்கள் எப்பொழுது ஒரு விஷயம் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது, எப்பொழுது நிரூபிக்கப்படவில்லை என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்; அப்படி நிரூபிக்கப்பட்டிருந்தால், அதை உண்மையாகவே நம்பினார்கள். அவர்கள் சிந்தனையோடு செயலையும் இணைத்துப் பார்த்து வந்தனர். தங்களுடைய வாழ்க்கை முறையை தங்களுடைய தொடர்ச்சியான சிந்தனையின் விளைவாக, மாற்றிக்கொள்வதற்கும் அவர்கள் தயாராக இருந்தனர். ஆனால் வாராந்திர பத்திரிக்கைகள், மேலும் அப்படிப்பட்ட சில ஆயுதங்கள், இவைகளின் வரவால் அதை நாம் பெரிதும் மாற்றிவிட்டோம். உன்னுடைய இந்த மனிதன், சிறுவனாக இருந்ததிலிருந்து தன்னுடைய மூளையில் பலவிதமான, ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாத தத்துவங்களை வைத்துக்கொண்டு குழப்பிக்கொள்வதில் மிகவும் பழக்கப்பட்டவன் ஆவான். அவன் கோட்பாடுகளை முதலாவது, “சரியா” அல்லது “தவறா?” என்று சிந்திக்காமல்,

இது ‘வெறும் கருத்துப்பாங்கானதா அல்லது செயல்படுத்தக் கூடியதா?’ என்றும், ‘பழையதா அல்லது நடைமுறையில் உள்ளதா?’ என்றும், ‘வழக்கமானதா அல்லது கடுமையானதா?’ என்றும் பார்க்கிறான். அவனை ஆலயத்துக்குச் செல்லவிடாமல் தடுப்பதற்கு உனக்கு இருக்கக்கூடிய சிறந்த உதவி, வாக்குவாதம் அல்ல; அவனால் புரிந்துகொள்ளமுடியாத பிதற்றொலிதான். பொருள்முதல்வாதம் தான் உண்மை, என்று அவனை சிந்திக்க வைக்க முயற்சிப்பதில் நீ நேரம் வீணடிக்காதே! அதுதான் வலிமையானது, அப்பட்டமானது மற்றும் தைரியமானது என்றும் அதுதான் எதிர்காலத்தின் தத்துவம் என்றும், அவனை சிந்திக்கவை. அப்படிப்பட்ட விஷயங்களைக் குறித்துதான் அவன் கவலைப்படுகிறவனாய் இருக்கிறான்.

வாக்குவாதத்தில் இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்றால், அது அந்த முழு போராட்டத்தையும் எதிரியினுடைய சொந்த மண்ணுக்கு எடுத்துச் சென்றுவிடும். அவனும் வாக்குவாதம் செய்யக்கூடும், அது நான் உனக்கு சொல்லிக்கொண்டிருக்கிற இந்த வகையான, உண்மையான நடைமுறைக்குரிய பிரச்சாரமாக அது இருக்கும். பல நூற்றாண்டுகளாக, இவன் பாதாளத்தில் இருக்கிற நம்முடைய பிதாவைவிட, மிகவும் கீழானவனாக காட்டப்பட்டு இருக்கிறான். வாக்குவாதம் செய்கிற அந்த செயலின் மூலமே நீ உன்னுடைய நோயாளியின் சிந்திக்கும் திறனை எழுப்பி விடுகிறாய். அது விழித்துக் கொண்டால் அது எங்கு போய் முடியும் என்று யாரால் கணிக்க முடியும்? நமக்கு சாதகமாக முடியும்படியாக அவனுடைய எண்ணக்கோர்வையை திரிக்கலாம் என்றாலும் உன்னுடைய நோயாளியினுடைய தற்காலிகமான உணர்ச்சி அனுபவங்களின் மேலுள்ள அவனுடைய கவனத்தை நீ திசைதிருப்பி, இந்த பிரபஞ்சத்திற்குரிய பிரச்சினைகளின் மேல் அவனுடைய கவனத்தை திருப்புகிற, ஒரு பயங்கரமான பழக்கத்தை உன் நோயாளியிடம் பலப்படுத்திவிடுவாய்

என்பதை நீ கண்டுகொள்வாய். உன்னுடைய வேலை என்னவென்றால், தற்காலிகமான உணர்ச்சிகளின் மேல் அவனுடைய கவனத்தை பதித்துவைப்பதுதான். அதை அவன் இது தான் “உண்மையான வாழ்க்கை” என்று அழைக்கும்படியாக அவனுக்கு கற்றுக்கொடு. ஆனால் தான் எதை “உண்மை” என்று அழைக்கிறான் என்ற கேள்வியைக் கேட்கவிடாதே.

ஒன்றை நினைவில் வைத்துக்கொள். அவன் உன்னைப்போல ஒரு முழுமையான ஆவி அல்ல. நீ ஒருபோதும் ஒரு மனிதனாக இராததினாலே, அவர்கள் அந்தந்த நாளுக்குரிய சாதாரண அழுத்தத்தினாலே எவ்வளவு அடிமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நீ உணரவில்லை. ஒருமுறை எனக்கு ஒரு நோயாளி இருந்தான்; அவன் ஒரு தெளிவான நாத்திகவாதி. பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலே உட்கார்ந்து வாசிக்கிற ஒரு பழக்கம் அவனுக்கு இருந்தது. ஒரு நாள் அவன் அப்படி உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய மனதிலே ஏற்பட்ட ஒரு தொடர்ச்சியான சிந்தனைகள், தவறான பாதையில் போய்க்கொண்டிருப்பதை கவனித்தேன். நான் நினைத்தது போலவே ஒரே நொடியில், எதிரியானவன் அவனுக்கு அருகில் வந்து நின்றான். நான் எங்கு இருக்கிறேன் என்று யோசிப்பதற்குள்,என்னுடைய 20 வருடகால உழைப்பும் சிதைய ஆரம்பிப்பதை பார்த்தேன். வாக்குவாதத்தின் மூலம் நான் அதை பாதுகாக்க முயற்சித்திருந்தால், என்னுடைய எல்லா உழைப்பும் வீணாகியிருக்கும். ஆனால் நான் அப்படிபட்ட ஒரு முட்டாள் அல்ல. அந்த மனிதனுடைய பகுதியில் எது என்னுடைய கட்டுக்குள் மிகவும் அடங்கியிருந்ததோ, அந்த இடத்தில் உடனே தாக்கி, மதிய உணவிற்கான வேளை மிகவும் நெருங்கிவிட்டது என்று பரிந்துரைத்தேன். ஆனால், இது மதிய உணவைக்காட்டிலும் மிகவும் முக்கியமானது என்று, எதிரியும் எதிர்ப் பரிந்துரைத்திருப்பான் என்று எண்ணுகிறேன்.

(எதிரிஎன்ன பேசுகிறான் என்பதை நம்மால் ஒட்டுக் கேட்கமுடியாது என்பது உனக்குத் தெரியுமா?) அப்படித்தான் சொல்ல ஆரம்பித்திருப்பான் என்று நான் நினைக்கிறேன். நான் என்னுடைய நோயாளியிடம், “அமைதலாய் இரு. இந்த விஷயம் சிக்கிரமாய் எதிர்கொண்டு தீர்க்கமுடியாத அளவுக்கு மிகப்பெரிய விஷயமாக இருக்கிறது" என்று கூறினவுடனே, அவனுடைய முகம் பிரகாசம் அடைந்தது. “மதிய உணவை அருந்திவிட்டு, பின்னர் மீண்டும் வந்து ஒரு புத்துணர்ச்சியான மனதோடு இதை எதிர்கொள்ளலாம்” என்று நான் சொல்லிமுடிக்கும் முன்பாகவே, அவன் கதவைவை நோக்கி பாதி தூரம் சென்றுவிட்டான். அவன் தெருவை அடைந்த அந்த கணத்திலேயே, இந்த போரில் நமக்கு வெற்றி கிடைத்துவிட்டது. மதியவேளை செய்தித்தாளை வைத்துக்கொண்டு கூச்சலிடுகிற ஒரு சிறுவனையும், 73ஆம் நம்பர் பஸ் கடந்து செல்லுவதையும் நான் அவனுக்கு காண்பித்து, கடைசிப் படியை அவன் சென்றடையும் முன்பாகவே, அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கையை அவனுக்குள் ஏற்படுத்தி விட்டேன். என்னவென்றால், ஒரு மனிதன் தன் புத்தகங்களோடு தனிமையில் அடைபட்டிருக்கும்போது, அவனுடைய மனதில் எப்படிப்பட்ட விசித்திரமான சிந்தனைகள் தோன்றினாலும், அப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாம், நிச்சயமாக உண்மையாக இருக்கமுடியாது என்பதை காண்பிப்பதற்கு, அன்றாட வாழ்க்கையின் ஒரு ஆரோக்கியமான அளவு போதுமானது என்பதே. (இதில் ஆரோக்கியமான அளவு என்று அவன் குறிப்பிடுவது அந்த பஸ்ஸையும் அந்த செய்தித்தாள் விற்கும் சிறுவனையும்தான்). அவன் சற்றே தப்பித்தான் என்பதை உணர்ந்துகொண்டான். மேலும் தன்னுடைய பிற்காலத்திலே, இதைக் குறித்து அவன் விரும்பிக் கூறின வார்த்தைகள் என்னவென்றால், "நம்முடைய அடிப்படை சிந்திக்கும் திறனில் உள்ள தவறுகளுக்கு எதிராக இருக்கக்கூடிய,

நம்முடைய கடைசிப் பாதுகாப்பு எதுவென்றால், நிஜத்தைக் குறித்து நமக்கு இருக்கக்கூடிய அந்த தெளிவற்ற உணர்வுதான் " என்பதாகும். அவன் இப்பொழுது நம்முடைய பிதாவின் வீட்டிலே பாதுகாப்பாய் இருக்கிறான்.

நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்று இப்பொழுது உனக்குப் புரிகிறதா? பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, நாம் அவர்களுக்குள்ளே தொடங்கின அந்த வேலையின் செயல்முறைக்கு நன்றி சொல்லவேண்டும். அதன் மூலமாகத்தான், தங்களுக்கு பரிச்சயமானவைகள் தங்கள் கண் முன்பாக இருப்பதினால், தங்களுக்கு பரிச்சயம் இல்லாதவைகளை நம்புவது அவர்களுக்கு மிகவும் கடினமான ஒன்றாக இருக்கிறது. சாதாரணமான எல்லாவற்றையும் குறித்த அழுத்தத்தை அவன் மீது வைத்து அவனைத் தள்ளிக் கொண்டே இரு. எல்லாவற்றுக்கும் மேலாக அறிவியலை (அதாவது உண்மையான அறிவியலை) கிறிஸ்தவத்துக்கு எதிரான ஒரு ஆயுதமாக பயன்படுத்த முயற்சிக்காதே. அவைகள் அவனால் பார்க்கமுடியாத தொடமுடியாத சில உண்மைகளைக் குறித்து நிச்சயமாக ஊக்கப்படுத்தும். தற்கால விஞ்ஞானிகள், பலரை நாம் இழந்துபோன சோகமான நிகழ்வுகள் உள்ளன. அறிவியலுக்குள் மூழ்க வேண்டும் என்று அவன் நினைத்தால், பொருளாதாரத்தின் மீதும் சமூகவியலின் மீதும் அவன் சிந்தனையை பதித்து அவனை அந்த விலைமதிப்பில்லாத “அன்றாட வாழ்க்கை” என்பதிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்காதே. ஆனால் இவை எல்லாவற்றிலும் சிறந்தது என்னவென்றால் அவன் அறிவியலை வாசிக்காதபடி தடுப்பதும், தனக்கு எல்லாம் தெரியும் என்றும், சாதாரண பேச்சு வழக்கத்தில் தான் எடுத்துக்கொண்டவைகளும், தான் வாசிப்பைவைகளும் யாவும் “சமீபகாலத்து ஆராய்ச்சியின் முடிவுகள்தான்” என்ற பிரம்மாண்டமான பரந்த ஒரு சிந்தனையை அவனுக்குக் கொடுப்பதும்தான். நீ அவனை குழப்புவதற்காகத்தான்

அங்கு இருக்கிறாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். உன்னைப் போன்ற குட்டிச்சாத்தான்கள் எல்லாம் இப்பொழுது பேசிக்கொள்வதை வைத்துப் பார்த்தால் நம்முடைய வேலை என்னவோ கற்றுக்கொடுப்பது என்று மற்றவர் நினைத்து விடுவார்கள் போல இருக்கிறதே!

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 2

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி ஒரு கிறிஸ்தவனாகிவிட்டான் என்பதைக் கடுமையான அதிருப்தியுடன் குறித்துக்கொள்கிறேன். நீ வழக்கமான தண்டனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்கிற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளாதே. உண்மையில் உன்னுடைய தெளிவான நிலையில் கூட அப்படி ஒன்று நடக்கும் என்று நீ நினைத்துவிடமாட்டாய் என்று நம்புகிறேன். இப்போதைக்கு, நாம் இந்தச் சூழ்நிலையை நம்மால் முடிந்தவரை சாதகமாக்கிக் கொள்ளவேண்டும். நம்பிக்கை இழக்கவேண்டிய அவசியம் இல்லை. மதம் மாறின நூற்றுக்கணக்கான வயது வந்தோரை, எதிரியினுடைய முகாமில், ஒரு சுருக்கமான தங்குதலுக்குப் பிறகு நாம் மீட்டெடுத்திருக்கிறோம். அவர்கள் இப்போது நம்மோடு இருக்கிறார்கள். அந்த நோயாளியினுடைய மனரீதியான மற்றும் சரீரப் பிரகாரமான எல்லாப் பழக்கங்களும் இன்னும் நமக்கு சாதகமாகவே இருக்கின்றன.

இப்போது நமக்கு இருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய கூட்டணி, சபையேதான் அதாவது church தான். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதே. சபையை, எல்லா காலங்களிலும் இடத்திலும் பரந்து விரிந்து, நித்தியத்திலே வேர்பற்றிக் கொடியேற்றின, ஒரு மகா பயங்கரமான சேனையாக நாம் பார்க்கின்ற வண்ணத்திலே நான் குறிப்பிடவில்லை. அந்தக் காட்சி நம்முடைய மிகத் துணிச்சலான சோதனையாளர்களைக்கூடச் சங்கடமடையச் செய்யும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நல்ல வேளையாக அது இந்த மனிதர்களுடைய பார்வைக்கு

முற்றிதெரிவதில்லை. உன்னுடைய நோயாளியின் பார்வைக்குத் தெரிவதெல்லாம், அந்தப் பரந்த நிலப்பரப்பில், புதிதாகக் கட்டப்பட்டு, பாதி முடிந்த நிலையிலுள்ள, western முறையில் எழுப்பப்பட்ட கட்டிடம் மட்டுமே. அவன் உள்ளே செல்லும்போது, தன் முகத்தில் எண்ணெய் வழிகிற முகபாவத்தோடுள்ள, உள்ளூர் மளிகை வியாபாரியைப் பார்க்கிறான். அவன் பரபரப்பாக இவனிடத்தில் வந்து, இவர்கள் இருவருக்குமே புரியாத வழிபாட்டு முறை எழுதப்பட்டுள்ள, ஒரு சிறிய வழவழப்பான புத்தகத்தையும், மிகவும் சிறிய அச்சு எழுத்துக்களைக் கொண்ட, கெடுதல் தரும் வார்த்தைகள் அடங்கிய, அதிகபட்சம் கெட்டவைகளாய் இருக்கிற, அநேக பக்திப் பாடல்வரிகளை உள்ளடக்கிய, ஒரு அழுக்கான சிறு புத்தகத்தையும் தருகிறான். இவன் தன்னுடைய இருக்கைக்குச் சென்று, சுற்றிலும் திரும்பிப் பார்க்கும்பொழுது, அவன் இதுவரைக்கும் தவிர்த்து வந்த, அந்த குறிப்பிட்ட அண்டை வீட்டாரையும், (தான் அடிக்கடி பார்ப்பவர்களையும்) காண்கிறான். உன்னுடைய அழுத்தத்தின் முழு கனமும், அந்த அண்டை வீட்டாரின் மேலேயே முற்றிலுமாக இருக்கும்படி பார்த்துக்கொள். அவனுடைய மனதிலே “கிறிஸ்துவினுடைய சரீரம்” என்பதற்கும், தன்னுடைய இருக்கையின் அருகில், தான் நிஜத்தில் பார்த்துக் கொண்டிருக்கிற முகங்களுக்கும் நடுவே, அவனுடைய மனம் அங்குமிங்குமாக அலைபாயும்படிச் செய். அந்த அடுத்த இருக்கையிலே, எப்படிப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பது அவ்வளவு முக்கியம் வாய்ந்தது அல்ல என்பது உண்மைதான். அதில் ஒருவன் எதிரியினுடைய பக்கத்திலே, ஒரு மகா பெரிய யுத்தவீரனாய் இருக்கிறான் என்பதைக்கூட நீ அறிந்திருக்கலாம். அது ஒரு விஷயமே அல்ல. நல்ல வேளை, பாதாளத்தில் உள்ள நம் பிதாவுக்கு நன்றி, உன்னுடைய நோயாளி ஒரு முட்டாளாக இருக்கிறான். அந்த அண்டைவீட்டாரில்

யாராவது ஒருவர் தவறான ராகத்தில் பாடினாலோ, அல்லது நடக்கும்பொழுது சத்தம் போட்டுக்கொண்டே நடந்தாலோ, அல்லது மிகவும் பருமனாக இருந்தாலோ, விசித்திரமான ஆடைகளை உடுத்தினாலோ, உன்னுடைய நோயாளி, மிகவும் எளிதாகவே, “அப்படியானால் இவர்களுடைய மதம், நிச்சயம் ஏதோ ஒரு வகையிலே வேடிக்கைக்குரியதாகத்தான் இருக்கும்போலத் தெரிகிறது” என்று நம்பிவிடுவான். அவன் தற்போது இருக்கிற இந்த நிலைமையிலே, அவனைப் பொறுத்தவரை கிறிஸ்தவர்களை தன்னுடைய மனதில், மிகவும் ஆவிக்குரியவர்களாகவே எண்ணுகிறான். ஆனால், உண்மையில் அது பெரும்பாலும் ஒரு கற்பனையான வரைபடமே ஆகும். பண்டைய ரோமர் காலத்திலே, போர்வீரர்கள் அணிந்திருந்த வஸ்திரங்களையும், காலில் அணிந்திருந்த காலணிகளையும், கேடயங்களையும், அவர்களுடைய வெறும் கால்களையுமே, அவன் தன் எண்ணம் முழுவதும் நிரப்பியிருப்பதால், ஆலயத்திலே மற்ற மனிதர்கள் நாகரீகமான ஆடைகள் அணிந்திருக்கிறார்கள் என்கிற உண்மை, (அவனை அறியாமலேயே) அவன் ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் கடினமான ஒன்றாகத் தெரிகிறது. அந்த எண்ணம் அவனுக்குள் மேலோங்க அனுமதிக்காதே. அவர்கள் எப்படியாக இருக்கவேண்டும் என்று தான் எதிர்பார்த்தான், என்கிற கேள்வியை அவனைக் கேட்கவிடாதே. அவனுடைய எண்ணத்தில் எல்லாவற்றையும் கலங்கலாகவே வைத்துக்கொள். அப்பொழுதுதான், எல்லா நித்தியத்துக்கும், அவனுக்கு நரகம் வழங்கக்கூடிய அந்த விசித்திரவிதமான தெளிவைக் கொடுத்து, உன்னை நீயே மகிழ்வித்துக் கொள்ளமுடியும்.

ஆக, முதல் சில வாரங்களிலே, ஒரு ஆலயத்துக்கு செல்லுகிற மனிதனாக, அவனுக்கு நிச்சயமாகவே ஏற்பட-ப்போகிற, ஏமாற்றங்கள் அல்லது வீழ்ச்சிக்கு நேராகப் போய்க்கொண்டிருக்கிற அந்த முடிவின் மீது, கடினமாக

வேலை செய். ஒவ்வொரு மனிதனுடைய சகிப்புத்தன்மையின் அளவுக்குத்தக்கதாக, இந்த ஏமாற்றம் ஏற்படுவதற்கு, எதிரியானவன் அனுமதிக்கிறான். இப்படிப்பட்ட ஏமாற்றம் எப்பொழுது ஏற்படுகிறதென்றால், தன்னுடைய பாலகப் பருவத்திலே கிரேக்க இதிகாசமான “ஒடிசி”யின் கதைகளைக் கேட்ட ஒரு சிறுவன், உண்மையாகவே, கிரேக்க மொழியைக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும்பொழுது ஏற்படுகிறது. அதுபோல, காதலர்கள் திருமணம் செய்துகொண்டு, இருவரும் ஒன்றாக வாழ ஆரம்பிக்கும்போதும் ஏற்படுகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் இந்த ஏமாற்றம், கனவாக இருக்கிற ஆசைகள், கடினமான உழைப்பாக மாறும்பொழுது ஏற்படுகிறது. எதிரி இந்த ஆபத்தான காரியத்தைச் செய்ய, ஏன் துணிகிறான் என்றால், அவனுக்கு ஒரு வினோதமான கற்பனை ஒன்று உண்டு. அது என்னவென்றால், இந்த அருவருப்பான சின்ன மனிதப் பூச்சிகளை, அவன் அழைக்கிறபடி “சுதந்திரமான” அன்பு கொண்டவர்களாகவும், ஊழியர்களாகவும் - அதாவது “பிள்ளைகள்” என்கிற வார்த்தையைத்தான் அவன் பிரயோஜனப்படுத்துகிறான், அப்படியாகவும் மாற்றி விடவேண்டும் என்பதற்காகத்தான். இதை அவன், அந்த இரண்டு கால் மிருகங்களோடு, ஒரு இயற்கைக்கு மாறான தொடர்பை ஏற்படுத்தி, இந்த முழு ஆவிக்குரிய உலகத்தையும் நாசம் செய்கிற, தன்னுடைய வழக்கமான அன்பின் மூலமாகவேச் செய்கிறான். அவன் அவர்களுடைய விடுதலையை விரும்புவதால், அவர்கள் தங்களுக்கு முன்பாகத், தான் வைக்கிற எந்த ஒரு இலக்கையும், அவர்கள் அடைய, அவர்களுடைய சாதாரண விருப்பங்கள் மற்றும் பழக்கங்களின் மூலமாகவே அவர்களைச் சுமந்துசெல்வதற்கு, அவன் மறுத்துவிடுகிறான். அவர்கள் தாமாகவே அதைச் செய்யவேண்டும் என்று சொல்லி அவர்களை விட்டு விடுகிறான். இங்குதான் நம்முடைய வாய்ப்பு அடங்கியிருக்கிறது.

ஆனால் இன்னொன்றையும் நினைவில் வைத்துக்கொள், நம்முடைய ஆபத்தும் இங்குதான் அடங்கியிருக்கிறது. ஒருவேளை, அவர்கள் இந்த ஆரம்பகால வறட்சியை வெற்றி-கரமாக கடந்துவிட்டால், அவர்கள் தங்கள் உணர்ச்சியின் மீது அதிகமாகச் சார்ந்திருக்க மாட்டார்கள். ஆதலால் நாம் அவர்களை சோதிப்பது மிகவும் கடினமாகிவிடும்.

அவனுடைய இருக்கைக்கு அருகில் இருக்கிற மனிதர்கள், அவனுடைய ஏமாற்றத்துக்கு, எந்த ஒரு அறிவுக்கு ஏற்புடைய காரணத்தையும் வழங்கமாட்டார்கள் என்ற அனுமானத்திலேயேதான் இதுவரை நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். அப்படி அவர்கள் வழங்கினாலும், உதாரணத்துக்கு, உன்னுடைய நோயாளி அந்த வினோதமான தொப்பியை போட்டுக் கொண்டிருக்கிற அந்தப் பெண்மணி, ஒரு தீவிரமான சீட்டுக்கட்டு விளையாடுபவள் என்பதை அறிந்துகொண்டாலோ அல்லது அந்த சத்தம் போடுகிற ஷூக்களை அணிந்து வருகிற மனிதன், ஒரு கஞ்சன் என்றும், மிரட்டி பணம் வாங்குகிறவன் என்றும், அவன் அறிந்துகொண்டாலோ நிச்சயமாக அது உன்னுடைய வேலையை மிகவும் சுலபமாக்கிவிடும். அப்படியானால் நீ செய்யவேண்டியது என்னவென்றால், அவனுடைய மனதில் "நான், இருக்கிற வண்ணமாகவே, ஏதோ ஒரு வகையிலே, என்னை ஒரு கிறிஸ்தவன் என்று கருதுவேன் என்றால், என்னுடைய இருக்கைக்கு அருகில் அமர்ந்திருக்கிற, மற்ற மனிதர்களுடைய வித்தியாசமான தீய பழக்கங்கள், அவர்களுடைய மதம் வெறும் பாசாங்காகவும், எந்த வித்தியாசமுமற்ற வழக்கமான ஒன்றாகவும், தன்னை ஏன் காண்பிக்க வேண்டும்?" என்ற கேள்வியை எழும்பவிடாதே. இப்படி ஒரு வெளிப்படையான சிந்தனை, ஒரு மனிதனுடைய எண்ணத்திலிருந்து எழும்பாமல் இருக்கும்படியாக செய்யமுடியுமா என்று நீ கேட்கலாம். நிச்சயமாக முடியும், எட்டியே, நிச்சயமாக முடியும்! அவனை சரியான முறையிலே

கையாளு, அப்படிச் செய்யும்போது, அந்தச் சிந்தனை அவனுடைய மூளைக்குள் வராமல் போய்விடும். அவன், தனக்குள் எந்த ஒரு உண்மையான தாழ்மையும் ஏற்படும் அளவுக்கு, எதிரியோடு இன்னும் அவ்வளவு அதிக நேரம் செலவிடவில்லை. அவன் முழங்கால்படியிட்டு, தன்னுடைய சொந்தப் பாவத்தைக் குறித்துப் பேசுவதுகூட, வெறும் கிளிப்பிள்ளை பேச்சுதான். அவனுடைய அடிமனதிலே, தான் ஒரு கிறிஸ்தவனாக மாறினதினாலே, எதிரியினுடைய வங்கிக் கணக்கில், மிகவும் தாராளமான ஒரு தொகையைச் சேர்த்துவிட்டதாகவும், இந்த அற்பமான சாதாரண மனிதர்களோடு சேர்ந்து, ஆலயத்துக்குச் செல்வதனால், தான் அதிக தாழ்மையைக் காண்பிப்பதாகவும், அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட மனநிலையிலேயே, உன்னால் முடிந்த மட்டும், அவனை வைத்துக்கொள்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 3

என் அன்பு எட்டி,

இந்த மனிதனுக்கும் அவன் தாய்க்கும் நடுவிலுள்ள உறவைக் குறித்து, நீ எனக்கு சொன்னதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நீ உனக்கு சாதகமாக இருப்பவற்றை தொடர்ந்து கொண்டேயிருக்கவேண்டும். நம்முடைய எதிரி, மையப்பகுதியில் இருந்து வெளிப்புறத்தை நோக்கி வேலைசெய்ய ஆரம்பித்து, உன் நோயாளியின் அதிகமான நடத்தைகளை, இந்தப் புது தரத்தின் கீழ் படிப்படியாகக் கொண்டுவந்து, அவனுடைய இந்த நடத்தையை அந்த கிழவியிடம், எந்த நேரத்திலும் கொண்டுபோய்ச் சேர்த்துவிடக்கூடும். நீ இதில் முந்திக் கொள்ளவேண்டும். அந்த தாயைத் தன் பொறுப்பில் வைத்திருக்கிற நம்முடைய சக ஊழியனான கசப்பனிடம், நீ நெருங்கிய தொடர்பை வைத்துக்கொள். மேலும் பரஸ்பர எரிச்சல், அன்றாடக் குத்தலான வார்த்தைகள் போன்ற, பல நல்ல நிலையான பழக்கங்களை, நீங்கள் இருவருமாகச் சேர்ந்து அந்த வீட்டில் உருவாக்குங்கள். இதற்கு, கீழ்க்கண்ட செய்முறைகள் மிகவும் பிரயோஜனமானவைகளாகும்.

1. அவனுடைய மனதை, அவனுடைய உள்ளான வாழ்க்கையின் மேலேயே வைத்துக்கொள். தன்னுடைய இந்த மதமாற்றம், தனக்கு உள்ளாக நடந்த ஏதோ ஒன்று என்று, அவன் நினைத்துக் கொண்டிருக்கின்றான். ஆதலால், அவனுடைய கவனமெல்லாம், பெரும்பாலும் தற்சமயம் தன்னுடைய சொந்த மனது இருக்கக்கூடிய நிலைமைகளின் மேல் - என்று சொல்வதைக்காட்டிலும், அவற்றில் இருக்கக்கூடிய ஏற்றுக் கொள்ளமுடியாத சில

காரியங்களை நீக்கிவிட்டுப் பிறகுள்ளவைகளின் மேல் உள்ளது. இவற்றின்மேல் மட்டுமே அவனுடைய பார்வை இருக்கும்படியாக நீ அவனை அனுமதிக்கவேண்டும். இதை மட்டுமே ஊக்குவிக்க வேண்டும். அவனுடைய மனதை அடிப்படையான கடமைகளில் இருந்து விலக்கி, மிகவும் மேம்பட்டவைகளிலும், ஆவிக்குரிய விஷயங்களிலும் அதைத் திசைத் திருப்பு. நமக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கக்கூடிய மனித சுபாவமாகிய, வெளிப்படையான காரியங்களின் மேலுள்ள திகில் மற்றும் புறக்கணிப்பை, நீ இன்னும் மோசமாக்கி விடு. அவனோடு ஒரே வீட்டில் வாழ்ந்தவர்களுக்கும், அவனோடு அலுவலகத்திலே ஒன்றாக வேலை செய்தவர்களுக்கும், மிகவும் தெளிவாகத் தெரியக்கூடிய, அவனைக் குறித்த உண்மைகளை, அவன் ஒரு மணி நேரம் தன்னைத்தான் தற்பரிசோதனை செய்து பார்க்கும்போதும்கூட, அவனால் கண்டுபிடிக்க முடியாது என்ற நிலைக்கு நீ அவனைக் கொண்டு வரவேண்டும்.

2. அவன் தன் தாய்க்காக ஜெபிப்பதை, நம்மால் தடுப்பது என்பது நடக்காத காரியம் என்பதில் சந்தேகம் இல்லை என்றாலும், அந்த ஜெபங்கள் ஆபத்தானவைகளாய் இல்லாதபடி செய்யக்கூடிய வழிகள் நம்மிடத்தில் உள்ளன. அவைகள் எப்பொழுதும் மிகவும் “ஆவிக்குரியவைகளாய்” இருக்கும்படியாக பார்த்துக்கொள்- அதாவது, அவன் எப்பொழுதும்தன்தாயினுடையஆத்துமாவின்நிலைமையின் மேலேயே கவலைப்படவேண்டுமே ஒழிய, அவளுடைய வாதநோயைக் குறித்துக் கவலைப்படாதபடி பார்த்துக்கொள். இதனால் இரண்டு நன்மைகள் உண்டாகின்றன. முதலாவதாக, அவனுடைய கவனமெல்லாம் அவளுடைய பாவங்கள் என்று அவன் எவைகளை நினைக்கிறானோ அதின் மேலேயே தங்கிவிடும். இவைகள் உன்னுடைய சிறு உதவியின் மூலம், அவனுக்கு விருப்பமில்லாத மற்றும் எரிச்சலூட்டக்கூடிய அவளுடைய செயல்களைக் குறித்து இருக்கும்படியாக நீ

தூண்டிவிடு. இப்படிச் செய்வதன் மூலம், அவன் முழங்காலில் இருந்தாலும்கூட, அவனுடைய காயங்கள் இன்னும் சற்று வலிக்கும்படியாக, நீ அவைகளை உரசி விடமுடியும். இந்தச் செயல்முறை கடினமானதே அல்ல. மேலும், இது உனக்கு நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கும் என்பதை நீ காணமுடியும். இரண்டாவதாக, அவளுடைய ஆத்துமாவைக் குறித்த அவனுடைய சிந்தனைகள், பண்படாதவைகளும் ஒழுங்கற்றவைகளுமாய் இருப்பதால், அவன் ஓரளவுக்கு ஒரு கற்பனையான நபருக்காகவே ஜெபித்துக் கொண்டிருப்பான். இதில் உன்னுடைய வேலை என்னவென்றால், அந்தக் கற்பனையான நபரை ஒவ்வொரு நாளும் தன்னுடைய நிஜ தாயைக்காட்டிலும்- அதாவது தினமும் காலை உணவு சாப்பிடுகிற அந்த மேஜையிலே அமர்ந்து, காயப்படுத்தும் பேச்சுகளைப் பேசுகிற அந்தக் கிழவியைக்காட்டிலும், மிகவும் வேறுபட்ட நபராக இருக்கும்படிச் செய்வதுதான். காலம் செல்லச்செல்ல, தன்னுடைய ஜெபங்களிலே தன் கற்பனையானதாயினிடம்அவன்கொண்டஎந்தசிந்தனையும் அல்லது உணர்வும், தன்னுடைய உண்மையான தாயிடம் தான் நடந்துகொள்ளுகிற விதத்தைப் பாதிக்காதபடி, இரண்டிற்கும் உள்ள பிளவை அதிகமாக்கிவிடுவாய். என்னுடைய சொந்த நோயாளிகள் சிலர் என்னிடம் உண்டு, அவர்களை என் கைக்குள்ளாக மிகவும் அடக்கி வைத்திருக்கிறேன். எந்த அளவுக்கு என்றால், ஒரு சில நொடியிலேயே, அவர்களைத் தங்கள் மனைவி அல்லது மகனுடைய "ஆத்துமாவுக்காக" உணர்ச்சிவசப்பட்டு ஜெபிக்கிற ஒரு நபராக இருப்பதிலிருந்து, தன்னுடைய நிஜ மனைவியையோ மகனையோ எந்தத் தயக்கமுமில்லாமல் அடிக்கிற அல்லது அவமதிக்கிற ஒரு நபராக மாற்றும் அளவுக்கு.

3. இரண்டு நபர்கள், பல வருடங்கள் ஒரேவீட்டில் சேர்ந்து வாழும்போது, வழக்கமாக என்ன நடக்கும் என்றால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சில விதமான குரலின் தொனியும்,

முகத்தின் சில முகபாவங்களும், ஒருவரையொருவர் சகிக்கமுடியாத அளவுக்கு எரிச்சலூட்டக்கூடியவைகளாக இருக்கும். அவைகளைக் கொண்டு நீ வேலைசெய். உன்னுடைய நோயாளி, அவனுடைய பாலகப் பருவத்திலே, தன்னுடைய தாய் தன் புருவத்தை ஒரு விதமாக தூக்குவதை, எவ்வளவாக வெறுத்தான் என்பதை அவனுடைய முழு சுயநினைவுக்குள்ளும் கொண்டுவா. அவன் அதை எந்த அளவுக்கு வெறுக்கிறான் என்பதையும், அவள் அவன் எரிச்சலடையும்படியாகவே அதைச் செய்கிறாள் என்றும் அவன் நினைக்கட்டும்- உன் வேலையை நீ நன்றாகச் செய்தாயானால், அவ்வாறாகத் தான் நினைப்பது, எவ்வளவு உண்மையற்றது என்பதை அவன் கவனிக்கமாட்டான். மேலும், தனக்கும் அவளை எரிச்சல் மூட்டக்கூடிய அதே வகையான தொனிகளும் முகபாவங்களும் உள்ளதோ என்ற சந்தேகத்தை அவனுக்குள் ஒருபோதும் எழும்பவிடாதே. அவன் தன்னைத்தான் பார்க்கவும் கேட்கவும் முடியாததால், இதை நாம் எளிதாகச் சமாளித்துவிடலாம்.

4. நாகரீகமான வாழ்க்கை முறையிலே, வீட்டிற்குள் ஒருவ-ர்மேலொருவருக்கு இருக்கக்கூடிய வெறுப்புகளை வெளி-ப்படுத்தும்படியாகச் சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாம், வழக்கமாக காகிதத்தில் எழுதப்படும்பொழுது நிச்சயம், காயப்படுத்தாத ஒருவரையும் கஷ்டப்படுத்தாத வார்த்தை-களாய்த் தெரியலாம். ஆனால், அவை சொல்லப்பட்ட அந்தத் தொனியும் அந்தக் குரலும் அல்லது சொல்லப்பட்ட அந்தக் கனமும் முகத்தில் ஓங்கி ஒரு அரைவிட்டதற்கு எந்த வகையிலும் குறைந்தவைகள் அல்ல. இந்த ஆட்டம் தொட-ர்ந்துகொண்டேயிருக்க, நீயும் கசப்பனும் இந்த இரண்டு முட்டாள்களுக்கும், ஒரு இரண்டு வகையான தரம் இருக்கு-ம்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும். எப்படியென்றால், உன்னுடைய நோயாளி, அவனுடைய எல்லாப் பேச்சுக்க-ளும் எந்தவித உள்நோக்கமும் இல்லாதவைகள் என்றும்,

சொல்லப்பட்ட அந்த வார்த்தைகள் மட்டுமே நிதானிக்கப்படவேண்டும் என்றும் அவன் அடித்துக் கேட்கவேண்டும். ஆனால் அதே நேரம், தன்னுடைய தாய் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைகளையும், முழுதாகவும் அதிகப்படியான உணர்ச்சிவசப்பட்ட விளக்கத்தோடும், சொல்லப்பட்ட சூழ்நிலையோடும், சந்தேகத்திற்குரிய உள்நோக்கத்தோடும் அவன் நிதானிக்கவேண்டும். அவளும் அதையே அவனுக்குச் செய்யும்படியாக ஊக்குவிக்கப்படவேண்டும். இப்படியாக, ஒவ்வொரு சண்டையின்போதும் அவர்கள் இருவரும், தாங்கள் மிகவும் குற்றமற்றவர்கள் என்ற முழு நம்பிக்கையில்லாவிட்டாலும், குறைந்தபட்சம் ஓரளவுக்கான நம்பிக்கையோடு பிரிந்து செல்லவேண்டும். இந்த விஷயம் எப்படி இருக்கும் என்று நீ புரிந்துகொள்ள, உதாரணத்துக்கு: "சாப்பாடு எப்பொழுது தயாராகும் என்று மட்டும்தான் அவளிடம் கேட்டேன், அதற்கு அவளுக்கு அவ்வளவு கோபம் வருகிறது" என்று அவன் கூறுவதுபோல்தான் இது. இந்தப் பழக்கம் மட்டும், அவர்களுக்கு நன்றாக ஏற்பட்டுவிட்டால், ஒரு மனிதன் புண்படுத்தப்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு வெளிப்படுகிற வார்த்தைகளைப் பேசுவதையும், ஆனால் அதே நேரம், தான் புண்படும்பொழுது, அதை ஒரு மனக்குறையாகவும் எடுத்துக்கொள்ளுகிற, ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை உன்னால் பெற்றுக்கொள்ள முடியும்.

கடைசியாக அந்த கிழவியின் பக்தி நிலைமைக் குறித்து எனக்கு ஏதாவது சொல்லு. அவள் தன் மகனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட இந்தப் புது (மதமாற்றம்) விஷயத்தைக் குறித்து ஏதும் பொறாமை கொள்ளுகிறாளா? அவன் மற்றவர்களிடமிருந்தாவது கற்றுக் கொண்டிருக்கவேண்டும் என்றும், தான் அவனுக்கு சின்ன வயதிலேயே இதைப் பற்றி படித்துக் கொள்ளும்படியான நல்ல வாய்ப்புகளை அளித்திருந்தும், அவன் இவ்வளவு தாமதமாக இதைச் செய்ததைக் குறித்தும் கோபப்படுகிறாளா? அவன்

இந்த விஷயத்தை ஒரு பெரிய காரியமாக எண்ணி அலப்பிக்கொள்வதாகவும், மிகவும் இலகுவான வழியிலே அவன் அதற்குள் நுழைவதாகவும் அவள் நினைக்கிறாளா? நம்முடைய எதிரியின் கெட்ட குமாரன் கதையிலே வருகிற அந்த மூத்த சகோதரனை நினைத்துப் பார்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 4

என் அன்பு எட்டி,

நான் உனக்கு மிகவும் வலி நிறைந்த பாடமாகிய ஜெபத்தைக் குறித்து, முழுவதுமாக எழுத வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கடந்த கடிதத்தில் நீ எனக்கு எழுதியிருந்த சிறுபிள்ளைத்தனமான யோசனைகள் எச்சரிக்கின்றன. அவன் தன் தாய்க்காக செய்த ஜெபங்களைக் குறித்த என்னுடைய ஆலோசனையெல்லாம், “அசாதாரணமான வகையிலே துரதிஷ்டவசத்தில் முடிந்தது” என்ற உன் கருத்தை, நீ குறிப்பிடாமல் விட்டிருக்கலாம். ஒரு மருமகன் தன் மாமாவுக்கோ அல்லது ஒரு இளநிலைச் சோதனையாளன், தன் துறையின் துணைச்செயலாளருக்கோ எழுதுகிற விதம் இது அல்ல. உன்னுடைய பொறுப்பை நீ மற்றவர் மேல் வைத்துவிடுகிற ஒரு விரும்பத்தகாத ஆசையையும் இது வெளிப்படுத்துகிறது. உன்னுடைய சொந்த தவறுகளுக்கான விலையை, நீயே செலுத்துவதற்குப் பழகிக் கொள்ளவேண்டும்.

நீ செய்யக்கூடிய சிறந்த வேலை என்னவென்றால், எப்பொழுதெல்லாம் முடிகிறதோ, அப்பொழுதெல்லாம் அந்த நோயாளியை, ஜெபிக்க வேண்டும் என்கிற தீவிர எண்ணத்திலிருந்து, முற்றிலுமாக விலக்கி வைப்பதேயாகும். ஒரு நோயாளி, சமீபத்திலே எதிரியினுடைய கட்சிக்கு மாறின ஒரு வயதுவந்தவனாக இருக்கும்போது, அதாவது உன்னுடைய இந்த மனிதனைப்போல இருக்கும்போது, நாம் செய்யக்கூடிய சிறந்த காரியம் என்னவென்றால், தன்னுடைய சிறு வயதில் அவன் செய்த, அந்த கிளிப்பேச்சுப் போன்ற ஜெபங்களை, அவன் நினைவுகூருவதாகவோ அல்லது நினைவுகூருவதை நினைப்பதாகவோ ஊக்குவிப்பதேயாகும். இதற்கு

எதிர்மாறான செயலாக, அவன் முற்றிலும் தன்னிச்சையான, உள்ளார்ந்த, திட்டமிடப்படாத மற்றும் வழக்கத்துக்கு மாறான ஒன்றை (ஜெபத்தை) நோக்கும்படியாக அவன் வற்புறுத்தப்படுவான். ஆரம்ப நிலையில் உள்ள ஒருவனுக்கு, இது எப்படி இருக்குமென்றால், அவனுடைய தீர்மானமும் அறிவும் மற்றும் அறிவின் முழு கவனமும் எந்த வகையிலும் பங்குபெறாத அவனுக்குள்ளே ஏற்படுகிற ஒரு தெளிவற்ற பக்தி நிலையின் முயற்சியாகவே இருக்கும். அவர்களுடைய, கோல்ரிஜ் (Coleridge) என்ற கவிஞன், இவ்வாறாக எழுதியிருக்கிறார், "அவன் அசைகிற உதடுகளினாலும், முடங்கின முழங்கால்களினாலும் ஜெபிக்காமல், வெறுமனே தன்னுடைய ஆவியை அன்பிற்குள்ளாக ஒருமனப்படுத்தி, வேண்டுதல் செய்யும்படியான ஒரு உணர்வுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்" என்று. இப்படிப்பட்ட ஜெபங்கள் தான் நமக்கு அவசியம் வேண்டும், ஏனென்றால், இது மேலோட்டமாக பார்க்கும்போது, எதிரியினுடைய சேவையில் மிகவும் முன்னேறின நிலைமையில் இருக்கிறவர்கள் கடைப்பிடிக்கிற, மௌனத்தின் ஜெபத்துக்கு ஒத்திருக்கிறது. இதன் மூலம், புத்திசாலியான சோம்பலான நோயாளிகளை நாம் நன்றாக நீண்ட காலங்களுக்குப் பிடித்துவைத்திருக்க முடியும். நாம் குறைந்தபட்சம், அவர்களுடைய சரீரத்தின் தோரணை எப்படியிருக்கிறது என்பது, அவர்களுடைய ஜெபத்தில் எந்த மாறுதலையும் கொண்டு வரப்போவதில்லை என்று, அவர்களை வற்புறுத்தமுடியும். ஏனென்றால், அவர்கள் எப்பொழுதும் மறந்துபோகிற, ஆனால் நீ எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், அவர்கள் மிருகங்கள் என்பதும், ஆதலால், அவர்களுடைய சரீரங்கள் என்ன செய்கிறதோ, அது அவர்களுடைய ஆத்துமாவையும் பாதிக்கும் என்பதே. நாம் எப்பொழுதும் மனிதர்களுடைய எண்ணத்தில் சில விஷயங்களைப் போட்டுக் கொண்டேயிருக்கிறோம் என்று அவர்கள் கற்பனை

செய்வது மிகவும் வேடிக்கையாயிருக்கிறது. உண்மையில் நம்முடைய சிறந்த வேலை, உள்ளே போடுவது அல்லாமல் சில விஷயங்களை அவர்களிடம் இருந்து விலக்கி வைப்பதே ஆகும்.

ஒருவேளை இது தோல்வியடைந்து விட்டால் நீ அவனுடைய நோக்கத்தை லேசாக திசை திருப்புகிற செயலுக்குப் பின்வாங்கிவிடு. எப்போதெல்லாம் அவர்கள் எதிரிக்கு நேராகத் தங்கள் கவனத்தை செலுத்துகிறார்களோ, அப்போதெல்லாம் நாம் தோற்றுவிடுகிறோம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்துவிடாமல் தடுப்பதற்குப் பல வழிகள் உண்டு. இதில் எளிதான ஒன்று எதுவென்றால், அவனுடைய பார்வையை எதிரியிடமிருந்து திருப்பி அவர்களுக்குள் கவே திருப்பி விடுவதுதான். அவர்கள் தங்களுடைய சொந்த எண்ணங்களை கவனிக்கும்படியாகவும் தங்களுடைய சொந்த விருப்பங்களின் செயல்களின் மூலம உணர்ச்சிகளை உருவாக்க முயற்சி செய்யும்படியாகவும் பார்த்துக்கொள்.

அவர்கள் தங்களுக்கு இரக்கம் வேண்டும் என்று எதிரியிடம் ஜெபிக்க நினைக்கும்போது, அதற்குப் பதிலாக அவர்களுக்குள் இரக்கம் என்ற எண்ணங்களின் உணர்ச்சியை உருவாக்க முயற்சி செய்யட்டும். மேலும் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்பது அவர்களுடைய கவனத்துக்கு வராதபடி பார்த்துக்கொள். அவர்கள் தைரியத்துக்காக ஜெபிக்கும்போது, தங்களுக்குள் அந்த தைரியத்தை உணர முயற்சி செய்யட்டும். தாங்கள் மன்னிப்புக்காக ஜெபிக்கிறோம் என்று அவர்கள் சொல்லும்போது தாங்கள் மன்னிக்கப்பட்டுவிட்ட அந்த உணர்ச்சியை பெற்றுக்கொள்ள முயற்சி செய்யட்டும். ஒவ்வொரு ஜெபமும் தங்களுக்குள் அந்த விருப்பப்பட்ட உணர்வை வெற்றிகரமாக உருவாக்குகிறதா என்பதை வைத்து அந்த ஜெபத்தின் மதிப்பை அவர்கள் கணக்கிட கற்றுக்கொடு. அப்படிப்பட்ட விதமான ஜெபத்தின்

வெற்றியும் தோல்வியும், தாங்கள் அந்த நேரத்திலே நன்றாக இருக்கிறார்களா அல்லது பலவீனமாக இருக்கிறார்களா, புத்துணர்ச்சியோடு இருக்கிறார்களா அல்லது சோர்வோடு இருக்கிறார்களா என்பதைப் பொறுத்தே இருக்கிறது என்பதை, அவர்கள் ஒருபோதும் கண்டுபிடிக்க விடாதே.

ஆனால் நிச்சயமாக அதுவரைக்கும் எதிரி சும்மா இருக்கமாட்டான். எங்கெல்லாம் ஜெபம் இருக்கிறதோ அங்கெல்லாம் அவன் உடனேயே நேரடியாக செயலில் இறங்குகிற ஆபத்தும் இருக்கிறது. முற்றிலும் ஆவியாக இருக்கிற நமக்கும் அவனுடைய நிலைக்கும் உள்ள கண்ணியத்திற்கும் முழங்காலில் நிற்கிற இந்த மனித மிருகங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அவன் இழிவான வகையிலே பாரபட்சமில்லாமல் நடக்கிறான். அவன் சிறிதளவுகூட வெட்கமற்ற வகையிலே சுயஅறிவை ஊற்றித் தன்னை வெளிப்படுத்துகிறான். அவன் உன்னுடைய முதல் முயற்சியான அந்தத் திசை திருப்புதலை தோற்கடித்துவிட்டாலும் நமக்கு அதைக்காட்டிலும் சத்தமில்லாத ஒரு ஆயுதம் இருக்கிறது. மனிதர்கள், எதிரியை குறித்து துரதிர்ஷ்டவசமாக நம்மால் தவிர்க்க முடியாத அந்த நேரடியான உணர்விலிருந்து தொடங்குவதில்லை. . அந்த கொடூரமான பிரகாசத்தையும், அந்த உருவக்குத்துகிற சுட்டெரிக்கும் பார்வையையும், அது நம் வாழ்க்கையின் பின்னணியில் உருவாக்கிற நிரந்தர வலியை அவர்கள் ஒருபோதும் அறிந்ததில்லை. உன்னுடைய நோயாளி ஜெபிக்கும்போது, நீ அவன் மனதை பார்த்தால் அவன் மனதில் உன்னால் அதைக் காணமுடியாது. அவன் எந்தப் பொருளின் மீது, தன் கவனத்தை வைத்திருக்கிறான் என்று நீ சோதித்துப்பார்த்தால், அது முற்றிலும் வேடிக்கையான பல பொருட்களின் கூட்டுப்பொருளாயிருக்கிறது. நம் எதிரியின் மனித அவதாரம் என்று அழைக்கப்படுகிற அந்த மதிப்பற்ற அத்தியாயத்தில் அவன் தோன்றின

அந்தப் படங்களிலிருந்து உருவான சில பிம்பங்கள் அங்கு இருக்கும்: மேலும் அங்கு தெளிவற்ற, பெரும்பாலும் முற்றிலும் பண்படாத, முட்டாள்தனமான அந்த மற்ற இரண்டு நபர்களுக்கும் சம்பந்தமான பிம்பங்களும் அங்கு இருக்கும். அங்கு அவனுடைய சொந்த வணங்குதலும்கூட வடிவமாகத் தோன்றும் (மேலும், அதோடு அவனுடைய சில சரீர உணர்ச்சிகளும் இணைந்திருக்கும்). யாருக்கு அந்த வணக்கம் செலுத்தப்படவேண்டுமோ, அவருக்கு நேராக அது ஏறெடுக்கப்படும். எனக்கு தெரிந்த சில வழக்குகளிலே, அந்த நோயாளி அவன் “கடவுள்” என்று கூப்பிடுகிறானே, அது அவனுடைய படுக்கையறையின் மேல் சுவற்றில் உள்ள வலதுபக்கத்து ஓரத்தில் உண்மையாகவே இருப்பதாகவும் அல்லது தன்னுடைய சொந்த தலைக்குள் இருப்பதாகவும் அல்லது சுவற்றில் உள்ள ஒரு சிலுவையிலே இருப்பதாகவும் சொல்லுவதைப் பார்த்திருக்கிறேன். அவனுடைய கூட்டுப்பொருளின் இயல்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும் நீ அவனை அதனிடத்திலேயே ஜெபிக்கும்படியாக வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது அவன் உருவாக்கிக் கொண்ட அந்த பொருளிடம். அவனை உருவாக்கின அந்த நபரிடம் அல்ல. அவன் தன்னுடைய அந்தப் பொருளை திருத்திக்கொள்ளவும் இன்னும் மேம்படுத்தவும், அதிக முக்கியத்துவம் கொடுக்கும்படியாக, நீ அவனை உற்சாகப்படுத்தகூடச் செய்யலாம். அவனுடைய ஜெபநேரம் முழுவதும் அந்த கற்பனையை அவன் தன்னுடைய மனதிலே நிலைநிறுத்திக் கொள்ளும்படி வைத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அவன் எந்த நொடியிலாவது அந்த வித்தியாசத்தை உணர ஆரம்பித்துவிட்டால், எந்த நொடியிலாவது அவன் தன் சுயநினைவோடு, “நீர் எப்படி இருக்கவேண்டும் என்று நான் கற்பனை செய்ததின்படி அல்ல; நீர் எப்படிப்பட்டவர் என்பதை நீரே அறிந்துகொண்ட வண்ணம்”, என்பதை நோக்கித் தன்னுடைய ஜெபங்களை

திசை திருப்பிவிட்டால், நம்முடைய நிலைமை அந்தக் கணத்திலே நம்பிக்கையற்றதாகிவிடும். அவனுடைய எல்லா எண்ணங்களும், அந்த பிம்பங்களும் ஓரமாக தூக்கி எறியப்பட்டுவிட்ட பின்போ அல்லது ஒருவேளை அதை அவன் (தன் எண்ணத்தில்) நிறுத்திக் கொண்டாலும், அவையெல்லாம் தன்னுடைய (கற்பனையின்படி) மாறக்கூடிய இயல்புடையவைதான் என்று முழுமையாக அடையாளம் கண்டுகொண்டு, அந்த மனிதன் முழுவதுமாக அந்த முற்றிலும் உண்மையான, தனக்குப் புறம்பான, தன்னால் பார்க்கமுடியாத அந்தப் பிரசன்னத்தில் தன்னோடு அந்த அறையில் இருக்கிற அவரை, மேலும் தன்னை முற்றிலும் அவர் அறிந்த அளவுக்கு, தன்னால் ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாத அந்த நபரை நம்பிவிட்டாலோ- அப்படி ஒரு நிலைமையிலே, நாம் கணித்துப் பார்க்கமுடியாத ஒன்று நடந்தேறிவிடும். இந்த சூழ்நிலையைத் தவிர்க்க, அதாவது ஜெபத்தின்போது அந்த ஆத்துமா முற்றிலும் நிர்வாணமாக இருக்கிற அந்த நிலைமையைத் தவிர்க்க, உனக்கு ஒரு உண்மை உதவியாக இருக்கும். எதுவென்றால், மனிதர்கள் தாமே வேண்டும் என்று விரும்பிக்கேட்கிற அளவுக்கு அதை (தங்கள் ஆத்துமா நிர்வாணமாக இருப்பதை) விரும்புவதில்லை. பேரம் பேசியதைக் காட்டிலும் அதிகமாகப் பெற்றுக்கொள்ளுதல் என்ற ஒரு விஷயம் அவர்களுக்கு உண்டு.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 5

என் அன்பு எட்டி,

உன்னுடைய வேலையைக் குறித்த ஒரு விவரமான அறிக்கையை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, உன்னுடைய கடைசி கடிதத்தைப் போன்ற ஒரு தெளிவற்ற உணர்ச்சிக் கொந்தளிப்பை நான் பெற்றுக்கொண்டது, சற்று ஏமாற்றமாக உள்ளது. ஐரோப்பியர்கள் தங்களுடைய மற்றுமொரு போரை ஆரம்பித்துவிட்டார்கள் என்பதினிமித்தம், நீ “ஆனந்த மயக்கத்தில்” இருப்பதாக கூறுகிறாய். உனக்கு என்ன ஆயிற்று என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீ மயக்கத்தில் அல்ல, குடிபோதையில்தான் இருக்கிறாய். உன்னுடைய நோயாளியின் தூக்கமற்ற இரவுகளைக் குறித்து, நீ அனுப்பின மிகவும் சீரற்றப் பதிவுகளை நான் உற்று கவனித்து வாசித்தபோது, உன்னுடைய மனதின் நிலையை ஓரளவுக்குத் துல்லியமாக வடிவமைத்துப் பார்க்கமுடிகிறது. உன்னுடைய தொழிலில் முதன்முறையாக உன்னுடைய எல்லா கஷ்டத்தின் பலனான அந்த ரசத்தை நீ ருசித்திருக்கிறாய். அதாவது ஒரு மனித ஆத்துமாவின் வேதனையையும் திகைப்பையும் சொல்லுகிறேன். அது உன்னுடைய தலைக்கு ஏறிவிட்டது. உன்னை குறை சொல்லிப்பயனில்லை. இளைஞர்களிடம் நல்ல அனுபவமிக்க சிந்தனைகளை நான் எதிர்பார்க்கமுடியாது. எதிர்காலத்தைப் பற்றிய உன்னுடைய பயங்கரமான சில காட்சிகளைக் கண்டு, உன்னுடைய நோயாளி எந்த வகையிலாவது பாதிப்படைந்தானா? சில மகிழ்ச்சியான கடந்தகாலத்தைக் குறித்த, அவனுடைய சுயபரிதாபப் பார்வைகளை வைத்து, உனக்குப் பிரயோஜனமாக ஏதும் வேலைசெய்தாயா? அவனுடைய வயிற்றுக்குள் சில

மெலிதான திகில்கள் உண்டானதா? உன்னுடைய வயலினை நீ அழகாக வாசித்தாயா? சரி, சரி, இதெல்லாம் இயல்பு தான். ஆனால் நன்றாக நினைவில் வைத்துக்கொள் எட்டியே, மகிழ்ச்சியைக் காட்டிலும் கடமைதான் முக்கியமானது. நீ இப்பொழுது உன்னை அந்த மகிழ்ச்சிக்குள் அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதினால், முடிவில் அது உன்னுடைய இறையை நீ இழந்துபோவதற்குக் காரணமாக இருந்தால், நீ இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறாயே, அந்த முதல் பருகுதல், நித்தியத்துக்கும் உனக்குக் கிடைக்காதபடி நீ வறட்சியிலும், தாகத்திலும் விட்டுவிடப்படுவாய். ஆனால் மற்றொருபுறம், நீ நிலையான அமைதியான சிந்தனையை, இந்த இடத்திலே செயல்படுத்தி, அவனுடைய ஆத்துமாவை முற்றிலுமாக உன் கட்டுக்குள் கொண்டுவந்து விட்டால், பின்னர் அவன் என்றென்றைக்கும் உன்னுடையவனாகிவிடுவான்- விரக்தியும், திகிலும், திகைப்பும் நிறைந்து வழிகிற\ ஒரு உயிருள்ள பாத்திரமாக அவன் மாறிவிடுவான். நீ எப்பொழுதெல்லாம் விரும்புகிறாயோ அப்பொழுதெல்லாம் நீ அந்தப் பாத்திரத்தை எடுத்து, உன் உதட்டில் வைத்து சுவைத்துக் கொள்ளலாம். ஆதலால், தற்காலிகமான உன்னுடைய எந்த ஒரு உற்சாகமும், அவனுடைய விசுவாசத்தைக் குறைத்து எந்த ஒரு நற்குணமும் அவனுக்குள் உருவாவதை தடுக்கிற அந்த உண்மையான வேலையிலிருந்து உன்னைத் திசை திருப்ப நீ அனுமதிக்காதே. போரைக் குறித்த உன்னுடைய நோயாளியின் பதிலைப் பற்றி ஒரு முழு கணக்குப் பதிவை, நீ உன்னுடைய அடுத்த கடிதத்தில் எனக்கு அனுப்பிவிட மறந்துவிடாதே. ஏனென்றால் அதை வைத்து, அவனை ஒரு தீவிர தேசப்பற்றுடையவனாக ஆக்கலாமா? அல்லது ஒரு தீவிர அமைதிவாதியாக ஆக்கலாமா? எது உனக்கு அதிக நன்மையைக் கொடுக்கும் என்பதை நாம் யோசிக்கமுடியும். இதில் எல்லாவிதமான சாத்தியங்களும் உள்ளன. அதுவரையில், இந்தப் போரைக் குறித்து, நீ உன்

நம்பிக்கையை அதிகம் வளர்த்துக் கொள்ளாதே என்று நான் உன்னை எச்சரித்தாக வேண்டும்.

நிச்சயமாகவே ஒரு போர் என்பது நல்ல பொழுதுபோக்கான ஒன்றுதான். மனிதர்களுக்கு ஏற்படுகிற இந்த உடனடியான பயமும் வேதனையும், கடினமாக உழைக்கிற எண்ணற்ற நம்முடைய ஊழியர்களுக்கு, ஒரு முறையான மற்றும் மிகவும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய வகையிலே, புத்துணர்ச்சியூட்டுவதாய் இருக்கிறது. ஆனால், நாம் இதைப் பயன்படுத்தி பாதாளத்தில் இருக்கிற நம்முடைய பிதாவினிடத்தில், ஆத்துமாக்களைக் கொண்டுவரவில்லை என்றால், அதனால் நமக்கு நிரந்தரமான நன்மை என்ன இருக்கப்போகிறது? நம்மிடத்திலிருந்து கடைசியில் தப்பிச் சென்றுவிட்ட, சில மனிதர்களுடைய தற்காலிகமான வேதனையைக் காணும்போது, நான் ஒரு சிறந்த பந்தியிலே முதல் சுற்றாக வந்த உணவை மட்டும் ருசி பார்க்க அனுமதிக்கப்பட்டுவிட்டு, மற்றவைகளையெல்லாம் சாப்பிடாதபடிக்கு அவை எனக்கு மறுக்கப்பட்டுவிட்டதைப் போன்ற உணர்வே ஏற்படுகிறது. இதைக்காட்டிலும் நான் அதை ருசிக்காமல் இருப்பதே மேலானது. நம் எதிரி, தன்னுடைய காட்டுமிராண்டித்தனமான யுத்த முறைகளுக்கு ஒத்ததாக, தனக்குப் பிரியமானவர்களுடைய அந்த குறுகின துயரத்தின் காலத்தை, நாம் பார்க்கும்படியாக அனுமதிப்பது எதற்கென்றால், நம்முடைய ஆசையைத் தூண்டிவிட்டு பின்னர் வேதனைப்படுத்துவதற்காகத்தான். தற்சமயம் நடைபெறுகிற இந்த மிகப்பெரிய மோதலின்போது, அவனுடைய முற்றுகையானது தெரிந்தபடி நம்மேல் திணிக்கிற, அந்த இடைவிடாத பசியைக் கேலி செய்வதற்காகவே இதைச் செய்கிறான். ஆதலால் நாம் இந்த ஐரோப்பிய போரைக் கொண்டு எப்படி மகிழ்ச்சியடையலாம் என்பதை விட்டுவிட்டு, அதை எப்படி பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாம் என்றுதான் சிந்திக்கவேண்டும். ஏனென்றால், அதற்கு இருக்கக்கூடிய சில உள்ளார்ந்த போக்குகள்,

தாமாகவே நமக்கு எந்த வகையிலும் சாதகமானதாக இல்லை. பெரிய அளவிலான கொடூரங்களும், கற்பற்ற தன்மைகளும் இருக்கும் என்று நாம் நம்புவோமாக. ஆனால் நாம் சற்று கவனமாக இல்லாவிட்டால், ஆயிரக்கணக்கானோர் இந்த உபத்திரவ காலத்திலே எதிரியின் பக்கமாகச் செல்லுவதையும், அதே நேரம் பத்தாயிரக் கணக்கானோர் எதிரியின் பக்கம் செல்லவிட்டாலும் அவர்கள் தங்கள் சொந்த நலத்திலிருந்த கவனத்தை திருப்பி தங்களைக் காட்டிலும் மிகவும் மேன்மையானதாக நம்புகிற மதிப்புகளுக்காகவும் காரணங்களுக்காகவும் செலுத்துவதையும் நாம் பார்க்கமுடியும். நம் எதிரியானவன் இப்படிப்பட்ட காரணங்களில் பலவற்றை ஏற்றுக்கொள்வதில்லை என்பதை நான் அறிவேன். ஆனால் அங்குதான் அவன் மிகவும் நியாயமற்றவனாக நடந்துகொள்ளுகிறான். மனிதர்கள் நல்லவை என்று நினைத்துத் தங்களால் முடிந்தமட்டும் பின்பற்றின கொள்கைகள் பூதாகரமான வகையிலே உலகியலுக்குத் தக்கவாறு நடக்கிறவைகளாயிருப்பதனால், அவைகள் கெட்டவை என்று எதிரி நினைக்கிறான். அப்படிப்பட்ட கொள்கைகளுக்காக தங்கள் உயிரையும், தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்த சில மனிதர்களை, அவன் பலமுறை தனக்குப் பரிசாகப் பெற்றுக்கொண்டிருக்கிறான். போர்க்காலங்களில் ஏற்படுகிற விரும்பத்தகாத சாவுகளையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. மனிதர்கள் சில இடங்களுக்குச் சென்றால் நாம் கொல்லப்படுவோம் என்று தெரிந்தும் அங்கு செல்லுவதையும், ஒருவேளை அவர்கள் எதிரியின் கட்சியில் இருப்பார்களென்றால் அதற்காகத் தயாராக இருப்பதையும் காணலாம். நான் பயிற்சி அளித்தவாறு, பல மருத்துவர்களும், செவிலியர்களும், நண்பர்களும், சாகும் நிலையில் உள்ளவர்களுக்கு, வாழமுடியும் என்ற பொய்யான நம்பிக்கையைத் தருவதின் மத்தியிலே, எல்லா மனிதர்களும் விலையுயர்ந்த ஆஸ்பத்திரிகளில்

மரித்தார்களானால், நமக்கு எவ்வளவு நன்மையாக இருக்கும்! அவர்கள் எல்லோரும் , மனம்போன போக்கில் வாழுவதற்கு, நோயை ஒரு சாக்காக பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அவர்கள் உற்சாகப்படுத்துகிறார்கள். மேலும் நம்முடைய ஊழியர்களும் தங்கள் வேலையில் திறமையுள்ளவர்களாக இருந்தால போதகருடைய எல்லா பரிந்துரைகளையும் தடுத்துவிடுவார்கள். ஏனென்றால் அது அந்த நோய்வாய்ப்பட்ட மனிதனுடைய உண்மையான நிலையை தெரிவித்துவிடுமே! போர் அமல்படுத்துகிற சாவைக் குறித்தத் தொடர்ச்சியான நினைவுகள் நமக்கு எவ்வளவு பேரழிவை உண்டாக்கிவிடுகிறது! நம்முடைய சிறந்த ஆயுதங்களில் ஒன்றான, திருப்திகரமான உலகவாழ்க்கை என்பதை, அது பயனற்றதாக்கிவிடுகிறது. போர்க்காலங்களில் ஒரு மனிதன்கூட தான் நித்தியமாக வாழப்போகிறான் என்பதை நம்புவதில்லை.

விசுவாசத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கான, ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகப் போர்கள் இருக்கின்றன என்று சிரங்கனும் மற்றவர்களும் பார்க்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் அந்தக் கோணம் ஒரு மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்று நினைக்கிறேன். துன்பம் என்பது மீட்பின் ஒரு அவசியமான பகுதியாக உள்ளது என்று, எதிரியினுடைய கட்சியைச் சார்ந்த மனிதர்கள் யாவரும் அவனால் எளிதான முறையிலே சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், போரினாலோ அல்லது கொள்ளைநோயினாலோ அழிக்கப்படக்கூடிய ஒரு விசுவாசம் என்பது நாம் அழித்துவிடவேண்டும் என்று கவலைப்படுகிற அளவுக்கு மதிப்புமிக்கதாக இருக்கமுடியாது. நான் எதைக்குறித்து இப்பொழுது சொல்லுகிறேனென்றால், போர் போன்றவைகள் ஏற்படுத்தக்கூடிய மிக நீண்டகாலமாக தொடர்ந்து இருக்கிற துன்பங்களைக் குறித்துதான். நிச்சயமாக அவனுக்கு பயங்கரமும், இழப்பும், உடல் ரீதியான வலியும் உண்டாகிற

அந்த நொடியிலே, உன் மனிதனுடைய எல்லா சிந்திக்கும் திறனும், தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட அந்தக் கணத்திலே, உன்னால் அவனைப் பிடித்துக்கொள்ளமுடியும். ஆனாலும்கூட, ஒருவேளை அவன் எதிரியினுடைய தலைமைச் செயலகத்துக்கு முறையிட்டால், நான் பார்த்தவரையில், அவனுடைய இடம் பெரும்பாலும், எப்பொழுதும், பாதுகாக்கப்பட்டதாகவே இருக்கும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 6

என் அன்பு எட்டி,

உன் நோயாளியினுடைய வயதையும் அவன் செய்கிற வேலையையும் வைத்துப் பார்க்கும்பொழுது, நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றாலும், அவன் ராணுவ சேவைக்கு அழைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்பதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்பொழுதும் அவன் அதிகபட்சம நிச்சயமற்ற நிலையிலேயே இருக்கும்படியாக நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். எதிர்காலத்தைக் குறித்த எதிரெதிரான கற்பனைக் காட்சிகளால் அவனுடைய மனம் நிறைந்திருக்க வேண்டும். அவை ஒவ்வொன்றும், அவனுக்குள் நம்பிக்கையையோ அல்லது பயத்தையோ எழுப்பவேண்டும். நம்முடைய எதிரிக்கு எதிராக, ஒரு மனிதனுடைய மனதை தடுப்பதற்கு நிச்சயமற்ற தன்மையையும் கவலையையும்விட சிறந்தது வேறெதுவும் இல்லை. எதிரி மனிதர்கள் தாங்கள் செய்யவைதைக் குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்புகிறான். நம்முடைய வேலை என்னவென்றால், அவர்கள் எப்பொழுதும் என்ன நடக்கப்போகிறது என்று சிந்தித்துக் கொண்டேயிருக்கும்படியாக பார்த்துக்கொள்வதுதான்.

உன்னுடைய நோயாளி நிச்சயமாகவே எதிரியினுடைய சித்தத்துக்கு தன்னை அர்ப்பணித்துப் பொறுமையோடு இருக்கவேண்டும் என்ற கருத்தை கற்றுக் கொண்டிரு-ப்பான். இதன் மூலமாக எதிரி பெரும்பாலும் சொல்லவருகிற கருத்து என்னவென்றால், அவனுக்கு சகித்துக்கொள்ளும்ப-டியாக கொடுக்கப்பட்டிருக்கிற இந்த உபத்திரவத்தை அவன் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளவேண்டும்- அதாவது

தற்சமயத்திலே அவனுக்கு ஏற்படுகிற இந்தக் கவலையையும் நிச்சயமற்ற தன்மையையும். இதைக் குறித்துதான் அவன் “உம் சித்தம் நிறைவேறட்டும்” என்று சொல்லவேண்டும். ஒவ்வொரு நாளும் அவன் சுமக்கக்கூடிய அந்த அன்றாட வேலைக்கான அனுதின அப்பம் அவனுக்கு வழங்கப்படும். அந்த நோயாளி தற்சமயம் அவனுக்கு ஏற்படுகிற இந்த பயத்தை தனக்கென்று நியமிக்கப்பட்ட சிலுவையாக எண்ணாமல், அவன் கவலைபடுகிற காரியங்களை மட்டுமே தன் சிலுவையாக நினைக்கும்படியாகப் பார்த்துக் கொள்வதுதான் உன்னுடைய வேலை. அவன் அவைகளை தன்னுடைய சிலுவைகளாக கருதிக்கொள்ளட்டும்: அவைகள் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் இருப்பதனால் அவை என்றுமே நடக்கப்போவதில்லை என்பதை அவன் மறந்து விடட்டும். மேலும் அவன் அவைகளுக்கென்று, முன்கூட்டியே தன்னை துணிவுக்கும் பொறுமைக்கும் பயிற்றுவிக்க முயற்சி செய்யட்டும். ஏனென்றால் ஒரே நேரத்திலே பல்வேறு வகையான அனுமானிக்கப்பட்ட விதிகளுக்கு ஒருவன் தன்னை முற்றிலும் விலக்கிக்கொள்வது என்பது பெரும்பாலும் சாத்தியமற்றதாய் இருக்கிறது. மேலும், இப்படி ஒரு காரியத்தைச் செய்ய முயற்சிக்கிறவர்களுக்கு, எதிரியானவன் அதிகம் உதவுவதில்லை: தற்போதைய மற்றும் உண்மையான துன்பத்துக்கும், அது நிஜமான பயத்தை உள்ளடக்கியது என்றாலும்கூட, அதிலிருந்து தன்னை விலக்கிக்கொள்வது, அதிக எளிமையாக இருக்கிறது. மேலும், இந்த நேரடிச் செயல் வழக்கமான முறையிலே இதற்கு உதவுகிறது.

இங்கு ஒரு முக்கியமான ஆவிக்குரிய விதி செயல்படுகிறது. அவனுடைய கவனத்தை, எதிரியின்மேல் இருப்பதிலிருந்து, எதிரியைக் குறித்த தன்னுடைய மனநிலையின்மேல் திசை திருப்புவதின் மூலம், அவன் ஜெபங்களை வலிமையிழக்கச் செய்யமுடியும் என்று நான் உனக்கு விவரித்திருக்கிறேன். மறுபுறம் நோயாளியின் மனதை, அவன் எதைக்

குறித்துப் பயப்படுகிறானோ அதிலிருந்து நீக்கி, அந்த பயத்தின் மேலேயே திசை திருப்புவதன் மூலம்- அதாவது அவனுடைய தற்போதைய விரும்பத்தகாத தன் சொந்த மனநிலையின்மேலேயே திருப்புவதன் மூலம், அந்த பயத்தை நாம் எளிமையாகக் கையாளமுடியும். இதனால் அவனுடைய பயத்தை தனக்கு நியமிக்கப்பட்ட சிலுவையாக அவன் கருதும்போது, தவிர்க்கமுடியாத வகையிலே அதைத் தன்னுடைய மனதின் நிலை என்றே நினைப்பான். ஆகையால் ஒரு பொதுவான விதியை இங்கு உருவாக்க முடியும்; நம்முடைய நம்பிக்கைக்கு சாதகமாக இருக்கக்கூடிய அவனுடைய மனதின் எல்லாச் செயல்களையும் நீ உன் நோயாளியிடம் உற்சாகப்படுத்தி, அவனை சுயநினைவில்லாத நிலையில் வைத்து அந்த உணர்வை உருவாக்குகிற அந்தப் பொருளின் மேல் அவனுடைய கவனத்தை நிறுத்திவை. ஆனால் எதிரிக்கு சாதகமாக இருக்கக்கூடிய மனதின் எல்லாச் செயல்களிலேயும் அவனுடைய மனதை தன் சொந்த மனநிலைக்கு நேராகவே வளைத்துத் திருப்பி நிறுத்து. தனக்கு ஏற்பட்ட ஒரு அவமானமோ அல்லது ஒரு பெண்ணின் சரீரமோ, அவனுடைய கவனத்தை வெளிப்புறமாகவே நிறுத்தி, “நான் இப்பொழுது கோபம் என்கிற ஒரு மனநிலைக்கு செல்கிறேன்” என்றோ, “நான் இச்சை என்ற மனநிலைக்கு செல்கிறேன்” என்றோ அவன் நினைத்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். மாறாக, “என்னுடைய உணர்வுகள் மிகவும் பக்திக்கு நேராக வளருகின்றன” என்றோ, “அதிக இரக்ககுணத்துக்கு நேராக வளறுகின்றன” என்ற சிந்தனைக்கு அவனுடைய கவனத்தை உள்ளாகவே நிலைநிறுத்தி, அவன் தனக்கு அப்பாற்பட்டு நம்முடைய எதிரியையோ அல்லது பிற மனிதர்களையோ நோக்காதபடி பார்த்துக்கொள்ளட்டும்.

போரைக் குறித்த அவனுடைய பொதுவான மனநி-லையைப் பார்க்கும்போது, கிறிஸ்தவ பத்திரிகைகளும்,

கிறிஸ்தவத்துக்கு எதிரான பத்திரிக்கைகளும் விரும்பி விவாதித்துக் கொண்டிருக்கிறார்களே, அந்த வெறுப்பு என்ற உணர்வின் மீது நீ அதிகம் சார்ந்துவிடாதே. தன்னுடைய வேதனையிலே, அந்த நோயாளி ஜெர்மன் தலைவர்களின் மீது, சில பழிவாங்கும் உணர்ச்சிகளைக் காட்டும்படியாக ஊக்குவிக்கப்படக்கூடும். அப்படிப்பட்ட உணர்வுகள் இருக்கும் வரையில் நல்லதுதான். ஆனால் அவையெல்லாம் வழக்க-மாக கற்பனையான பலிகடாக்களின் மீது காண்பிக்கப்படு-கிற, ஒரு விதமான நல்ல நாடகங்களில் அல்லது புராண-ங்களில் கூறப்படுகிற வெறுப்பாகும். இந்த மனிதர்களை அவன் நிஜ வாழ்க்கையில் சந்தித்ததே இல்லை. அவர்கள் செய்தித்தாள்களிலிருந்து அவன் பெற்றுக்கொண்டவை-களை வைத்து தன்னுடைய சிந்தனையில் வடிவமைக்கிற சில வடிவங்களாகும். இப்படிப்பட்ட கற்பனையான வெறுப்பு-களின் விளைவுகள், பெரும்பாலும் மிகுந்த ஏமாற்றம் அளி-க்கிறவைகளாய் இருக்கும். மேலும் எல்லா மனிதர்களையு-ம்விட இந்த வகையிலே ஆங்கிலேயர்கள்தான் மிகவும் வரு-ந்தத்தக்க வகையிலே கோழைகளாயிருக்கிறார்கள். அவர்க-ளெல்லாரும் எதிரிகளைச் சித்திரவதைப்படுத்துவது மிகவும் சரியானது என்று உரத்த குரலிலே பிரகடனப்படுத்திவிட்டு தங்களுடைய பின்வாசலில் வந்து நிற்கிற அடிப்பட்ட முதல் ஜெர்மன் விமானிக்கு டீயும் பிஸ்கட்டும் தருகிற பரிதாபகர-மான உயிரினங்கள் ஆவர்.

உன்னால் என்ன செய்யமுடியுமோ அதைச் செய். ஏனென்றால் உன் நோயாளியினுடைய ஆத்துமாவிலே, சில தயவான சிந்தனைகளும் சில தீமையான சிந்தனைக-ளும் இருக்கப்போகின்றன. அவனுடைய அந்தத் தீமையான சிந்தனைகளைத தான் ஒவ்வொரு நாளும் அடிக்கடி சந்திக்கிற தனக்கு அறிமுகமானவர்களிடத்திலும், தன்னுடைய தயவான சிந்தனைகளை, எங்கோ தொலைவில் வாழுகிற தனக்கு அறிமுகமில்லாத மனிதர்களிடமும் அவன் காட்டும்படியாக

நாம் வழிநடத்துவது தான் மிகப்பெரிய காரியம். ஜெர்மனி-யர்களுக்கு எதிரான அவனுடைய வெறுப்பை பூதாகா-ரமாக்கிவிட்டு, அதே சமயம், அவனுக்கும், தன் தாய், தன் முதலாளி மற்றும் அவன் ரயிலில் சந்திக்கிற அந்த மனி-தனுக்கும் இடையே, தயவு நிறைந்த ஒரு தீமையான பழக்கம் வளருமென்றால், அதனால் எந்த நன்மையும் இருக்கப்போ-வதில்லை. உன்னுடைய அந்த மனிதனை ஒன்றுக்குள் ஒன்றாக இருக்கிற ஒரு தொடர் வட்டங்களாக நினைத்து-க்கொள். அவனுடைய தீர்மானம் என்பது மையப்பகுதியில் இருக்கின்ற வட்டமாகவும், அவனுடைய அறிவு அதற்கு அடுத்ததாகவும், கடைசியாக, அவனுடைய கற்பனையும் இருக்கிறது. எதிரியினுடைய வாசனை இருக்கின்ற எல்லா-வற்றையும், எல்லா வட்டங்களிலுமிருந்து ஒரேடியாக நீ வெளியேற்றிவிடலாம் என்று எண்ணுவது மிகக்கடினமான ஒன்று. ஆனால் நீ எல்லா நற்குணங்களையும் கொஞ்ச-ங்கொஞ்சமாக வெளியே கூட்டித்தள்ளி, கடைசியாக அவை-களெல்லாம் அவனுடைய கற்பனை என்ற வட்டத்துக்குள் இருக்கும்படியாகவும், நமக்கு வேண்டிய எல்லா சாதகமான குணங்களும், மையத்திலிருக்கிற அவனுடைய தீர்மா-னத்தின் வட்டத்துக்குள் இருக்கும்படியாகவும் நீ செய்ய-வேண்டும். நல்ல பழக்கங்கள் யாவும் தீர்மானம் என்கிற வட்டத்தை அடைந்து, அங்கே பழக்கங்களாக உருவாகிவிடு-கிற வரையில்தான் அவைகள் நமக்கு மிகவும் பாதகமான-தாக இருக்கின்றன. (அந்த நோயாளி தன்னுடைய தீர்மானம் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிற, அந்த புகை போன்ற அந்த கோபமான தீர்மானங்களும், பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிற அந்த நினைவுகளையும் நான் தீர்மானம் என்று குறிப்பிடவில்லை. எதிரி, இதயம் என்று அழைக்கிற அந்த உண்மையான மையத்தைதான் குறிப்பிடுகிறேன்). எல்லா வகையான நற்குணங்களும், கற்பனையில் வரை-யப்பட்ட அல்லது அறிவால் அங்கீகரிக்கப்பட்ட, இன்னும்

சொல்லப்போனால், குறிப்பிட்ட அளவுக்கு விரும்பப்பட்டு போற்றப்பட்டதாகவும் இருந்தாலும்கூட, அது பாதாளத்தில் இருக்கிற நம் பிதாவின் வீட்டிலிருந்து அவனைத் தடுத்துவி-டமுடியாது. உண்மையில் சொல்லப்போனால், அவை அவன் அங்கு சென்றடையும்போது நமக்கு அவனை இன்னும் வேடிக்கையாக மாற்றக்கூடும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 7

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி, உன்னைப்பற்றி அறியாமையிலேயே இருந்துவிட வேண்டியது அவசியம்தானா என்று நீ கேட்பதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன். குறைந்தபட்சம், இப்போது இந்தப் போராட்டம் இருக்கிற கட்டத்தில் மேலிடம் அந்தக் கேள்விக்கான பதிலை நமக்கு கொடுத்திருக்கிறது. நம்முடைய கொள்கை இப்போதைக்கு நாம் நம்மை மறைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். நிச்சயமாக எப்பொழுதும் இதே நிலைமை இருந்ததில்லை. நாம் உண்மையாகவே ஒரு கொடூரமான தடுமாற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மனிதர்கள் நாம் இருக்கிறோம் என்பதை நம்ப மறுக்கும்பொழுது, நேரடியான தீவிரவாதத்திலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய எல்லா மகிழ்ச்சியான விளைவுகளையும் நாம் இழந்துவிடுகிறோம். மேலும் நம்மால் நேரடியாக இதைச் செய்யமுடியாது, மறைவாக இருந்துதான் செய்யமுடியும். இதற்கு மாறாக, அவர்கள் நம்மை நம்பும்பொழுது, நம்மால் அவர்களை பொருள் முதல்வாதிகளாகவும், நாத்திகர்களாகவும் ஆக்கமுடிவதில்லை. குறைந்தபட்சம், இப்போதைக்கு நம்மால் இன்னும் அப்படிச் செய்யமுடியவில்லை. மனிதனுடைய மனம் எதிரியைக் குறித்த நம்பிக்கைக்கு அடைப்பட்டிருக்கும் அந்த வேளையிலே, நாம் கூடிய சீக்கிரத்தில், மனிதனுடைய அறிவியலை, நம்மில் உள்ள நம்பிக்கையாகும் அளவுக்கு (அது நம் மேல் உள்ள நம்பிக்கை என்று அவர்கள் அறியாத வகையிலே), உணர்ச்சிப்பூர்வமாகவும் புராணமாகவும் மாற்றிக்கொண்டேயிருந்து, மெதுவாக அவர்கள்

மனதுக்குள்ளே நுழைந்துவிடமுடியும் என்று, எனக்குப் பெரிய நம்பிக்கை இருக்கிறது. "உயிர் விசை", பாலியல் வழிபாடு மற்றும் மனோபகுப்பாய்வின் சில அம்சங்கள், இந்த வகையிலே நிச்சயம் நமக்குப் பிரயோஜனமாக இருக்கும். பொருள் முதல்வாதியான ஒரு மந்திரவாதி, “ஆவிகள்” இருப்பதை மறுத்துவிட்டு, தெளிவற்ற வகையிலே, “விசை” என்று தான் அழைப்பவைகளை பிரயோஜனப்படுத்துவது மட்டுமல்லாமல், அவைகளை வழிப்படவும் செய்கிற ஒருவனாக, மனிதமை மாற்றுகிற இந்தச் சரியான வேலையை, நாம் ஒருமுறை உருவாக்கிவிட்டால், அதன் பிறகு இந்தப் போரின் முடிவு நம்முடைய பார்வைக்கு தெரிந்துவிடும். ஆனால் அது வரைக்கும் நமக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். உன்னுடைய நோயாளியை அறியாமை என்ற இருளிலேயே வைத்திருப்பது உனக்கு மிகவும் கடினமாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். பிசாசுகள் என்பவை பெரும்பாலும் சிறுவர் படிக்கும் சிறுகதைகளில் வருகிற, தற்கால கற்பனையான வகைகள் என்கிற உண்மை உனக்கு உதவி செய்யக்கூடும். நீ இருக்கிறாய் என்பதைக் குறித்த ஒரு மெலிதான சந்தேகம் அவனுடைய மனதில் எழும்ப ஆரம்பித்தால், உடனடியாக சிவப்பு நிற இறுக்கமான உடையையணிந்த அந்தச் சித்திரத்தை அவனுடைய எண்ணத்தில் பரிந்துரைசெய்து அப்படி ஒரு கற்பனையான சித்திரம் அவன் நம்பக்கூடிய ஒன்றாக இல்லாததினால் நீ இருப்பதும் உண்மை இல்லை என்று சிந்திக்கும்படியாக அவனை வற்புறுத்து.

உன்னுடைய நோயாளியை ஒரு தீவிர தேசப்பற்றுள்ளவனாக ஆக்கவேண்டுமா அல்லது ஒரு தீவிர அமைதிவாதியாக நாம் அவனை ஆக்கவேண்டுமா என்று சிந்திப்பேனென்று உனக்குக் கொடுத்த வாக்கை, நான் மறந்துவிடவில்லை. எல்லா தீவிரங்களும் எதிரிக்கு உண்டான அந்த

பக்தி தீவிரத்தை ஒழிய, மற்ற எல்லா தீவிரவாதங்களும் உற்சாகப்படுத்தப்பட வேண்டியவைதான். நிச்சயமாக எல்லா நேரங்களிலும் அல்ல, ஆனால் இந்தக் காலகட்ட-த்திலே உற்சாகப்படுத்தப்பட வேண்டும். சில காலகட்ட-ங்கள், வெதுவெதுப்பானவைகளும் மனநிறைவானவை-களுமாய் இருக்கும், அப்பொழுது நாம் செய்யவேண்டிய வேலை என்னவென்றால், அவர்களை நன்றாகத் தாலாட்டி தூங்கவைத்து விடவேண்டும். இப்பொழுது இருக்கிற, தற்காலத்தை போல மற்ற காலங்கள் சமநிலையற்றவைக-ளாகவும் பிரிவுகள் நிறைந்தவைகளுமாய் இருக்கக்கூடும். அப்படியிருக்கும்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன-வென்றால், அவற்றை பூதாகரமாக்கி வீக்கமடையச் செய்து-விடவேண்டும். மற்ற மனிதர்களால் வெறுக்கப்பட்டு அல்லது புறக்கணிக்கப்படுகிற சில ஒரேவிதமான ஆர்வங்களினாலே ஒன்றாகக் கட்டிவைக்கப்பட்டிருக்கிற சில சிறு கூட்டங்கள் இருக்கின்றன. அந்த சிறுகூட்டங்கள், தங்களுக்குள்ளா-கவே ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதையை வளர்த்து-க்கொண்டும், வெளியுலகத்தில் உள்ளவர்கள்மேல் ஒரு குறிப்பிட்ட அளவு பெருமையையும், வெறுப்பையும், எந்தத் தயக்கமுமின்றி காண்பிக்கிறவைகளாகவும் இருக்கும். ஏனென்றால், அதற்கு ஆதரவாக இருப்பது அவர்களுடைய "கொள்கை"தான். மேலும் இது தனிப்பட்ட எந்த நபரையும் சுட்டிக்காட்டாத ஒரு பொதுவான முறை என்றும் அவர்களால் கருதப்படுகின்றது. அந்த சிறுகூட்டம், எதிரினுடைய சொந்த நோக்கங்களுக்காகத்தான் முதலாவதாக இருக்கி-ன்றது என்றாலும்கூட இது அவர்களுக்கும் பொருந்தும். சபையானது மிகவும் சிறியதாக இருக்கும்படியாக பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அங்கு குறைவான மக்களே, எதிரியை அறிந்தவர்கள் என்பது மட்டுமல்லாமல், ஒரு ரகசியமான சமூகத்துக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ இருக்கக்கூடிய, அந்த அமைதலில்லாத தீவிரத்தையும்,

தற்காப்பு நிறைந்த சுயநீதியையும் பெற்றுக்கொண்டவர்களாகவும் இருப்பார்கள். சபையானவள் நிச்சயமாகவே பலத்த பாதுகாப்பு உள்ளவளாகவே இருக்கிறாள். மேலும் இதுவரையிலும் அந்த சிறு குழுவுக்கான அம்சங்களை, அவளுக்குள் செலுத்தும் முயற்சிகளில் நாம் இதுவரைக்கும் வெற்றி பெற்றதில்லை என்றாலும், அந்த சபைக்குளிருக்கிற சிறுசிறு குழுக்கள், பாராட்டத்தக்க விளைவுகளை உருவாக்கியிருக்கிறார்கள் அதாவது கொரிந்து பட்டணத்திலிருந்த, பவுலை சார்ந்தவர்களுக்கும் அப்பல்லோவைச் சார்ந்தவர்களுக்கும் நடுவே தொடங்கி, இங்கிலாந்து சபையினுடைய மேல் கட்சிக்கும் கீழ் கட்சிக்கும் நடுவேயுள்ள சிறு குழுக்கள்.

உன்னுடைய நோயாளியை மனசாட்சியின்படி எதிர்க்கிற ஒருவனாக இருக்க தூண்டப்படக்கூடுமானால், அவன் எந்தக் கஷ்டமும் இல்லாமல் தானாகவே ஒரு சிறிய, கோஷம் எழுப்புகிற, ஒழுங்கமைக்கப்பட்ட மக்களால் வெறுக்கபடுகிற ஒரு சமுதாயத்தை கண்டுபிடித்துக் கொள்ளுவான். புதிதாகக் கிறிஸ்தவத்திற்கு வந்த ஒருவனுக்கு, இதனுடைய தாக்கம் அதிகபட்சம் நன்மையாகவே இருக்கும். ஆனால் அதிகபட்சம் மட்டும்தான். இதில் நிச்சயம் எதுவும் இல்லை. இப்பொழுது இருக்கிற இந்தப் போர் தொடங்கும் முன்பாக ஒரு நியாயமான போரில் சேவை செய்கிற அந்த நீதியைக் குறித்து, அவனுக்கு ஏதும் தீவிரமான சந்தேகங்கள் இதற்கு முன்பு எழுந்ததுண்டா? அவன் மிகத் திறமான தைரியம் கொண்ட ஒரு மனிதனா? அதாவது, தன்னுடைய அமைதிவாதத்தின் உண்மையான நோக்கத்தைக் குறித்து, சந்தேகங்கள் நிறைந்த அரைமனம் இல்லாத அளவுக்கு, மிகுந்த தைரியம் கொண்டவனா? அவன் நேர்மைக்கு மிகவும் அருகில் இருக்கும்பொழுது (எந்த மனிதனும் அதற்கு மிகமிக அருகில் வந்ததே இல்லை), தான், நம் எதிரிக்கு கீழ்ப்படியவேண்டும் என்ற விருப்பத்தினால் மட்டுமே முழுவதும் செயல்படுத்தப்படுகிறான் என்று முற்றிலும் உறுதியாக நம்புகிறானா? அவன் அப்படிப்பட்ட ஒரு

மனிதனாக இருந்தால், அவனுடைய அமைதிவாதம் நமக்குப் பெரும்பாலும் எந்த நன்மையும் செய்யப்போவதில்லை. மேலும், ஒரு குழுவைச் சார்ந்து இருப்பதின் வழக்கமான பின்விளைவுகளிலிருந்து, எதிரியானவன், அவனைப் பாதுகாத்துவிடக்கூடும்.இப்படிஒருசூழ்நிலையில்,உன்னுடைய சிறந்த திட்டம் எதுவாக இருக்கவேண்டுமென்றால், அவனை திடீரென்று குழப்பிவிட்டு ஒரு உணர்ச்சிப்பூர்வமான நெருக்கடியைத் தந்து, அதன் மூலம் அவன் ஒரு அமைதியிழந்த தேசப்பற்றுடையவனாக எழும்பிவிட முயற்சி செய்வதுதான். அப்படிப்பட்ட காரியங்களை பெரும்பாலும் நாம் சமாளிக்கக்கூடும். ஆனால், ஒருவேளை அவன் நான் நினைக்கிற ஒரு வகையான மனிதனாக இருப்பானென்றால், அவனை அமைதிவாதியாக்க முயற்சிசெய்.

இரண்டில் எதை அவன் ஏற்றுக்கொண்டாலும் உன்னுடைய முக்கியமான வேலை ஒன்றுதான். அவனுடைய தேசப்பற்றையோ அல்லது அமைதிவாதத்தையோ தன்னுடைய மதத்தின் ஒரு பகுதியாக அவன் நடத்த ஆரம்பிக்கட்டும். அவன் சார்ந்திருக்கிற குழுவினுடைய மனநிலையின் தாக்கத்தின்கீழ், அவன் அதை மிகவும் முக்கியமான ஒரு பகுதியாக கருதட்டும். பின்னர் அவனுடைய மதம் அந்தக் கொள்கையின் ஒரு சிறு பகுதியாக மட்டும் மாறுகிற அந்த நிலைக்கு, நீ மெதுவாக, கொஞ்சங்கொஞ்சமாக அவனை போஷித்து வளர்த்துவிடு - அதாவது பிரிட்டிஷ் அரசின் போர் முயற்சிகளுக்கோ அல்லது அமைதிவாதத்துக்கோ சாதகமாக இருக்கக்கூடிய சிறந்த விவாதங்களை உருவாக்குவதனால் மட்டுமே கிறிஸ்தவம் முக்கியமாக மதிக்கப்படுகிற அந்த நிலைக்கு. எதிலிருந்து நீ அவனைப் பாதுகாக்கவேண்டுமென்றால் தற்காலிக விவகாரங்கள் எல்லாம் முதலாவதாக கீழ்ப்படிதலுக்கான மூலப்பொருட்களே என்று கருதுகிற ஒரு மனப்பாங்கில் இருந்துதான். அவனுக்கு உலகம் தான் முடிவு என்றும்

நம்பிக்கை அதில் ஒரு வழி என்றும் கருதும்படி ஆக்கிவிட்டால் நீ உன்னுடைய மனிதனை கிட்டத்தட்ட வென்றுவிட்டாய். அவன் எந்த விதமான உலகத்தின் முடிவை பின்பற்றுகிறான் என்பது, பெரிதாக எந்த வித்தியாசத்தையும் உண்டாக்கப் போவதில்லை. ஜெபங்கள், சாக்கிரமந்துகள், தொண்டுகள், இவைகளைக்காட்டிலும் கூட்டங்களும்,துண்டுப் பிரசுரங்களும், கொள்கைகளும், இயக்கங்களும், நோக்கங்களும், சிலுவைப் போர்களும் முக்கியமானதாக இருக்கும்வரையில், அவன் நம்முடையவனாய் இருக்கிறான்- மட்டுமல்லாமல் இந்த வகையிலே அவன் அதிகபக்தியுள்ளவனாய் இருக்கிறான் என்றால், அவன் நம்முடையவனாக அதிக பாதுகாப்பாகவே இருக்கிறான். இப்படியாக, கூண்டுக்குள் அடைப்பட்ட அநேகரை இங்கே கீழே நான் உனக்குக் காண்பிக்கமுடியும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 8

என் அன்பு எட்டி,

ஆக, அந்த நோயாளி பக்தியாக இருக்கிற காலகட்டம், சிறிது சிறிதாக செத்துக் கொண்டிருக்கிறது என்று நீ அதிக நம்பிக்கையோடு இருக்கிறாய். இல்லையா? அந்த கிழட்டு ஒழுங்கீனனை நம்முடைய பயிற்சிக் கல்லூரியின் தலைமையாக வைத்ததிலிருந்து அது சுக்குநூறாகிவிட்டது என்று நான் எப்பொழுதும் நினைத்ததுண்டு. இப்பொழுது அது சந்தேகமின்றி நிரூபணமாகிவிட்டது. அலைகளின் விதியைக் குறித்து (அதாவது law of undulation குறித்து), இதுவரை உன்னிடம் யாரும் கூறினதே இல்லையா?

மனிதன், நிலநீர்வாழ் ஜந்துவைப் போன்றவனாவான்- அதாவது பாதி ஆவி பாதி மிருகம். (நம்முடைய பிதா எதிரியிடமிருந்து தன்னுடைய ஆதரவைத் திரும்பப்பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற முடிவை எடுப்பதற்கு, எதிரி இப்படிப்பட்ட ஒரு அருவருக்கத்தக்க கலவை இனத்தை உருவாக்கவேண்டும் என்ற தீர்மானமும் ஒரு காரணமாயிருந்தது). ஆவிகளாக, அவர்கள் நித்திய உலகத்திற்குரியவர்களாய் இருக்கிறார்கள், ஆனால் மிருகங்களாக, அவர்கள் காலகட்டத்திற்குள் வாழுகிறார்கள். இதனுடைய அர்த்தம் என்னவென்றால், அவர்களுடைய ஆவிகள் ஒரு நித்தியமான பொருளுக்கு நேராக வழிகாட்டப்பட்டாலும், அவர்களுடைய சரீரமும், ஆசைகளும், கற்பனைகளும் தொடர்ச்சியாக மாறக்கூடியவைகளாய் இருக்கின்றன. ஏனென்றால் காலகட்டத்திற்குள் வாழ்வது என்பது "மாற்றம்" அடையக்கூடியது என்று அர்த்தம் கொள்வதாகும். ஆதலால் அவர்களைப் பொறுத்தவரையில்

நிலையாக நிற்பதற்குரிய மிக நெருங்கிய அணுகுமுறை எதுவென்றால் அலைகளைப்போல (ஏற்றமும் தாழ்ச்சியும்) இருப்பதுதான். அதாவது தாங்கள் நிற்கிற ஒரு தளத்திலிருந்து திரும்பத்திரும்ப விழுந்து, மீண்டும் மீண்டும் எழுந்து, அந்த இடத்திற்கு வருவதாகும். இது ஒரு ஏற்றமும் தாழ்ச்சியுமான ஒரு தொடர்ச்சியான அலைகளாகும். நீ உன் நோயாளியை நன்றாகக் கவனித்திருந்தால், இந்த அலைகளை அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பார்த்திருக்க முடியும்;அவன் வேலையின் மேலுள்ள ஆர்வம், அவன் நண்பர்களிடத்தில் அவனுடைய அன்பு, அவனுடைய சரீரத்துக்கான பசிகள், இவையெல்லாம் ஏறுவதும் இறங்குவதுமாக போய்க்கொண்டேயிருக்கும். அவன் இந்தப் பூமியில் வாழும்வரை, உணர்ச்சி மற்றும் சரீரத்தின், செழிப்பும் கலகலப்பும் நிறைந்த நேரங்களும், மந்தமும் வறுமையுமான நேரங்களும், மாறிமாறி வரும். உன்னுடைய நோயாளி இப்பொழுது கடந்து போய்க்கொண்டிருக்கிற அந்த வறட்சியும் மந்தமும், நீ மகிழ்ச்சியோடு நினைக்கிறபடி உன்னுடைய வேலைத் திறமையினால் அல்ல. அது ஒரு சாதாரண இயற்கை நிகழ்வுதான். அதை நீ நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், அதினால் நமக்கு எந்த நன்மையும் இருக்கப்போவதில்லை.

அதை சிறந்த முறையில் எப்படி பிரயோஜனப்படுத்திக் கொள்ளுவது என்று தீர்மானிப்பதற்கு, முதலாவதாக எதிரி அதைவைத்து என்ன செய்ய விரும்புகிறான் என்பதை நீ தெரிந்துகொள்ளவேண்டும். பின்னர் அதற்கு எதிர்மறையானதை நீ செய்யவேண்டும். ஒரு ஆத்துமாவை நிரந்தரமாகத் தன் வசமாக்கிக் கொள்ளுகிற அவனுடைய முயற்சிகளிலே, அவன் அந்த மேல் அலைகளை பார்க்கிலும் கீழ் அலைகளைத்தான் அதிகம் நம்புகிறான் என்பதை நீ அறிந்து கொள்ளும்போது, அது உனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாக

இருக்கும். அவனுடைய சில விஷேஷித்த மிகப்பிரியமான மனிதர்களெல்லாம், மற்றவர்களைக் காட்டிலும், மிக நீண்ட, மிக ஆழமான கீழ் அலைகளைக் கடந்து வந்திருக்கிறார்கள். அதற்கு காரணம் இதுதான். நம்மைப் பொறுத்தவரையில் மனிதன் என்பவன் பிரதானமாக உணவாக இருக்கிறான். நம்முடைய குறிக்கோள் என்னவென்றால், அதனுடைய தீர்மானங்களையெல்லாம் நம்முடைய தீர்மானத்துக்குள் உறிஞ்சிக்கொண்டு, நமக்குச் சொந்தமான சுயம் என்கிற அந்தப் பகுதியை, அவனுடைய செலவிலே அதிகப்படுத்திக் கொள்வதுதான். ஆனால், எதிரி, மனிதர்களிடம் கேட்கிற கீழ்படிதல் என்பது, மிகவும் வித்தியாசமான ஒரு விஷயமாக இருக்கிறது. மனிதன் மேலுள்ள அவனுடைய அன்பைக் குறித்தப் பேச்சு, முழுமையான விடுதலை என்கிற அவனுடைய சேவை ஆகியவையெல்லாம், நாம் லேசாக நம்பிக்கொண்டிருக்கிறபடி, வெறும் பிரச்சாரங்கள் மட்டுமல்ல, அவை பயங்கரமான உண்மையும்கூட என்கிற அந்த நிஜத்தை, ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டும். அவன் உண்மையாகவே, இந்தப் பிரபஞ்சத்தைத் தன்னைப் போன்ற, ஏராளமான அருவருக்கத்தக்க சிறு பிரதிகளினால் நிரப்ப விரும்புகிறான்- அதாவது மிகச் சிறிய அளவில், தன்னைப் போன்ற தரமும் குணாதிசயங்களும் கொண்ட வாழ்க்கையை வாழுகிற உயிரினங்களால், அவன் நிரப்ப விரும்புகிறான். அது, அவன் அவர்களை தனக்குள் உறிஞ்சிக்கொள்வதினால் அல்ல, அவர்களுடைய தீர்மானங்கள் சுதந்திரமாகத் தாமாகவே விரும்பி, தன்னுடைய தீர்மானத்திற்கு ஏற்றவாறு இணங்குகிறபடியால், அவன் அவ்வாறு செய்கிறான். நமக்கு வேண்டியதெல்லாம் கடைசியில் உணவாகக்கூடிய ஆடுகள். அவனுக்கு வேண்டியதெல்லாம் கடைசியில் புத்திரராக ஆகக்கூடிய ஊழியர்கள். நாம் உள்ளே உறிஞ்சிக்கொள்ள விரும்புகிறோம். அவன் வெளியே கொடுத்துவிட விரும்புகிறான். நாம் காலியாய் இருக்கிறோம் ஆதலால்

நிரப்பப்படுகிறோம். அவன் நிறைவாய் இருப்பதினால் பொங்கி வழிகிறான். நம்முடைய போரின் நோக்கம் என்னவென்றால், பாதாளத்தில் இருக்கிற நம் பிதா, எல்லா உயிரினங்களையும் தனக்குள்ளே இழுத்துக்கொள்ளுகிற ஒரு உலகம்: எதிரி விரும்புகிறது எதுவென்றால், தன்னோடு இணைந்து இருந்தாலும் தனித்துவமுள்ள உயிரினங்கள் நிறைந்த ஒரு உலகம்.

இங்குதான் கீழ் அலைகள் வருகின்றன. எதிரி எதனால் தன்னுடைய வல்லமையை அதிகமாகப் பயன்படுத்தி, மனித ஆத்துமாக்களுக்குத் தான் விரும்புகிற அளவிலே, குறிப்பிட்ட நேரத்திலே உணர்வுபூர்வமாக பிரசன்னமாவதில்லை என்று நீ பல நேரங்களிலே யோசித்திருக்கக்கூடும். ஆனால், தவிர்க்கமுடியாதது மற்றும் மறுக்கமுடியாதது ஆகிய இந்த இரண்டு ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்கு, எதிரியினுடைய சொந்தத் திட்டத்தின் இயல்பே தடைசெய்கிறது என்பதை, நீ இப்போது காணமுடியும். ஒரு மனிதனுடைய தீர்மானத்தின் மேல் வெறுமென அதிகாரம் செலுத்தி, அதை ரத்து செய்வதினால் எதிரிக்கு எந்த பிரயோஜனமும் இல்லை.(அப்படிச் செய்வதற்கு எதிரியினுடைய மிகவும் மெலிதான, மிகக் குறைந்த அளவிலே உணரப்பட்ட பிரசன்னமே போதும் என்றாலும்கூட). எதிரியால் வசீகரிக்க முடியாது. கோரிக்கையாக வைக்க மட்டுமே முடியும். ஏனென்றால், எதிரியினுடைய இழிவான சிந்தனை என்னவென்றால், கேக்கை சாப்பிடவும் வேண்டும், அதை வைத்துக்கொள்ளவும் வேண்டும் (இது ஒரு ஆங்கிலப் பழமொழியாகும். ஒரு கேக்கை சாப்பிட்டுக் கொண்டும், அதை வைத்துக் கொள்ளவும் முடியாது. ஏனென்றால், அதை சாப்பிட்ட உடனேயே அது இல்லாமல் போய்விடும் என்ற கருத்தைச் சொல்லும்படியாக இது கூறப்படுகிறது). அந்த உயிரினங்கள் தன்னோடு ஒன்றாகவும் இருக்கவேண்டும், ஆனால் அவைகள் தனித்துவம் உள்ளவைகளாகவும்

இருக்கவேண்டும்; வெறுமென அவர்களை ரத்து செய்வதோ அல்லது ஒருங்கிணைப்பதோ எந்த வகையிலும் உதவாது. ஆரம்பத்தில் சிறிய வகையிலேதான் மேலோங்கியிருப்பதற்கு, எதிரி ஆயத்தமாக இருக்கிறான். தம்முடைய பிரசன்னம் மிக மெலிதாக இருந்தாலும், அதனுடைய தொடுதல்கள், இனிமையான உணர்ச்சியினாலும், சோதனையை எளிதாக மேற்கொள்ளக்கூடியதின் மூலமும் அவர்களுக்கு மிக நன்மையானவைகளாகத் தெரிகின்றன. இவைகளின் மூலம், அவர்களுக்கு ஒரு துவக்கத்தை ஆரம்பித்துவைப்பான். ஆனால் இப்படிப்பட்ட காரியங்களில் இதே நிலைமை தொடருவதற்கு, அவன் அனுமதிப்பதில்லை. சீக்கிரமாகவோ அல்லது சற்று காலம் தாழ்த்தியோ, இப்படிப்பட்ட எல்லாவிதமான ஆதரவுகளையும் சலுகைகளையும் முற்றிலுமாக இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் அவர்களுடைய உணர்வுகளின் அனுபவத்திலிருந்து அவன் திரும்ப எடுத்துக்கொள்கிறான். அந்த உயிரினம் தன்னுடைய சொந்த கால்களிலே நிற்கும்படியாக அதை விட்டு விடுகிறான்-அதாவது சுவையற்ற எல்லாக் கடமைகளையும் தன்னுடைய தீர்மானத்தின் மூலம் மட்டுமே நிறைவேற்றும்படியாக. இப்படிப்பட்ட கீழ் அலைகளின் காலத்தில்தான், மேல் அலைகளின் காலத்தைக் காட்டிலும் அதிகமாக, அது அவன் விரும்பும் ஒரு வகையான உயிரினமாக வளர்கிறது. ஆகையால், இந்த வறட்சியின் நிலையில் ஏறெடுக்கப்படுகிற எல்லா ஜெபங்களும் அவனுக்கு மிகச்சிறந்த வகையிலே மகிழ்ச்சி அளிப்பவைகளாயிருக்கின்றன. நம்முடைய நோயாளிகளை, நாம் தொடர்ச்சியான சோதனைகளின் மூலம் இழுத்துக்கொண்டே செல்லலாம், ஏனென்றால், நாம் அவர்களை (உணவு பரிமாறப்படும்) மேஜைக்காகத்தான் வடிவமைக்கிறோம். மேலும், அவர்களுடைய தீர்மானத்தில் எவ்வளவு அதிகமாகத் தலையிடுகிறோமோ, அது அவ்வளவு அதிகம் நன்மையானது. தீய பழக்கங்களுக்கு

நாம் அவர்களை சோதிப்பதுபோல, நல்ல குணங்களுக்கு எதிரியால் அவர்களைச் சோதிக்கமுடியாது. அவன் அவர்கள் நடக்கப் பழகவேண்டும் என்று விரும்புகிறான். ஆதலால், அவனுடைய கையை எடுத்துவிட வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் நடந்தே தீரவேண்டும், என்ற தீர்மானத்தோடு இருக்கிறார்களென்றால், அவர்கள் தடுக்கி விழுவதுகூட அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிப்பதாகத்தான் இருக்கிறது. ஏமாந்துவிடாதே எட்டியே. எந்தவிதமான ஆசையும் இல்லாவிட்டாலும், செய்யவேண்டும் என்ற தீர்மானத்தோடு எதிரியனுடைய சித்தத்தை செய்கிற, சுற்றிலும் இருக்கிற பிரபஞ்சத்தை எல்லாம் பார்த்து, தன்னைக் குறித்த எல்லாச் சுவடுகளும் மறைந்துவிட்ட நிலையில், தான் ஏன் கைவிடப்பட்டேன் என்று கேட்டாலும்கூட, இன்னும் கீழ்படிகிற ஒரு மனிதனைக் காட்டிலும், நம்முடைய கொள்கைக்கு மிகவும் ஆபத்தான ஒன்று வேறு எதுவுமே இல்லை.

ஆனால் நிச்சயமாக, அந்தக் கீழ் அலைகள் நமக்குச் சாதகமாகவும் சிலவற்றை தருகின்றன. அடுத்த வாரம், அவைகளை எப்படி நம் சுயநலத்திற்காக பிரயோஜனப்படுத்திக் கொள்ளுவது என்று சில துப்புகளை உனக்குத் தருகிறேன்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 9

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி இப்பொழுது கடந்து சென்று கொண்டிருக்கிற, மந்தம் அல்லது “வறட்சியின்” கீழ் அலைகள், தாமே அவனுடைய ஆத்துமாவை, நமக்கு கொடுத்துவிடாது என்றும், அவைகள் சரியான முறையில் நம் சுயநலத்திற்கென்று பிரயோஜனப்படுத்தப்படவேண்டும் என்றும், என்னுடைய கடைசிக் கடிதம் உனக்கு அறிவுறுத்தியிருக்கும் என்று நினைக்கிறேன். அப்படியாக நாம் பிரயோஜனப்படுத்துவது, எந்த மாதிரியான வடிவில் இருக்கவேண்டும் என்பதை நான் இப்பொழுது சிந்தித்துப்பார்க்கிறேன்.

முதலாவதாக, மனிதனுடைய அலை போன்ற ஏற்றத் தாழ்வின் காலங்களில், அவனுடைய தாழ்வின் காலங்கள்தான், எல்லாவகையான உணர்வுப் பூர்வமான சோதனைகளுக்கும், அதிலும் குறிப்பாக சிற்றின்பம் குறித்த சோதனைகளை ஏற்படுத்துவதற்கும், ஒரு மிகச்சிறந்த வாய்ப்பாக இருக்கிறது என்பதை, நான் எப்பொழுதும் காண்கிறேன். இது உனக்கு ஆச்சரியமாக இருக்கக்கூடும். ஏனென்றால், நிச்சயமாக அவனுடைய ஏற்றத்தின் காலங்களில்தான், அவனுக்கு அதிக சரீரசக்தியும், அதன்மூலம் அவனை வீழ்த்தும் ஆற்றலுள்ள பசியும் அதிகமாக இருக்கும். ஆனால், நீ ஒன்றை கட்டாயம் நினைவில் கொள்ளவேண்டும். என்னவென்றால், அவைகளை எதிர்ப்பதற்கான சக்தியும் அப்பொழுதுதான் மிகவும் அதிகமாக உள்ளது என்பதை. நீ சிற்றின்பத்தை ஏற்படுத்தப் பிரயோஜனப்படுத்த விரும்புகிற அவனுடைய ஆரோக்கியமும், அவனுடைய மனநிலையும், பரிதாபமான

முறையிலே மிக எளிதாக, வேலை செய்வதற்கோ விளையாடுவதற்கோ, சிந்திப்பதற்கோ அல்லது ஒரு தீங்கற்ற மகிழ்ச்சிக்காகவோ பிரயோஜனப்படுத்திவிடப்படக்கூடும். ஒரு மனிதனுடைய உள்ளார்ந்த உலகம் முழுவதும், மந்த நிலையிலும் வெப்பம் தணிந்துபோனதாகவும், வெறுமையாகவும் இருக்கும்போதுதான், நம்முடைய தாக்குதல் வெற்றியடைவதற்கான வாய்ப்புகள் இன்னும் அதிகமாக உள்ளன. நாம் குறிப்பில் வைத்துக் கொள்ளவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், தாழ்ந்த நிலையில் தோன்றுகிற சிற்றின்ப உணர்வுகள் எல்லாம், ஏற்ற நிலையில் இருப்பவைகளைக் காட்டிலும் நுட்பமான வகையிலே, அவைகளின் தன்மையில் வித்தியாசப்படுகின்றன- அதாவது மனிதர்கள் “காதலில் வசப்படுவது” என்று அழைக்கிறார்களே, அந்த பாலும் நீரும் கலப்பது போன்ற அந்த நிகழ்வுக்கு நேராக, இது வழி வகுக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாகவும், வக்கிரத்துக்குள்ளாக அவன் இழுக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் மிக எளிதாகவே அதிகமாகவும், மனிதனுடைய பாலியல் உணர்வை ஒரு ஏமாற்றமளிக்கக்கூடிய ஒன்றாக வழங்குகிற, அந்தப் பெருந்தன்மையான, கற்பனையான, இன்னும் சொல்லப்போனால், ஆவிக்குரிய உடன்பாடு ஆகியவற்றினால் அது கறைப்படும் வாய்ப்பும், மிகக் குறைவாகவே இருக்கிறது. மாம்சத்துக்குரிய மற்ற எல்லா ஆசைகளைப் போலத்தான் இதுவும். உன் மனிதனுக்கு குடிப்பழக்கத்தை அவன் சந்தோஷமாகவும் தாராளமாகவும் இருக்கிற நேரத்தில் உற்சாகப்படுத்தி, அதை அவன் தன் நண்பர்களோடு அனுபவிக்கிற, ஒரு மகிழ்ச்சியின் வழியாக நீ காண்பிப்பதைக் காட்டிலும், அவன் மந்தமாகவும் களைப்பாகவும் இருக்கும்பொழுது, அதை ஒரு வலி தணிக்கும் மருந்தாக அவன் குடிக்கும்படி அழுத்தம் கொடுக்கும்போதுதான், அவன் ஒரு நல்ல குடிகாரனாக ஆகக்கூடிய எல்லா வாய்ப்புகளும் அதிகமாக இருக்கின்றன.

எந்த ஒரு மகிழ்ச்சி தருகிற விஷயத்தையும், அதனுடைய ஆரோக்கியமான, இயல்பான, திருப்தி செய்யக்கூடிய வடிவில் நாம் கையாளும்போது, நாம் ஒரு விதத்திலே எதிரியினுடைய எல்லைக்குள் இருக்கிறோம் என்பதை, நீ ஒருபோதும் மறந்துவிடாதே. இன்பத்தை காண்பிப்பதன் மூலம், அநேக ஆத்துமாக்களை நாம் வென்றிருக்கிறோம் என்பதை நான் அறிவேன். எப்படி இருந்தாலும், இது அவனுடைய கண்டுபிடிப்புதான். நம்முடையது அல்ல. இன்பங்களை உருவாக்கினது அவன்தான்: நம்முடைய எல்லா ஆராய்ச்சிகளும், இதுவரைக்கும் அப்படி ஒன்றை நாம் உருவாக்கக்கூடிய ஆற்றலை நமக்குக் கொடுக்கவில்லை. நம்மால் செய்ய முடிந்ததெல்லாம், நம்முடைய எதிரி உருவாக்கின அந்த இன்பங்களை, மனிதர்கள் அவனால் தடைசெய்யப்பட்ட சில குறிப்பிட்ட நேரங்களில், சில வழிகளில், சில அளவுகளில் அனுபவிக்கும்படியாக அவர்களை ஊக்குவிப்பதுதான். ஆதலால், எந்த ஒரு இன்பமும், அதனுடைய இயல்பான நிலையில் இருப்பதிலிருந்து மிகவும் தூரத்தில்தான், நாம் எப்பொழுதும் வேலை செய்ய முயற்சிக்கவேண்டும்- அதாவது அது குறைந்தபட்ச இயல்பாக, குறைந்த பட்சம் தன்னை உருவாக்கினவரோடு தனக்கு இருக்கக்கூடிய தொடர்பை நினைவூட்டுவதாக, மற்றும் குறைந்தபட்ச இன்பமாக இருக்கிற நிலையில். குறைந்து கொண்டேயிருக்கிற ஒரு இன்பத்திற்காக, அதிகரித்துக் கொண்டேயிருக்கிற ஒரு ஏக்கம்தான், நம்முடைய சூத்திரமாகும். இது நிச்சயமாகவே பலன் தரும், மற்றும் இது மற்ற வழிகளைக் காட்டிலும் மேலானதாகும். ஒரு மனிதனுடைய ஆத்துமாவை எடுத்துக்கொண்டு, அதற்கு பதிலாக, அவனுக்கு எதையும் திரும்பக் கொடுக்காமல் இருப்பதுதான், நம்முடைய பிதாவின் இருதயத்தை உண்மையாகவே மகிழச்செய்யும். அதற்கு,

தாழ்வின் காலங்கள்தான் அந்தச் செயல்பாட்டு முறையை துவங்குவதற்கான சரியான நேரமாகும்.

ஆனால், தாழ்வின் காலங்களைப் பயன்படுத்துவதற்கு, இன்னும் மேலான வழி ஒன்று உண்டு. நான் எதை சொல்கிறேனென்றால், நோயாளியினுடைய சொந்த சிந்தனைகளின் மூலமாகவே, அதைச் செய்வதை குறித்துதான். எப்பொழுதும்போல, நாம் செய்யவேண்டிய முதல் படி, அறிவை அவனுடைய மனதில் இருந்து விலக்கி வைக்கவேண்டும். அலைகளின் விதியை அவன் அறிந்துகொள்ள அனுமதிக்காதே. அவனுடைய (மத) மாற்றத்தில், முதலில் இருந்த தீவிரம், எப்பொழுதும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டும், அப்படியே அது என்றென்றைக்கும் நீடித்திருந்திருக்க வேண்டும் என்றும், மேலும், தற்சமயத்தில் அவனுக்கு இருக்கிற இந்த வறட்சியும், அதைப் போலவே, ஒரு நிரந்தரமான நிலையாக இருக்கிறது என்றும் அவன் நினைத்துக்கொள்ளட்டும். இந்தத் தவறான கருத்தை, அவனுடைய தலையில், ஒருமுறை நன்றாக பதித்துவிட்டாய் என்றால், அதற்குப்பின்பு நீ பல்வேறு வழிகளிலும் உன் வேலையைத் தொடரலாம். இவையெல்லாம், எதைச் சார்ந்ததென்றால், உன்னுடைய மனிதன், விரத்தி அடையும்படியாக சோதிக்கப்படக்கூடிய, ஒரு அவநம்பிக்கையைச் சேர்ந்த வகையா, அல்லது எல்லாம் சரியாகிவிடும் என்று உறுதி அளித்து தேற்றப்படக்கூடிய, ஒரு கற்பனை உலகில் வாழுகிற வகையா என்பதைப் பொறுத்துதான். இதில், முதல் கூறின வகை, மனிதர்களுக்குள்ளே மிகவும் குறைந்துகொண்டே வருகிறது. உன்னுடைய நோயாளி, ஒருவேளை அந்த வகையைச் சேர்ந்தவன் என்றால், எல்லாம் மிகவும் எளிதாகிவிடும். நீ செய்யவேண்டிய ஒரே காரியம் என்னவென்றால், அனுபவம் நிறைந்த கிறிஸ்தவர்களுடைய வழியிலிருந்து அவனை விலக்கிப்

பாதுகாப்பதும் (இப்பொழுதெல்லாம் இந்த வேலை மிகவும் எளிதாகிவிட்டது), வேதத்திலே அவனுக்குப் பொருத்தமான பகுதிகளில் அவனுடைய கவனத்தைத் திருப்புவதும், முழுக்க முழுக்க தன் தீர்மானத்தின் சக்தியினாலே, தன்னுடைய பழைய உணர்வுகளுக்கு அவன் மீண்டு வரும்படியாக, அந்த நம்பிக்கையற்ற வடிவத்தின் மேல், தன்னுடைய வேலையை அவன் தொடங்கச் செய்வதும்தான். அப்படி செய்துவிட்டால், ஆட்டம் நம்முடையதாகிவிடும். ஒருவேளை, அவன் அதிக நம்பிக்கையுள்ள வகையாய் இருந்தால், உன்னுடைய வேலை, அவனுக்கு இப்பொழுது உள்ள தன்னுடைய மனநிலையில், வெப்பம் தணிந்த அந்த நிலையை நன்றாகப் பழக்கப்படுத்திவிட்டு, கொஞ்சங்கொஞ்சமாக அதிலே திருப்தி அடையும்படியாகவும், மேலும், இது அவன் நினைத்த அளவுக்கு மோசமானது ஒன்றும் அல்ல என்று, அவன் சிந்திக்கும்படியாக வற்புறுத்துவதும்தான். ஓரிரு வாரங்களிலேயே, அவன் தன்னுடைய கிறிஸ்தவத்தின் முதல் சில நாட்கள், ஒருவேளை சற்று அதிகபட்சமாக இருந்துவிட்டதோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு நீ அவனை மாற்றிவிடுவாய். அவனிடம் “எல்லாவற்றிலும் நிதானமாக இருப்பது” என்பதைக் குறித்து அவனிடம் பேசு. பக்தியெல்லாம் ஒரு அளவுக்குதான் இருக்கவேண்டும் என்று, அவன் சிந்திக்கும் நிலைக்கு நீ அவனைக் கொண்டு வந்துவிட்டால், அவனுடைய ஆத்துமாவைக் குறித்து நீ நன்றாக சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். மிதமான பக்தி என்பது, பக்தியே இல்லாத நிலை போல நமக்கு நன்மையான ஒன்றுதான்- மேலும் அது நமக்கு, அதிக பொழுதுபோக்கான ஒன்றும் கூட.

மற்றுமொரு சாத்தியமான வழி என்னவென்றால், அவனுடைய விசுவாசத்தை நேரடியாகத் தாக்குவதுதான். அவன் தன்னுடைய அந்தத் தாழ்வின் காலம் நிரந்தரமானது என்று நினைக்கும்படி, நீ அவனை மாற்றிவிட்டால்,

அவனுடைய இந்த பக்தியான காலகட்டமும், மற்ற எல்லா முந்தைய காலகட்டங்களையும்போல சாகப்போகிறது என்று அவன் சிந்திக்கும்படியாக, உன்னால் வற்புறுத்த முடியும் அல்லவா? அறிவுத்திறன் மூலம், அவனுடைய மனது “நான் இதில் ஆர்வம் இழந்து கொண்டிருக்கிறேன்” என்று சொல்லுவதிலிருந்து, “இல்லை, இது தவறானது” என்று சொல்லும்படியாக மாறக்கூடிய, சிந்திக்கதக்க வழி என்று நிச்சயமாக எதுவுமே இல்லை. ஆனால், நான் உனக்கு முன்பு கூறினதைப்போல, நீ நம்ப வேண்டியது, புரியாத பிதற்றொலியைத்தானே ஒழிய, அறிவுத்திறனை அல்ல. “காலகட்டம்” என்ற அந்த வெறும் வார்த்தையே, அந்தத் தந்திரத்தை நிறைவேற்றிவிடும். அந்த உயிரினம் அப்படி பல காலகட்டங்களை இதற்கு முன்பாக கடந்து வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அந்த எல்லா உயிரினங்களுமே அப்படித்தான். மேலும், அவன் கடந்து வந்தவைகளைக் குறித்து அவன் தன்னை மேன்மைப்படுத்தியும், அவைகளைக் கீழ்ப்படுத்தியும் பார்க்கிறான். ஏனென்றால், அவன் அவைகளை (அனுபவித்து) நன்றாக விமர்சித்தபடியினால் அல்ல, அவைகள் எல்லாம் வெறுமென தன்னுடைய கடந்த காலத்தில் இருக்கின்றன என்பதற்காகவே, அவ்வாறு அவன் நினைக்கிறான். (நீ அவனுக்கு முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி, சரித்திரத்தின் கண்ணோட்டம் ஆகிய மங்கலான யோசனைகளைத் தந்து, நன்றாக அவனை போஷித்து வருகிறாய் என்றும், மேலும், அவனுக்கு ஏராளமான நவீன காலத்து சுயசரிதைகளையும், வாசிக்கும்படியாக கொடுக்கிறாய் என்றும் நான் நம்புகிறேன். அதிலுள்ள மனிதர்கள் எல்லோரும் பல்வேறு காலகட்டங்களில் இருந்து மீண்டும் எழும்பி வருகிறார்கள், இல்லையா?)

இந்த யோசனை இப்பொழுது உனக்குப் புரிகிறதா? சரி அல்லது தவறு என்பவைகளுக்கு இடையே இருக்கிற அந்த சாதாரண எதிர்மறையைப் பார்க்காதபடி அவனுடைய மனதை

விலக்கி வை. நல்ல இருள் நிறைந்த சொற்றொடர்களான, “அது ஒரு காலகட்டம்”, “நான் அதையெல்லாம் கடந்து வந்துவிட்டேன்” என்பவைகளைப் பயன்படுத்து, பின்னர் அந்த சிறப்புமிக்க வார்த்தையான “வாலிபப் பருவம்” என்பதையும் மறந்துவிடாதே.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 10

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி, சில மிகவும் விரும்பத்தக்க புது மனிதர்களிடம் அறிமுகமானதையும், நீ அந்த நிகழ்வை உண்மையாகவே, நம்பிக்கைக்குரிய வகையிலே பயன்படு-த்திக் கொண்டதையும் தடுக்கனிடமிருந்து அறிந்துகொண்டு, மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அவனுடைய அலுவலகத்து-க்கு வந்து, அவனைச் சந்தித்த அந்த நடுத்தர வயது தம்ப-தியர், நாம் அவன் சந்திக்கும்படியாக விரும்பக்கூடிய அதே வகையான மனிதர்கள்தான் என்பதை அறிந்தேன்- அதாவது பணக்காரர்களாக, புத்திசாலிகளாக, மேலோட்டமான அறி-வாளிகளாக, உலகத்திலுள்ள எல்லாவற்றையும் குறித்து, நிச்சயமாக சந்தேகப்படுகிறவர்களாகவும் இருப்பவர்கள். தெளிவற்ற வகையிலே, அவர்கள் அமைதிவாதிகளாக இரு-க்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன். அது தார்மீக அடிப்படையில் அல்ல, ஏராளமான தங்கள் சகமனிதர்களைக் குறித்த எந்த விஷயத்தையும், இழிவாகப் பார்க்கிற உள்ளா-ர்ந்த பழக்கமுடையவர்களாக இருப்பதனாலும், முழுக்க முழுக்க நாகரீகமும், இலக்கியவாதமுமான, பொதுவுடை-மைக் கொள்கையின் ஒரு சிறு கோடு அவர்களிடம் காண-ப்படுவதாலும், அவர்கள் அவ்வாறாக இருப்பதை அறிந்து-கொண்டேன். இது மிகச் சிறந்தது. மேலும், நீ அவனுடைய எல்லா சமூக, சிற்றின்ப, மற்றும் அறிவு சார்ந்த மாயையை எல்லாம், நல்ல வகையிலே பிரயோஜனப்படுத்திக் கொண்டி-ருக்கிறாய். இதைப் பற்றி இன்னும் விரிவாகச் சொல். அவன் இதில் ஆழமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டானா? நான் அவன் பேசுகிற வார்த்தைகளைப் பற்றி இங்கு கேட்கவி-ல்லை. அழியப்போகிற இந்த மனிதர்களெல்லாம், தாங்கள்

யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களு-டைய கட்சியைத்தான் தாங்களும் சேர்ந்தவர்கள் என்பதை நுட்பமான வகையிலே, தங்கள் பார்வையினாலும், பேசுகிற தொனியினாலும், சில சிரிப்புகளினாலும் அவர்களுக்கு மறைமுகமாக வெளிப்படுத்துவார்கள். அப்படிப்பட்ட துரோக-த்தைதான் நீ அவனிடம் விசேஷித்த வகையிலே ஊக்குவி-க்க வேண்டும். ஏனென்றால், அந்த மனிதன், தானே இன்னும் அதை முழுவதுமாக உணர்ந்துகொள்ளவில்லை. மேலும், அவன் அப்படி உணர்ந்து கொள்ளுகிற நேரம் வரும்பொழுது, அவன் அதிலிருந்து பின்வாங்குவதை நீ மிகவும் கடினமாக்கி விட்டிருப்பாய்.

சந்தேகமின்றி, அவன் மிக விரைவிலேயே, தன்னுடைய புது நண்பர்களுடைய எல்லா உரையாடல்களின் அடிப்படை அனுமானங்களும், தன்னுடைய சொந்த நம்பிக்கைக்கு நேரெதிராக இருப்பதை உணர்ந்துகொள்வான். அவன் இந்த உண்மையை, வெளிப்படையாக ஒத்துக்கொள்ளுவதை, நீ தள்ளிப்போடும்படியாக வற்புறுத்தும் வரையில், இது ஒரு பெரிய விஷயமாக இருக்கப்போவதில்லை. மேலும், அவமானம், பெருமை, அடக்கம், மாயை ஆகியவைகளின் உதவியோடு, இதை மிக எளிதாகச் செய்துவிடமுடியும். அவனுடைய இந்த தள்ளிப்போடுதல் நீடித்திருக்கும் வரைக்கும், அவன் ஒரு தவறான நிலையிலேயே இருப்பான். அவன் பேசவேண்டிய இடத்தில் மௌனமாகவும், மௌனமாக இருக்கவேண்டிய இடத்தில் சிரிக்கவும் செய்வான். அவன் முதலாவது, தன்னுடைய நடத்தையின் மூலமாக மட்டுமே வெளிப்படுத்திய, ஆனால் இப்பொழுது, தன் வார்த்தையின் மூலமாகவும் வெளிப்படுத்துகிற, தன்னுடையதல்லாத, எல்லா மனிதர்கள்மேலும் ஒரு நம்பிக்கையற்ற தன்மையையும், மற்றும் எல்லோரையும் சந்தேகப்படுகிற மனோபாவத்தையும் ஏற்றுக்கொள்வான். ஆனால், நீ அவனை வைத்து நன்றாக விளையாடினால், அவையெல்லாம் அவனுடையதாகவே

மாறிவிடும். இந்த நிலையற்ற எல்லா மனிதர்களும், எப்படியாக பாசாங்கு செய்கிறார்களோ, அப்படியாகவே மாறிவிடுவார்கள். இது அடிப்படையான நிஜம். இங்கு உண்மையான கேள்வி என்னவென்றால், எதிரியினுடைய எதிர் தாக்குதலுக்கு, நாம் எப்படி ஆயத்தமாவது என்பதுதான்.

முதலாவதாக நாம் செய்யவேண்டியது, இந்தப் புது விதமான இன்பத்தை, ஒரு சோதனையாக அவன் உணர்ந்துகொள்ளுகிற, அந்தக் குறிப்பிட்ட தருணத்தை நம்மால் முடிந்தமட்டும் தடை செய்வதுதான். எதிரியினுடைய ஊழியர்கள் எல்லாரும், மிகப்பெரிய தரமான சோதனையில் ஒன்றாக, இந்த “உலகத்தை” குறித்து 2000 வருடங்களாக பிரசங்கித்து வருவதால், இது செய்வதற்கு கடினமான ஒன்றாகத் தெரியலாம். ஆனால் நல்ல வேளையாக, கடந்த சில நூற்றாண்டுகளாக இதைக் குறித்து அவர்கள் மிகவும் குறைவாகவே பேசியிருக்கிறார்கள். தற்கால கிறிஸ்தவ இலக்கியங்களில் எல்லாம் பணச்செல்வத்தைக் குறித்து, நான் அதிகம் பார்த்தாலும், சொல்லப்போனால் நான் விரும்புவதற்கும் அதிகமாகவே பார்த்தாலும், உலகப் பிரகாரமான மாயை, நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல், மற்றும் காலத்தின் அருமை, ஆகிய பழைய எச்சரிப்புகளைக் குறித்து மிகக் குறைவாகவே பார்க்கிறேன். இவற்றையெல்லாம் உன்னுடைய நோயாளி பெரும்பாலும் “தூய்மைவாதம்” என்று வரையறுத்துவிடுவான்- அந்த வார்த்தைக்கு நாம் கொடுத்த மதிப்பு என்பது, கடந்த நூற்றாண்டுகளில் நாம் பெற்றுக்கொண்ட உண்மையான, ஸ்திரமான வெற்றி என்பதை நான் இங்கு குறிப்பிட்டுக் கொள்ளலாமா? இதனால், நாம் ஒவ்வொரு வருடமும், ஆயிரக்கணக்கான மனிதர்களை நிதானத்திலிருந்தும், கற்பிலிருந்தும், வாழ்க்கையின் தெளிவிலிருந்தும் தப்புவித்துக் கொண்டிருக்கிறோம்.

எப்படி இருந்தாலும், கூடிய சீக்கிரத்திலே அவனுடைய புது நண்பர்களின் உண்மையான இயல்பு, அவனுக்குத் தெளிவாகத் தெரிந்துவிடும். அதன் பின்னர், உன்னுடைய தந்திரங்கள் எல்லாம், அந்த நோயாளியின் அறிவைப் பொறுத்துதான் வேலைசெய்யும். அவன் போதுமான அளவு ஒரு பெரிய முட்டாளாக இருந்தால், அவனுடைய நண்பர்கள் இல்லாத நேரத்திலே அவர்களுடைய குணத்தை அவன் உணர்ந்துகொள்ளும்படியும், அவர்கள் கூட இருக்கும்பொழுது, எல்லா விதமான விமர்சனங்களும் கூட்டித்தள்ளப்பட்டு விடும்படியாகவும் செய்யமுடியும். இந்த வழி வெற்றிபெற்றால், நான் அறிந்த பல மனிதர்கள், பல நீண்ட காலங்களுக்கு, இரண்டு இணையான வாழ்க்கையை வாழ்வதைப்போல, அவனும் வாழும்படியாகத் தூண்டப்படமுடியும். அவன் பார்வைக்கு மட்டுமல்லாமல், உண்மையாகவே அவன் சந்திக்கிற ஒவ்வொரு வட்டத்திற்கும் ஏற்றப்படியான, வெவ்வேறு மனிதனாக இருக்கவும் முடியும். ஒருவேளை, இது தோல்வியுற்று விட்டால், மற்றுமொரு நுட்பமான, அதிக பொழுதுபோக்கான முறை ஒன்று இருக்கிறது. அவனுடைய இந்த வாழ்க்கையின் இருபக்கங்களும் சீரற்றதாய் இருப்பதை அவன் உணர்வதைக் குறித்து, நல்லவிதமான வகையிலே அவன் மகிழ்ச்சியடையட்டும். இது அவனுடைய தற்பெருமையான எண்ணத்தை, நாம் பிரயோஜனப்படுத்துவதின் மூலம் செய்யமுடியும். சனிக்கிழமை இரவிலே, அவன் ஆக்கிரமிக்கிற அந்த நகர்புற பரிகாசக்கார உலகத்தை, அந்த (ஏழை)வியாபாரி புரிந்துகொள்வது சாத்தியம் இல்லை என்பதை அவன் நினைவுகூர்ந்து, ஞாயிறு அன்று, அவனுக்கு அருகில் முழங்கால்படியிட்டு உட்காருவதை, அவன் சந்தோஷமாக அனுபவிக்கும்படி கற்பிக்கப்படமுடியும். அதே நேரம், தன் அபிமானத்துக்குரிய நண்பர்களோடு தேநீர் பருகும்பொழுது,

அவர்களோடு சேர்ந்து, மோசமான, தேவதூஷணங்களையும் அவன் அனுபவிக்கட்டும். ஏனென்றால், அவனுக்குள் இருக்கிற ஆழமான, ஆவிக்குரிய உலகத்தை, அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். இந்த யோசனை இப்பொழுது உனக்குப் புரிகிறதா? அந்த உலகப்பிரகாரமான நண்பர்கள் அவனை ஒரு புறத்தில் தொடுகிறார்கள், அந்த வியாபாரி அவனை மறுபுறத்தில் தொடுகிறான். இவன், இவர்கள் எல்லாரையும் சுற்றிவந்து பார்க்கிற, ஒரு முழுமையான, சமநிலையான, பல பாகங்களைக் கொண்ட மனிதனாய் இருக்கிறான். இப்படியாக, குறைந்தபட்சம் இரண்டு பிரிவான மக்களுக்கு, அவன் நிரந்தரமான துரோகியாய் இருக்கும்போதும், அவமானத்துக்குப் பதிலாக, ஒரு தொடர்ச்சியான அடி நீரோட்டம் போன்ற, சுயதிருப்தியை தனக்குள் உணருவான். கடைசியாக, இவை எதுவுமே வேலை செய்யவில்லை என்றால், அவன் மனசாட்சிக்கு விரோதமாக, இந்தப் புது நட்பைத் தொடரும்படியாக வற்புறுத்து. எதன் அடிப்படையில் என்றால், அவர்களோடு பழச்சாறை பருகுவது, அவர்களுடைய ஜோக்குகளுக்கு சிரிப்பது, ஆகிய சாதாரண செயல்களினாலே அவர்களுக்கு சில குறிப்பிடப்படாத வகையிலே தான் நன்மைசெய்வதாகவும், அப்படிச் செய்வதை நிறுத்திவிடுவது என்பது “சுயநீதியுடையவர்களுடைய குணம்” என்றும், “சகிப்புத்தன்மையற்ற” செயல் என்றும், (நிச்சயமாக) அது “தூய்மைவாதம்” என்றும் அவன் சிந்திக்கும்படி வற்புறுத்து.

அதுவரையில், நிச்சயமாகவே நீ இந்த வெளிப்படையான முன்னெச்சரிக்கையான செயலைச் செய்யவேண்டும். என்னவென்றால், இந்தப் புதிய முன்னேற்றம், அவன் சக்திக்கும் மீறி அவன் செலவு செய்யும்படியாகவும், அவன் தன் வேலையையும், தன் தாயையும் புறக்கணிக்கும்படியாகவும் அவனைத் தூண்டட்டும். அவளுடைய பொறாமையும் பயமும்,

அவன் கூடுதலாக காண்பிக்கிற, அவளைத் தவிர்க்கிற, முரட்டுத்தனமாக நடந்துகொள்ளுகிற குணங்களும், வீட்டிலுள்ள பிரச்சனைகளை இன்னும் தீவிரப்படுத்துவதற்கு, நமக்கு விலைமதிப்பற்றவைகளாய் இருக்கும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 11

என் அன்பு எட்டி,

எல்லாம் நல்லபடியாக போய்க்கொண்டிருக்கிறது என்று தெளிவாகத் தெரிகிறது. அவனுடைய அந்த இரண்டு நண்பர்களும், அவனைத் தங்களுடைய முழு கூட்டத்துக்கும் அறிமுகம் செய்துவைத்தார்கள் என்பதைக் கேட்டு, நான் குறிப்பாக மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய அலுவலகக் குறிப்புகளிலிருந்து நான் தெரிந்துகொண்டவரையில், இவர்கள் எல்லாரும் முற்றிலும் நம்பப்படத்தக்கவர்கள் ஆவர். இவர்கள் நிலையான, சீரான பரிகாசக்காரர்களாகவும், உலகப் பற்றுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பெரிய குற்றங்கள் எதையும் செய்யாமலேயே, மெதுவாக, சிறிது சிறிதாக, எந்தப் பிரச்சனையுமின்றி, நமது பிதாவின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிக நன்றாகச் சிரிக்கிறவர்களாய் இருப்பதைக் குறித்து நீ கூறினாய். சிரிப்பு என்பது, எல்லா நேரத்திலும் நமக்குச் சாதகமாகவே இருக்கும் என்ற எண்ணத்தின் கீழ், நீ இல்லை என்றே நான் நம்புகிறேன். இந்தக் விஷயம், நாம் உன்னிப்பாக கவனிப்பதற்குத் தகுதியுடையதாயிருக்கிறது.

மனித சிரிப்புக்கான காரணங்களை, நான்- மகிழ்ச்சி, வேடிக்கை, நேர்த்தியான நகைச்சுவை, மற்றும் அவமதிப்பு (மற்றவர்களை அவமதிக்கிற நகைச்சுவை) என்று வகுத்திருக்கிறேன். இதில் முதல் வகையான ‘மகிழ்ச்சி’ என்ற சிரிப்பு, ஒரு விடுமுறை நாளுக்கு முந்தைய நாள் இரவில், நண்பர்களோ அல்லது காதலர்களோ சந்திக்கும்போது ஏற்படுவதை, நீ பார்க்கலாம். வயது வந்த பெரியவர்களுக்குள்ளே, நகைச்சுவைக்கான

வழிகளில் எல்லா விதமான காரணங்களும், வழக்கமாக அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், மிகச் சிறிய நகைச்சுவையான கருத்துகூட, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதிக சிரிப்பை உருவாக்கத்தக்கதாக, அதை அவ்வளவு எளிமையாக்கக்கூடிய முறை எதைக் காட்டுகிறதென்றால், அவை, அதனுடைய உண்மையான காரணம் அல்ல என்பதையே. அந்த உண்மையான காரணம் என்ன என்று, நமக்குத் தெரியாது. அப்படிப்பட்ட ஒன்றுதான், அந்த வெறுக்கப்பட்ட கலையான, மனிதர்கள் “இசை” என்று அழைக்கிறார்களே,அதிலும் வெளிப்படுத்தப்படுகிறது.மேலும் இதை போன்ற ஒன்றுதான் பரலோகத்திலும் உண்டாகிறது- அதாவது நமக்கு முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கிற, விண்ணுலக அனுபவத்தின் தாளங்களை, ஒரு அர்த்தமற்ற முறையிலே வேகப்படுத்துவதுதான் இது. இப்படிப்பட்ட சிரிப்புகள் நமக்கு எந்த நன்மையும் செய்யப்போவதில்லை. இவற்றை நாம் ஒருபோதும் ஊக்கப்படுத்தக்கூடாது. அது மட்டுமல்லாமல் இந்த நிகழ்வு தன்னில்தானே அருவருக்கப்படத்தக்கதும், நரகத்தினுடைய யதார்த்தம், கண்ணியம், மற்றும் கடுமையை, நேரடியாக அவமதிப்பதாயும் இருக்கிறது.

‘வேடிக்கை’ என்பது, மகிழ்ச்சிக்கு மிகவும் நெருக்கமான உறவுடையதாகும்- அது விளையாட்டு உள்ளுணர்வினால் எழும்புகிற, ஒரு வகையான உணர்ச்சிப்பெருக்கமாயிருக்கிறது. இது நமக்கு மிகவும் குறைவாகத்தான் பயன்படும். நிச்சயமாக, இதைச் சில நேரங்களில், எதிரி, மனிதர்கள் எதை உணர்ந்து செய்யும்படியாக விரும்புகிறானோ, அந்த விஷயத்திலிருந்து திசை திருப்புவதற்கு நாம் பயன்படுத்தமுடியும்: ஆனால், அது தன்னில்தானே, முழுவதும் விரும்பத்தகாத போக்கை உடையது. அது கருணை, தைரியம், மனநிறைவு ஆகிய பல தீமைகளை ஊக்குவிக்கிறது.

சூழ்நிலைக்குப் பொருத்தமற்ற ஒரு உணர்ச்சியை, திடீரென்று உருவாக்குகிற ‘நேர்த்தியான நகைச்சுவை’ என்பது, மிகவும் அதிக நம்பிக்கைக்குரிய ஒரு துறையாய் இருக்கிறது. அநாகரீகமான அல்லது மோசமான நகைச்சுவையை குறித்து நான் இங்குக் குறிப்பிடவில்லை. இவை இரண்டாம்-தரமான சோதனையாளர்களால் அதிகம் நம்பப்படுகிறது என்றாலும், அவைகள் பெரும்பாலும் ஏமாற்றமளிக்கக்கூடிய முடிவுகளையே தருகின்றன. உண்மை என்னவென்றால், இந்த விஷயத்திலே மனிதர்கள் மிகத் தெளிவாக இரண்டு வகுப்புகளாக பிரிந்திருக்கிறார்கள். சில மனிதர்களுக்கு காமத்தைக் காட்டிலும் மிகவும் அபாயகரமான வேட்கை என்று, வேறு எதுவுமே இல்லை. இவர்களுக்கு, ஒரு அநாகரீகமான கதை, எப்பொழுது வேடிக்கையாகிறதோ அந்த இடத்திலே அது காம உணர்ச்சியை உண்டாக்குவதை நிறுத்திவிடுகிறது: வேறு சில மனிதர்கள் உண்டு, அவர்களுக்கு அதே நேரத்திலேயே, அதே விஷயங்கள், நகைச்சுவை, காமம் ஆகிய இரண்டையுமே அவர்களுக்குள் தூண்டுகின்றன. இதில் முதல் வகையைச் சேர்ந்தவர்கள், பாலியல் பல இடங்களில் பொருத்தமின்மையை (பொருத்தம் இல்லாததாய் இருப்பதை) எழுப்புவதினால், அதைக் குறித்து வேடிக்கையாகப் பேசுவார்கள்: இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள், அப்படிப்பட்ட பொருத்தம் இல்லாத விஷயங்களை உருவாக்குவார்கள், ஏனென்றால், அது அவர்களுக்குப் பாலியலைக் குறித்துப் பேசுவதற்கான, ஒரு சாக்குபோக்கை ஏற்படுத்துகிறது. உன்னுடைய மனிதன் அந்த முதல் வகையைச் சேர்ந்தவனாய் இருந்தால், மோசமான நகைச்சுவை உனக்கு உதவாது. இந்த விதியை நான் கற்றுக்கொள்வதற்கு, என்னுடைய ஒரு பழைய நோயாளியோடு, பார்களிலும் (bar) புகைபிடிக்கும் அறைகளிலும் வீணாக்கின (தாங்க முடியாத அளவு மனச்சோர்வை உருவாக்கின), பல மணிநேரங்களை

என்னால் ஒருபோதும் மறக்கவே முடியாது. உன்னுடைய நோயாளி எந்த வகுப்பைச் சார்ந்தவன் என்று நீ கண்டுபிடி-அதை, அவன் கண்டுபிடிக்காத வண்ணம் பார்த்துக்கொள்.

வேடிக்கையான பேச்சு மற்றும் நகைச்சுவையின் உண்மையான பயன்பாடு, முற்றிலும் ஒரு வேறுபட்ட திசையில் உள்ளது. மேலும், இது விசேஷித்த வகையில், ஆங்கிலேயர்களிடையே மிகவும் நம்பிக்கைக்குரியதாய் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய நகைச்சுவை உணர்வை மிகவும் அவசியமான ஒன்றாக நினைக்கிறார்கள். எந்த அளவுக்கு என்றால், இந்த உணர்வு குறைவுபடுவதாகக் கண்டால், அது அவர்கள் வெட்கப்படும்படியான ஒரு குறைபாடாக இருப்பதைப்போல எண்ணுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், நகைச்சுவை என்பது, இந்த வாழ்க்கை, அளிக்கக்கூடிய, எல்லா ஆறுதலையும் தருகிற, மற்றும் (இதை நீ நன்றாக குறித்துக்கொள்) எல்லாவற்றையும் சகித்துக்கொள்கிற ஒரு பண்பாய் இருக்கிறது. ஆதலால், அது அவமானத்தை அழித்துவிடக்கூடிய ஒரு விலைமதிப்பற்ற வழியாகப் பார்க்கப்படுகிறது. ஒரு மனிதன், சாதாரணமாக, மற்றவர்கள் தன்னுடைய செலவுக்கான பணத்தைச் செலுத்த அனுமதிப்பான் என்றால், அவன் ஒரு மோசமான மனிதன் ஆவான்; ஆனால், அவன் ஒரு நகைச்சுவையான வகையிலே அதைக் குறித்துப் பெருமையாகப் பேசி, தன்னோடுகூட இருப்பவர்களைக் கிண்டல் செய்து, தனக்கு அவர்கள் ஒரு நன்மை செய்துவிட்டதாகப் பேசுவான் என்றால், அவன் ஒரு வேடிக்கையான நண்பனாக இருப்பானே ஒழிய, மோசமான மனிதனாக இருக்கமாட்டான். சாதாரணமாக, கோழைத்தனம் வெட்கத்துக்குரியதாகும். ஆனால், நகைச்சுவையான மிகைப்படுத்துதலினாலும், அவலட்சணமான சைகைகளினாலும் பெருமையாகக் கூறப்பட்ட கோழைத்தனம், வேடிக்கையானது என்ற பெயரில் அழைக்கப்படக்கூடும். ஒரு கொடூரமான

மனிதன், கொடூரத்தை ஒரு சராசரி வேடிக்கையைப் போல வர்ணிக்கும் வரையில், கொடூரம் வெட்கத்துக்குரியது. ஒரு மனிதன், தன்னுடைய சக நண்பர்களின் மறுப்பில்லாத ஏற்றுகொள்ளுதலோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய பாராட்டுக்களோடும் ஒரு விஷயத்தை நகைச்சுவையான பேச்சாக வழங்கக்கூடும் என்றால், அவனால் அதிகபட்சம், தான் விரும்புகிற எல்லாவற்றையுமே செய்துவிடமுடியும் என்ற கண்டறிதல் அவனுடைய அழிவுக்கு உதவுவதைக் காட்டிலும், ஆயிரம் மோசமான, இன்னும் சொல்லப்போனால், தேவதூஷணமான நகைச்சுவை பேச்சுகள்கூட உதவிசெய்யாது. நகைச்சுவையைக் குறித்த ஆங்கிலேயர்களுடைய இந்தத் தீவிரத்தைக் கொண்டு, இந்த சோதனை, உன்னுடைய நோயாளியிடமிருந்து பெரும்பாலும் முழுவதுமாக மறைக்கப்படமுடியும். இது மிகவும் வரம்பு மீறி இருக்கிறது என்ற, எந்தவிதமான யோசனையும், அவனிடம் “தூய்மைவாதம்” என்றோ, அல்லது “நகைச்சுவையே இல்லாத தன்மை” என்றோ வர்ணிக்கப்படமுடியும்.

ஆனால், ‘அவமதிப்பு’ தான், இவை எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது. முதலாவதாக, அது மிகவும் சிக்கனமானது. நற்குணங்களை குறித்தோ, அல்லது இன்னும் பார்க்கப்போனால், எந்த ஒரு விஷயத்தையும் குறித்தோ, ஒரு சூதான புத்தியுள்ள மனிதன்தான், ஒரு நல்ல வேடிக்கையான பேச்சைப் பேசமுடியும்; எந்த மனிதனை வேண்டுமானாலும், ‘நற்குணம் ஒரு வேடிக்கையானது’ என்று பேசுவதற்கு, நாம் பயிற்றுவிக்கமுடியும். மற்றவர்களை அவமதிக்கிற மனிதர்களுக்கு, அந்த வேடிக்கை ஏற்கனவே நடந்துவிட்டது என்பதைப் போன்ற ஒரு கருத்து நிலவுகிறது. அந்த வேடிக்கையை யாரும் உண்மையில் செய்யாவிட்டாலும், ஒவ்வொரு தீவிரமான பேச்சுகளும், அதற்கு ஏற்கனவே வேடிக்கையான ஒரு பகுதி இருப்பதைப்போன்று குறிப்பிடுகிற ஒரு பாங்கிலே, விவாதிக்கப்படுகிறது. இந்த

அவமதிக்கிற பழக்கம் நீடிக்கப்பட்டால், அது எனக்குத் தெரிந்தவரையில், எதிரிக்கு எதிராக, ஒரு மனிதனுக்கு, அவனைச் சுற்றிலும் இருக்கக்கூடிய, ஒரு மிகச்சிறந்த கவசத்தைக் கட்டி எழுப்புகிறது. மேலும், மற்ற விதமான சிரிப்புகளின் ஆதாரத்தில் காணப்படுகிற உள்ளார்ந்த ஆபத்துகள் எதுவும், இதில் இல்லை. இது மகிழ்ச்சியிடமிருந்து ஆயிரம் மைலுக்கு அப்பால் உள்ளது. இது அறிவாற்றலை கூர்மைப்படுத்துவதற்குப் பதிலாக, கொன்றுபோடுகிறது. மேலும் இதை செயல்படுத்துகிறவர்களுக்கு நடுவே, எந்தவிதமான நேசத்தையும் இது தூண்டுவதில்லை.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 12

என் அன்பு எட்டி,

நீ சிறப்பாக முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது. என்னுடைய ஒரே பயம் என்னவெ-ன்றால், நீ உன்னுடைய நோயாளியை துரிதப்படுத்துகிற முயற்சியில், அவனுக்குள், அவனுடைய உண்மையான நிலையின் உணர்வை, எழுப்பி விட்டுவிடுவாயோ என்பது-தான். அவனுடைய நிலைமை உண்மையாக எப்படியிரு-க்கிறது என்று அறிந்த நீயும் நானும், அது அவனுக்கு எப்படி முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படவேண்டும் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அவனுடைய பாதையின் திசையில், நாம் அவனுக்கு அறிமுகப்படுத்தின ஒரு திருப்பம், எதிரியைச் சுற்றியிருக்கிற அந்த வட்டப்பாதையி-லிருந்து, அவனை ஏற்கனவே வெளியே கொண்டுவந்துவி-ட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால், இந்த மாற்றத்தை விளைவித்த அவனுடைய எல்லாத் தீர்மானங்களும், நிச்சய-மாக அற்பமானவை என்றும், திரும்ப மாற்றப்படக்கூடியவை-தான் என்றும் அவன் நினைக்கும்படிச் செய்யவேண்டும். எவ்வளவு மெதுவானதாக இருந்தாலும், அவன் இப்பொழுது சென்றுகொண்டிருக்கிற அந்தப் பாதை, அவனைச் சூரி-யனைவிட்டு வெளியே நகர்த்தி, மிகவும் குளிரும் இருளும் நிறைந்த அந்த தூரமான விண்வெளிக்குள் அவனைக் கொண்டுபோய்க் கொண்டிருக்கிறது என்பதை அவன் ஒருபோதும் சந்தேகப்படும்படியாக விட்டுவிடக்கூடாது.

இந்த காரணத்துக்காகவே, அவன் இன்னும் ஆலயத்துக்குச் செல்லுகிறவனாகவும், திருவிருந்தில் கலந்துகொள்ளுகிறவனாகவும் இருக்கிறான் என்பதைக்

கேட்டு, நான் கிட்டத்தட்ட சந்தோஷமடைகிறேன். இதில் ஆபத்துகள் உள்ளன என்பது எனக்குத் தெரியும். ஆனால், தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் சில மாதங்களில் இருந்த, அந்த நிலையிலிருந்து அவன் பிரிந்துவிட்டான் என்பதை அவன் உணராதபடி செய்கிற எந்த ஒரு காரியமும், நல்லதுதான். ஒரு கிறிஸ்தவனுக்குரிய வெளிப்படையான பழக்கவழக்கங்களை அவன் தக்கவைத்துக்கொள்ளும் வரையில், அவனுடைய ஆவிக்குரிய நிலை, ஆறு வாரங்களுக்கு முன்பு இருந்த அதே நிலையில் இருந்தாலும்கூட, அவன் தனக்கு ஒரு சில புது நண்பர்களையும், சந்தோஷங்களையும் பெற்றுக்கொண்ட ஒருவனாக, தன்னை நினைத்துக்கொள்ள வைக்கமுடியும். அவன் அவ்வாறாக நினைத்துக் கொண்டிருக்கும் வரையில், நாம் ஒரு திட்டவட்டமான, முழுவதும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட பாவத்திலிருந்து, ஒரு வெளிப்படையான மனந்திரும்புதலோடு போராடவேண்டிய அவசியம் இல்லை. நாம் கையாள வேண்டியதெல்லாம், தான் சமீபகாலமாக நல்ல முறையிலே முன்னேறவில்லை என்ற, அவனுடைய தெளிவில்லாத, ஒரு அமைதிற்ற உணர்ச்சியை மட்டும்தான்.

இந்தத் தெளிவற்ற அமைதியின்மை, மிகவும் கவனமாக கையாளப்படவேண்டிய ஒன்றாகும். அது இன்னும் சற்று பலமுள்ளதாகிவிட்டால், அவனை எழுப்பிவிட்டு, முழு ஆட்டத்தையும் நாசமாக்கிவிடும். மற்றொரு புறம், நீ அதை முற்றிலுமாக கீழ்ப்படுத்தினால்- எப்படியும், நீ அப்படிச் செய்வதற்கு, எதிரி அனுமதிக்கமாட்டான் என்றாலும்- நமக்கு நன்மையாக மாற்றப்படக்கூடிய, இந்த சூழ்நிலையின் ஒரு பகுதியை நாம் இழந்துவிடுவோம். இப்படி ஒரு உணர்ச்சி நீடித்திருப்பதற்கு நாம் அனுமதித்து, அது தவிர்க்கப்படமுடியாததாக இருப்பதற்கும், உண்மையான மனந்திரும்புதலாக மலருவதற்கு நாம் அனுமதிக்காத

வரையிலும், அதற்கு ஒரு விலைமதிக்கமுடியாத தன்மை உள்ளது. அது, நோயாளி, எதிரியைப் பற்றி சிந்திப்பதற்குரிய தயக்கத்தை அதிகப்படுத்துகிறது. எல்லா மனிதர்களுக்கும் எல்லா நேரத்திலும் இப்படிப்பட்ட சில தயக்கங்கள் உண்டு; ஆனால், அவனைக் குறித்த சிந்தனை, பாதி உணரப்பட்ட ஒரு குற்ற உணர்ச்சியின், ஒரு முழு தெளிவற்ற மேகத்தை எதிர்நோக்குவதையும், தீவிரபடுத்துவதையும் ஈடுபடுத்துமானால், இந்தத் தயக்கம் பத்துமடங்கு அதிகமாகிவிடும். அவனை ஞாபகப்படுத்துகிற எந்த ஒரு யோசனையையும் அவர்கள் வெறுப்பார்கள். அதாவது பொருளாதாரத்தில் வெட்கப்படும் நிலையில் உள்ள மனிதர்கள், தங்களுடைய வங்கிக் கணக்கைக் கண்டாலே வெறுப்பதைப் போல. இந்த நிலையில், உன்னுடைய நோயாளி, தன்னுடைய மதரீதியான கடமைகளைத் தவிர்க்காவிட்டாலும், அவற்றை அதிகமதிகமாய் வெறுக்க ஆரம்பிப்பான். அவன் அவைகளைச் செய்வதற்கு முன்பாக, அவைகளைக் குறித்து எவ்வளவு குறைவாக சிந்திக்கமுடியுமோ அவ்வளவு குறைவாக சிந்தித்துவிட்டு, அந்தக் கடமைகள் முடிந்தவுடனேயே, அவைகளை முற்றிலும் மறந்துவிடுவான். சில வாரங்களுக்கு முன்பாக, அவன் ஜெபத்திலே, நீ அவனை ஒரு யதார்த்தம் அல்லாத கற்பனைகளுக்கும், கவனமின்மைக்கும் இழுத்து, அவனை சோதிக்க வேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது, அவனே தன்னுடைய நோக்கத்திலிருந்து திசை திருப்பும்படியாகவும், தன்னுடைய இதயத்தை உணர்ச்சியற்றதாகவும் ஆக்கும்படியாக, திறந்த கைகளோடு உன்னிடம் வந்து மன்றாடிக் கேட்டுக்கொள்வான் என்பதை நீ காண்பாய். தன்னுடைய ஜெபங்கள் எல்லாம் உண்மையற்றதாய் இருக்கவேண்டும் என்று அவன் விரும்பினால், எதிரியோடு ஏற்படுகிற, எந்த பயனுள்ள தொடர்பையும் கண்டு, அவன் மிகவும் பயப்படுவான். அவனுடைய நோக்கமெல்லாம்

தூங்கிக் கொண்டிருக்கிற புழுக்களை (தொந்தரவு செய்து எழுப்பிவிடாமல்) அப்படியே விட்டுவிடவேண்டும் என்பதுதான்.

இந்த நிலைமை முற்றிலும் நிறுவப்பட்டுவிட்ட பின்பு, அவனுக்கு சிற்றின்பங்களை சோதனைகளாக வழங்குகிற அந்தக் கடினமான வேலையிலிருந்து கொஞ்சங்கொஞ்சமாக நீ விடுதலையாக்கப்பட்டு விடுவாய். அவனுடைய அந்த அமைதியின்மையும், அதை எதிர்கொள்ளுவதற்கான தயக்கமும், அவனை எல்லாவித உண்மையான மகிழ்ச்சிகளிலிருந்தும் அதிகமதிகமாக வெட்டிவிடும்போதும், முன்பு தனக்கு மகிழ்ச்சியில்லாத காரியங்களாக இருந்தவற்றை, அவனுடைய பழக்கம், இப்பொழுது மாயை, உற்சாகம் மற்றும் அவமதிக்கிற நகைச்சுவையாக வழங்கும்போதும், அவைகளை அவன் விட்டுவிடுவது கடினமாகும்போதும் (ஏனென்றால், நல்லவேளையாக, பழக்கம் இப்படித்தான், ஒரு சிற்றின்பத்தை கடினமாக்குகிறது), அவனுடைய அலைபாய்கிற கவனத்தை ஈர்ப்பதற்கு, எந்த வகையான விஷயங்களும், ஒன்றுமில்லாத சில சாதாரண விஷயங்கள்கூடப் போதுமானதாயிருப்பதை, நீ காணமுடியும். அவனுடைய ஜெபத்திலிருந்தும், அவனுடைய வேலையிலிருந்தும், அவனுக்குத் தேவையான தூக்கத்திலிருந்தும் அவனைத் தடுத்து நிறுத்துவதற்கு, அவன் விரும்புகிற ஒரு நல்ல புத்தகம், இனி உனக்குத் தேவைப்படப் போவதில்லை, நேற்றைய செய்தித்தாளில் வந்த அந்த விளம்பரப் பக்கமே போதுமானது. அவனுக்குப் பிடித்த மனிதர்களோடு, அவனுக்கு மகிழ்ச்சியளிக்கிற உரையாடல்களின் மூலமாக மட்டுமல்ல, அவன் எந்த வகையிலும் கண்டுகொள்ளாத சில மனிதர்களோடு, சில அறுவையான தலைப்புகளின் உரையாடல்களையும் வைத்துக்கூட, அவன் நேரத்தை வீணடிக்கும்படியாகச் செய்யமுடியும். பல மணி நேரங்களுக்கு

அவன் ஒரு வேலையும் செய்யாமல் இருக்கும்படியாக, உன்னால் வைக்கமுடியும். தீயை மூட்டி அதை சுற்றி ஆடிக் கொண்டாடுவதனால் அல்ல, அந்தத் தீ அணைந்துபோன பிறகும், அந்த குளிரான அறைக்குள், அவன் அதைப் பார்த்துக்கொண்டே இருக்கும்படியாகச் செய்து, தன்னுடைய இரவில் தூங்காதபடி, உன்னால் வைத்துக்கொள்ளமுடியும். நாம் அவன் தவிர்க்கவேண்டும் என்று நினைக்கிற எல்லா விதமான ஆரோக்கியமான, மற்றும் வெளியில் சென்று அவன் செயல்படுத்துகிற நடவடிக்கைகள் எல்லாவற்றையும் தடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எதையும் தராமல் விடும்போது தான், என்னுடைய ஒரு பழைய நோயாளி கீழே இங்கு வந்து சேர்ந்தவுடனே சொன்ன, அந்த வார்த்தைகளான, “என்னுடைய வாழ்க்கை முழுவதும் நான் செய்யவேண்டிய காரியங்களையும் செய்யாமல், நான் விரும்புகிற காரியங்களையும் செய்யாமல் கழித்திருக்கிறேன் என்பதை, இப்பொழுது காண்கிறேன்" என்று உன்னுடைய நோயாளியும் கடைசியாகச் சொல்லமுடியும். கிறிஸ்தவர்கள் எதிரியை, “அவர் இல்லாமல் எதுவும் பலமுள்ளதல்ல” என்று வர்ணிப்பார்கள். ஆமாம், இதுவும் மிகவும் பலம் உள்ளதல்ல: இச்சிக்கப்படதக்க பாவங்களினாலே, ஒரு மனிதன் மிகுந்த பலத்தோடு இருக்கக்கூடிய சிறந்த வருடங்களையெல்லாம் திருடிக்கொண்டு போகும் அளவுக்கு, பலம் உள்ளவைகள் அல்ல. ஆனால், அவனுடைய மனம், என்ன என்றோ, ஏன் என்றோ தெரியாத ஒரு விஷயத்தை குறித்து, மந்தமாக, விட்டுவிட்டு ஒளி வீசிக் கொண்டிருப்பதிலும், தனக்குத் தெரியாத காரியங்களின் மேல் இருக்கிற, அந்த மெலிதான ஆர்வங்களினால் கிடைக்கும் மன நிறைவினாலும், விரல்களின் தாளங்களிலும் பாதங்களின் அசைவுகளிலும் தனக்குப் பிடிக்காத ஒரு ராகத்தை விசிலடித்துப் பாடிக் கொண்டிருக்கும்போதும், அல்லது நீண்ட காலமாக, அனுபவிக்கும்படியான எந்த ஒரு மோக

இச்சையோ அல்லது லட்சியமோகூட இல்லாத, மங்கலான சிக்கலான வழிகளைக் குறித்த பகற்கனவுகளைப் போல, இவை பெலனற்றவைகளாயிருந்தாலும், ஒரு முறை சில சேர்க்கைகளின் மூலம் வாய்ப்பு கிடைத்து, அவைகளால் துவக்கப்பட்டுவிட்டால், அந்த உயிரினம் அதை உதறித் தள்ளமுடியாத அளவுக்கு, அவனை மிகவும் பலவீனமாகவும் நிதானமற்றதாகவும் ஆக்கும் அளவுக்கு, அவை பலமுள்ளதாய் இருக்கின்றன.

இவையெல்லாம் மிகவும் சிறிய பாவங்கள் தானே என்று நீ சொல்லக்கூடும்: சந்தேகமின்றி, எல்லா இளம் சோதனையாளர்களையும்போல, நீயும் கண் கவர்ந்திழுக்கும் அக்கிரமங்களை அறிவிக்கவேண்டும் என்று மிகவும் ஏக்கத்தோடு இருக்கிறாய். ஆனால், ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள். அந்த மனிதனை நீ எவ்வளவு தூரம், எதிரியிடமிருந்து பிரிக்கிறாய் என்பதுதான் இங்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாய் இருக்கிறது. அந்தப் பாவங்களுடைய ஒட்டுமொத்த விளைவும், அந்த மனிதனை அந்த ஒளியினிடத்தில் இருந்து பிரித்து, அந்த வெறுமைக்குள் கொண்டுவரும் வரையில், அவைகள் எவ்வளவு சிறியதான பாவங்களாக இருக்கின்றன என்பது முக்கியம் அல்ல. சீட்டாட்டமே அந்த தந்திரத்தை செய்யக்கூடும் என்றால், கொலை, சீட்டாட்டத்தை விடவும் பெரியது அல்ல. உண்மையில் பார்க்கப்போனால், நரகம் சென்றடைவதற்கான பாதுகாப்பான வழி அந்த படிப்படியான ஒன்றுதான்- அந்த மெல்லிய சாய்வு, பாதத்தின் கீழ் அந்த மென்மையான தரை, எந்தவிதமான திடீர் திருப்பமும் இல்லாத, எந்த மைல் கற்களுமில்லாத, எந்த வழிகாட்டிப் பலகைகளுமில்லாத, அந்த வழிதான்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 13

என் அன்பு எட்டி,

நீ ஒரு மிக எளிமையான கதையைச் சொல்லுவதற்கு, மிகவும் அதிகமான பக்கங்களை எடுத்துக்கொள்ளுகிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்தக் கதையின் ஒட்டுமொத்த சுருக்கமும் என்னவென்றால், நீ உன்னுடைய மனிதனை, உன் விரல்களின் நடுவாக நழுவவிட்டு விட்டாய் என்பதுதான். இப்பொழுது நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. உன்னுடைய இந்த கையாலாகாத தன்மையின் விளைவிலிருந்து, உன்னை நான் ஏன் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு, உண்மையான எந்தக் காரணமும் எனக்குத் தெரியவில்லை. அவனுடைய மனந்திரும்புதலையும், மற்றும் அந்த அடுத்த பக்கத்தினர், “கிருபை” என்று அழைக்கிறார்களே, அதனுடைய புதுப்பித்தலையும், நீ சொல்லுகிற அளவுகோலை வைத்துப் பார்க்கும்போது, இது (போர்க்களத்தில்) முதல் வரிசையின் தோல்வியாகும். இவையெல்லாம் அவனுடைய இரண்டாவது மாற்றத்திற்கு விளைவிக்கின்றன. மேலும், இது பெரும்பாலும் முதலில் இருந்ததைவிட, ஆழமான ஒன்றாகத்தான் இருக்கும்.

உன்னுடைய நோயாளி, அந்த பழைய ஆலையிலிருந்து (mill), திரும்ப நடந்து வந்து கொண்டிருந்தபோது, நீ அவனைத் தாக்காதபடி உன்னைத் தடுத்த, மூச்சுத் திணறலை ஏற்படுத்தக்கூடிய அந்த மேகம் என்பது, உனக்குத் தெரிந்திருக்கவேண்டிய, நன்கு அறியப்பட்ட ஒரு நிகழ்வாகும். அதுதான் எதிரியின் அதிகபட்ச காட்டுமிராண்டித்தனமான ஆயுதம். மேலும், அது இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத சில முறைகளின்

மூலம், எதிரி அந்த நோயாளியிடம் நேரடியாக வந்து உடன் இருக்கும்போது, பொதுவாகத் தோன்றுகிற ஒன்றாகும். சில மனிதர்கள் நிரந்தரமாகவே இதனால் சூழப்பட்டு இருப்பதால், நம்மால் எப்பொழுதுமே அவர்களை நெருங்க முடிவதில்லை.

இப்பொழுது உன்னுடைய தவறுகளுக்கு வருகிறேன். நீயே சொன்னதிலிருந்து பார்க்கும்பொழுது, முதலாவதாக, அந்த நோயாளி, அவனுக்கு மிகவும் பிடித்தமான ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு, நீ அனுமதித்துவிட்டாய். அதுவும், அவன் அதைப்பற்றின புத்திசாலித்தனமான சில குறிப்புகளை, தன்னுடைய புது நண்பர்களிடம் சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல, உண்மையாகவே அவன் அதை மிகவும் அனுபவித்து வாசிப்பதற்காக. இரண்டாவதாக, நீ அவன் அந்த பழைய ஆலைக்கு, இறங்கி நடந்துசென்று, தேநீர் பருகுவதற்கு அனுமதித்துவிட்டாய்- அதாவது, அவனுக்குப் பிடித்த அந்த இயற்கை சூழலின் நடுவே, தனிமையாக அவன் நடப்பதற்கு. வேறு வார்த்தைகளில், நீ அவனுக்கு இரண்டு, உண்மையான, சாதகமான இன்பங்களை அனுமதித்துவிட்டாய். இதனுடைய ஆபத்து என்னவென்று தெரியாத அளவுக்கா நீ அறியாதவனாக இருந்துவிட்டாய்? வலிகள் மற்றும் இன்பங்களின் தன்மை என்னவென்றால், அவை எந்த வகையிலும் தவறாகப் புரிந்துகொள்ள முடியாத யதார்த்தங்களாகும். ஆதலால், அவைகள் இருக்கும் வரையில், அவைகளை உணர்கிற அந்த மனிதனுக்கு, அவைகள் நிஜத்தின் உரை கல்லாகவும் (தரத்தை பரிசோதிக்கிற கல்) இருக்கின்றன. ஆதலால், நீ உன்னுடைய மனிதனை, அந்த வசீகரிக்கும் முறையைக் கொண்டு அழிக்க முயற்சித்திருந்தால்- அதாவது ஒரு வகையான சைல்டு ஹெரால்ட் (Childe Harold) போல, நோக்கமற்ற தன் வாழ்விலே இன்பங்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கிற ஒரு வகையான மனிதனாகவோ, அல்லது ஒருதலை காதல், விரக்தி, போராட்டங்கள், ஆகியவற்றோடு வாழ்க்கையின் அர்த்தத்தை

புரிந்துகொள்ள நினைக்கிற வர்தர் (Werther) என்பவனைப் போலவோ, கற்பனையான துன்பங்களைக் கொண்டு, சுயபரிதாபத்துக்குள் மூழ்கியிருக்கிற மனிதனாக நீ அவனை வைத்திருந்தால்- எந்த உண்மையான வலியிலிருந்தும், நீ அவனை எப்படியாவது பாதுகாத்திருப்பாய்; ஏனென்றால், ஐந்து நிமிடங்களே இருக்கக்கூடிய உண்மையான பல் வலி கூட, நிச்சயமாக இந்த வசீகரிக்கும் துன்பங்களெல்லாம், எவ்வளவு முட்டாள்தனமானது என்று வெளிப்படுத்தி, உன்னுடைய முழு தந்திரங்களின் முகமூடியையும் கழற்றிவிடும். ஆனால், நீ உன் நோயாளியை, இந்த உலகத்தைக் கொண்டு நாசப்படுத்த முயற்சித்திருக்கிறாய். அதாவது, மாயையையும், பரபரப்பையும், முன்னுக்குப் பின் முரணானவைகளையும், விலை கொடுத்து வாங்கிக்கொண்ட மனச்சோர்வுகளையும் மூடிமறைத்து, இன்பங்கள் என்று அவனுக்குக் காண்பித்திருக்கிறாய். ஒரு உண்மையான இன்பம்தான், அவன் சந்திக்கும்படியாக நீ அனுமதித்திருக்க வேண்டிய கடைசி விஷயம் என்பதை நீ பார்ப்பதற்கு எப்படித் தவறினாய்? அது, இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களின் மூலம், இத்தனை நாளாக நீ கடினமாக உழைத்து, அவன் மதிக்கும்படியாக கற்பித்த எல்லா பகட்டுகளையும் கொன்றுவிடும் என்று, நீ முன்னதாகவே பார்க்கவில்லையா? அதுவும் அந்த புத்தகமும் அந்த நடையும் கொடுத்த, அந்த விதமான இன்பம்தான் எல்லாவற்றிலும் மிகவும் ஆபத்தானது என்பதையும் நீ காணவில்லையா? நீ அவனுடைய உணர்வுகளின் மேல் உண்டாக்கிக் கொண்டிருந்த, அந்த ஓடு போன்ற ஒன்றை அது உரித்துவிடும் என்றும், அவன், தான் மீண்டும் குணமாகி, தன்னுடைய வீட்டுக்குத் திரும்பி வருவதைப் போன்ற உணர்வை, அது தரும் என்றும் நீ காணவில்லையா? எதிரியினிடமிருந்து அவனைப் பிரிக்கும் ஆரம்ப நிலையாக, நீ அவனை, அவனிடமிருந்தே பிரிக்க முயற்சித்தாய், அதில்

ஓரளவு முன்னேறிக் கொண்டும் இருந்தாய். இப்போது, அவையெல்லாம் நாசமாகிவிட்டது.

மனிதர்கள் தங்களிடமிருந்தே தங்களைப் பிரிக்கவேண்டும் என்று எதிரியும் விரும்புகிறான் என்பது, எனக்கு நன்றாகத் தெரியும், ஆனால், அது ஒரு வித்தியாசமான வழியிலே. ஒன்றை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள், அவனுக்கு அந்த சிறு புழுக்களை உண்மையாகவே பிடிக்கும். மேலும், அவர்கள் ஒவ்வொருவருடைய தனித்தன்மையின் மேலும், அவன் ஒரு அபத்தமான மதிப்பை வைத்திருக்கிறான். அவர்கள் தங்களுடைய சுயங்களை இழக்கவேண்டும் என்று அவன் பேசும்பொழுது, அவர்கள் தங்களுடைய சுயவிருப்பத்தின் இரைச்சலை கைவிடவேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறான்; அப்படி அவர்கள் செய்துவிட்ட பின்பு, அவன் உண்மையாகவே அவர்களுடைய எல்லா ஆளுமையையும், திரும்ப அவர்களுக்குத் தந்து, அவர்கள் முழுமையாக தன்னுடையவர்களாக ஆகும்பொழுது, இன்னும் அதிகமாக எப்பொழுதும் இல்லாத வகையிலே, தனித்தன்மை உடையவர்களாய் இருக்கிறார்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறான் (அதுவும் உண்மையாகவே அப்படி பெருமைப்படுகிறான் என்று நான் அஞ்சுகிறேன்). எனவேதான், அவர்கள் தங்களுடைய குற்றமற்ற விருப்பங்களைக்கூட, அவனுக்காகத் தியாகம் செய்வதைப் பார்த்து, அவன் மகிழ்ச்சியடைந்தாலும், அவர்கள் எந்த ஒரு காரணத்துக்காகவும் தங்களுடைய சொந்த இயல்பை விட்டு, விலகிச்செல்வதை வெறுக்கிறான். நாம் அவர்கள் அப்படி விலகிச் செல்லும்படியாகவே, அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மனிதனுடைய ஆழமான விருப்பங்கள், உந்துதல்கள் ஆகியவை, எதிரி அவனுக்கு அளித்த மூலப் பொருட்களும், தொடக்கப் புள்ளியுமாகும். ஆதலால், அப்படிப்பட்டவைகளில் இருந்து அவனை விலக்குவது என்பது, எப்பொழுதும் நமக்கு சாதகமாகக்

கிடைக்கிற ஒரு புள்ளியாகும். சாதாரணமாக, ஒரு மனிதன் அலட்சியப்படுத்துகிற காரியங்களில்கூட, அவனுடைய சொந்த விருப்பங்கள் மற்றும் வெறுப்புகளுக்குப் பதிலாக, இந்த உலகத்தினுடைய தரத்தையோ, வழக்கத்தையோ, நடைமுறைகளையோ வைப்பது எப்பொழுதும் நாம் விரும்பத்தக்கதாகும். உன்னுடைய இடத்தில் நான் இருந்தால், இதையேதான் செய்திருப்பேன். என்னுடைய நோயாளியிடமிருந்து, எந்த வகையிலும் பாவமாக இல்லாத, எந்த ஒரு பலமான, தனித்துவமான ஆசைகளையும், விருப்பங்களையும் அவனிடமிருந்து முற்றிலுமாக அழித்துவிடவேண்டும் என்பதை நான் ஒரு விதியாகவே வைத்திருப்பேன். அது சாதாரணமாக கிரிக்கெட் விளையாடுவதின் மீதுள்ள ஆர்வமோ, அல்லது ஸ்டாம்புகளை சேகரிக்கிற ஆர்வமோ, அல்லது சாக்லேட் பானத்தை பருகுகிற, மிகவும் சாதாரணமான சில வகையான ஆர்வங்களாக இருந்தாலும்கூட. அப்படிப்பட்ட விஷயங்களில், எந்த விதமான நல்ல குணமும் இல்லை என்பதை நான் உன்னோடு ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அவைகளில் இருக்கக்கூடிய ஒரு விதமான கபடற்ற தன்மையும், தாழ்மையும், ஒரு மனிதன் தன்னை மறந்து அதை அனுபவிப்பதிலும், எனக்கு அவநம்பிக்கை உள்ளது. ஒரு மனிதன் மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் குறித்து சிறிதளவும் கவலையற்று, தனக்கு ஒரு விஷயம் பிடிக்கிறது என்பதற்காகவே, அதை உண்மையாக, பாரபட்சமின்றி அனுபவிக்கிற, இந்த உலகத்திலுள்ள எந்த ஒரு விஷயமும், அந்த உண்மையின் நிமித்தமாகவே, நம்முடைய சில நுட்பமான தாக்குதலின் முறைகளுக்கு எதிராக, முன் ஆயத்தம் உடையவைகளாய் இருக்கின்றன. நோயாளி, அந்த “சிறந்த” மனிதர்கள், அந்த “சரியான” உணவு, அந்த “முக்கியமான” புத்தகங்கள் இவைகளுக்காக, தனக்கு உண்மையாகப்

பிடித்த மனிதர்கள், உணவு மற்றும் புத்தகங்களை கைவிட்டு விடும்படியாக, நீ எப்பொழுதும் முயற்சிக்கவேண்டும். எனக்கு ஒரு மனிதனைத் தெரியும், அவன் சமூக லட்சியங்களுக்கான பலமான சோதனைகளிடமிருந்து, அதைவிட அதிக பலம் வாய்ந்த, ஆட்டுக்குடல், வெங்காயம் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட, ஒரு உணவின் ருசியினாலே பாதுகாக்கப்பட்டு இருக்கிறான்.

இந்தப் பேரழிவிலிருந்து நாம் எப்படி மீண்டுவருவது என்பது இன்னும் யோசிக்கவேண்டிய ஒன்றாய் இருக்கிறது. இப்பொழுது நாம் செய்யவேண்டிய பெரிய வேலை என்னவென்றால், இதற்கு மேல் அவன் எதையும் செய்துவிடாதபடி தடுப்பதே ஆகும். அவன் எதையும் செயல்படுத்த ஆரம்பிக்காத வரை, தன்னுடைய புது மனந்திரும்புதலைப் பற்றி, எவ்வளவு யோசிக்கிறான் என்பது இங்கு முக்கியமே அல்ல. அந்தக் குட்டி மிருகம், சேற்றுக்குள் நன்றாக புரண்டு கொண்டிருக்கட்டும். அவனுக்கு அதைக் குறித்து புத்தகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏதும் இருந்தால், அவன் எழுதட்டும். எதிரி மனிதர்களுடைய ஆத்துமாவுக்குள் விதைக்கிற அந்த விதையை நசுக்குவதற்கு, இது அடிக்கடி பிரயோஜனப்படக்கூடிய ஒரு சிறந்த வழியாகும். அவனுடைய தீர்மானத்தில் இருந்து நாம் விலக்கிவைக்கக்கூடும் என்றால், அவனுடைய கற்பனையிலும் விருப்பங்களிலும் இருக்கக்கூடிய, எவ்வளவு அதிக பக்தியும், நம்மை எந்த வகையிலும் பாதிக்காது. ஒரு மனிதன் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, செயல்படுத்தப்பட்ட பழக்கங்கள், திரும்பத் திரும்ப செய்வதினால் பலப்படுகின்றன. ஆனால், செயல்படுத்தப்படாதவைகள், பலவீனம் ஆகின்றன. அவன் எதையும் செயல்படுத்தாமல், எவ்வளவு அதிகமாய் உணர்ந்துகொண்டு மட்டும் இருக்கிறானோ, அவ்வளவு

குறைவாகவேதான் அவனுக்கு அதை செயல்படுத்தமுடியும். நாட்கள் போகப்போக, அவ்வளவு குறைவாகவேதான் அவனால் உணரவும்முடியும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 14

என் அன்பு எட்டி,

நீ உன்னுடைய நோயாளியைப் பற்றி, கடைசியாக அனுப்பிய குறிப்பில் இருக்கிற, மிகவும் அபாயமான விஷயம் என்னவென்றால், அவன் தன்னுடைய அசல் மனமாற்றத்தின் அடையாளமாய் இருந்த, திட்டவட்டமான தீர்மானங்கள் ஒன்றையும் செய்யவில்லை என்பதுதான். எப்பொழுதும் நற்குணத்தை உருவாக்கும்படியான, எந்தவிதமான ஆடம்பர வாக்குகளும் இல்லை என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அவனுடைய வாழ்க்கைக்குத் தேவையான, அந்த கிருபை அளிக்கப்படும் என்கிற, எதிர்பார்ப்புகூட அவனிடம் இல்லை, ஆனால், அவனுடைய அன்றாட நாட்களிலும், நேரங்களிலும், எதிர்கொள்கிற சோதனைகளைச் சந்திப்பதற்கு, அந்தந்த நாளுக்கும், அந்தந்த வேளைக்கும், தேவையான அளவு கிருபையை மட்டுமே எதிர்பார்க்கிறான்! இது மிகவும் மோசமானது.

இந்தத் தருணத்திலே நாம் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். உன்னுடைய நோயாளி மிகத் தாழ்மையுள்ள ஒருவனாக ஆகிவிட்டான்; இந்த உண்மைக்கு நேராக, நீ அவனுடைய கவனத்தை திருப்பிவிட்டாயா? எல்லா நற்குணங்களும், ஒரு மனிதன் தனக்கு அந்த நற்குணம் இருக்கிறது என்று, அறியாத வரையில், (நம்முடைய பயன்பாட்டுக்கு) வலிமை இழந்தவைகளாய் இருக்கின்றன. ஆனால், தாழ்மையைப் பொறுத்தவரை, இது விசேஷித்த வகையில் உண்மையானது. அவன் தன்னுடைய ஆவியில் மிகவும் தாழ்மையோடு இருக்கிற அந்த தருணத்தில், நீ அவனைப் பிடித்து, அவனுடைய மனதுக்குள், தான்

எவ்வளவு தாழ்மையாக இருக்கிறான் என்ற மனநிறைவான உணர்ச்சியை நுழையச்செய்து, “அடடா! நான் எவ்வளவு தாழ்மையாக இருக்கிறேன்”, என்று அவன் நினைக்கும்படி வை. அப்படிச் செய்யும்போது, உடனேயே பெருமை-அதாவது தன்னுடைய சொந்தத் தாழ்மையைக் குறித்த பெருமை, அவனுக்குத் தோன்றிவிடும். ஒருவேளை, அவன் இந்த ஆபத்துக்கு விழித்துக்கொண்டு, இந்த புது வகையான பெருமையை அடக்க முயற்சித்தால், அவனுடைய அந்த முயற்சியைக் குறித்தே அவன் பெருமைப்படும்படியாகச் செய். இப்படியே, எத்தனை நிலைகளுக்கு உன்னால் தொடரவேண்டுமோ அப்படியே செய். ஆனால், நீ அதை நீண்ட காலத்துக்கு செய்ய முயற்சிக்காதே, ஏனென்றால், நீ அவனுடைய நகைச்சுவை உணர்வையும், (நீ மீண்டும் மீண்டும் செய்கிற இந்தச் செயலின்) விகித உணர்வையும் எழுப்பிவிடும் அபாயம் இருக்கிறது. அப்படி ஆகும்போது, அவன் உன்னை பார்த்து வெறுமென சிரித்துவிட்டு, தூங்கச் சென்றுவிடுவான்.

ஆனால் தாழ்மை என்னும் நற்குணத்தின் மீது அவனுடைய கவனத்தைப் பதித்து வைப்பதற்கு, வேறு சில பயன் தரக்கூடிய வழிகள் உள்ளன. மற்ற எல்லா நற்குணங்களைப் போல, இந்த நற்குணத்திலும், எதிரி அந்த மனிதனுடைய கவனத்தை அவனுடைய சுயத்திடம் இருந்து திருப்பி, தன்னிடத்திலும் பிற மனிதர்களிடத்திலும் அது திரும்பவேண்டும் என்று விரும்புகிறான். எல்லாவித கீழ்தரமான நிலைகளும், சுய வெறுப்புகளும், தொலைநோக்குப் பார்வையில் இந்த முடிவை அடையவேண்டும் என்பதற்காகவே அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த முடிவை அவைகள் அடைந்துவிடாத வரைக்கும், அவைகள் நமக்கு சிறிதளவே பாதிப்பை உண்டு பண்ணுகின்றன. மேலும், ஒருவேளை அந்த மனிதனுடைய கவனத்தை, அவன் மேலேயே இவைகள் பதித்திருக்கும் என்றால், அவைகள் நமக்கு நன்மையாகவும் இருக்கக்கூடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சுயஅவமதிப்பு, மற்றவர்களுடைய சுயத்தையும் அவமதிப்பதற்கு ஒரு துவக்கப் புள்ளியாக அமைந்துவிட்டால், பின்னர் அதுவே மனச்சோர்வு, மற்றவர்களை துன்புறுத்தி கேவலப்படுத்தும் பண்பு, மற்றும் கொடுமை, ஆகியவற்றுக்கு ஒரு ஆரம்பப்புள்ளி ஆகிவிடும்.

ஆதலால், நோயாளியிடமிருந்து தாழ்மையின் உண்மையான முடிவை, நீ மூடிமறைத்து விடவேண்டும். அவன் அதை சுயமறதி என்று நினைக்காமல், அதைத் தன்னுடைய தாலந்துகள் மற்றும் குணத்தைக் குறித்த, ஒரு வகையான மனப்பான்மை- அதாவது தாழ்வு மனப்பான்மை என்று நினைத்துக் கொள்ளட்டும். எனக்குத் தெரிந்தவரை அவனுக்கு சில திறமைகள் உண்மையாகவே இருக்கின்றன. தாழ்மை என்பது என்னவென்றால், தன்னுடைய தாலந்துகள், தான் நினைப்பதைக் காட்டிலும், குறைந்த மதிப்புள்ளவை என்று நம்ப முயற்சிப்பதே ஆகும், என்ற ஒரு சிந்தனையை அவன் மனதில் பதித்துவிடு. சந்தேகமின்றி, அவை அவன் நம்புவதைக் காட்டிலும், குறைவான மதிப்புள்ளவைகளாகத்தான் இருக்கின்றன. ஆனால் இங்கு அது முக்கியமல்ல. அவன் ஒரு பண்பைக் குறித்த ஒரு மனப்பான்மையை, உண்மையைத் தவிர வேறு எதுவாக வேண்டுமானாலும் மதிக்க வைப்பதுதான் இங்குள்ள பெரிய விஷயம். இப்படியாக, ஒரு நல்ல குணமாக மாறக்கூடிய அபாயத்தைத்தருகிற ஒரு விஷயத்தை ஊடுருவி, அதனுடைய இதயத்தில், உண்மையின்மை மற்றும் தவறான நம்பிக்கை ஆகிய பகுதிகளை அறிமுகப்படுத்திவிடலாம். இந்தச் செயல்முறையின் மூலம், ஆயிரக்கணக்கான மனிதர்கள், தாழ்மை என்பது, அழகான பெண்கள் தாங்கள் அசிங்கமாக இருப்பதாக நம்புவதும், புத்திசாலியான மனிதர்கள் தாங்கள் முட்டாள்கள் என்று நம்ப முயற்சிப்பதும்தான் என்ற நம்பிக்கைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் நம்ப முயற்சிக்கிற அந்த காரியம், சில

வேளைகளில் முட்டாள்தனமாக தெரிவதால், அதை நம்புவதில் அவர்கள் வெற்றி பெறமுடிவதில்லை. இப்படி அவர்களுடைய மனம், அந்த சாதிக்கமுடியாத ஒன்றை சாதிக்கும் முயற்சியில், முடிவில்லாமல் அவர்களை சுற்றிக்கொண்டே இருக்கும்படியாக வைக்கும் வாய்ப்பு, நமக்குக் கிடைக்கிறது. எதிரியினுடைய போர் தந்திரங்களை நாம் முன்கூட்டியே அறிவதற்கு, அவனுடைய குறிக்கோள்கள் என்ன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. எதிரியானவன், மனிதனை ஒரு குறிப்பிட்ட மனநிலைக்குள் கொண்டுவர விரும்புகிறான். அதாவது, ஒருவேளை அந்த மனிதன் இந்த உலகிலேயே சிறந்த ஒரு தேவாலயத்தை கட்டி, அதுதான் சிறந்தது என்று அறிந்து, அந்த உண்மையில் மகிழ்ச்சி அடையும்போது, அந்த மகிழ்ச்சி, ஒருவேளை அது மற்றொருவரால் கட்டப்பட்டிருந்தாலும், அதை குறித்து ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு கூடுதலாகவோ, அல்லது குறைவானதாகவோ, அல்லது வேறு விதமாகவோ இல்லாமல் இருக்கும்படியான ஒரு மனநிலைக்குள் அவனை கொண்டுவர விரும்புகிறான். எதிரி, முடிவிலே, அந்த மனிதன் தனக்கு சாதகமான எந்த ஒரு பாரபட்சமும் இல்லாமல், சுதந்திரமாகத் தன்னுடைய திறமைகளில் எவ்வளவு வெளிப்படையாகவும் மனநிறைவோடும் மகிழ்ச்சியடைகிறானோ, அதே நிலையில் தனக்குத் தெரிந்த ஒருவருடைய திறமையிலோ, அல்லது சூரிய உதயத்திலோ, ஒரு யானையிலோ, ஒரு நீர்வீழ்ச்சியைக் கண்டோ மகிழ்ச்சியடையும்படியாக விரும்புகிறான். தொலைநோக்குப் பார்வையில், அவன் ஒவ்வொரு மனிதனும், எல்லா உயிரினங்களையும் (தன்னையும் சேர்த்து) மகிமையான சிறந்த காரியங்களாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். முடிந்தமட்டும் விரைவாக, அவர்களுடைய மிருக சுய அன்பைக் கொன்றுவிடவேண்டும் என்று அவன் விரும்புகிறான். ஆனால், நான் பயப்படுகிறபடி,

அவர்களுக்கு ஒரு புதுவிதமான சுய அன்பில், அவர்களை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்பது, அவனுடைய நீண்டகால கொள்கையாய் இருக்கிறது- அதாவது எல்லா சுயங்களின் மேலும், தன்னுடையது உட்பட, ஒரு கருணையும் மனநிறைவான உணர்வும் இருக்கும்படியாக. உண்மையாகவே, அவர்கள் தங்களைப்போல மற்றவர்களை நேசிக்கப் பழகிக்கொண்ட பிறகு, அவர்கள், மற்றவர்களைப்போல தங்களையும் நேசிக்க அனுமதிக்கப்படுவார்கள். ஏனென்றால், நம்முடைய எதிரியிடம் இருக்கின்ற, நம்மை மிகவும் அதிகமாக விரட்டியடிக்கிற, விவரிக்க முடியாத பண்பை, நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது; எதுவென்றால், அவன், தான் உருவாக்கின, அந்த மயிரில்லாத இரண்டு கால் ஜீவன்களை, உண்மையாகவே நேசிக்கின்றான். மேலும், அவர்களிடமிருந்து அவன் தன் இடது கையினாலே எடுத்துக்கொண்டவைகளை, எப்பொழுதுமே தன் வலது கையினால் திரும்பக் கொடுத்துவிடுகிறான்.

ஆதலால், அவனுடைய முழு முயற்சியும் என்னவென்றால், அந்த மனிதனுடைய மனதை, அவனுடைய சொந்த மதிப்பு என்கிற தலைப்பிலிருந்து முற்றிலுமாக விலக்கிவைப்பது-தான். அவனைப் பொறுத்தவரை, அந்த மனிதன் பல மணி நேரங்கள் செலவழித்து, தான் ஒரு மோசமான ஒருவன் என்று தன்னைக் குறித்து சிரமம் எடுத்து நினைக்க முயற்சிப்பதைக் காட்டிலும், அந்த மனிதன் தன்னை ஒரு சிறந்த கட்டட வடிவ-மைப்பாளர் என்றோ, அல்லது ஒரு சிறந்த கவிஞன் என்றோ நினைத்துவிட்டு, அதை முற்றிலும் மறந்துவிடுவதே மேலானது என்று அவன் நினைக்கிறான். ஆதலால், அந்த நோயாளிக்குள், மாயையான மகிமையையோ, அல்லது பொய்யான அடக்க-த்தையோ உட்புகுத்த நீ எடுக்கிற முயற்சிகளெல்லாம், எதிரியின் பக்கத்திலிருந்து ஒரு வெளிப்படையான நினைவூ-ட்டுதலோடு எதிர்கொள்ளப்படும். அது என்னவென்றால், ஒரு மனிதன் தன்னுடைய சொந்தத் திறமைகளைக் குறித்து, எந்த

ஒரு மனப்பான்மையும் வைத்துக்கொள்ளும்படியாக அழைக்கப்படவில்லை, ஏனென்றால், புகழ் என்கிற கோயிலில் தனக்கென்று எந்த ஒரு தனிப்பட்ட இடத்தையும் அவன் தீர்மானிக்காமலேயே, தன்னுடைய திறமைகளை தன்னால்முடிந்த, சிறப்பான வழியிலே மேம்படுத்தமுடியும், என்ற நினைவூட்டுதலோடு. நீ எந்த விலையைக் கொடுத்தாவது, நோயாளியின் சுய நினைவிலிருந்து இந்த நினைவூட்டுதலை நீக்கிவிட முயற்சித்தாக வேண்டும். எதிரியும், அந்த நோயாளியின் மனதுக்குள் உண்மையாகவே, ஒரு கோட்பாட்டை வழங்க முயற்சிப்பான். அந்தக் கோட்பாட்டை அவர்கள் எல்லோரும் சொல்லுகிறார்கள், ஆனால், தங்களுடைய உணர்ச்சிகளில் அதை ஏற்றுக்கொள்வதை கடினமாக உணருகிறார்கள். அந்தக் கோட்பாடு என்னவென்றால், தங்களுடைய திறமைகளை, அவர்கள் தாமாகவே உருவாக்கவில்லை, அவைகளெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டன என்றும், அவர்கள் அதைக் குறித்து பெருமை பாராட்டவேண்டும் என்றால், தங்கள் தலைமுடியின் நிறத்தைக் குறித்துகூட அவர்கள் பெருமை பாராட்டிக் கொள்ளலாம் என்பதே ஆகும். ஆனால், எப்பொழுதும் எல்லா வகையிலும் எதிரியினுடைய நோக்கம், அந்த நோயாளியின் மனதை அப்படிப்பட்ட கேள்விகளில் இருந்து நீக்கிவிடவேண்டும் என்பதே. ஆனால், உன்னுடைய நோக்கம், நீ அவைகளில் அவனுடைய மனதைப் பதிக்கவேண்டும் என்பதே. அவனுடைய பாவங்களைக் குறித்துகூட, எதிரி, அவன் அதிகமாக சிந்திக்கக்கூடாது என்று நினைக்கிறான். அவர்கள் ஒருமுறை மனந்திரும்பிவிட்டால், எவ்வளவு சீக்கிரம் அந்த மனிதனுடைய கவனம், மற்ற விஷயங்களை நோக்கித் திரும்புகிறதோ, அவ்வளவு அதிகம் எதிரி சந்தோஷப்படுகிறான்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 15

என் அன்பு எட்டி,

மனிதர்கள் புத்தியற்ற வகையிலே, சாதாரணமாக “இந்தப் போர்” என்று அழைக்கிறார்களே, அந்த ஐரோப்பிய போரில், அவர்கள் சற்று மந்தமாகிவிட்டதை நான் கவனிக்கிறேன். மேலும், இதனால் அந்த நோயாளியின் கவலையும், சற்று மந்தமாகிவிட்டதைப் பார்த்து, நான் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. நாம் இதை ஊக்குவிக்க வேண்டுமா? அல்லது அவன் கவலையோடு இருக்கும்படி செய்யவேண்டுமா? சித்ரவதைப்படுத்துகிற பயம், முட்டாள்தனமான தைரியம், ஆகிய இவை இரண்டுமே, நாம் விரும்பத்தக்க மனநிலைதான். அவை இரண்டில் நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பது, சில முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது.

மனிதர்கள், கால வரையறைக்குள் வாழுகிறார்கள், ஆனால், நம்முடைய எதிரி அவர்களை நித்தியத்திற்கென்று தீர்மானித்திருக்கிறான். ஆதலால், அவன், அவர்கள் இரண்டு விஷயங்களுக்கு முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்புகிறான் என்று நம்புகிறேன். எவையென்றால், ஒன்று, “நித்தியம்” என்பதற்காகவும், மற்றொன்று "தற்சமயம்" என்று அவர்கள் அழைக்கிற, அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்காகவும். ஏனென்றால், தற்சமயம்தான், காலம் நித்தியத்தை தொடுகிற அந்த குறிப்பிட்ட புள்ளியாக இருக்கிறது. தற்சமயம் என்கிற தருணத்துக்கு, அதற்கு மட்டுமே, நம்முடைய எதிரிக்கு, யதார்த்தம் என்பதைக் குறித்து இருக்கிற, அந்த ஒட்டுமொத்த அனுபவத்திற்கும் இணையான ஒரு அனுபவத்தை, மனிதர்கள் பெற்றிருக்கிறார்கள். அதில் மட்டும்தான் அவர்களுக்கு சுதந்திரமும் நிதர்சனமும்

வழங்கப்படுகிறது. ஆதலால், அவர்கள் தொடர்ந்து நித்தியத்தைக் குறித்தோ, அதாவது, எதிரியைக் குறித்தோ அல்லது இப்பொழுது இருக்கிற, தற்சமயத்தைக் குறித்தோ கவலைப்படவேண்டும் என்று அவன் விரும்புகிறான்- அதாவது, அவரோடு ஒரு நித்திய இணைப்பை அல்லது நித்திய பிரிவை தியானிப்பதையோ, அல்லது தற்சமயம் இருக்கிற அந்த மனசாட்சியின் குரலுக்குக் கீழ்ப்படிந்து, தற்சமயம் இருக்கிற சிலுவையை சுமந்து கொண்டு, தற்சமயம் இருக்கிற கிருபையைப் பெற்றுக்கொண்டு, தற்சமயம் இருக்கிற சந்தோஷங்களுக்காக நன்றி செலுத்துவதையோ அவன் விரும்புகிறான்..

நம்முடைய வேலை, அவர்களை நித்தியத்திடமிருந்தும், தற்சமயம் என்கிற, இந்த காலகட்டத்திலிருந்தும், விலக்கிவைப்பதுதான். இந்தக் கோணத்தில் நாம் சில நேரம், ஒரு மனிதனை, உதாரணத்துக்கு ஒரு விதவையையோ, அல்லது ஒரு அறிஞனையோ, அவனுடைய கடந்தகாலத்தில் வாழும்படியாகச் சோதிக்கிறோம்.

ஆனால், இதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே மதிப்பு இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் கடந்தகாலத்தைக் குறித்து நன்றாகவே அறிந்திருக்கிறார்கள். மேலும், அது ஒரு வரையறுக்கப்பட்ட இயல்பைக் கொண்டது, என்று பார்க்கும்பொழுது, அதுவும் நித்தியத்தை பிரதிபலிக்கிறது. ஆதலால், அவர்களை எதிர்காலத்திலேயே வாழும்படியாக வைப்பது, அதைக் காட்டிலும் மேலானது. அவர்கள் உயிர் வாழ்வதற்கான தேவைகளெல்லாம், அவர்களுடைய ஆசைகளை, அந்தத் திசையிலே ஏற்கனவே திருப்பி வைத்திருக்கின்றன. இப்படியாக எதிர்காலத்தை குறித்த அவர்களுடைய சிந்தனைகள், அவர்களுக்குள் நம்பிக்கையையோ அல்லது பயத்தையோ வீக்கமடையச் செய்கின்றன. மேலும், அவர்களுக்கு

எதிர்காலம் தெரியாததால், எதிர்காலத்தை குறித்து அவர்களை சிந்திக்கும்படியாக நாம் வைக்கும்போது, அவர்கள் யதார்த்தமற்ற காரியங்களை சிந்திக்கும்படியாக வைக்கிறோம். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், எல்லாவற்றையும்விட, எதிர்காலம்தான், நித்தியத்தை மிகவும் குறைவாகப் பிரதிபலிக்கிறது. அதுதான் அதிகபட்சமான, காலத்தின், முற்றிலும் தற்காலிகமான(temporal) பகுதியாகும். ஏனென்றால், கடந்தகாலம் என்பது உறைந்து போய்விட்டது, அது இனி ஓடையாக ஓடப்போவதில்லை. மற்றும் நிகழ்காலம் என்கிற இந்தக் காலம், நித்தியத்தின் கதிர்களால் ஒளியூட்டப்பட்டு இருக்கிறது. ஆதலால்தான், படைப்பு பரிணாமம் (Creative evolution), அறிவியல் சார்ந்த மனிதநலக் கோட்பாடு (Scientific humanism), பொதுவுடைமை (Communism) ஆகிய சிந்தனைகளின் திட்டங்களை, நாம் உற்சாகப்படுத்துகிறோம். ஏனென்றால், அவைகள் மனிதனுடைய விருப்பத்தை எதிர்காலத்தின் மீது பதிக்கின்றன. அதாவது தற்காலிகத்தின் மையத்தின்மேல். அதனால்தான், பெரும்பாலும் எல்லாத் தீயகுணங்களும், எதிர்காலத்தில் வேர்பற்றி இருக்கின்றன. நன்றியுணர்ச்சி, கடந்தகாலத்தை நோக்கும். அன்பு, நிகழ்காலத்தை நோக்கும்; பயம், பேராசை, காமம், மற்றும் லட்சியம், இவைகளெல்லாம் எதிர்காலத்தையே நோக்கியிருக்கின்றன. இதில் காமம் ஒரு விதிவிலக்கு என்று நீ நினைக்காதே. ஏனென்றால், எதிர்காலத்தில் இருக்கிற அந்த இன்பம், தற்காலத்தில் வந்து அடையும்பொழுது, பாவம் ஏற்கனவே நிறைவேறி முடிந்திருக்கும். அந்தப் பாவம் மட்டுமே நமக்கு முக்கியம். அந்த இன்பம் என்பது, அந்த செயல்முறையின் ஒரு சிறுபகுதியாய் இருக்கிறது. இன்பம், நமக்கு வருத்தத்தைத் தருகிற ஒன்றாகும். நம்மால் முடியுமென்றால், அந்தப் பாவத்தை இழந்துவிடாமல், இன்பத்தை மட்டும் அகற்றியிருப்போம். ஆனால், அந்தப் பகுதி எதிரியின் பங்களிப்பாகும். ஆகையால்,

அது தற்காலத்திலே அனுபவிக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய பங்களிப்பாகிய அந்தப் பாவம், எப்பொழுதும் எதிர்காலத்தையே நோக்கியிருக்கிறது.

எதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுவதற்காக, எதிரி, மனிதர்கள் எதிர்காலத்தை குறித்தும் நினைக்கவேண்டும் என்று விரும்புகிறான்- நாளைய தினத்திலே அவர்களுடைய கடமைகளாக இருக்கக்கூடிய, நியாயமான செயல்கள் மற்றும் சில கருணையான செயல்களைத் திட்டம் செய்வதற்கு, இப்பொழுது தேவையான அளவு மட்டும் நினைக்கும்படியாகவே, அவ்வாறு விரும்புகிறான். நாளைய தினத்துக்குரிய வேலையைத் திட்டம் செய்கிற கடமை என்பது, இந்த நாளுக்குரிய கடமையாக இருக்கிறது. அதற்குரிய மூலப் பொருட்கள், எதிர்காலத்திடமிருந்து இரவலாக வாங்கப்பட்டது என்றாலும், அந்தக் கடமை, மற்ற எல்லா கடமைகளையும் போல, நிகழ்காலத்தில் இருக்கிறது. இது பிரித்துப் பார்ப்பதற்கு கடினமான ஒன்று அல்ல. எதிரி, மனிதர்கள் எதிர்காலத்துக்கு தங்களுடைய இருதயத்தை தரவும், தங்களுடைய பொக்கிஷங்களை அங்கு வைத்துவிடவும் விரும்பவில்லை. நாம்தான் அதை விரும்புகிறோம். எதிரியைப் பொறுத்தவரை, அவனுக்கு ஏற்ற ஒரு முழுமையான மனிதன் யாரென்றால், நாள் முழுவதும் தனக்குப் பின்வரும் தலைமுறைக்காக உழைத்துவிட்டு, (அதுதான் அவன் தொழிலாக இருக்கும் பட்சத்தில்), அந்த முழு விஷயத்தையும் தன்னுடைய சிந்தனையிலிருந்து கழுவி, பரலோகத்திடம் அந்தப் பிரச்சனையை சமர்ப்பித்து, தன்னைக் கடந்துபோய்க் கொண்டிருக்கிற, தற்காலம் எதிர்பார்க்கின்ற பொறுமைக்கும் அல்லது மனநிறைவுக்கும், உடனடியாக தன் சிந்தனையை திருப்பிக்கொள்பவன்தான். ஆனால் நமக்கு வேண்டிய மனிதன், எதிர்காலத்தினால் விகாரப்படுத்தப்பட்டவனாக- இந்த உலகத்தில் வெகு சீக்கிரத்தில் ஏற்படப்போகிற ஒரு மோட்சம் அல்லது நரகத்தின் தரிசனங்களால் அடிக்கடி

பயமுறுத்தப்படுகிற ஒரு மனிதனாக- அவன் ஒன்றைப் (மோட்சத்தை) பெற்றுக்கொண்டு, மற்றதிலிருந்து (நரகத்திலிருந்து) தப்பித்துவிடலாம் என்று, நம்மால் அவனை நினைக்கவைக்கக் கூடுமானால், அப்படி அந்த சிந்தனையின் மூலம், எதிரியினுடைய கட்டளைகளைத், தற்காலத்திலே உடைத்து எறியத் தயாராக இருக்கிறவனாக- தன்னுடைய திட்டங்களின் வெற்றியையோ தோல்வியையோ, அவன் காண, உயிர் வாழப்போவதில்லை என்றாலும்கூட, அந்தத் திட்டங்களின் மேலுள்ள நம்பிக்கையைச் சார்ந்தவனாக இருக்கிறவனையே நாம் விரும்புகிறோம். நாம் விரும்புவது, தற்சமயத்திலே ஒருபோதும் உண்மையாக இல்லாத, அன்பாக இல்லாத, சந்தோஷமாக இல்லாத, ஆனால், தங்களுக்குத் தற்சமயம் வழங்கப்படுகிற ஒவ்வொரு உண்மையான பரிசுகளையும் ஆசீர்வாதங்களையும், வெறுமென எதிர்காலத்தின் பலிபீடத்தில் சேர்த்துக் குவிப்பதற்குரிய ஒரு எரிபொருளாக மட்டுமே எப்பொழுதும் பிரயோஜனப்படுத்துகிற, வானவில்லைப் பிடிக்கும்படியாக நித்தமும் ஓடிக்கொண்டே இருக்கிற ஒரு முழு இனத்தைதான்.

ஆதலால், பொதுவாகவும், மற்ற காரியங்களும் இதற்குச் சமமாக இருக்கின்ற முறையிலே, வழக்கமாக பின்பற்றப்படுகிறபடி, உன்னுடைய நோயாளி இப்பொழுது, “தற்சமயம்” என்கிற காலகட்டத்தில் வாழ்வதைப் பார்க்கிலும், இந்த போரைக் குறித்து, அவன் பயம் அல்லது நம்பிக்கை, இந்த இரண்டில் (எது என்பது முக்கியமல்ல), ஏதோ ஒன்றினால் நிறைந்திருப்பது மேலானதாகும். ஆனால் “தற்சமயத்தில் வாழ்வது” என்கிற அந்தச் சொற்றொடருக்கு, வேறு சில அர்த்தங்களும் உண்டு. கவலை என்கிற உணர்ச்சியைப் போலவே, எதிர்காலத்தை குறித்த, அதிகபட்சம் சிந்திக்கும்படியான ஒரு செயல்முறையையும், அது விளக்கக்கூடும். உன்னுடைய மனிதன் எதிர்காலத்தைக் குறித்து, எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கமுடியும்.

அது அவன் தற்சமயத்தில் வாழ்வதினால் அல்ல, ஆனால் எதிர்காலம் நன்றாக இருக்கப்போகிறது என்று, அவன் தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டதினாலே. அவனுடைய அமைதிக்கான உண்மையான பாதை, அதுவாக இருக்கும் வரையில், அவனுடைய அந்த அமைதி நமக்கு நன்மையையே தரும்.ஏனென்றால்,அது அவனுக்கு அதிகமாக ஏமாற்றத்தைதான் சேர்த்து வைக்கப்போகிறது. ஆதலால், அப்படியாக, அவனுடைய தவறான நம்பிக்கைகள் எல்லாம் நொறுங்கி விழும்போது, அதிகமான பொறுமையின்மையை அது உருவாக்கப்போகிறது. ஒருவேளை, மற்றொரு புறம், அவன் எதிர்காலத்தில் தனக்கு இருக்கக்கூடிய பயங்கரங்களை அறிந்தவனாகவும், அவைகளை எதிர்கொள்வதற்கு தனக்கு வேண்டிய நற்குணங்களுக்காக ஜெபிக்கிறவனாகவும், அதே வேளையில், தற்காலத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறவனாகவும் இருந்து, அப்படியிருப்பதற்குக் காரணம், தற்சமயம் என்கிற அந்த காலத்தில் மட்டுமே, எல்லாக் கடமைகளும், எல்லாக் கிருபையும், எல்லா அறிவும், எல்லா இன்பங்களும் தங்குகின்றன என்று நினைப்பவனாக இருந்தால், அவனுடைய நிலை மிகவும் விரும்பத்தகாத ஒன்றாய் இருக்கிறது. அவன் உடனடியாக தாக்கப்பட வேண்டும். இங்கு மறுபடியும் நம்முடைய “மொழியியல் ஆயுதம்” நன்றாக வேலை செய்திருக்கிறது. “தன்னிறைவு” என்ற வார்த்தையை, அவன் மேல் பயன்படுத்த முயற்சி செய். அது எதனால் என்றால், நிச்சயமாக இப்படிப்பட்ட காரணங்களுக்காக அவன் தற்சமயத்தில் வாழவில்லை, ஆனால், வெறுமென தன்னுடைய உடல் ஆரோக்கியமாக இருப்பதாலும், தன்னுடைய வேலையை அவன் மகிழ்ச்சியோடு செய்வதாலும்தான் என்று சொல்லும்போது, அந்த நிகழ்வு, வெறுமென ஒரு இயல்பான நிகழ்வாகிவிடும். எப்படி இருந்தாலும், உன் இடத்தில் நான் இருந்தால், இதை எப்படியாவது நிறுத்திவிடுவேன். எந்த இயல்பான

நிகழ்வும் நமக்கு சாதகமாக ஒருபோதும் இருப்பதில்லை. அதுமட்டுமல்லாமல், அந்த உயிரினம் ஏன் சந்தோஷமாக இருக்கவேண்டும்?

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 16

என் அன்பு எட்டி,

அந்த நோயாளி, தான் மனந்திரும்பியதிலிருந்து, ஒரு குறிப்பிட்ட சபைக்கு தொடர்ந்து செல்லுகிறான் என்றும், அந்த சபைக்கு மட்டும்தான் செல்லுகிறான் என்றும், அவன் அந்த சபையைக் குறித்து முழுமையாக திருப்தியடையவில்லை என்றும் உன்னுடைய கடைசிக் கடிதத்தில் நீ மேலோட்டமாக குறிப்பிட்டு இருந்தாய். நீ என்ன சொல்லவருகிறாய் என்று நான் தெரிந்துகொள்ளலாமா? அவன் அந்தத் திருச்சபையின் கிளைசபைக்கு, ஏன் விசுவாசமாக இருக்கிறான் என்பதின் காரணத்தைக் குறித்து, ஏன் எனக்கு எந்த அறிக்கையும் வரவில்லை? ‘அலட்சியம்’ என்ற ஒரு காரணத்தைத் தவிர, வேறு எதுவாக இருந்தாலும், அது ஒரு மிகவும் மோசமான விஷயம் என்பதை நீ உணருகிறாயா? ஒரு மனிதன் தேவாலயத்துக்குச் செல்லுவதை நாம் நிறுத்தி, அவனை குணப்படுத்த முடியவில்லை என்றால், நாம் செய்யக்கூடிய அடுத்த சிறந்த காரியம், அவனை அந்தப் பகுதிகளில் இருக்கிற எல்லா சபைக்கும் அனுப்பி, எது தனக்கு “ஏற்றதாய்” இருக்கிறது என்று பார்க்கவைத்து, அவனை எல்லா சபைகளையும் ருசி பார்த்து தேர்வு செய்கிற, சபைகளின் நிபுணனாக்குவதுதான்.

இதற்கான காரணங்கள் நன்றாகத் தெரிந்தவை தான். முதலாவதாக, திருச்சபையின் கிளை அமைப்புகள் எல்லாம், எப்பொழுதும் தாக்கப்பட வேண்டியவை. ஏனென்றால், அது எல்லோரும் ஒரே இடத்தில் இணைவதாக இருக்கிறதே ஒழிய, ஒரே விருப்பத்தினால் இணைவதாக இல்லை என்பதால், அது பல தரப்பட்ட மனிதர்களையும் சிந்தனைகளையும்,

எதிரி விரும்புகிற வண்ணம் ஒருவகையான ஒற்றுமைக்குள் கூட்டிச் சேர்க்கிறது. மற்றொரு புறம், ஒன்று கூடுதல் கோட்பாடு (The congregational principle), ஒவ்வொரு சபையையும் ஒருவகையான சங்கமாக மாற்றி, முடிவில், எல்லாம் நன்றாகச் சென்றால், அதை ஒரு குழுவாகவோ அல்லது ஒரு பிரிவாகவோ மாற்றிவிடுகிறது. இரண்டாவதாக, தனக்குப் பொருத்தமான சபையைத் தேடுவது என்பது, அந்த மனிதனை ஒரு விமர்சகனாக மாற்றுகிறது. ஆனால் எதிரி, அவன் ஒரு மாணவனாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறான். ஆலயத்தில் இருக்கிற ஒரு சராசரி மனிதனுடைய மனப்பான்மை எப்படி இருக்கவேண்டும் என்று விரும்புகிறான் என்றால், அது, எது தவறு, எது உதவாது என்பதை விமர்சித்து உணர்ந்து, அதை தள்ளிவிடுகிற உணர்வு இருக்கவேண்டும், ஆனால் 'எதையும் மதிப்பீடு செய்வதில்லை' என்ற உணர்வோடு பார்க்கும்பொழுது, அது முழுவதும் விமர்சிக்காத ஒரு மனப்பான்மையையும் கொண்டிருக்கவேண்டும்- அதாவது, தான் எதை ஒதுக்கி வைக்கிறோம் என்பதை குறித்து சிந்தித்து, நேரத்தை வீணாக்காமல், ஆனால் அதே நேரம், ஊட்டச்சத்து நிறைந்த எந்த காரியத்தையும், விமர்சனம் செய்யாமல் தாழ்மையோடு ஏற்றுக்கொள்கிற, முற்றிலும் திறந்த மனதோடு இருக்கும்படியாக விரும்புகிறான் (பார்த்தாயா? எவ்வளவு இழிவான, எவ்வளவு பக்தியற்ற, எவ்வளவு மீட்டெடுக்க முடியாத அளவு கொச்சையானவனாக அவன் இருக்கிறான் என்று!). இந்த மனப்பான்மை, விசேஷித்த விதத்திலே, பிரசங்கங்கள் கொடுக்கப்படும்போது, ஒரு மனித ஆத்துமாவுக்கு ஒழுக்கத்தைக் குறித்த பேச்சுகள், உண்மையாகவே காதில் விழும்படியான ஒரு சூழலை உருவாக்குகிறது (இந்த சூழல் நம்முடைய முழு கொள்கைக்கும் முற்றிலும் விரோதமானது). இந்த மனநிலையில் ஏற்றுக்கொள்ளப்படுமானால், நமக்கு ஆபத்து விளைவிக்காத ஒரு பிரசங்கம் அல்லது புத்தகம்

என்று, ஒன்றுமே இருக்கப்போவதில்லை. ஆதலால், உன்னை நீயே ஊக்குவித்துக் கொண்டு, இந்த முட்டாள், சுற்றுப்புறத்தில் இருக்கிற எல்லா தேவாலயத்துக்கும், எவ்வளவு சீக்கிரம் செல்லமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சென்று பார்க்கும்படியாக வைக்கவேண்டும் என்று உன்னை வேண்டிக்கேட்கிறேன். இன்று வரை, உன்னைக் குறித்த பதிவுகள் எதுவும், எங்களுக்கு திருப்திகரமாக இல்லை.

நான் அலுவலகத்துக்கு சென்று, அவனுக்கு மிக அருகில் இருக்கிற இரண்டு ஆலயங்கள் எதுவென்று பார்த்துவிட்டேன். அவை இரண்டும், சிலவற்றை பறைசாற்றுகின்றன. இதில் முதலாவது ஆலயத்தின் குருவாய் (Vicar) இருப்பவன், ஒரு நம்பக்கையில்லாத, கடின இருதயமுள்ள சபை என்று அழைக்கப்படுகிறவர்களுக்கு எளிதாக இருக்கும் வண்ணமாக, பல காலங்களாக அவர்களுடைய விசுவாசத்தைத் தண்ணீர் ஊற்றி பலவீனப்படுத்துகிறவனாய் இருக்கிறான். ஆதலால், இப்பொழுது தன்னுடைய அவிசுவாசத்தினாலே, தன் சபையைச் சேர்ந்தவர்களையெல்லாம் அதிர்ச்சியடையச் செய்வது அவன் தானே தவிர, அவனுடைய சபையார் அல்ல. அவன் பல ஆத்துமாக்களின் கிறிஸ்தவத்தை வலுவற்றதாக்கிவிட்டான். அவன் ஆராதனைகளை நடத்துகிற முறையும் மிகவும் பாராட்டத்தக்கதாய் இருக்கிறது. பாமர மக்களை பல கஷ்டங்களிலிருந்து விடுவிக்கும் வண்ணமாக, ஒவ்வொரு ஆராதனையிலும் வாசிக்கப்படும்படி தெரிந்துகொள்ளப்பட்ட வேத பகுதிகளையும், நியமிக்கப்பட்ட சங்கீதங்களையும் நிறுத்திவிட்டான். மேலும், இப்பொழுது, கவனமின்றி, தனக்குப் பிடித்த அந்த பதினைந்து சங்கீதங்களையும், அந்த இருபது பிடித்தமான பாடங்களையும் மட்டுமே சுற்றிச்சுற்றி முடிவில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றான். ஆதலால், அவனுக்கும் அவனுடைய சபையாருக்கும், ஏற்கனவே தெரிந்திராத எந்த உண்மையும், வேதாகமத்தின் மூலம், போய்ச் சேரும் என்ற

ஆபத்திலிருந்து, நாம் பாதுகாப்பாக இருக்கிறோம். ஆனால் உன்னுடைய நோயாளி ஒருவேளை இந்த சபையைச் சேரும் அளவுக்கு முட்டாள் இல்லையோ அல்லது இன்னும் அந்த நிலைமையை அடையவில்லையோ?

அடுத்த சபையில், ஃபாதர் ஸ்பைக் (Fr.Spike) இருக்கிறான். மனிதர்கள் அவனுடைய கருத்துக்களின் எல்லைகளைப் புரிந்துகொள்வதற்குள், மிகவும் குழப்பமடைகிறார்கள். ஒரு நாள், அவன் ஏறக்குறைய ஒரு கம்யூனிஸ்டாக இருக்கிறான், அடுத்த நாள், இறையாட்சியின் மேல் நம்பிக்கையும், பொதுவுடைமை எதிர்ப்புக் கொள்கையுடையவனுமாக காணப்படுகிறான்- ஒரு நாள் மிகவும் கற்றுத்தேர்ந்தவனாகவும், அடுத்த நாள் எல்லா வகையான மனித அறிவுகளையும் மறுதலிக்க ஆயத்தமானவனாகவும் இருக்கிறான்- ஒரு நாள் அரசியலில் ஆழ்ந்திருக்கிறான், அதற்கடுத்த நாள் இந்த உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் சரிசமமாக நியாயத்தீர்ப்பின் கீழ் இருக்கின்றன என்று பறைசாற்றுகிறான். நிச்சயமாக, இவை எல்லாவற்றையும் இணைக்கின்ற அந்தக் கோர்வை, ‘வெறுப்பு’ என்பது நமக்குத் தெரியும். தன்னுடைய பெற்றோரையும் நண்பர்களையும், அந்த மனிதன், அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் குழப்பத்துக்கும் வெட்கத்துக்கும் ஆளாக்காமல், எதையும் போதனை செய்வதற்கு, முடிவதேயில்லை. அவனைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட மனிதர்கள் ஏற்றுக்கொள்ளுகிற ஒரு போதனை, அவர்களால் எளிதாக ஊடுருவிப் பார்க்கக்கூடிய, ஒரு சுவையற்ற கவிதையாக மட்டுமே இருக்கும் என்று நினைக்கிறான். அவனிடத்தில் ஒரு சிறு நம்பிக்கையின் ரேகையாக, நேர்மையின்மையும் தெரிகிறது; அவன், “சபையின் போதனை என்னவென்றால்” என்று கூறும்போது, அவன் எண்ணத்திலுள்ள உண்மையான அர்த்தம், “சமீப காலத்தில் நான் வாசித்த, பிரெஞ்சு தத்துவவாதி மாரிட்டெய்ன் (Maritain) அல்லது அவரைப்

போன்ற யாரோ ஒருவர் சொன்னதிலிருந்து, நிச்சயமாக நான் சொல்லுகிறேன்" என்றே இருக்கும்படியாக, நாம் அவனுக்குக் கற்பிக்கவேண்டும். ஆனால், அவனிடத்தில் ஒரு அபாயகரமான குறைபாடு உண்டு என்று, நான் உன்னை எச்சரித்தாகவேண்டும்: அவன் உண்மையிலேயே விசுவாசம் உடையவனாய் இருக்கிறான். இது எல்லாவற்றையும் நாசம் செய்துவிடக்கூடும்.

ஆனால், இந்த இரண்டு சபைகளுக்கும் பொதுவான ஒரு நல்ல விஷயம் இருக்கின்றது- அவை இரண்டுமே, குழுக்கள் உள்ள சபைகளாகும். உன்னுடைய நோயாளியை ஆலயத்துக்கு போகாதபடி தடுக்கமுடியவில்லை என்றால், குறைந்தபட்சம், அவன் அவைகளுக்குள் இருக்கக்கூடிய ஒரு குழுவில், வெறித்தனமாக இணைந்து இருக்கவேண்டியது அவசியம் என்று, நான் உன்னை ஏற்கனவே எச்சரித்தேன் என்று நினைக்கிறேன். உண்மையான கோட்பாடுகளைக் குறித்த பிரச்சனைகளின் அடிப்படையில் பிரிந்திருக்கிற குழுக்களைப்பற்றி, நான் இங்கு சொல்லவில்லை. அப்படிப் பார்க்கும்போது, அவன் எந்த அளவுக்கு அனலும் இல்லாமல், குளிரும் இல்லாமல் இருக்கிறானோ, அந்த அளவு நமக்கு நல்லது. நாம் பெரும்பாலும் தீமைகளை உருவாக்குவதற்கு, கோட்பாடுகளின் மேல் சார்ந்து இருப்பதில்லை. இதில் உண்மையான வேடிக்கை என்னவென்றால், "இராபோஜனம்" என்று அழைப்பவர்களும், "திருவிருந்து" என்று அழைப்பவர்களுமாகிய, இந்த இரண்டு பிரிவினருக்கும், ஹூக்கருடைய (Richard Hooker- இங்கிலாந்து சபையின் ஒரு பாதிரியார் மற்றும் இறையியலாளர்) கோட்பாட்டுக்கும், தாமஸ் அக்வினாவுடைய (Thomas Aquina- இத்தாலியைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு மற்றும் இறையியலாளர்) கோட்பாட்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை பெரும்பாலும் சொல்லத் தெரியவில்லை என்றாலும்கூட, இவர்களிருவருக்குமிடையே சகிப்புத்தன்மையை, ஐந்து நிமிடங்களுக்கு மேல்

தாக்குபிடிக்காதபடி செய்து, எந்த ஒரு வகையிலாவது வெறுப்பை முடுக்கிவிடுவதுதான். எல்லாவிதமான, முழுக்க முழுக்க சாதாரண விஷயங்களாகிய, மெழுகுவர்த்திகள், உடைகள், மற்றும் வேறு பல காரியங்கள், இவையெல்லாம், நம்முடைய செயல்களுக்கு ஏற்ற, பொருத்தமான தளமாகும். அந்த கொள்ளைநோயை பரப்புகிறவனாகிய பவுல், உணவைக் குறித்தும், மற்ற தேவையற்ற காரியங்களைக் குறித்தும் கற்பித்தவைகளான- (ஒரு விஷயத்தைப் பற்றி) எந்த சந்தேகமும் இல்லாத மனிதர்கள், சந்தேகப்படுக்கிற மனிதர்களுக்காக விட்டுக்கொடுக்கவேண்டும் என்பதை, மனிதர்களுடைய மனங்களிலிருந்து, நாம் முற்றிலும் அகற்றிவிட்டோம். இதனுடைய பயனை அவர்கள் பார்ப்பதற்குத் தவறிவிடமாட்டார்கள் என்று நீ நினைக்கலாம். சபைக்கு வருகிற அந்தத் “தாழ்ந்த” மனிதன், தன்னுடைய முடங்கால்களை சற்று முடக்கி, தன் மேல் சிலுவையின் அடையாளத்தைப் போட்டுக்கொள்வது, தன்னுடைய “உயர்ந்த” சகோதரனுடைய பலவீனமான மனசாட்சி, பக்தியற்றுப் போய்விடக்கூடாது என்பதற்காகவும், அந்த “உயர்ந்த” மனிதன் இப்படிப்பட்ட செயல்களிலிருந்து தன்னை விலக்கிக்கொள்வது, தன்னோடுள்ள அந்தத் “தாழ்ந்த” சகோதரனை, விக்ரகாராதனைக்கு நேராக, தவறாக வழிகாட்டிவிடக்கூடாது என்பதற்காகவும் செய்வதாக நீ நினைக்கக்கூடும். நம்முடைய ஓய்வில்லாத உழைப்பு இல்லாவிட்டால், அது அப்படியேதான் நடந்திருக்கும். அவை இல்லாவிட்டால், இங்கிலாந்து சபைக்குள் இருக்கிற பலவிதமான பயன்பாடுகள் எல்லாம், கருணை மற்றும் தாழ்மையின் செயல்கள் வளருவதற்கான, நல்ல நிலமாக மாறியிருக்கும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 17

என் அன்பு எட்டி,

பெருந்தீனி (Gluttony- உணவின் மீதுள்ள பேராசை) பழக்கத்தைக் கொண்டு ஆத்துமாக்களை பிடிக்கின்ற முறையைக் குறித்து, உன்னுடைய கடைசி கடிதத்திலே, நீ இழிவாகப் பேசிய விதம், உன்னுடைய அறியாமையைத்தான் காட்டுகிறது. கடந்த நூற்றாண்டில் நாம் படைத்த மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று எதுவென்றால், அந்த தலைப்பில் (பெருந்தீனி) மனிதர்களுடைய மனசாட்சியைச் சாகடித்து, ஐரோப்பாவின் முழு நீளத்திலும் அகலத்திலும் தேடினாலும், அதைக் குறித்து மனசாட்சியைக் குத்தும் எந்த ஒரு பிரசங்கமும் பிரசங்கிக்கப்படுவதை, நீ அரிதாகவே காணமுடியும் என்பதுதான். அதிகம் சாப்பிடுகிற பெருந்தீனிப் பழக்கத்தைவிட, சுவையாகச் சாப்பிடுகிற பெருந்தீனிப் பழக்கத்தின் மீது, நம்முடைய எல்லா கவனத்தையும், முயற்சியையும் செலுத்தும் செயல்முறையினால்தான், இது மிகப்பெரிய அளவிலே சாதிக்கப்பட்டது. உன் நோயாளியின் தாய், இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்பதை, நான் ஆவணங்களிலிருந்து தெரிந்துகொண்டேன். நீயும் இதைக் கசப்பனிடமிருந்து அறிந்திருக்கக்கூடும். இந்த வகையான உணர்ச்சிக்கு, தன் வாழ்க்கை முழுவதும் அடிமையாக இருந்திருக்கிறாள் என்பதைக்கண்டு, ஒருநாள், அவள் அதிர்ச்சியடைவாள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவள் சாப்பிடும் அளவு, மிகவும் குறைவு என்கிற உண்மை, இதை அவளுக்கு மறைத்து வைத்திருக்கிறது. ஆனால், மனிதர்களுடைய வயிறும் வாயுமே, விகாரத்தன்மையையும், பொறுமையின்மையையும், இரக்கமற்ற குணத்தையும், சுய-அக்கறையையும் உருவாக்குமென்றால், அவர்கள்

எவ்வளவு சாப்பிடுகிறார்கள் என்கிற விஷயம் எந்த வகையிலும் முக்கியமாக இருக்கப்போவதில்லை. கசப்பன், அந்தக் கிழவியை, நன்றாகத் தன் கையின் கீழ் அடக்கிவைத்திருக்கிறான். அவளுக்குப் பணிவிடை செய்கிற பெண்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் இவள் நிச்சயமாகவே, பயங்கரத்தை ஏற்படுத்துகிறவளாக இருக்கிறாள். எப்பொழுதும், அவளுக்கு வழங்கப்படுகிற உணவை அவள் திரும்ப அனுப்பி, மிகச்சிறிய அடக்கமான பெருமூச்சோடும், ஒரு புன்னகையோடும், "ஐயோ! உங்களை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வேண்டியதெல்லாம் ஒரு கப் தேனீர் மட்டுமே. அதின் நீர்த்தன்மை கூடுதலாக இருக்கவேண்டும், ஆனால் அதிகக் கூடுதலாக இருந்துவிடக்கூடாது, மேலும் மிகச்சிறிய அளவு, சற்றே மொறுமொறுப்பாக இருக்கக்கூடிய ரொட்டியுடன், அது வழங்கப்படவேண்டும்", என்று சொல்லுகிறாள். பார்த்தாயா? அவளுக்கு வழங்கப்பட்ட உணவைக்காட்டிலும், அவள் கேட்பது, அளவு குறைவாகவும், விலை குறைவாகவும் இருக்கிறது என்ற காரணத்தால், அது மற்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தாலும், தனக்கு வேண்டியதை, தான் பெற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்ற தீர்மானத்தை, அவள் பெருந்தீனி குணமாக, அடையாளம் கண்டுகொள்ளவே இல்லை. தன்னுடைய பசி ஆர்வத்தின் இன்பத்தில் ஈடுபடுகிற அதே தருணத்தில், அவள், நிதானத்தைச் செயல்படுத்துகிறவளாகத் தன்னை நினைத்துக்கொண்டிருக்கிறாள். ஒரு கூட்டமான ஹோட்டலில், அங்கு வேலை செய்கிற பணிப்பெண், தனக்கு முன்பாக வைத்திருக்கிற தட்டைக் கண்டு, சிறிதாக அவள் சத்தமிட்டு, "ஐயோ! இது மிகவும் அதிகமாக இருக்கிறது. இதை நீ எடுத்துக் கொண்டுபோய், இதில் கால்வாசியை மட்டும் எனக்குத் திரும்ப கொண்டுவா", என்று சொல்லுகிறாள். அவள் ஏன் அப்படிச் செய்கிறாள் என்று கேட்டால், உடனே, எதுவும்

வீணாவதை, தான் தடுக்க நினைத்து, அப்படிச் செய்வதாகவே அவள் சொல்லுவாள். ஆனால் உண்மையில், நாம் அவளை அடிமைப்படுத்தி வைத்திருக்கிற அந்தக் குறிப்பிட்ட சுவை என்னும் வர்ணம், தனக்கு வேண்டியதைக்காட்டிலும் அதிக அளவு உணவினால், கரைபடுகிறது என்பதால்தான் அவ்வாறு செய்கிறாள்.

அவளுடைய வயிறு, எப்படி அவள் முழு வாழ்க்கையின்மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது என்கிற விதத்தைவைத்து, கசப்பன் இத்தனை வருடங்களாக, அந்த கிழவியின்மீது தொடர்ந்து செய்துவந்த, அந்த அமைதியான, தடையற்ற வேலையின், உண்மையான மதிப்பை நாம் அளவிடமுடிகிறது. அவள் எந்த மனநிலையில் இருக்கிறாள் என்றால், "நான் கேட்பதெல்லாம் இதுதானே?" என்று நாம் அழைக்கிற மனநிலையில்தான். அவள் கேட்பதெல்லாம், சரியாக போடப்பட்ட ஒரு கப் தேனீர்தான், அல்லது ஒழுங்காக வேகவைக்கப்பட்ட முட்டையைத்தான், அல்லது மொறுமொறுப்பாக சுடப்பட்ட ரொட்டியைத்தான். ஆனால், இந்த சாதாரண விஷயங்களைக்கூட, சரியான முறையில் செய்யக்கூடிய எந்த வேலைக்காரனையோ, அல்லது எந்த ஒரு நண்பனையோ, அவளால் பார்க்கமுடிவதில்லை. ஏனென்றால், அந்தச் "சரியான முறை" என்று அவள் சொல்வது, தான் கேட்பதை, அதே வண்ணமாக பெற்றுக்கொள்ளுகிற, திருப்திபடுத்தமுடியாத கோரிக்கையாகிய, சாதிக்கமுடியாத, வாய்ச்சுவைக்குரிய இன்பங்களைத்தான். இந்த இன்பங்கள், கடந்தகாலத்தில் தனக்குக் கிடைத்துக்கொண்டிருந்ததாக, அவள் நினைவுகூருகிறாள். அந்த காலத்தில் தனக்கு நல்ல வேலைக்காரர்கள் இருந்ததாக, அவள் கற்பனை செய்துகொள்ளுகிறாள். ஆனால், நமக்கு நன்றாகத் தெரியும், அந்த நாட்களிலெல்லாம், அவளுடைய உணர்வு, மிகவும் எளிதாகவே திருப்திபடக்கூடியதாக இருந்ததாலும், வேறு வகையான சந்தோஷங்கள் அவளுக்கு இருந்ததாலும்,

அவள் மேஜையின்மீது வைக்கப்பட்டவைகளின் மேல், மிகக் குறைவாகவே சார்ந்திருந்தாள் என்று. இப்படி இருக்கையில், அவளுடைய இந்த அன்றாட அதிருப்தி, ஒவ்வொரு நாளும் சிடுமூஞ்சித்தனத்தை உருவாக்கும். சமையல் செய்பவர்கள், தாங்கள் வேலையை விட்டு நீங்குவதாகச் சொல்லுவார்கள், நண்பர்கள் சிறிது சிறிதாக நட்பு தணிந்துபோய் விலகுவார்கள். எதிரி, அவளுடைய மனதிலே, அவள் உணவின் மீது அதிக ஆர்வத்தைக் கொண்டிருக்கிறாள் என்கிற சந்தேகத்தை, சிறிதளவு அறிமுகப்படுத்திவிட்டால், உடனடியாக, கசப்பன் அவளுடைய எண்ணத்திலே, தான் என்ன உண்ணுகிறோம் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை, ஆனால், “தன் மகனுக்கு, எல்லாம் நல்லவைகளாக கொடுக்கவேண்டும் என்று விருப்பம் அவளுக்கு உண்டு”, என்ற எண்ணத்தைப் பரிந்துரைத்து, அதை எதிர்கொள்வான். உண்மையில் சொல்லப்போனால், நிச்சயமாகவே அவளுடைய இந்தப் பேராசை, வீட்டில் அவனுக்கு பல வருடங்களாக இருக்கிற அசௌகரியத்தின், ஒரு பிரதான காரணமாய் இருக்கிறது.

உன் நோயாளி, தன் தாய்க்கு ஏற்ற பிள்ளையாவான். நீ மற்ற விஷயங்களைக் குறித்து, சரியான முறையிலே, மிகக் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிற அதே வேளையில், அவனுடைய பெருந்தீனி குணத்திலும், நீ சற்றே சிறிதளவு ஊடுருவவேண்டும் என்கிற எண்ணத்தை புறக்கணித்துவிடாதே. அவன் ஒரு ஆணாக இருப்பதினால், “நான் கேட்பதெல்லாம் இதுதானே?” என்கிற அந்தப் பாசாங்கில், அவன் அதிகம் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. ஆண்கள் எல்லாரும் அவர்களுடைய மாயையின் உதவியால், சிறந்த பெருந்தீனிக்காரர்களாக மாறமுடியும். உணவைக் குறித்து தங்களுக்கு மிக நன்றாகத் தெரியும் என்ற எண்ணம், அவர்களுக்குள் ஏற்படுத்தப்படவேண்டும். அந்தப் பட்டணத்திலேயே இறைச்சித் துண்டுகள், மிகச் சரியான முறையிலே சமைக்கப்படுகிற, ஒரே

ஹோட்டலை கண்டுபிடித்தது, தான் தான் என்று பெருமிதம் கொள்ளும்படியாக வைக்கமுடியும். மாயையாக தொடங்கப்பட்ட இந்த காரியம், படிப்படியாக ஒரு பழக்கமாக மாற்றப்படமுடியும். ஆனால் நீ எப்படி அவனை அணுகினாலும் சரி, நீ செய்யவேண்டிய மிகப்பெரிய காரியம் என்னவென்றால், அவனுக்குப் பிடித்தமான, ஏதோ ஒரு விஷயத்தின் ஈடுபாடு மறுக்கப்படும்போது, அது எதுவென்பது இங்கு பிரச்சனை இல்லை, மதுவோ அல்லது தேநீரோ, பிரெஞ்சு முறையில் சமைக்கப்பட்ட மீனோ (sole colbert) அல்லது சிகரட்டோ, எதுவாக இருந்தாலும், அது மறுக்கப்படும்போது, அது அவனுக்கு மன உளைச்சலைத் தரும்படியான ஒரு நிலைக்கு நீ அவனைக் கொண்டுவருவதுதான். ஏனென்றால், அப்பொழுதுதான், அவனுடைய இரக்ககுணம், நீதி, மற்றும் கீழ்படிதல் இவையெல்லாம் உன்னுடைய அதிகாரத்திற்குக் கீழாக வரும்.

சுவையைக் காட்டிலும், உணவில் அதிக அளவு என்பதற்கு, மிகக் குறைவான மதிப்பே உள்ளது. அதனுடைய பிரதானமான பிரயோஜனம் என்னவென்றால், அது புனிதத்துக்கு எதிரான தாக்குதல்களுக்குரிய, ஒரு வகையான ஆயுத ஆயத்தமாகும். இதைக் குறித்து, மற்ற எல்லாக் காரியங்களிலும் நீ செய்வதுபோல, உன்னுடைய மனிதனை ஒரு பொய்யான பக்தி நிலையில் வைத்துக்கொள். அவன் இதனுடைய மருத்துவ அம்சத்தை, ஒருபோதும் கவனிக்கவிடாதே. தான், கடந்த இருபத்து-நான்கு மணி நேரங்களாக, எதை சாப்பிட்டுக் கொண்டும், குடித்துக் கொண்டும் இருந்தோம் என்ற, அந்த சாதாரண விசாரணையே, உன்னிடத்திலிருந்து அந்தத் தாக்குதல், எங்கிருந்து வந்தது என்று காட்டிக்கொடுத்து, இவ்வாறாக உன்னுடனான எந்தத் தொடர்பையும், அபாயத்துக்குள்ளாக்கும்படியாக, அவன் சிறிதளவே தன்னுடைய உணவிலிருந்து விலக்கிக், காத்துக் கொள்ளமுடியும் என்ற போதும், அவனுடைய

எந்த பெருமை, அல்லது எந்த விசுவாசக் குறைச்சல், தன்னை, உன்னுடைய கைக்குள் வழங்கியது என்று, அவன் யோசித்துக் கொண்டேயிருக்கும்படியாக வை. ஒருவேளை, அவன் தன்னை விலக்கிப் பாதுகாப்பதின், மருத்துவ பகுதியை குறித்து சிந்தித்தால், இங்கிலாந்து மனிதர்கள் எல்லோரையும், நாம் நம்பவைத்த, அந்த பிரம்மாண்டமான பொய்யை அவனுக்கு ஊட்டிவிடு, அதாவது, அதிகமான உடற்பயிற்சியின் பின்விளைவாக சோர்வு வருவது என்பது, விசேஷித்த வகையிலே, இந்த நற்குணத்துக்குச் சாதகமானது என்ற பொய்யை. கப்பல் மாலுமிகளுக்கும், ராணுவ வீரர்களுக்கும் இருக்கக்கூடிய, இந்த இழிவான இச்சையைக் கண்டபோதும், அவர்களால் எப்படி இதை நம்பமுடிகிறது என்று நீ கேட்கக்கூடும். ஆனால், நாம் பள்ளி ஆசிரியர்களை உபயோகப்படுத்தி, இதைக் குறித்து ஒரு கதையைச் சொல்ல வைத்திருக்கிறோம். அதாவது, இச்சையடக்கத்தின் மேல், உண்மையாகவே ஆர்வமுள்ள மனிதர்கள், விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு, அதை ஒரு சாக்காக பிரயோஜனப்படுத்தினர். மேலும், இதனால் விளையாடுவது, இச்சையடக்கத்துக்கு ஒரு உதவியானதாக இருக்கும்படியாகப் பரிந்துரைத்தனர். ஆனால், இந்த முழு விஷயமும் ஒரு கடிதத்தின் கடைசியில் நாம் எதிர்கொள்ளமுடியாத அளவுக்கு, மிகப் பெரிதான ஒன்றாக இருக்கிறது.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 18

என் அன்பு எட்டி,

ஒழுங்கீனனுடைய தலைமையின் கீழ் கூட, நீ உன்னுடைய கல்லூரியில் பாலியல் தூண்டுதல்களுக்கான வழக்கமான உத்திகளை கண்டிப்பாக படித்திருப்பாயே. ஆவிகளாகிய நமக்கு, இந்த முழு தலைப்பும் (நம்முடைய பயிற்சியில் இது ஒரு அவசியமான பகுதியாக இருந்தாலும்), கணிசமான அளவு, மிகவும் கடினமான ஒன்றாக இருப்பதால், அதை நான் உனக்கு கற்றுத்தந்துவிட்டுச் செல்லுகிறேன். ஆனால், சம்பந்தப்பட்ட பெரிதான பிரச்சனைகளில் எல்லாம், நீ இன்னும் நிறைய கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

எதிரி, மனிதர்கள் மேல் வைக்கிற கோரிக்கை, ஒரு சிக்கலான நிலையின் உருவத்தை எடுக்கிறது. ஒன்று, அவர்கள் முற்றிலும் அதிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ளவேண்டும், அல்லது எந்த வகையிலும் குறையாத உறுதியோடு, ஒரே நபருடன் வாழவேண்டும். நம்முடைய பிதாவின், முதல் மகத்தான வெற்றிக்குப் பின்பு, அந்த முதல் காரியத்தை, நாம் அவர்களுக்கு மிகவும் கடினமான ஒன்றாக வைத்துவிட்டோம். கடந்த சில நூற்றாண்டுகளாக, அந்த அடுத்த காரியத்தை, நாம் தப்பித்துக் கொள்வதற்கான ஒரு வழியாக மாற்றுவதற்கு மிகவும் நெருங்கிவிட்டோம். கவிஞர்களும் நாவலாசிரியர்களும், “காதல் வசப்படுவது” என்ற வினோதமான, பெரும்பாலும் குறுகிய காலத்துக்கே இருக்கின்ற அந்த அனுபவம் ஒன்றுதான், திருமணத்திற்கான ஒரே மதிப்பிற்குரிய காரணம் என்று மனிதர்களை வற்புறுத்தும்படியாக, நாம் இப்படிச்

செய்திருக்கிறோம். அதாவது, திருமணம்தான் இந்த மகிழ்ச்சியை நிரந்தரமாக ஆக்கமுடியும், ஆக்கவும் வேண்டும் என்று எதிபார்க்கப்படும்படியாக நாம் வழங்கியுள்ளோம். மேலும் அப்படிச் செய்யாத எந்த ஒரு திருமணமும், அவர்களைத் தொடர்ந்து இணைப்பது இல்லை என்றும் நாம் ஆக்கிவிட்டோம். இது எதிரியினிடமிருந்து வந்த ஒரு யோசனையின் பகடியாகும் (கேலியான வகையிலே பொய்யாக்கப்பட்ட ஒரு யோசனை).

ஒருவிஷயம் மற்றொருவிஷயம் அல்ல, குறிப்பாக, ஒருசுயம் மற்றொரு சுயம் அல்ல, என்கிற மையப்பகுதியை அடையாளம் கண்டுகொள்வதில்தான், நரகத்தின் முழு தத்துவமும் நிற்கிறது. என்னுடைய நன்மை என்னுடையது, உன்னுடைய நன்மை உன்னுடையது. ஒருவன் பெற்றுக்கொண்டதை, இன்னொருவன் இழக்கிறான். ஒரு உயிர் இல்லாத பொருள்கூட, தான் ஆக்கிரமிக்கிற அந்த இடத்திலிருந்து, மற்றொரு பொருளை தள்ளிவிடுகிறதாய் இருக்கிறது. ஒருவேளை அது விரிவடைந்தால், அது மற்ற பொருட்களை இடித்துத் தள்ளிவிடுகிறது, அல்லது அவைகளை, தனக்குள் உள்வாங்கிவிடுகிறது. ஒரு சுயமும் அதையேதான் செய்கிறது. மிருகங்களை பொறுத்தவரையில் அந்த உள்வாங்குதல், (இறையை உணவாக) சாப்பிடுகிற வடிவத்தை எடுத்துக்கொள்ளுகிறது. நம்மைப் பொறுத்தவரையில், ஒரு பலவீனப்பட்ட சுயத்திலிருந்து, அதனுடைய விருப்பத்தையும் சுதந்திரத்தையும் உறிஞ்சியெடுத்து, இன்னொரு பலமான சுயத்துக்கு கொடுப்பதாக இது இருக்கிறது. (உயிரோடு) “இருப்பது” என்பதின் அர்த்தமே “ஒரு போட்டியில் இருப்பது” என்பதுதான்.

இப்பொழுது, எதிரியினுடைய தத்துவம் என்னவென்றால், மிகவும் வெளிப்படையான இந்த உண்மையை தவிர்ப்ப-தற்கான, கிட்டத்தட்ட ஒரு தொடர்ச்சியான முயற்சிதானே

ஒழிய வேறொன்றும் அல்ல. அவன் ஒரு முரண்பாட்டைக் குறிவைக்கிறான். பொருட்கள் வெவ்வேறாக இருந்தாலும், ஏதோ ஒரு வகையில், அவையெல்லாம் ஒன்றாகவும் இரு-க்கவேண்டும். ஒரு சுயத்தின் நன்மை, மற்றொரு சுயத்தி-ற்கும் நன்மையாக இருக்கவேண்டும். இந்த சாத்தியமில்லாத ஒன்றை, அவன் “அன்பு” என்று அழைக்கிறான். மேலும், எந்த வகையிலும் விசேஷமில்லாத, இந்த எல்லா நோயையும் தீர்க்கும் மருந்தாகிய “அன்பு” தான், அவனுடைய எல்லாச் செயல்களுக்குக் கீழும், மற்றும் அவனுடைய எல்லா இயல்பு-க்கும், அல்லது அவன் தன்னை யார் என்று சொல்லிக் கொள்ளுகிறானோ, அவை எல்லாவற்றின் அடிப்படையாக-வும் இருக்கிறது என்பதைக் கண்டறியலாம். ஆதலால்தான், அவன் தன்னில்தான் கூட ,ஒரு சுத்தமான கணிதக் கணக்கில் வரும் ஒன்றாக இருப்பதில், திருப்தி அடையவில்லை. அன்பு என்கிற இந்த முட்டாள்தனம், தன்னுடைய சொந்த இயல்பிலும் அடிப்பதிக்கும்படியாக, அவன், தான் மூவராக இருக்கும்போதே, ஒன்றாக இருப்பதாக, உறுதியாகக் கூறுகிறான். இந்த அளவுகோலின் அடுத்தக் கடைசியில், பொருள் என்னும் பரிமாணத்திற்குள்ளே, அவன் அந்த குப்பையான கண்டுபிடிப்பான உயிரினத்தை (மனிதனை) அறிமுகப்படுத்துகிறான். அவைகளுடைய பகுதிகள் எல்லாம், தங்களுடைய இயல்பான குறிக்கோளாகிய, போட்டியிடும் தன்மையிலிருந்து விகாரப்பட்டு, ஒன்றோடொன்று ஒத்து-ழைக்கும்படியாக வைக்கப்படுகின்றன.

பாலியல் உறவை, மனிதர்கள் இனப்பெருக்கம் செய்யும் ஒரு முறையாக, எதிரி வைத்திருப்பதன் உண்மையான நோக்கம், அதிலிருந்து அவன் உருவாக்கின பயனிலிருந்தே மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. நம்முடைய பார்வையில் பாலியல் என்பது மிகவும் தீங்கற்ற ஒன்றாக இருந்திருக்கக்கூடும். அதாவது, அது ஒரு பலமான சுயம், ஒரு பலவீனமான சுயத்தை

இரையாக்கிக் கொள்ளுகிற, பலவிதமான முறைகளில் ஒரு முறையாக இருந்திருக்கக்கூடும். உண்மையாகவே, சிலந்திப் பூச்சிகளுக்கு, அது அவ்வாறாகத்தான் இருக்கிறது. அதில், மணப்பெண், தன் மணமகனைத் தின்று, தன்னுடைய திருமணத்தை நிறைவு செய்கிறாள். ஆனால், மனிதர்களுக்குள்ளே, எதிரியானவன், அவர்கள் இருவருக்கும் நடுவில் பாலியல் ஆசையோடு சேர்த்து, எந்த விலையுமின்றி செலுத்தப்படும் அன்பையும் இணைத்திருக்கிறான். அவன், அந்த சந்ததி அந்தப் பெற்றோரின் மீது சார்ந்து இருக்கும்படியாகவும், அந்தப் பெற்றோர்கள், அவர்களை ஆதரிக்கும்படியான உந்துதல்களையும் உருவாக்கியிருக்கிறான்- இவ்வாறாக அந்த உயிரினங்களைப்போல, இன்னும் மோசமான ஒன்றாகிய, “குடும்பம்” என்பதை உருவாக்கியிருக்கிறான்; ஏனென்றால், அதிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், அதிக தனித்தன்மை உள்ளவர்கள் என்றாலும், ஒரு அதிக உணர்வுள்ள, பொறுப்புள்ள வகையிலே, அவர்கள் ஒன்றிணைக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். சொல்லப்போனால், இந்த முழு விஷயமும், அன்பிற்குள் அவர்களை இழுத்துவைக்கிற, மற்றொரு கருவியாகவே இருக்கிறது.

இப்போதுதான், அந்த வேடிக்கை வருகிறது. எதிரி ஒரு திருமணமான தம்பதியினரை “ஒரே மாம்சம்” என்று விவரிக்கிறான். அவன் “சந்தோஷமாக திருமணத்தில் இணைந்த தம்பதி” என்றோ “காதல் வசப்பட்டிருந்ததால் திருமணம் செய்துகொண்ட ஒரு தம்பதி” என்றோ குறிப்பிடவில்லை. ஆனால், அதை மனிதர்கள் கண்டுகொள்ளாதபடி உன்னால் பார்த்துக்கொள்ளமுடியும்.

அவர்கள் ‘பவுல்’ என்று அழைக்கிறார்களே, அந்த மனிதன், இதைத் திருமணமான தம்பதியினருக்கு

மட்டுமே வரையறுக்கவில்லை என்பதையும், அவர்கள் மறந்துவிடும்படி, உன்னால் செய்யமுடியும். அவனைப் பொறுத்தவரை, வெறுமென சரீரப் பிரகாரமாக இணைதல், “ஒரே மாம்சத்தை” உருவாக்குகிறது. உண்மையில், பாலியல் உறவின் முக்கியத்துவத்தை குறித்த சாதாரண விளக்கங்களைக்கூட, மனிதர்கள், காதலில் வசப்படுதலை குறித்த இலக்கியப் புகழ்ச்சியாக எடுத்துக்கொள்ளும்படி, உன்னால் செய்யமுடியும். உண்மை என்னவென்றால், எங்கெல்லாம் ஒரு ஆண், ஒரு பெண்ணோடு இணைக்கிறானோ, அவர்களுக்கு அது பிடித்திருக்கிறதோ இல்லையோ, அங்கு அவர்கள் இருவருக்கும் நடுவே, ஒரு ஆழ்ந்தநிலையிலான உறவு ஏற்படுத்தப்படுகிறது. அது கடைசிவரை அனுபவிக்கப்படவேண்டும், அல்லது கடைசிவரை சகித்துக்கொள்ளப்படவேண்டும். அன்பை உண்டாக்கவேண்டும் என்பதுதான் இந்த ஆழமான உறவினுடைய நோக்கம். மேலும், கீழ்ப்படிதலோடு அதில் நுழைந்து இருப்பார்களென்றால், பெரும்பாலும் அது அப்படியே அன்பையும் குடும்பத்தையும் உருவாக்குகிறது என்ற, அந்த உண்மையான அறிக்கையிலிருந்து, திருமணத்தை சந்தோஷமாகவோ அல்லது புனிதமாகவோ ஆக்குவது, அன்பு, பயம், ஆசை ஆகியவற்றின் கலவையாகிய “காதல் வசப்படுதல்” மட்டும்தான் என்கிற நம்பிக்கை, தவறானது என்று, மனிதர்கள் அனுமானிக்கமுடியும். இந்தப் பிழையை, மிக எளிதாக உருவாக்கி விடலாம், ஏனென்றால், பெரும்பாலும் மேற்கத்திய ஐரோப்பாவில், “நம்பிக்கைக்குரியவர்களாய் இருத்தல், குழந்தைகளை பெற்றெடுத்தல், ஒருவர் மேலொருவர் நன்மையை விரும்புதல்”, ஆகிய நோக்கத்தோடு, எதிரியின் வடிவமைப்புக்கு அடிபணிந்து உண்டாக்கப்பட்ட திருமணங்களுக்கு முன்பாகவே, காதல் வசப்படுதல் என்பது, நடைபெற்றுவிடுகிறது; எப்படி பக்திக்குரிய உணர்ச்சி, அநேக நேரங்களில், (எப்பொழுதும்

அல்ல) மனமாற்றத்தை அடைகிறதோ, அதுபோலவே. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், எதிரி, எதை திருமணத்தின் பலன் என்று, உண்மையாகவே வாக்குறுதி அளிக்கிறானோ, மனிதர்கள் அந்தக் காரியத்துக்கு அதிகமாக வண்ணம் தீட்டி, அதை பூதாகரமாக்கி, அதுதான் திருமணத்தின் அடிப்படை என்று அவர்கள் நம்பும்படியாக, உற்சாகப்படுத்தப்படவேண்டும். இதனால் இரண்டு நன்மைகள் தொடர்ந்து வருகின்றன. முதலாவது, இச்சையடக்கம் என்கிற வரத்தை பெற்றுக்கொள்ளாத மனிதர்கள், அதற்குத் தீர்வாக, திருமணம் செய்ய முயற்சி செய்வதை, தடுக்கமுடியும். ஏனென்றால், அவர்கள் அதில் காதல் வசப்படவில்லை. மேலும், நம்முடைய இந்த யோசனைக்குத் தான் நன்றி சொல்லவேண்டும், என்னவென்றால், வேறு எந்த ஒரு நோக்கத்தோடு செய்யப்படும் திருமணங்களும், அவர்களுக்கு கீழானவைகளாகவும் இழிவாகவும் தெரிகின்றன. ஆமாம், அவர்கள் அப்படித்தான் சிந்திக்கிறார்கள். அவர்கள், ஒருவருக்கொருவர் உதவி செய்யும்படியாக இருக்கிற அந்த கூட்டமைப்புக்கு உண்மையாக இருப்பது, கற்பு பாதுகாக்கப்படுவது, உயிர் ஒரு சந்ததியில் இருந்து அடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்லும் ஒரு முறையாக இருப்பது, ஆகிய நோக்கங்களோடு செய்யப்படுகிற திருமணங்கள், ஒரு உணர்ச்சிவசப்பட்ட செயலுக்கும் கீழாக இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். (உன்னுடைய மனிதன், திருமண ஆராதனையை மிகுந்த அவமதிப்போடு நினைக்கும்படி செய்வதை, நீ புறக்கணித்து விடாதே) இரண்டாவதாக, எந்தவிதமான பாலியல் கவர்ச்சியும் திருமணத்தில் முடியும்வரையில், அது காதலாகத்தான் எண்ணப்படும். அந்த காதல், ஒரு மனிதன், ஒரு புறஜாதியினரையோ, அல்லது முட்டாளையோ, அல்லது பாலியலில் அதிகமாக ஈடுபடுகிற ஒரு பெண்ணையோ, திருமணம் செய்துகொள்வதின், எல்லாவிதமான குற்ற உணர்ச்சியிலிருந்தும்,

அதனுடைய எல்லா விளைவுகளிலிருந்தும் அவன் பாதுகாக்கப்படுவதற்கான, ஒரு சாக்குபோக்காகும். ஆனால், இதைக் குறித்து அடுத்த கடிதத்தில் இன்னும் அதிகம் கூறுகிறேன்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 19

என் அன்பு எட்டி,

உன்னுடைய கடைசிக் கடிதத்தில் நீ கேட்ட கேள்வியைப் பற்றி, நான் மிகவும் ஆழமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் உனக்கு தெளிவாக காண்பித்ததைப் போல, எல்லா சுயங்களும் இயற்கையாகவே போட்டியுணர்வு கொண்டவை எனவும், ஆதலால் அன்பைக் குறித்த எதிரியினுடைய எண்ணம், விதிமுறைக்கு முரண்பாடானது என்றால், எதிரி, இந்த மனித புழுக்களை விரும்புகிறான் என்றும், அவர்களுடைய சுதந்திரத்தையும், அவர்கள் என்றென்றும் வாழவேண்டும் என்பதையும், உண்மையாகவே விரும்புகிறான் என்றும், நான் உனக்கு மீண்டும் மீண்டும் எச்சரித்தது என்ன ஆகும்? என் அன்பு மகனே, என்னுடைய கடிதங்களை நீ வேறு ஒருவருக்கும் காண்பித்துவிடவில்லை என்று நான் நம்புகிறேன். அது ஒரு பெரிய விஷயம் இல்லைதான். நான் மதவெறியில் விழுந்துவிட்டதைப் போன்ற தோற்றம், முழுக்க முழுக்க ஒரு விபத்துதான் என்பதை யார் வேண்டுமானாலும் கண்டுகொள்ளமுடியும். பிறகு, ஒழுங்கீனனைப் பற்றி நான் கூறின, சில வெளிப்படையான அவமதிக்கிற பேச்சுகள் எல்லாம், முற்றிலும் விளையாட்டாகக் கூறியவை என்பதையும், நீ புரிந்துகொண்டிருப்பாய் என்று நான் நம்புகிறேன். நான் உண்மையாகவே அவன் மேல் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். மேலும், நிச்சயமாகவே, மேலிடத்திலிருந்து உன்னை நான் பாதுகாக்கமாட்டேன் என்று, நான் சொன்னவைகள் எல்லாம், உண்மையான அர்த்தத்தில் அல்ல. உன்னுடைய காரியங்களை எல்லாம் நான் சரிவர பார்த்துக்கொள்வேன் என்று, நிச்சயமாக

நீ என்னை நம்பலாம். ஆனால், எல்லாவற்றையும் இரகசியமாகவே வைத்துக்கொள்.

உண்மை என்னவென்றால், வெறும் கவனமின்மையி-னாலே, எதிரி, உண்மையாகவே மனிதர்களை நேசிக்கிறான் என்று நான் தவறுதலாகக் கூறிவிட்டேன். அது நிச்சயமாக, ஒரு சாத்தியமற்ற ஒன்று. எதிரி, ஒரு தனிப்பட்ட ஜீவன், அவர்கள் அவனிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். அவர்களு-டைய நன்மை, அவனுடைய நன்மையாக இருக்கமுடியாது. அன்பைப் பற்றின அவனுடைய எல்லாப் பேச்சுகளும், வேறு ஏதோ ஒரு நோக்கத்தின், மாறுவேடமாய் இருக்கவேண்டும். அவர்களை உருவாக்குவதற்கும், அவர்களைக் குறித்து இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்வதற்கும், அவனுக்கு வேறு ஏதோ ஒரு உண்மையான நோக்கம் இருக்கவே-ண்டும். அவனுக்கு உண்மையாகவே, இந்த அசாத்தியமான அன்பு இருப்பதைப்போல, ஒருவர் பேசிக்கொண்டிருப்பதன் காரணமே, அந்த உண்மையான நோக்கத்தைக் கண்டுபிடி-க்க, நாம் முற்றிலும் தவறிவிட்டோம் என்பதுதான். அவர்களி-லிருந்து அவன் என்னத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறான்? அது ஒரு தீர்க்கப்படமுடியாத கேள்வியாய் இருக்கிறது. இந்தப் பிரச்சனைதான், நம்முடைய பிதா, எதிரியோடு சண்டையிடுவதற்கு, ஒரு பிரதான காரணமா-யிருந்தது என்று நான் உன்னிடத்தில் சொல்லுவதில், எந்த தீங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மனிதனுடைய சிருஷ்டிப்பு என்ற யோசனை, முதலாவதாக தூண்டப்பட்ட-போது, அந்த துவக்க நிலையிலேயே, எதிரியானவன் ஒரு சிலுவையைப் பற்றின, ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தை, தான் முன்னறிவதாக மிகவும் தாராளமாக ஒத்துக்கொ-ண்டான். நம்முடைய பிதா, மிக இயல்பாகவே அவனோடு ஒரு சந்திப்பைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, இதைக் குறித்த ஒரு விளக்கத்தை கேட்டார். அதற்கு எதிரி, அன்றிலிருந்து சொல்லிக் கொண்டு திரிகிற, பாரபட்ச அன்பைப் பற்றிய,

பாட்டி வடை சுட்ட கதை போன்ற ஒன்றைத்தவிர, வேறு எதுவும் சொல்லவில்லை. இதை நம்முடைய பிதாவால், இயல்பாகவே ஒத்துக்கொள்ள முடியவில்லை. அவர், எதிரி என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறான் என்பதைத் தெரிவிக்கும்படியாக, எல்லா வாய்ப்பையும் கொடுத்தார். அந்த இரகசியத்தை அவர் அறிந்துகொள்ள, உண்மையாகவே தான் கவலைப்படுவதாக ஒத்துக்கொண்டார். அதற்கு எதிரியினுடைய பதில் என்ன-வென்றால், உன்னால் முடிந்தால் தெரிந்துகொள் என்பதை-ப்போல இருந்தது. அவர்களுடைய அந்த சந்திப்பின் இந்த நிலையில்தான், நம்முடைய பிதா, தன் மேல் இருந்த, அந்த நம்பிக்கை இல்லாத தன்மையைக் குறித்து மிகவும் வெறுப்ப-டைந்து, அதினிமித்தம், அந்த எதிரியினுடைய பிரசன்னத்தி-லிருந்து உடனடியாக, கணக்கிடமுடியாத அளவு தூரத்துக்கு, தான் விலகிக்கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் என்று நான் நினைகிறேன். இந்த முடிவுதான், எதிரியினு-டைய அந்த வேடிக்கையான கதையாகிய, நம்முடைய பிதா பரலோகத்தை விட்டு, வலுக்கட்டாயமாக தள்ளப்பட்டார் என்ற கதை எழுவதற்கான காரணமாயிருக்கிறது. அதிலிருந்து தான் நம்மை ஒடுக்குகிறவன், இவ்வளவு இரகசியமாக செயல்படுவதின் காரணத்தைத் தெரிந்துகொண்டோம். அவனுடைய சிங்காசனம் அந்த இரகசியத்தைதான் சார்ந்தி-ருக்கிறது. “அவர் அன்பு என்று, எதைக் குறிப்பிடுகிறார் என்று நாம் புரிந்துகொண்டால், இங்குள்ள எல்லா போரும் முடிவடைந்து, நாம் மீண்டும் பரலோகத்துக்குள் நுழைந்து வடுவோம்” என்று, அவனுடைய பிரிவைச் சார்ந்தவர்கள், எப்பொழுதும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அங்குதான் அந்தப் பெரிய வேலை அடங்கியிருக்கிறது. நமக்குத் தெரியும் அவனால் நிச்சயமாக நேசிக்க முடியாது என்று: யாராலும் அப்படிச் செய்யமுடியாது: அதில் அர்த்தமே இல்லை. அவன் என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறான் என்பதை மட்டும், நாம் அறிந்து கொண்டுவிட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்.

ஒன்றன்பின் ஒன்றாக, பல அனுமானங்களையும் உத்தேசங்களையும் நாம் முயற்சித்துப் பார்த்தும் இன்னும் நம்மால் அதை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும், நாம் எப்போதும் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது. அதிக அதிகமான சிக்கலான கோட்பாடுகளும், அதிக அதிகமான தகவல் சேகரிப்புகளும், முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிற ஆராய்ச்சியாளர்களுக்கு கொடுக்கப்படுகிற செழிப்பான வெகுமதிகளும், தோல்வியடைகிற ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிற அதிக அதிகமான பயங்கர தண்டனைகளும்- ஆகிய இந்த எல்லா முயற்சிகளும், காலத்தின் கடைசி வரைக்கும் தொடரப்பட்டு, துரிதப்படுத்தப்படுமானால், நிச்சயமாக, நாம் வெற்றிபெறாமல் இருக்கவே முடியாது.

உன்னுடைய கடைசி கடிதத்தில், ஒரு மனிதன் “காதல் வசப்பட்டு இருப்பது” விரும்பத்தக்க நிலையா, இல்லையா, என்று நான் தெளிவாகக் கூறவில்லை என்று நீ குறை கூறினாய். ஆனால் எட்டி, உண்மையாகவே அப்படிப்பட்ட கேள்விகளைத்தான் அவர்கள் கேட்கும்படியாக எதிர்பார்க்கவேண்டும். “காதலோ” அல்லது தேசப்பற்றோ, அல்லது திருமணம் ஆகாமல் வாழ்வதோ, அல்லது பலிபீடத்தில் மெழுகுவர்த்திகளை ஏற்றுவதோ, அல்லது எந்த தீய பழக்கமும் இல்லாமல் இருப்பதோ, அல்லது கல்வியோ, இவையெல்லாம், “நன்மையா” அல்லது “தீமையா” என்று அவர்களுக்குள்ளேயே விவாதிக்கும்படியாக விட்டுவிடு. இதற்கெல்லாம் ஒரு பதிலே இல்லை என்பதை உன்னால் காணமுடியவில்லையா? ஒரு குறிப்பிட்ட நோயாளியுடைய, குறிப்பிட்ட மனநிலை, அந்த குறிப்பிட்ட சூழ்நிலையில், ஒரு குறிப்பிட்ட தருணத்திலே, எதிரிக்கு அருகில் செல்லுகிறதா, அல்லது நமக்கு அருகில் வரக்கூடிய போக்கில் போகிறதா, என்பதைத் தவிர, வேறு எதுவுமே இங்கு முக்கியம் அல்ல . ஆதலால், அந்த நோயாளி, “காதல்”, “நல்லதா” அல்லது “கெட்டதா” என்ற தீர்மானத்தை எடுக்கும்படியாக

விட்டுவிடுவது, மிகவும் ஒரு நல்ல விஷயமாகும். ஒருவன், உண்மையாகவே, தன்னுடைய சுவையின் அடிப்படையில் சரீரத்தை வெறுக்கிறவனாக, ஆனால், தூய்மையின் நிமித்தம், தான் அப்படியிருப்பதாக தவறாக நினைத்துக் கொண்டிருக்கிற, ஒரு திமிர் பிடித்த மனிதனாகவும், தன்னுடைய நண்பர்கள் எல்லாரும் ஏற்றுக்கொள்கிற சிலவற்றுக்கு எதிராகத், தான் இருப்பதில், மிகவும் பெருமை கொள்கிறவனாகவும் இருப்பான் என்றால்- அவன் எந்த தடையுமின்றி, காதலுக்கு எதிராகத் தீர்மானித்துக் கொள்ளட்டும். நீ அவனுக்குள் ஒரு அதீத பெருமையோடுள்ள, துறவின் உணர்வை உட்புகுத்து, பின்னர் அவனுடைய பாலியல் உணர்வை, மனிதாபிமான எல்லாவற்றிலிருந்தும் பிரித்துவிட்ட பின்பு, அதைக் கொண்டு மிகுந்த அதிகமான மிருகத்தனத்தோடு, இழிவான வடிவத்தில், அதை அவன் மேல் அழுத்து. ஒருவேளை, அவன் வேறு வகையிலே, ஒரு உணர்ச்சிவசப்படுகிற, ஏமாற்றப்படக்கூடிய மனிதனாக இருந்தால்,அவன் “காதலைத்”,தவிர்க்கமுடியாதது என்றும்,ஒரு வகையில் உள்ளார்ந்த முறையில், போற்றப்படவேண்டியது என்றும், அவன் நம்பும்வரையில், அவனுக்கு, பழைய பாணியைப் பின்பற்றுகிற, சில சிறு கவிஞர்களும், இழிவான நாவல் ஆசிரியர்களும் எழுதியவற்றை ஊட்டிவிடு. இந்த நம்பிக்கை, சாதாரண கற்பற்ற தன்மையை உருவாக்குவதில், பெரிதும் உதவாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அது, நாம் நம்புகிறபடி எல்லாம் நன்றாகச் சென்றால், கொலையிலும் தற்கொலையிலும் முடியக்கூடிய, வெகு நாட்களாக நீடிக்கிற, அந்த “உன்னதமான”, காதல் சார்ந்த, துயரம் நிறைந்த, பரிதாபமான விபச்சார வாழ்க்கை ஆகியவற்றுக்கான, ஒரு ஈடு இணையில்லாத செய்முறையாகும். இது தோல்வியுற்றுவிட்டால், அதை அந்த நோயாளியை ஒரு பிரயோஜனமான திருமணத்துக்கு வழிநடத்தக்கூடிய ஒன்றாக பிரயோஜனப்படுத்திக்

கொள்ளலாம். எதிரியினுடைய கண்டுபிடிப்பாக இருந்தாலும், திருமணத்துக்கும் சில பிரயோஜனங்கள் உண்டு. உன்னுடைய நோயாளியின் வீட்டுக்கு அருகில், அநேக இளம்பெண்கள் நிச்சயமாக இருப்பர். அவர்களில் ஒருவரை, அவன் திருமணம் செய்துகொள்ளும்படியாக மட்டும், உன்னால் அவனை வற்புறுத்தமுடியும் என்றால், அவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை மிகவும் கடினமாக்கக்கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள். இதைக் குறித்த ஒரு அறிக்கையை, நீ எனக்கு அடுத்த முறை எழுதும்பொழுது தயவுசெய்து அனுப்பிவிடு. அதுவரையில் “காதலில் விழுதல்” என்ற இந்த நிலை தன்னில்தானே, நமக்காகவோ அல்லது அந்த அடுத்த பக்கத்தினருக்கோ, விரும்பத்தக்க ஒன்றாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை, உன்னுடைய மனதில் மிகவும் தெளிவாக்கிக்கொள். அது நாமோ அல்லது எதிரியோ, இருவரும் தங்களுடைய பிரயோஜனத்துக்காக உபயோகித்துக்கொள்ள முயற்சிக்கிற, ஒரு சாதாரண நிகழ்வுதான். மனிதர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கக்கூடிய மற்ற எல்லா காரியங்களைப்போல, அதாவது, ஆரோக்கியம் மற்றும் பலவீனம், வயது மற்றும் இளமை, போர் அல்லது சமாதானம் இவைகளைப் போல, ஆவிக்குரிய வாழ்க்கையின் பார்வையில், இதுவும், பெரும்பாலும் ஒரு மூலப்பொருளாய் மட்டுமே இருக்கிறது.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 20

என் அன்பு எட்டி,

உன் நோயாளியுடைய கற்பின் மேல், நீ நடத்தின நேரடித் தாக்குதல்களுக்கு, எதிரி ஒரு பலவந்தமான முற்றுப்புள்ளியை இப்போதைக்கு வைத்துவிட்டான் என்பதை, நான் மிகுந்த அதிருப்தியுடன் குறித்துக் கொள்கிறேன். அவன் எப்பொழுதும், முடிவில் இப்படித்தான் செய்வான் என்பதை, நீ முன்னதாகவே தெரிந்து வைத்து, அந்த நிலைமையை அடைவதற்கு முன்பே, நீ அதைத் தடுத்து நிறுத்தியிருக்கவேண்டும். ஏனென்றால், உன்னுடைய மனிதன், இப்பொழுது இப்படிப்பட்ட தாக்குதல்களெல்லாம், என்றென்றைக்கும் நீடித்திருக்கப் போவதில்லை என்ற அபாயகரமான உண்மையை கண்டுபிடித்து விட்டான். இதன் விளைவாக, நம்முடைய சிறந்த ஆயுதத்தைக்கூட, இப்போது உன்னால் திரும்பவும் பயன்படுத்த முடியாது- எதுவென்றால், நம்முடைய சோதனைகளுக்கு அடிபணிவதைத் தவிர, வேறு எந்த வழியிலும், நம்மிடமிருந்து விடுபடுவதற்கு, எந்த சாத்தியமும் இல்லை என்ற, அந்த அறிவில்லாத மனிதர்களுடைய நம்பிக்கைதான் அது. கற்பு மிகவும் ஆரோக்கியமற்ற ஒன்று என்று, அவனுக்கு அறிவுறுத்த நீ முயற்சித்திருப்பாய் என்று நான் நினைக்கிறேன். அப்படித்தானே?

அவன் அடிக்கடி சந்திக்கக்கூடிய இளம்பெண்களைப் பற்றிய அறிக்கை, எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. அது எனக்கு உடனேயே கிடைக்க விரும்புகிறேன், ஏனென்றால், அவனுடைய பாலியல் உணர்வைக்கொண்டு, அவனை கற்பற்றவனாக்க முடியவில்லை என்றால், நமக்கு சாதகமான

ஒரு திருமணத்தை ஊக்குவிப்பதற்கு, நாம் கட்டாயம் முயற்சிக்கவேண்டும். அதுவரையில், “காதலில் வசப்படுவது” தான் நம்மால் செய்யக்கூடிய சிறந்த வேலையாக இருக்கும் என்றால்- சில வகையான பெண்களைப் பற்றி, சில குறிப்புகளை நான் உனக்கு கொடுக்க விரும்புகிறேன்- அதாவது வெளித்தோற்றத்தில் உள்ள விதங்களை- அப்படிப்பட்ட பெண்களிடம்தான், அவன் காதலில் விழும்படியாக உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.

நிச்சயமாக, ஒரு கரடு முரடான, எளிதான வழியிலே, இந்தக் கேள்வியை நமக்காக தீர்மானிப்பது, நம்முடைய படிநிலையில், மிகவும் கீழே இருக்கின்ற, சில ஆவிகள்தான். இந்த மாபெரும் குருக்களுடைய வேலை என்னவென்றால், ஒவ்வொரு காலகட்டத்திலும் பாலியல் “சுவை” என்று அழைக்கப்படுவது எதுவோ, அதை தவறாக வழிநடத்துவதுதான். இதை அவர்கள், நாகரீகமான வகை எதுவென்று தீர்மானிக்கிற, பிரபலமான கலைஞர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள், நடிகைகள், மற்றும் விளம்பரதாரர் மூலமாக வேலைசெய்து நிறைவேற்றுகிறார்கள். இதனுடைய நோக்கம், ஒரு பாலினத்தின் உறுப்பினரை, அடுத்த பாலினத்தினரின் எந்த உறுப்பினரோடு, அவர்கள் பக்திக்கு ஏற்ற, உதவியாக இருக்கக்கூடிய, மகிழ்ச்சியாக மற்றும் செழிப்பாக அமையக்கூடிய திருமணங்கள் நடைபெறுவதற்கான, அதிக வாய்ப்புகள் உண்டோ, அப்படிப்பட்டவர்களிடமிருந்து விலக்கிவைப்பதே ஆகும். இப்படித்தான், நாம் பல நூற்றாண்டுகளாக, இயற்கைக்கு மேலாக வெற்றிபெற்றுக் கொண்டேயிருக்கிறோம்- எந்த அளவுக்கு என்றால், தாடி வளர்த்துக் கொள்வதைப் போல, ஆண்களுக்குரிய சில இரண்டாம் நிலை பண்புகளை, ஏறக்குறைய எல்லாப் பெண்களும் வெறுக்கும்படியாகச் செய்திருக்கிறோம். மேலும், இதில் நீ நினைப்பதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் உள்ளடங்கியிருக்கிறது.

ஆண்களுடைய சுவையைப் பொறுத்தவரை, நாம் நிறைய வகையிலே மாறுபட்டு இருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்திலே, அவர்களுடைய கவனத்தை, சிலை போன்ற மற்றும் உயர்குல வகையான அழகுக்கு நேராகத் திசை திருப்பி, ஆண்களுடைய மாயையை அவர்களுடைய ஆசைகளோடு கலந்து, அந்த இனத்தை, பெரும்பாலும் அதிக திமிர்பிடித்த, ஊதாரித்தனமான பெண்களோடு இனப்பெருக்கம் செய்யும்படியாக ஊக்குவித்திருக்கிறோம். மற்றொரு காலகட்டத்திலே, மிகைப்படுத்தப்பட்ட பெண்மை வகையான, வலுவிழந்து நலிந்த பெண்களை தேர்ந்தெடுத்து, முட்டாள்தனமும் கோழைத்தனமும் மற்றும், அதோடு சேர்ந்து காணப்படக்கூடிய, எல்லாவிதமான பொய்மையும், குறுகிய மனப்பான்மையும், உயர்வாக மதிக்கப்படும்படியாக செய்திருக்கிறோம். இப்பொழுது இருக்கிற காலகட்டத்திலே, நாம் எதிர்மறையாக அணுகிக் கொண்டிருக்கிறோம். வால்ட்ஸ் (waltz) என்கிற ஜோடிகளுக்கான இசையின் காலத்தைத் தொடர்ந்து, இப்பொழுது ஜாஸ் (jazz) என்கிற ஆரவாரமான இசையின் காலம் வந்துவிட்டது. இப்பொழுதெல்லாம் ஆண்கள், ஒரு சிறுவனுடைய உடலமைப்பிலிருந்து வித்தியாசப்படுத்தமுடியாத உடலமைப்பைக் கொண்ட பெண்களை விரும்பும்படியாக, நாம் கற்பித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வகையான அழகு, மற்ற எல்லாவற்றைக் காட்டிலும், அதிகமாகவே சீக்கிரத்தில் மறைந்துவிடும் என்பதால், பெண்களுக்கு வயதாகிவிடுமோ, என்கிற நீண்டகால பயத்தை நாம் அதிகமாக்கி (இதனால் பல சிறந்த விளைவுகளை நாம் பெற்று இருக்கிறோம்), அவர்களை பிள்ளைப் பெறுவதை, குறைவாகவே விரும்புகிறவர்களாகவும், மிகக் குறைவாகவே பிள்ளைகளை பெறக்கூடியவர்களாகவும் ஆக்கிவிட்டோம். இத்தோடு இது முடிந்துவிடவில்லை. கலையில் (art) வெளிப்படையாக எல்லோரும் பார்க்கக்கூடிய, அந்த நிர்வாணத்தையும், அதை

மேடையிலோ அல்லது குளிக்கும் கடற்கரையிலோ, அதை கண்காட்சியாக பிரதிநிதித்துவப்படுத்த, இந்த சமுதாயம் கொடுக்ககூடிய அனுமதியை நாம் அதிக கூடுதலாக நிர்மாணித்துவிட்டோம். நிச்சயமாகவே, இது எல்லாம் வெறும் பொய்தான். அந்தப் பிரபலமான ஓவியங்களில் இருக்கிற உருவங்கள் எல்லாம், பொய்யாக வரையப்பட்டவை. நீச்சல் உடையில் இறுக்கமான உடையணிந்த, அந்த பெண்கள் யாவரும், ஒரு முழுமையாக வளர்ச்சியடைந்த பெண்ணின் வடிவம் எப்படி இருக்கவேண்டும் என்று இயற்கை அனுமதிப்பதைக் காட்டிலும், தங்களுக்கு இறுக்கமான மற்றும் தங்கள் வடிவத்தை தாங்கிப்பிடிக்கிற உடைகளை அணிந்து, தங்களுடைய உடலமைப்பை உறுதியானதாகவும், அதிக மெலிதானதாகவும், அதிகமாக சிறுவர்களைப் போன்ற உடலமைப்பை கொண்டவர்கள் போலவும் தோன்றும்படியாக, காண்பிக்கின்றனர். என்றாலும், அதே நேரத்தில் இந்த நவநாகரீக உலகம், அது மிகவும் “வெளிப்படையாகவும்”, “ஆரோக்கியமானதாகவும்” இயல்பான நிலைக்கு திரும்புவதாகவும் நம்பும்படி, கற்பிக்கப்படுகிறது. இதன் விளைவாக, மனிதர்களுடைய ஆசைகளையெல்லாம், இல்லாத ஒரு காரியத்திற்கு நேராக, நாம் அதிகமதிகமாய் திருப்பிவிட்டுக் கொண்டிருக்கிறோம்-அதாவது பாலியலில், கண்களுடைய (இச்சையின்) பங்கை அதிகமதிகமாக முக்கியத்துவப்படுத்தி, அதே நேரத்தில், அதனுடைய கோரிக்கைகளை அதிகமதிகமாக சாத்தியமற்றதாக்கி இருக்கிறோம். அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை, நீ எளிதாக, முன்கூட்டியே சொல்லமுடியும்.

தற்போதைக்கு இருக்கிற பொதுவான மூலோபயம் இதுதான். ஆனால், அந்த கட்டமைப்புக்குள்கூட உன்னுடைய நோயாளியின் ஆசைகளை, இரண்டு திசைகளில் ஒன்றுக்கு நேராக, நீ ஊக்குவிப்பது சாத்தியம்தான் என்பதை நீ

கண்டுபிடிக்கமுடியும். எந்த மனிதனுடைய இருதயத்துள்ளும், நீ சற்று கவனமாக பார்த்திருந்தால், அவனுக்கு குறைந்தபட்சம், இரண்டு கற்பனையான பெண்களின் நினைவுகள் வருவதை நீ காண்பாய்- ஒன்று, இந்த பூமியை சார்ந்தது, இன்னொன்று, நரக வேதனையை கொடுக்கிற வீனஸ் (காதல் மற்றும் அழகின் ரோம கடவுள்) ஆகும். மேலும், இந்த இரண்டு பொருட்களில் ஒன்றுக்குத் தகுந்தவாறு, அவனுடைய ஆசையின் பண்புகள் மாறுபடுகின்றன. ஒரு வகைக்கான அவனுடைய ஆசைகள் எல்லாம், எதிரிக்கு இயல்பாகவே இணங்கும்படியானதாக இருக்கின்றன- அதாவது எப்பொழுதும் இரக்கத்தோடு இருக்கக்கூடியவைகளாகவும், எப்பொழுதும் திருமண பந்தத்திற்குக் கீழ்படிகிறவைகளாகவும், நாம் மிகவும் அருவருக்கக்கூடிய அந்தத் தங்கநிற ஒளியாகிய பயபக்தி, மற்றும் இயல்பான தன்மையினால் வர்ணம் தீட்டப்பட்டவைகளாகவும் இருக்கின்றன. மற்றொரு வகைக்காக, அவன் மிருகத்தனமாக ஆசைப்படுகிறான், அப்படி மிருகத்தனமாக ஆசைப்படவேண்டும் என்றும் விரும்புகிறான். இந்த வகை, அவனை திருமணம் என்ற பந்தத்தில் இருந்து மொத்தமாகவே வெளியே இழுத்துவிட மிகச் சிறந்தது. ஆனால், திருமண பந்தத்திற்குள்ளும், அவன் அதை ஒரு அடிமையாகவும், ஒரு சிலை வழிபாடாகவும், குற்றத்திற்கு உடந்தையாக இருக்கக்கூடிய ஒன்று எனவும், அந்தப் போக்கிலேயே நடத்துவான். இதில் முதல் வகைக்கான அவனுடைய காதல், எதிரி, ஒருவேளை தீமை என்று அழைக்கக்கூடிய ஒன்று சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். அதாவது, அந்த மனிதன், “அவள் மற்றொருவனுடைய மனைவியாக இல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே” என்று எண்ணுவதும், அவன் அவளை, நேர்மையான வழியிலே காதலிக்க முடியவில்லை என்று வருத்தமும் கொண்டவனாக இருப்பதும் ஆகும். ஆனால்,

அந்த இரண்டாவது வகையில், அவன் நன்றாக உணர்கிற அந்தத் தீமை இருக்கவேண்டும் என்றே விரும்புகிறான். அந்த சுவையில் இருக்கக்கூடிய அந்தக் கடுமையைத்தான், அவன் பின்தொடர்கிறான். அவளுடைய முகத்திலே, நன்றாகத் தெரியக்கூடிய அந்த மிருகத்தனத்தையோ, ஏமாற்றத்தால் உண்டான அந்த கோபத்தையோ, அல்லது தந்திரத்தையோ அல்லது கொடுமையையோ அவன் விரும்புகிறான். ஆனால் சரீரத்திலே, அவன் சாதாரணமாக அழகு என்று அழைக்கக்கூடியதிலிருந்து முற்றும் வித்தியாசப்படுகிற ஒன்றை, அவன் தெளிவான சுயநினைவோடு இருக்கக்கூடிய ஒரு நிலையில், அது அசிங்கம் என்று சொல்லக்கூடிய, ஆனால் நம்முடைய கலையின்படி, தனிப்பட்ட வகையிலே, தன்னை ஆட்டிபடைக்கக்கூடிய, அந்த பதப்படாத நரம்பின் மேல், நாம் விளையாடும்படி செய்யக்கூடிய ஒன்றை, அவன் விரும்புகிறான்.

அந்த நரக வீனஸின் உண்மையான பயன் என்னவென்றால், எந்த சந்தேகமுமின்றி, ஒரு விபச்சாரியாகவோ அல்லது வைப்பாட்டியாகவோதான். ஆனால், உன்னுடைய மனிதன் ஒரு வேளை ஒரு கிறிஸ்தவனாக இருந்து, “காதலை” குறித்து, அது ஒரு தவிர்க்கமுடியாதது என்றும், எல்லாவிதமான சாக்குகளையும் சொல்லி, அது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்று என்கிற, முட்டாள்தனத்திலும், நன்றாக பயிற்சி கொடுக்கப்பட்டவனாய் இருந்தால், அவன் அவளைத் திருமணம் செய்துகொள்ளும்படியாக, பெரும்பாலும் தூண்டப்படமுடியும். அப்படி அவனைச் செய்யவைப்பது மிக நல்ல மதிப்பைக் கொண்டுவரக்கூடியதுதான். விபச்சாரத்தையும் தனித்தீமைகளையும் பொறுத்தவரையில் நீ தோற்றுப்போய் இருக்கலாம், ஆனால், ஒரு மனிதனுடைய பாலியல் உணர்வை, அவனை நாசப்படுத்துவதற்காக பிரயோஜனப்படுத்துவதற்கு, வேறு பல, அதிகமறைமுகமான

செயல்முறைகள் உள்ளன. அவைகள் திறமையானவைகள் மட்டுமல்ல, மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியவைகளும் ஆகும்; இதன் மூலமாக உருவாகிற சந்தோஷமின்மை, நீடித்திருக்கக்கூடியதும் நேர்த்தியான வகையைச் சேர்ந்ததுமாகும்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 21

என் அன்பு எட்டி,

உண்மைதான். பாலியல் சோதனைகள் ஏற்படுகிற ஒரு காலகட்டம், அந்த நோயாளியுடைய சிடுசிடுப்புத் தனத்தின் மேல், ஒரு கீழ்நிலை தாக்குதலை செயல்படுத்துவதற்கான ஒரு மிகச்சிறந்த நேரமாய் இருக்கிறது. அவன் அதை, ஒரு சிறிய பிரச்சனைதான் என்று சிந்திக்கும் வரையில், அதுவே மிக முக்கியமான தாக்குதலாகக்கூட இருக்கக்கூடும். ஆனால், இங்கு மற்ற எல்லாவற்றிலும் இருப்பதுபோலவே, அவனுடைய அறிவை இருளாக்கித்தான், அந்த நன்னடத்தையின் மீதான உன்னுடைய தாக்குதலுக்குரிய வழி, ஆயத்தப்படுத்தப்பட வேண்டும்.

மனிதர்கள் சாதாரணமாக, துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளினால் கோபப்படுவதில்லை. ஆனால், தங்களை காயப்படுத்தினதாக நினைக்கிற துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளினால்தான் கோபப்படுகிறார்கள். அவர்களுடைய காயப்பட்ட உணர்வு, தங்களுக்கு உரிமையான ஒரு கோரிக்கை மறுக்கப்பட்டதன் உணர்வைத்தான் சார்ந்திருக்கிறது. ஆதலால், உன்னுடைய நோயாளி, தன் வாழ்க்கையிலே அதிக கோரிக்கைகளை வைக்கும்படியாக தூண்டப்படுவான் என்றால், அவன் இன்னும் அதிகமாக, தான் காயப்பட்டதாக உணர்வான். அதன் விளைவாக, எப்பொழுதும் கோபம் நிறைந்த, மோசமான மனநிலையிலேயே இருப்பான். அவன் தன்னுடைய விருப்பத்தின்படி செலவழிக்கவேண்டும் என்று நினைத்த, நேரத்தின் ஒரு பகுதி, எதிர்பாராதவிதமாக, தன்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்பொழுது, அது அவனை எளிதாகவே ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்புக்குள்

தள்ளிவிடுவதைப் போல, வேறு எதுவும் அப்படிச் செய்வதில்லை என்பதை, நீ கவனித்திருப்பாய். (அவன் இந்த சாயங்காலப் பொழுதை தனிமையில் நிம்மதியாக கழிக்கவேண்டும் என்று நினைத்தபோது), எதிர்பாராத விதமாக வந்த அந்த விருந்தாளி, அல்லது (இவன் நண்பனோடு கொஞ்ச நேரம் பேசவேண்டும் என்று நினைத்தபோது) நடுவில் புகுந்து பேச ஆரம்பித்த, நண்பனுடைய வாயாடி மனைவி, ஆகியவை அவனுடைய இயல்பான செயல்பாட்டில் இருந்து, அவனை தூக்கி எறிந்துவிடுகின்றன. இப்படிப்பட்ட சிறிய கோரிக்கைகள்கூட, அவனுடைய மரியாதையான நன்னடத்தையிலிருந்து, அவனை இரக்கமற்றவனாகவோ அல்லது மந்தமாகவோ மாற்றும் நிலைமைக்கு, அவன் இன்னும் போகவில்லை. இவை ஏன் அவனை கோபப்படுத்துகின்றன என்றால், அந்த நேரத்தை அவன் தனக்குரியதாகவும், அது தன்னிடமிருந்து திருடிக் கொள்ளப்பட்டதாகவும் கருதுவதால்தான். ஆதலால், “என்னுடைய நேரம் எனக்கே உரியது” என்ற அந்த வினோதமான எண்ணத்தினாலே, நீ அவனுடைய மனதை வைராக்கியமாக பாதுகாத்தே ஆகவேண்டும். ஒவ்வொரு நாளையும், அதிலுள்ள இருபத்து-நான்கு மணி நேரங்களுக்குரிய, சட்டப்பூர்வமான உரிமையாளர், தான் மட்டுந்தான் என்ற எண்ணத்தோடு அவன் துவங்கட்டும். இந்தச் சொத்திலிருந்து, தன்னுடைய முதலாளிகளுக்கு, தான் கொடுக்கவேண்டிய அந்தப் பகுதியை, ஒரு துயரமான வரியாகவும், தனது மதம் சார்ந்த கடமைகளுக்கு, தான் செலவழிக்கிற மிச்சமுள்ள பகுதியை, ஒரு தாராளமான நன்கொடையாகவும் அவன் நினைத்துக்கொள்ளட்டும். ஆனால், இவை எதிலிருந்து கழிக்கப்பட்டதோ, அந்த முழுமையான நேரமும், தன்னுடைய சொந்த பிறப்புரிமை என்று ஏதோ ஒரு விளங்கமுடியாத உணர்வோடு அவன்

சிந்திப்பதில், அவனுக்கு எந்த சந்தேகமும் வருதற்கு ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

இது உனக்கு கொடுக்கப்பட்ட மிக நுணுக்கமான பணியாகும். அவன் தனக்குள் ஏற்படுத்திக் கொண்டே இருக்கவேண்டிய அந்த அனுமானம், மிகவும் அபத்தமானதாக இருப்பதால், ஒருவேளை அதைக் குறித்த கேள்வி எழலாம். அப்படி எழுந்தால், அதை பாதுகாக்கும்படியான வாதத்தின் ஒரு சிறு துண்டுகூட நம்மால் கண்டுபிடிக்கமுடியாது. நேரத்தினுடைய ஒவ்வொரு தருணத்தையும் மனிதனால் உண்டாக்கவும் முடியாது, இழுத்துப் பிடித்துவைக்கவும் முடியாது. அவையெல்லாம் அவனுக்கு முற்றிலும் ஒரு பரிசாக வருகின்றன. இல்லையென்றால், அவன் சூரியனையும் சந்திரனையும்கூட சொந்தம் பாராட்டிக் கொள்ளமுடியும். அதுமட்டுமல்லாமல், கோட்பாட்டின்படி அவன் எதிரியினுடைய முழு சேவைக்கும், தன்னை ஒப்புவித்திருக்கிறான். ஒருவேளை எதிரியானவன், மாம்ச ரூபத்திலே அவன் முன் தோன்றி, ஒரே ஒரு நாளுக்கு மட்டும், அவனுடைய மொத்த சேவையையும் கோரிக்கையாக வைத்தால்கூட, இவன் அதற்கு மறுக்கமாட்டான். அந்த ஒரு நாள் சேவை என்பது, ஒரு முட்டாள் மனுஷியின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருப்பதிலும், கடினமான ஒன்றாக இல்லாமலிருந்தால், அவன் பெரிதும் நிம்மதியாக இருப்பான். மேலும், அந்த ஒரு நாளிலே, ஒரு அரைமணி நேர அளவுமட்டும், “நீ போய் உனக்கு பிடித்ததை செய்து, மகிழ்ச்சியாய் இரு”, என்று எதிரி சொன்னால், அவன் சிறிதளவு ஏமாற்றத்தோடுகூட தான், அவ்வாறு இருப்பான். ஒருவேளை, அவன் இந்த அனுமானத்தை ஒரு நொடி சிந்தித்துப் பார்த்தால், அவன் உண்மையிலேயே இந்த நிலையில்தான் ஒவ்வொரு நாளும் இருக்கிறான், என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். அவனுடைய மனதில், இந்த அனுமானத்தை பாதுகாக்கவேண்டும் என்று நான்

சொல்லும்போது, அந்த வாதத்தை பாதுகாக்கும்படியாக நீ வழங்குகிற வாதம்தான், நீ செய்யக்கூடிய கடைசி காரியமாய் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறேன். ஏனென்றால், அப்படி ஒரு வாதம் எதுவுமே இல்லை. உன்னுடைய பணி முழுக்க முழுக்க சாத்தியம் இல்லாதது. அவனுடைய எண்ணங்கள் எதுவும், அதற்கு எந்த வகையிலும், அருகில் வந்துவிடாதபடி பார்த்துக்கொள். ஒரு இருளினால் அதை மூடி வைத்துவிடு. அந்த இருளின் நடுவிலே, அந்த “நேரத்துக்கான உரிமையாளர் தான் மட்டுந்தான்” என்ற அந்த உணர்வு, மௌனமாக, யாரும் சோதிக்காமல் விட்டுவிட்டபடி, வேலை செய்து கொண்டிருக்கட்டும்.

பொதுவாக எல்லா விஷயத்திலுமே, தான்தான் உரிமையாளர் என்ற உணர்வை எப்பொழுதுமே ஊக்க-ப்படுத்த வேண்டும். மனிதர்கள் எப்பொழுது பார்த்தாலும் தாங்கள்தான் உரிமையாளர் என்று கூறுகிற அந்த சத்தம், பரலோகத்திலும் சரி நரகத்திலும் சரி, சம அளவு வேடி-க்கையானதாக இருக்கிறது. நாமும் அவர்கள் அப்படிச் செய்யும்படியாகவே வைத்துக்கொள்ள வேண்டும். கற்புக்கு எதிரான பல நவீன காலத்து எதிர்ப்புகளெல்லாம், தங்களுடைய உடல் “தங்களுக்கே” உரியது என்ற மனிதர்க-ளின் நம்பிக்கையிலிருந்துதான் வருகிறது- அவை(மனித உடல்) பரந்துவிரிந்த, ஆபத்தான எஸ்டேட் தோட்டங்கள், இந்த உலகத்தை உருவாக்கின அந்த ஆற்றல் துடித்துக் கொண்டி-ருக்கிற, தங்களுடைய சம்மதம் இல்லாமலேயே தாங்கள் அதற்குள்ளாக இருப்பதைக் காண்கிற, மற்றொருவர் மகி-ழும்படியாக அதிலிருந்து தாங்கள் வெளியேற்றப்படுகிற சரீரங்களாகும். இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு அரச குடும்பத்து குழந்தை, அதன் தகப்பனுடைய அன்பினிமி-த்தம் ஒரு பெரிய மாகாணத்தின் தலைவனாக, பேரளவில் மட்டுமே முடிசூட்டப்பட்டு, உண்மையில், அறிவு நிறைந்த ஆலோசகர்களுடைய ஆட்சியின் கீழ் இருக்கும்போது, அது

தான் வளருகிற அந்த பாலகர் வளர்ப்பு அறையின் தரையில் கிடக்கிற (பொம்மை) செங்கற்களை, தனக்குச் சொந்தமாக வைத்திருக்கிற அதே விதத்தில், எல்லா நகரங்களையும் காடுகளையும் வயல்நிலங்களையும், தனக்கு உரிமை கொண்டாடுவதைப்போல இருக்கிறது.

இந்த உரிமை கொண்டாடுகிற உணர்வை, நாம் பெருமையின் மூலம் மட்டுமல்ல, குழப்பத்தின் மூலமாகவும் உருவாக்குகிறோம். இந்த உடைமை பெயர்சொல்லின் (possessive pronoun) வெவ்வேறு விதமான உணர்வுகளை, அவர்கள் கவனிக்காதபடி, நாம் அவர்களுக்கு கற்பிக்கிறோம்-அதாவது “என் காலணிகள்”, “என் நாய்”, “என் வேலைக்காரன்”, “என் மனைவி”, “என் தகப்பன்”, “என் குரு”, “என் தேசம்” ஆகியவற்றிலிருந்து தொடர்ந்துவந்து, “என் கடவுள்” என்கிறவரை ஓடுகிற, அந்த மிக மெலிதான, படிப்படியான வித்தியாசங்களைச் சொல்லுகிறேன். “என்” என்ற உரிமை கொண்டாடுதலின் இப்படிப்பட்ட வகையான உணர்வுகளை, நாம் படிப்படியாக குறைத்துக் கொண்டேவந்து, அதை “என் காலணிகள்” என்று சொல்லும்போது பயன்படுத்துகிற உணர்வுக்குக் குறைத்து விடும்படியாக, அவர்களுக்கு கற்பிக்கமுடியும். பாலகர் பள்ளியில் இருக்கிற ஒரு குழந்தைக்குக்கூட, “என் கரடிபொம்மை” என்று கூறும்போது, தன்னுடைய முந்தைய கற்பனையான அன்பைப் பெற்றுக்கொண்டு, தன்னோடு ஒரு விசேஷித்த உறவை வைத்திருந்த பொம்மையாக அதைக் குறிப்பிடாமல் (ஏனென்றால், எதிரியானவன் நான் கவனமாக இல்லாவிட்டால், அந்த அர்த்தத்தில் அவர்கள் கூறும்படியாகத்தான் அவர்களுக்கு கற்பிப்பான்), “என் கரடிபொம்மை” என்று கூறும்பொழுது, “என் விருப்பப்படி நான் அதை சிறுசிறு துண்டுகளாக பிய்த்துப் போடமுடியும்”, என்ற அர்த்தத்தில் அது கூறும்படியாக நாம் கற்பிக்கமுடியும். இந்த அளவுகோலின் அடுத்தக் கடைசி முனையில், மனிதர்கள் “என் கடவுள்” என்று சொல்லுகிற

அந்த அர்த்தம், "என் காலணிகள்" என்று சொல்லுவதிலிருந்து பெரிதும் வித்தியாசப்படாத ஒரு உணர்வோடு சொல்லும்படியாக, நாம் கற்பித்திருக்கிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால், "என்னுடைய மேன்மையான சேவைகளுக்கான பிரதிபலன்களை கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிற, பிரசங்க மேடையிலிருந்து என்னுடைய நன்மைக்காக, நான் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுகிற, எனக்கு உரிமையான கடவுள்- எனக்கு வேண்டியதை எல்லாம் நான் பெற்றுக்கொள்ளுகிற, என்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற அந்த கடவுள்" என்பதுதான்.

இவையெல்லாவற்றிலும் இருக்கக்கூடிய வேடிக்கை என்னவென்றால், மனிதன் "என்னுடையது" என்ற வார்த்தையை, அதனுடைய முழு உடைமைப் பொருள், என்ற உணர்வோடு, எதைக் குறித்தும் சொல்லமுடியாது. கடைசியில் பார்க்கும்பொழுது, நம் பிதாவோ, அல்லது எதிரியானவனோ, இருக்கக்கூடிய எந்தப் பொருளையும் குறித்து "என்னுடையது" என்று சொல்லுவார்கள், குறிப்பாக ஒவ்வொரு மனிதனையும் குறித்து. பயப்படாதே, மனிதர்கள், அவர்களுடைய நேரம், அவர்களுடைய ஆத்துமா, அவர்களுடைய சரீரங்கள் எல்லாம், உண்மையில் யாருக்கு உரிமையானது என்று, முடிவில் கண்டறிந்து கொள்ளுவார்கள்-ஆனால், என்ன நடந்தாலும், அது நிச்சயமாக அவர்களுக்கு உரியது அல்ல. இப்போதைக்கு எதிரியானவன், சட்டப்பூர்வமான அடிப்படையில், தான் உருவாக்கின எல்லாவற்றையும் "என்னுடையது" என்று கூறுகிறான். நம்முடைய பிதா, அதிக யதார்த்தமும், தான் கைப்பற்றும்படியாக எடுத்துக்கொண்ட வெவ்வேறுவிதமான தாக்குதல்களின் அடிப்படையிலும், எல்லா பொருட்களையும், முடிவில் "என்னுடையது" என்று சொல்லும்படியாக நம்புகிறார்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,<br>
திருக்கன்

# கடிதம் 22

என் அன்பு எட்டி,

ஆக, உன்னுடைய மனிதன் காதலில் விழுந்துவிட்டான்- அதுவும் இருப்பதிலேயே மோசமான வகையான காதலில், அவன் விழுந்துவிட்டான். அதுவும் நீ எனக்கு அனுப்பின அறிக்கையில் காணப்படாத ஒரு பெண்ணோடு அவன் காதல் வசப்பட்டுவிட்டான். என்னுடைய கடிதங்கள் ஒன்றிலிருந்த, சில ஒளிவு மறைவில்லாத உணர்ச்சி வெளிப்பாடுகளைக் குறித்து, நீ ரகசிய போலீஸிடம் எழுப்ப முயற்சித்த, அந்த சிறிய, தவறான புரிதலை, நான் சரி செய்துவிட்டேன் என்று, அறிந்துகொள்ள உனக்கு விருப்பம் இருக்கக்கூடும். அந்த விஷயத்தை வைத்து, என்னுடைய செல்வாக்கை நீ கைப்பற்றி விடலாம் என்று நினைத்திருந்தால், நீ மிகவும் தவறு செய்துவிட்டாய் என்பதை அறிந்துகொள்வாய். அதற்காகவும், நீ செய்த மற்ற பல தவறுகளுக்காகவும், அவைகளுக்கான விலையை நீ செலுத்துவாய். அதுவரையில், திறமையற்ற சோதனையாளர்களுக்காக, புது திருத்தத்தின் வீட்டிலிருந்து (இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்த சிறை) வெளியாகியுள்ள, ஒரு சிறு புத்தகத்தை இத்தோடு இணைத்துள்ளேன். அதில் நிறைய விளக்கப்படங்கள் அடங்கியுள்ளன. அதில் ஒரு பக்கம்கூட உனக்கு சலிப்புள்ளதாக இருக்காது.

இந்தப் பெண்ணைப் பற்றின ஆவணங்களை எடுத்துப்பார்த்து, நான் கண்டவைகளால் மிகவும் திகிலடைந்தேன். அவள் ஒரு கிறிஸ்தவள் மட்டுமல்ல, எப்படிப்பட்ட கிறிஸ்தவள் என்றால்- இழிவான, அற்பமான, அசட்டுச் சிரிப்புள்ள, அடக்கமான, குறைவாகப் பேசுகிற,

கூச்ச சுபாவமுள்ள, மென்மையான, சிறப்பு ஏதுமில்லாத, கன்னித்தன்மையுள்ள, இளமைப் பருவத்தில் உள்ளவளாவாள். அந்தச் சின்ன மிருகம்! அவள் எனக்குக் குமட்டலை உண்டுபண்ணுகிறாள். அந்த ஆவணத்திலுள்ள, பக்கங்களின் ஊடாகவே, அவளுடைய துர்நாற்றமும் அவளுடைய சுட்டெரிக்கும் தன்மையும் வெளிப்படுகின்றன. உலகம் இவ்வளவு மோசமாகப் போய்விட்ட தன்மை, எனக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்குகிறது. அவளையெல்லாம், பழைய காலங்களில் அரங்கத்தில் வைத்துதான் பார்த்திருப்போம். அப்படிப்பட்ட பிரயோஜனத்துக்குத்தான், அவளுடைய வகையெல்லாம் இருக்கின்றன. அங்கேயும், அவள் அப்படி ஒன்றும் பெரிதான நன்மை எதையும் செய்துவிடப்போவதில்லை. இந்த இருமுக ஏமாற்றுக்காரர்கள் (இப்படிப்பட்ட வகையைச் சேர்ந்தவர்களை எனக்கு நன்றாகத் தெரியும்), இரத்தத்தைப் பார்த்து மயங்கி விழுவபர்களைப்போல் இருப்பார்கள், ஆனால் சாகும்போது புன்னகையோடு சாவார்கள். இவர்கள் எல்லா வகையிலும் ஏமாற்றுவார்கள். பார்ப்பதற்கு மிகவும் சாதுவாக இருப்பார்கள், ஆனால் நையாண்டித்தனமான புத்தியையும் கொண்டிருப்பார்கள். *என்னை* ஒரு வேடிக்கையாக எண்ணக்கூடிய உயிரினங்கள்தான் இவை. அவள் ஒரு இழிவான, புத்தியற்ற, சின்ன தூய்மைவாதியாள்- ஆனாலும், மற்ற எல்லா இனப்பெருக்கம் செய்யும் மிருகங்களைப்போல, இந்த மடையனுடைய அரவணைப்புக்குள் விழுவதற்குத் தயாராகவும் இருக்கிறாள். கன்னித்தன்மையின் மேல் அவ்வளவு கண்மூடித்தனமான நம்பிக்கையை கொண்டிருந்தால்- எதிரியானவன், ஏன் அவளை இன்னும் சுட்டெரிக்கவில்லை- அவர்களைப் பார்த்து அவன் புன்னகைத்துக் கொண்டிருக்கிறானே?

எதிரி, தன் இருதயத்திலே, இன்பத்தின் மேல் மிகுந்த நாட்டம் கொண்டவன். எல்லாவிதமான உபவாசமும், கண்

விழிப்புகளும், கூர்மையான ஆணிகளும், சிலுவைகளும், இவையெல்லாம் வெறும் வெளிப்புறத் தோற்றத்துக்குத்தான் அல்லது கடற்கரையில் இருக்கிற வெறும் நுரையைப் போலத்தான். அங்கே அவனுடைய கடலுக்குள்ளே, இன்பங்களும், அதிக இன்பங்களும் இருக்கின்றன. அதைக் குறித்து அவனுக்கு எந்த இரகசியமும் இல்லை. அவருடைய வலது பாரிசத்திலே “நித்திய பேரின்பம்” என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சே! நம்மை உயர்த்தி நிறுத்துகிற, துயரம் நிறைந்த தரிசனங்களுக்கான, அந்த மேலான கடினமான மர்மங்களின், ஒரு சிறு சாயம்கூட அவனிடத்தில் இல்லை. அவன் மிக கொச்சையானவன், எட்டியே. அவன் நடுத்தர நிலையான மனதைக் கொண்டவன். தன்னுடைய உலகத்தை முற்றிலும் இன்பங்களால் நிறைத்து வைத்திருக்கிறான். மனிதர்கள், நாள் முழுவதும் அவனுடைய சிறு கவனமுமின்றி செய்யக்கூடிய விஷயங்கள் நிறைய உள்ளன- தூங்குவது, துவைப்பது, சாப்பிடுவது, குடிப்பது, தாம்பத்தியம், விளையாட்டு, ஜெபிப்பது, வேலை செய்வது போன்றவைகள். இவையெல்லாம், எந்த வகையிலும் நமக்கு பயன்படுவதற்கு முன்பாக, திரிக்கப்பட வேண்டியிருக்கிறது. நாம் மிகவும் கொடுமையான, வசதியற்ற சூழலின் கீழ், போர் செய்ய வேண்டியுள்ளது. இயல்பாகவே, எதுவும் நமக்கு சாதகமாக இல்லை. (இது உனக்கு ஒரு சாக்குபோக்காக இருக்கும் என்று எண்ணிவிடாதே. உன்னோடுள்ள பிரச்சனையை, நான் இப்போதைக்கு முடித்துக்கொள்கிறேன். நீ எப்பொழுதுமே என்னை வெறுத்திருக்கிறாய், மேலும், என்னோடு தைரியமாகப் பேசும் போதெல்லாம், என்னை அவமதித்து இருக்கிறாய்.)

அப்புறம் கண்டிப்பாகவே, அவன் அந்தப் பெண்ணுடைய குடும்பத்தையும், அந்த முழு வட்டாரத்தையும் தெரிந்து கொள்ளுவான். அவள் வசிக்கிற அந்த வீடு, அவன் ஒருபோதும் நுழைந்திருக்கக்கூடாத ஒன்று என்பதை, நீ காணவில்லையா?

அந்த இடம் முழுவதும், அந்த கெட்ட நாற்றத்தினால் நிறைந்திருக்கிறது. அங்குள்ள தோட்டக்காரன்கூட, அங்கு ஐந்து வருடங்கள்தான் இருந்தான் என்றாலும், அவனும் அந்த வாசனையைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறான். வார விடுமுறை நாட்களில், அவர்கள் வீட்டுக்கு வருகிற விருந்தாளிகள்கூட, அந்த வாசனைகள் சிலவற்றைச் சுமந்து செல்லுகிறார்கள். அவர்களுடைய நாயும் பூனையும் முற்றிலும் அந்த வாசனையினால் கறை படிந்திருக்கின்றன. மேலும், அந்த வீடு, ஊடுருவமுடியாத ஒரு மர்மத்தினால் முற்றிலும் நிறைந்து இருக்கிறது. அந்த குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும், ஏதோ ஒரு வகையில் மற்றவர்களிடமிருந்து மூலதனத்தை உருவாக்குகிறார்கள் என்று, நமக்கு நிச்சயமாக தெரிகிறது (இது அடிப்படை கொள்கை சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாகும்)- ஆனால், எப்படி என்றுதான் நமக்கு தெரியவில்லை. இந்த பாரபட்சமற்ற அன்பின் பாசாங்குக்குப் பின்பாக, உண்மையாகவே என்ன இருக்கிறது என்பதின் இரகசியத்தை, எதிரியே காத்துக்கொள்ளுவதைப் போல, அவர்கள் பொறாமையோடு காத்துக்கொள்ளுகிறார்கள். அந்த முழு வீடும், தோட்டமும், இவையெல்லாம், ஒரு பெரிய அருவருப்பான காட்சியை அளிக்கின்றன. இது ஒரு மனித எழுத்தாளர் பரலோகத்தைக் குறித்து விவரித்ததைப் போன்ற, ஒரு ஆரோக்கியமற்ற பிரதிபலிப்பை தாங்குகின்றன: அதாவது, “அது ஜீவன் மட்டுமே இருக்கக்கூடிய பகுதி, ஆதலால், அங்கு இசையாக இல்லாதவை, மௌனம் மட்டுமே” என்று அவன் எழுதினான்.

இசை, மௌனம் இவை இரண்டையும் நான் எவ்வளவாக அருவருக்கிறேன். நம் பிதா, நரகத்தில் நுழைந்ததிலிருந்து- அது மனிதர்கள் தோன்றுவதற்கு மிகவும் முன்பாக, நான் நினைக்கிறேன் அதை ஒளி வருஷங்களில் கணக்கிடக்கூடும் என்று, - அப்போதிலிருந்து, நரகத்தின் பகுதியிலுள்ள ஒரு சதுர இன்ச்-ஆகிலும், அல்லது நரகத்தின் நேரத்தில்

ஒரு தருணமாகிலும்கூட, இந்த இரண்டு வெறுக்கப்பட்ட விசைகளுக்கும் ஒருபோதும் சரணடைந்ததில்லை என்பதைக் குறித்து நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். எப்போதுமே, நரகம் இரைச்சலினால் மட்டுமே ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது- அந்த மகா மாற்றம் நிறைந்த, எல்லா வகையான களிப்பு, இரக்கமின்மை, மற்றும் வீரியம், இவை எல்லாவற்றின் ஒலி வெளிப்பாடாகிய அந்த இரைச்சல்- வேடிக்கையான தடுமாற்றங்களிலிருந்தும், நம்பிக்கையற்ற மன உறுத்தல்களிலிருந்தும், அசாத்தியமான ஆசைகளிலிருந்தும், நம்மைப் பாதுகாக்கிற- ஒரே இறைச்சலினால் நிறைந்திருக்கிறது. முடிவிலே, நாம் இந்த முழு பிரபஞ்சத்தையும், இரைச்சலாக மாற்றிவிடுவோம். பூமியைப் பொறுத்தவரையில், நாம் ஏற்கனவே இந்தத் திசையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்துவிட்டோம். பரலோகத்தில் இருக்கிற அந்த பாடல்களும், மௌனங்களும், நம்முடைய இரைச்சலினால் முடிவிலே நின்று போய்விடும். ஆனால், நாம் இன்னும் போதிய அளவுக்கு, அல்லது தேவையான அளவுக்குகூட, இன்னும் சத்தமாக இரைச்சல் ஏற்படுத்தவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆராய்ச்சிகள் எல்லாம் இன்னும் நடந்துகொண்டு இருக்கின்றன. அதுவரையில், உன்னை! - அருவருப்பான சின்ன---

(இங்கே திருக்கன் எழுதுகிற கடிதத்தில் தடங்கல் ஏற்பட்டு, மற்றொருவரால் அது தொடர்ந்து எழுதப்படுகிறது)

இந்தக் கடிதத் தொகுப்பில், தொடர்ந்து நடந்துவந்த, சூடான பரிமாற்றங்களின் விளைவாக, நான் கவனக்குறைவினாலே ஒரு பெரிய பூரானின் ரூபத்தை அடைந்துவிட்டேன். இந்தக் காரணத்தினாலே, மீதம் உள்ளவைகளை, என்னுடைய உதவியாளர் எழுதும்படியாக, நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த வடிவமாற்றம்

முழுமையடைந்துவிட்ட நிலையில், அது ஒரு தற்காலிகமான நிகழ்வு என்பதை நான் தெரிந்துகொண்டேன். இதைக் குறித்த சில பொய்கள் மனிதர்களைச் சென்றடைந்து, மில்டன் (John Milton) என்ற கவிஞர் எழுதின கவிதையில், அதைப் பற்றி, ஒரு பூதாகரமாக்கப்பட்ட தொகுப்பு வெளிவந்திருக்கிறது. அதில், இதைக் குறித்து கூடுதலாகச் சொல்லப்பட்ட ஒரு அபத்தம் என்னவென்றால், இப்படிப்பட்ட வடிவங்களின் மாறுதல்கள் எல்லாம், எதிரி, நம் மேல் சுமத்தின, ஒருவித "தண்டனை" என்பதுதான். ஒரு சமீபகாலத்து எழுத்தாளர்- அவருடைய பெயர் ஏதோ பி.ஷா (Shaw) என்று நினைக்கிறேன்- அவர் இந்த உண்மையை, ஒரு வழியாகப் புரிந்துகொண்டார். மாற்றம் என்பது நமக்கு உள்ளிருந்து துவங்குகிறது என்றும், நம்முடைய பிதா, தன்னைத் தவிர வேறு எதையாவது வணங்குவார் என்றால், அவராலே வணங்கப்படக்கூடிய அந்த உயிர் விசையின், ஒரு மகத்துவமான வெளிப்பாடுதான் இது என்றும், அவர் எழுதியிருக்கிறார். நான் இப்பொழுது இருக்கிற இந்த ரூபத்திலே உன்னைக் காணவும், மிகவும் இறுக்கமான அணைப்பிலே, உன்னை என்னோடு இணைத்துக் கொள்ளவும், அதிக ஆவலாக இருக்கிறேன்.

தவளையன்

(கையொப்பம்)

பாதாள மேன்மை நிறைந்த, துணைச் செயலாளர் திருக்கன் அவர்களின் சார்பாக எழுதியது.

# கடிதம் 23

என் அன்பு எட்டி,

இந்தப் பெண்ணின் மூலமாகவும், அவளுடைய அருவருக்கத்தக்க குடும்பத்தின் மூலமாகவும், நோயாளி, ஒவ்வொரு நாளும் இப்பொழுது அதிகமான கிறிஸ்தவர்களை அறிந்துகொள்ளுகிறான். மட்டுமல்லாமல், அதிக புத்திசாலியான கிறிஸ்தவர்களையும் கூட அறிந்துகொள்ளுகிறான். இனி நீண்ட காலத்துக்கு, அவனுடைய வாழ்க்கையிலிருந்து, பயபக்தியை *நீக்குவது* மிகவும் அசாத்தியமானதாகிவிடும். சரி. அப்படியானால் நாம் அதை எப்படியாவது *கெடுத்து* விடவேண்டும். நீ ஒளியின் தூதனைப்போல உன்னுடைய வடிவத்தை மாற்றி, உன் கல்லூரியின் வளாகத்தில் நன்றாகப் பயிற்சி பெற்றிருக்கிறாய் என்பதில் சந்தேகமில்லை. அதை எதிரியினுடைய முகத்துக்கு நேராக, இப்பொழுது உபயோகப்படுத்தவேண்டிய நேரம் வந்திருக்கிறது. உலகமும் மாம்சமும் நம்மை கைவிட்டுவிட்டன. மூன்றாவதாக ஒரு சக்தி மீதம் உள்ளது. இந்த மூன்றாவது வகையான வெற்றிதான், எல்லாவற்றிலும் மிக மேன்மையான, மகிமை நிறைந்ததாகும். ஒரு கெடுக்கப்பட்ட பரிசுத்தவான், ஒரு பரிசேயன், ஒரு சத்தியத்தைத் தேடுகிறவன், அல்லது ஒரு மந்திரவாதி, ஆகிய இவர்களெல்லாரும், வெறுமென சாதரணமாக குரூரம் நிறைந்தவனையும், துரோகியையும் காட்டிலும், நரகத்திலே அதிகமாக கவனத்தை ஈர்க்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

உன்னுடைய நோயாளியின் புது நண்பர்களைச் சுற்றிப் பார்க்கும்பொழுது, அவனை தாக்குவதற்கான மிகச்சிறந்த குறி எதுவென்றால், இறையியலுக்கும் அரசியலுக்கும்

நடுவில் உள்ள, அந்த எல்லைக் கோடுதான் என்று தெரிகிறது. அவனுடைய புது நண்பர்களில் பலர், தங்களுடைய மதத்தின் சமூக தாக்கத்தைக் குறித்து, அதிக ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அது தன்னில்தானே, ஒரு கெட்ட விஷயமாய் இருக்கிறது; ஆனால், அதிலிருந்து நாம் ஒரு நன்மையை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

பல கிறிஸ்தவ-அரசியல் எழுத்தாளர்கள் எல்லாரும், மிகவும் ஆரம்ப காலத்திலேயே, கிறிஸ்தவம், தன்னை நிறுவினவருடைய கோட்பாட்டிலிருந்து விலகி, தவறாகப் போக ஆரம்பித்துவிட்டது என்று நினைக்கிறார்கள் என்பதை நீ பார்க்கமுடியும். "சரித்திர இயேசு" என்ற கருத்தை, மீண்டுமாக நாம் ஊக்கப்படுத்துவதற்கு, இந்த சிந்தனையை நாம் பிரயோஜனப்படுத்தவேண்டும். இதை அவர்கள் கண்டுகொள்ளும்படியாக, பின் நாட்களில் அதன்மேல் படிந்த, திரட்சிகளையும் வேறுபாடுகளையும் நீக்கி, அதை எடுத்துக்காட்டி, பின்னர் அதை முழு கிறிஸ்தவ பாரம்பரியத்தோடு ஒப்பிட்டு, வித்தியாசப்படுத்திக் காட்டவேண்டும். கடந்த தலைமுறையிலே, "சரித்திர இயேசு" என்ற இந்த நிர்மாணத்தை (construction), பறந்துவிரிந்த (liberal) மற்றும் மனிதாபிமான(humanitarian) அடிப்படையின் பேரிலே, நாம் கட்டியெழுப்பி ஊக்குவித்தோம். இப்பொழுது நாம் ஒரு புதிய "சரித்திர இயேசுவை", கார்ல் மார்க்ஸின் கொள்கைகள் (Marxian), பேரழிவு (catastrophic), புரட்சி (revolution) ஆகியற்றின் வழியில், முன்வைக்கிறோம். முப்பது வருடங்களுக்கு ஒருமுறை, நாம் மாற்றிக்கொண்டே இருக்கவேண்டும் என்ற நோக்கம்கொண்ட, இப்படிப்பட்ட நிர்மாணங்களின் நன்மைகள், பன்மடங்காகும். முதலாவதாக, இவை, மனிதர்களுடைய பக்தியை, இல்லாத ஒன்றுக்கு நேராகத், திசை திருப்புகின்றன. ஏனென்றால், அப்பொழுது "சரித்திர இயேசு" என்பது சரித்திரத்தில் இல்லாத ஒருவர் என்றாகிவிடுகிறது. அவர்கள் சொல்லுவதைத்தான்

ஆவணங்களும் சொல்லுகின்றன. அவைகளில் புதிதாக எதையும் கூடுதலாக இணைக்கமுடியாது. ஒவ்வொரு புது “சரித்திர இயேசுவையும்”, சில குறிப்புகளை அடக்குவதிலிருந்தும், மற்றவைகளை மிகைப்படுத்துவதிலிருந்தும்தான் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் இந்த வகையான யூகங்களின் மேல் (நாம் இவைகளின் மேல் உபயோகப்படுத்தும்படி, மனிதர்களுக்குக் கற்பிக்கிற அடைமொழிகள் (adjective) எவ்வளவு சிறந்தவைகளாக இருக்கின்றன), சாதாரண வாழ்க்கையில் ஒருவரும் பத்து பைசாகூட பந்தயங்கட்ட வரமாட்டார்கள் என்றாலும், அவற்றின் மூலம் ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும், (புத்தகங்களை) வெளியிடும்படியாக திட்டமிட்டிருக்கிற ஒவ்வொரு வெளியீட்டாளர்களுக்கும், புது நெப்போலியன்கள், புது ஷேக்ஸ்பியர்கள், புது ஸ்விஃப்ட்கள் ஆகிய பயிர் வகைகளை உருவாக்கித் தருவதற்கு, இது போதுமானதாய் இருக்கிறது. இரண்டாவதாக, இப்படிப்பட்ட எல்லா நிர்மாணங்களும் “சரித்திர இயேசு” என்பதின் முக்கியத்துவத்தை, அவர் எல்லோருக்கும் வெளியிட்டதாக எண்ணப்படுகிற, ஏதோ ஒரு வினோதமான கோட்பாட்டின்மேல் வைக்கிறது. “பெரிய மனிதர்” என்ற வார்த்தையின் நவீனகாலத்து அர்த்தத்தின்படி, இயேசு ஒரு பெரிய மனிதனாக இருந்திருக்க வேண்டும்- அதாவது, மையத்திலிருந்து தள்ளப்படுகிற, ஒரு சமநிலையற்ற சிந்தனைக் கோட்டின் முடிவில் நிற்கிறவராக- ஒரு சஞ்சீவி மருந்தை விற்கிற ஒரு பித்தனாக. இப்படியாகத்தான் மனிதர்களுடைய மனங்களை, இயேசு யார், அவர் என்ன செய்தார் என்பதிலிருந்து நாம் திசை திருப்புகிறோம். முதலில், நாம் அவரை வெறும் ஒரு போதகராக மட்டுமே காண்பிக்கிறோம். பிறகு, அவருடைய போதனைகளுக்கும், மற்ற எல்லா பெரிய ஒழுக்கநெறி ஆசிரியர்களுக்கும் நடுவிலுள்ள, ஆணித்தரமான உடன்பாடுகளைக்கூட, நாம் மூடி

மறைத்துவிடுகிறோம். ஏனென்றால், எல்லா பெரிய ஒழுக்க நெறியாளர்களும், நாம் தொடர்ந்து மூடி மறைத்துக்கொண்டே இருக்கிற, அந்த ஆதிகாலத்து தார்மீக ஒழுக்கநெறி வாதங்களையெல்லாம், மீண்டும் நிலைநிறுத்தவே- அதாவது, மனிதர்களுக்கு அவைகளை அறிவிப்பதற்காக அல்ல, மீண்டும் ஞாபகப்படுத்துவதற்காகவே, எதிரியினால் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள் என்பதை, மனிதர்கள் ஒருபோதும் கவனித்து விடக்கூடாது. பண்டைய காலத்து கிரேக்கத்திலே, (ஒழுக்கத்தின் மேல் சந்தேகத்தைக் கொண்டுவந்த, வாக்குவன்மையுள்ள தத்துவவாதிகளான) சோஃபிஸ்டுகளை (Sophists) நாம் உருவாக்குகிறோம்: அவர்களுக்கு பதிலடி கொடுக்கும்படியாக, ஒரு சாக்ரடீசை(Socrates) அவன் எழுப்புகிறான். நம்முடைய மூன்றாவது குறிக்கோள் என்னவென்றால், இப்படிப்பட்ட நிர்மாணங்களினாலே, பக்தியான வாழ்க்கையை அழிப்பதுதான். மனிதர்கள் ஜெபத்தின் மூலமாகவும், சில புனித சடங்குகளின் மூலமாகவும் அனுபவித்திருந்த, எதிரியினுடைய உண்மையான பிரசன்னத்துக்கு பதிலாக, நாம் வெறுமென, சாத்தியமாக இருந்திருக்கக்கூடிய, வெகு தொலைவிலிருந்த, ஒரு நிழலைப் போன்ற, வெறுக்கப்படக்கூடிய ஒரு வடிவத்தை, புரியாத மொழியைப் பேசிக்கொண்டு, பல காலங்களுக்கு முன்பாக மரித்த ஒருவரை, ஏற்படுத்துகிறோம். அப்படிப்பட்ட ஒரு பொருள், உண்மையில் யாராலும், வணங்கமுடியாத ஒன்றாகும். தன் சிருஷ்டிப்பினாலே வணங்கப்பட்ட சிருஷ்டிகர் என்பதற்கு பதிலாக, வெகு சீக்கிரத்திலேயே ஒரு குறிப்பிட்ட கட்சியினால் போற்றப்பட்ட ஒரு சாதாரண தலைவர் என்ற நிலைக்கு வந்து, முடிவில், ஒரு விவேகமான வரலாற்று ஆசிரியரால் அங்கீகரிக்கப்பட்ட, ஒரு தனித்துவம் வாய்ந்த ஒரு கதாபாத்திரம் என்றாகிவிடும். நான்காவதாக, அது சித்தரிக்கிற இயேசுவைக் குறித்து, அது வரலாற்றுக்கு

அப்பாற்பட்டதாய் இருப்பதுபோக, இப்படிப்பட்ட மதங்கள், வரலாற்றை பொறுத்தவரையில், மற்றொரு அர்த்தத்தில் பொய்யானவைகளாய் இருக்கின்றன. இயேசுவுடைய சரிதையின், வரலாற்று ஆய்வை, வெறுமென ஒரு சரிதையாக மட்டுமே எடுத்துக்கொண்டு, அதினால் எதிரியினுடைய பாளையத்துக்குள் கொண்டுவரப்பட்ட தேசம் என்று எதுவுமில்லை. வெகு சிலரே அவ்வாறாக வந்தனர். உண்மையில், அவருடைய முழு வாழ்க்கைச் சரிதத்திற்கான, மூலப்பொருட்கள் எல்லாம் மனிதர்களிடமிருந்து தடுத்துநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதிகாலத்து, மதமாற்றம் அடைந்த கிறிஸ்தவர்கள் எல்லோரும், அவர்களுக்குள் ஏற்கனவே இருந்த, பாவ உணர்வின்மீது வேலைசெய்த, ஒரே வரலாற்று உண்மையினாலும் (இயேசுவின் உயிர்த்தெழுதல்), ஒரே இறையியல் கோட்பாட்டினாலும் (இரட்சிப்பு), மதமாற்றம் அடைந்தார்கள்- அதுவும், ஒரு “பெரிய மனிதரால்” உருவாக்கப்பட்ட, புதுவிதமான, ஏதோ ஒரு நவநாகரீக விதிக்கு எதிரான பாவம் அல்ல, அவர்களை வளர்த்தவர்களும் அவர்களைப் பெற்றதாய்களும் கற்றுக்கொடுத்த, அந்தப் பழைய, எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்கிற, அந்தப் பிரபஞ்சத்தின் ஒழுக்கவிதிக்கு எதிரான பாவம். இதற்குப் பின்புதான் “சுவிசேஷங்கள்” வருகின்றன. அவைகள், கிறிஸ்தவர்களை உண்டாக்குவதற்காக எழுதப்படவில்லை, ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்தவர்களின் பக்திவிருத்திக்காக எழுதப்பட்டன.

அப்படியானால், நமக்கு, “சரித்திர இயேசு” என்கிற கருத்து, எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும், எவ்வளவு ஆபத்தானதாக இருந்தாலும்கூட, எப்பொழுதும் ஊக்குவிக்கப்படவேண்டிய-தாய் இருக்கிறது. கிறிஸ்தவத்திற்கும் அரசியலுக்கும் நடுவே உள்ள பொதுவான தொடர்பைக் குறித்துப் பார்க்கும்போது, அதில் நம்முடைய நிலை, அதிக மென்மையானதாய்

இருக்கிறது. நிச்சயமாக, மனிதர்கள், தங்களுடைய அரசியல் வாழ்க்கைக்குள், கிறிஸ்தவம் வழிந்து ஓடுவதற்கு அனுமதிப்பதை, நாம் விரும்புவதில்லை. ஏனென்றால், ஒரு நேர்மையான சமுதாயம் என்று, எந்த ஒன்றும் நிறுவப்படுவது, ஒரு மகா பெரிய பேரழிவாகும். ஆனால் மறுபுறம், கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை, (வாழுவதற்கான) ஒரு வழி, என நடத்தும்படியாக நாம் விரும்புகிறோம். அதுவும் அதிகமாகவே விரும்புகிறோம். நமக்கு சாதகமான முறையிலே, நிச்சயமாக அவர்களுடைய முன்னேற்றத்துக்கு அது ஒரு வழியாக இருக்கவேண்டும் என விரும்புகிறோம். ஆனால் ஒருவேளை, அது தோல்வியடைந்துவிட்டால், அது எல்லாவற்றுக்கும் ஒரு வழியாக, சமூகநீதிக்குக்கூட ஒரு வழியாக இருக்கும்படி விரும்புகிறோம். இங்கு நாம் செய்யவேண்டியது என்னவென்றால், முதலாவது, ஒரு மனிதன், எதிரி கோரிக்கையாக வைக்கிற ஒன்றாக, சமூகநீதியை மதிக்கும்படிச் செய்யவேண்டும். அதற்குப் பின்பு, கிறிஸ்தவம் சமூகநீதியை உண்டாக்குகிறது என்பதால், கிறிஸ்தவத்தை அவன் மதிக்கும் நிலைக்கு, அவனைக் கொண்டுவரவேண்டும். ஏனென்றால், எதிரியானவனை வசதிக்கு ஏற்றபடி பயன்படுத்தமுடியாது. ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும்படியாக, விசுவாசத்தை எழுப்பிவிடவேண்டும் என்று மனிதர்களோ, அல்லது தேசங்களோ நினைக்கும்போது, அது பக்கத்தில் இருக்கிற மருந்து கடைக்குக்கூட, பரலோகத்துக்கான படிகளை, ஒரு குறுக்கு வழியாக பயன்படுத்திச் செல்லலாம் என்று நினைப்பதைப்போல இருக்கிறது. ஆனால், அதிர்ஷ்டவசமாக இந்த சிறிய வளைவான பாதையிலே, மனிதர்களிடம் இனிமையாகப் பேசி ஒத்துக்கொள்ளவைப்பது, மிகவும் எளிதான ஒன்றாகும். ஒரு கிறிஸ்தவ எழுத்தாளர் தன்னுடைய சொந்தக் கருத்தின் அடிப்படையில், கிறிஸ்தவத்தைப் பரிந்துரைக்கிற ஒரு பகுதியை, நான் இன்றுதான் வாசித்தேன். அதாவது, “இப்படிப்பட்ட விசுவாசம்தான், பழைய

கலாச்சாரங்கள் மறைந்துபோய், புது நாகரீகங்கள் பிறந்த பின்பும், நிலைத்துநிற்கும்" என்பதே. இங்கு இருக்கிற அந்த சிறு பிளவை நீ பார்த்தாயா? "இது உண்மையாக இருப்பதால் அல்ல, வேறு ஒரு காரணத்துக்காக, நீ இதை நம்பு." அதுதான் அந்த விளையாட்டே.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 24

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி விரும்புகிற அந்த இளம்பெண்ணுக்கு நியமிக்கப்பட்ட, சேரியனோடு நான் தொடர்பில் இருந்துகொண்டு வருகிறேன். மேலும், அவளுடைய கவசத்தில் இருக்கக்கூடிய அந்த விரிசலை, நான் பார்க்க ஆரம்பித்திருக்கிறேன். அது பெரிதாக கவனத்தை ஈர்க்காத, ஒரு மிகச்சிறிய தீமையாகும். அது ஒரு தெளிவான வரையறுக்கப்பட்ட நம்பிக்கையினாலே இணைக்கப்பட்டு, ஒரு அறிவான வட்டத்துக்குள் வளர்ந்திருக்கக்கூடிய எல்லா பெண்களோடும், அவள் பகிர்ந்துகொள்ளுகிற ஒரு தீமையாக இருக்கிறது. இந்த நம்பிக்கையை பகிர்ந்துகொள்ளாத வெளி நபர்கள் அனைவரும், நிஜமாகவே அதிக முட்டாள்களாகவும் அபத்தமானவர்களாகவும் இருப்பார்கள் என்ற, எந்தவிதமான சலனமும் இல்லாத அனுமானத்தை, இது கொண்டிருக்கிறது. வெளிநபர்களை வழக்கமாக சந்திக்கக்கூடிய ஆண்கள் இவ்வாறாக நினைப்பதில்லை; அவர்களுடைய நம்பிக்கை, அப்படி நம்பிக்கையுள்ளவர்களாக அவர்கள் இருக்கும் பட்சத்தில், அது வேறு ஒரு வித்தியாசமான வகையாக இருக்கிறது. ஆனால் அவளுடைய நம்பிக்கை, தன்னுடைய விசுவாசத்தினாலே ஏற்பட்டது என்று அவள் நினைத்துக் கொண்டாலும், உண்மையில், அது பெரிதான அளவிலே, வெறுமென அவளுடைய சுற்றுச்சூழலிலிருந்து எடுக்கப்பட்ட வர்ணமாகும். அவளுக்கு பத்து வயதில் தோன்றின, தன்னுடைய தகப்பன் வீட்டில் இருக்கிற, மீன் வெட்டும் கத்திகள்தான் ஒழுங்கானவை, சரியானவை, அல்லது உண்மையாகவே அவைகள்தான் அந்த வகையைச் சேர்ந்தவைகள் என்றும், அண்டைவீட்டார் பயன்படுத்துகிற

வகைகள் எல்லாம், உண்மையில் நல்ல மீன் கத்திகள் அல்ல என்றும், அவளுக்கு இருந்த அந்த நம்பிக்கையைக் காட்டிலும், இது பெரிதாக வித்தியாசப்படுவது அல்ல. ஆனால், இவை எல்லாவற்றிலும், அறியாமை மற்றும் இதைக்குறித்த கவனமின்மை, அவளுக்கு மிகவும் அதிகமாக இருப்பதும், அவளுடைய ஆவிக்குரிய பெருமையின் பங்கு, மிகவும் சிறிதாக இருப்பதும், அந்தப் பெண்ணின் மேல், நமக்கு மிகவும் சிறிதளவே நம்பிக்கையைத் தருகிறது. ஆனால், அது எவ்வாறாக உன்னுடைய சொந்த நோயாளியை பாதிக்கும்படி, பயன்படுத்தப்படக்கூடும் என்று நீ யோசித்துப் பார்த்தாயா?

எப்பொழுதுமே புதிதாக வருபவர்கள்தான், அதிகம் மிகைப்படுத்துவார்கள். சமுதாயத்தில் உயர்ந்த இடத்துக்கு வந்த ஒரு மனிதன், அதிக நாகரீகம் உடையவனாகவும், ஒரு இளம் மாணவன் ஆர்வக்கோளாறுள்ளவனாகவும் இருப்பான். இந்த புது வட்டத்தில், உன்னுடைய நோயாளி ஒரு புதியவன். இங்கு அவன், இதற்கு முன்பு கற்பனை செய்துகூட பார்க்காத, ஒரு தரமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை, ஒவ்வொரு நாளும் சந்திக்கிறான். மேலும், அவன் காதல் வசப்பட்டிருப்பதினாலே, இவை எல்லாவற்றையும், ஒரு வசியப்படுத்துகிற கண்ணாடியின் வழியாகப் பார்க்கிறான். அவன் இந்த தரத்தைப் பின்பற்றி வாழுவதற்கு, ஆர்வம் உடையவனாய் இருக்கிறான் (உண்மையில் அந்த எதிரி அவன் அப்படிச் செய்யவேண்டும் என்றே கட்டளையிடுகிறான்). அவன் தன்னுடைய காதலியிடம் காணப்படுகிற அந்தக் "குறைப்பாடையும்" பின்பற்றி, அதை மிகைப்படுத்தி, அவளுக்குள் மிகக்குறைவான அளவே இருந்த ஒன்று, அவனுக்குள் மிகவும் பலப்படுத்தப்பட்டதாகவும், எல்லா தீமைகளிலும் மிகவும் அழகான ஒன்றாக- அதாவது, "ஆவிக்குரிய பெருமையாக" மாறும்படியாக உன்னால் செய்யமுடியுமா?

சூழ்நிலைகள் எல்லாம் நமக்கு ஏற்றவாறு சாதகமானவைகளாகத் தெரிகின்றன. இப்பொழுது அவன் இருக்கிற அந்தப் புதிய (சமூக)வட்டம், கிறிஸ்தவத்தை தவிர மற்ற பல காரணங்களுக்காக, அவன் பெருமைமிக்கவனாக இருக்கும்படி, அவனைச் சோதிக்கிற ஒன்றாக இருக்கிறது. அது, அவன் இதுவரையில் எதிர்கொண்ட எந்த ஒரு சமூகத்தையும்விட, அதிக கல்வியறிவுள்ளதும், அதிக புத்தியுள்ளதும், மனதிற்கு அதிகம் உகந்ததாகவும் இருக்கிறது. மேலும், அதில் தனக்குரிய ஒரு இடத்தைக் குறித்தும், அவன் ஓரளவுக்கு, ஒரு மாயையான எண்ணத்தின் கீழ் இருக்கிறான். "காதல்" என்பதனுடைய தாக்கத்தின் கீழ், அந்தப் பெண்ணுக்குத், தான் தகுதியற்றவன் என்று அவன் இன்னும் சிந்தித்தாலும், அவன் மற்றவர்களுக்கு தகுதியற்றவன் என்ற சிந்தனை அவனுக்குள் விரைவாகக் குறைந்துகொண்டே வருகிறது. அவர்கள் இரக்ககுணம் உள்ளவர்களாக இருப்பதால், தனக்குள் எந்த அளவு அவன் மன்னிக்கப்பட்டு இருக்கிறான் என்பதைக் குறித்தும், அவன் இப்பொழுது குடும்பத்தில் ஒருவனாக ஆகிவிட்டதால், அவர்கள் அவனை எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்தும், அவனுக்கு எந்த ஒரு சிந்தனையும் இல்லை. தன்னுடைய உரையாடல்களும், தன்னுடைய கருத்துக்களும், அவர்கள் எல்லாராலும், வெறுமென தங்களுடைய சொந்த குரலின் எதிரொலிகளாக, எந்த அளவுக்கு அங்கீகரிக்கப்படுகின்றன என்றெல்லாம், அவன் கனவுகூட காணவில்லை. இந்த மனிதர்களைக் குறித்து, தான் இவ்வளவு மகிழ்ச்சியடைவதற்கு காரணம், அந்தப் பெண் அவனுக்காக, அவனைச் சுற்றியிருக்கிற எல்லாவற்றின்மேலும் பரப்பிவிடுகிற, அந்த மோகம் கலந்த மாயையான ஈர்ப்புதான் என்று அவன் மிகக் குறைவாகவே சந்தேகிக்கிறான். அவனுடைய நினைவு என்னவென்றால், அவர்களுடைய பேச்சும், அவர்களுடைய

வாழ்க்கை முறையும், தனக்குப் பிடித்திருப்பதற்கான காரணம், தன்னுடைய பக்திநிலைக்கும் அவர்களுடைய பக்திநிலைக்கும் நடுவேயுள்ள, ஒரு சில ஒற்றுமைதான் என்று. ஆனால் உண்மையில், அவர்கள் அவனுக்கு மிகவும் அப்பாற்பட்டு இருக்கிறார்கள், எந்த அளவுக்கு என்றால், அவன் காதலில் வசப்படாமல் இருந்திருந்தால், அவன் இப்பொழுது ஏற்றுக்கொள்ளுகிற பல விஷயங்கள், அவனுக்குக் குழப்பமாகவும் வெறுப்பாகவும் மட்டுமே தெரியும். ஒரு நாய்க்கு, அதனுடைய வேட்டையாடுகிற உணர்வும், தன்னுடைய எஜமான் மேலுள்ள அன்பும், வேட்டையாடப்போகிற ஒரு நாளை, அது அனுபவிக்கும்படியாக வைக்கிறது என்பதற்காக, அது துப்பாக்கிகளைக் குறித்து, நன்றாகப் புரிந்துகொண்டிருப்பதாகக் கற்பனை செய்வதைப்போலத்தான், இது இருக்கிறது.

இங்குதான் உன்னுடைய வாய்ப்பு இருக்கிறது. எதிரியானவன் இந்த சிற்றின்ப காதலின் மூலமாகவும், அவனுடைய சேவையில் மிகவும் முன்னேறின, அவனுக்கு அதிகமாக உடன்படுகிற சில மனிதர்கள் மூலமாகவும், இந்த இளம் காட்டுமிராண்டியை, அவன் ஒருபோதும் அடைந்திருக்க முடியாத உயரத்திற்கு உயர்த்திக்கொண்டிருக்கும்போது, நீ, அவன் தன்னுடைய சொந்த தளத்தை கண்டுபிடிப்பதாக உணரும்படிச் செய்யவேண்டும்- அதாவது, இந்த மனிதர்கள் எல்லாரும் தன்னைப் போன்றவர்கள் என்றும், அவர்களுக்கு மத்தியில் வருவது, அவனுடைய சொந்த வீட்டை அடைந்ததைப்போலவும் அவனுக்கு இருக்கவேண்டும். அவன் அவர்களிடமிருந்து விலகி, வேறு ஒரு சமுதாயத்துக்குள் போகும்போது, அது அவனுக்கு மிகவும் சலிப்பானதாக இருக்கும். இதற்குப் பாதி காரணம் என்னவென்றால், அவனுடைய பிடிக்குள் இருக்கிற எந்த ஒரு சமூகமும், உண்மையில் வெகு குறைவான பொழுதுபோக்காகவே இருக்கும் என்றாலும், கூடுதலான

காரணம், அவன் அந்த இளம் பெண்ணினுடைய மயக்கத்தை, இழந்து இருப்பதால்தான், அது சலிப்புள்ளதாகக் காணப்படுகிறது என்பதுதான். அவனுக்கு, தனக்கு மகிழ்ச்சியளிக்கிற வட்டத்துக்கும், தனக்கு சலிப்பைத் தருகிற வட்டத்துக்கும் நடுவிலே உள்ள வித்தியாசத்தை, கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும் நடுவான வித்தியாசம் என்று அவன் தவறாகப் புரிந்து கொள்ளும்படியாக, நீ கற்றுக் கொடுக்கவேண்டும். அவன் இவ்வாறாக உணரும்படி செய்யவேண்டும் (இதை அவன் வார்த்தைகளில் சொல்லாமல் இருப்பதே நல்லது), அதாவது, “கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாரும், எவ்வளவு வித்தியாசமானவர்களாக இருக்கிறோம்” என்பதாக. அவன், “கிறிஸ்தவர்களாகிய நாம்” என்று சொல்லுவது உண்மையாகவே, ஆனால் அவன் அறியாத வண்ணம், “என்னுடைய கும்பல்” என்ற அர்த்தத்தில் சொல்லவேண்டும். மேலும், “என்னுடைய கும்பல்” என்று அவன் சொல்லும்போது, அவன் “தங்களுடைய இரக்ககுணத்தினாலும், தங்களுடைய தாழ்மையினாலும், என்னை ஏற்றுக்கொண்ட மனிதர்கள்” என்ற அர்த்தத்தில் கூறாமல், “நான் என்னுடைய சரியான தகுதிக்கு ஏற்றபடி, பழகுகிற அந்த மக்கள்” என்ற உணர்விலேயே கூறவேண்டும்.

இங்கு வெற்றி என்பது, அவனைக் குழப்புவதைத்தான் சார்ந்திருக்கிறது. நீ அவனை மிகவும் வெளிப்படையாகவும், வாக்குமூலங்களின் மூலமாகவும், தான் கிறிஸ்தவனாக இருப்பதை, பெருமையாக எண்ணுவதாகச் சொல்லவைக்க முயர்ச்சித்தால், நீ பெரும்பாலும் தோற்றுவிடுவாய். எதிரியினுடைய எச்சரிக்கைகள், நன்கு அறியப்பட்டவைகளாய் இருக்கின்றன. ஆனால் மற்றொருபுறம், “கிறிஸ்தவர்களாகிய நாம்” என்ற சிந்தனையை, அவன் முற்றிலுமாக விட்டுவிடும்படி நீ செய்துவிட்டால், நீ வெறுமென அவனுக்குத் “தன்னுடைய கும்பல்” என்பதைக் குறித்து, மனநிறைவு

ஏற்படும்படியாக மட்டுமே செய்வாய். அப்படிச் செய்யும்போது, நீ அவனுக்குள் உண்மையான ஆவிக்குரிய பெருமையை உருவாக்காமல், வெறுமென சமூகமாயை என்கிற ஒன்றை ஏற்படுத்திவிடுவாய். அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த மாயை, மதிப்பற்ற, பகட்டான, பலவீனமான சிறிய பாவமாய் இருக்கிறது. நீ என்ன செய்யவேண்டும் என்றால், அவனுடைய எல்லா எண்ணங்களோடும், ஒரு தந்திரமான சுயபாராட்டைக் கலந்துவிட்டு, “நான் ஏன் என்னையே பாராட்டிக் கொண்டிருக்கிறேன்?” என்ற அந்த கேள்வியை, அவன் ஒருபோதும் எழுப்பாமல் பார்த்துக்கொள்வதுதான். ஒரு உள்வளையத்துக்குள் சார்ந்து வாழ்வதும், ஒரு இரகசியத்துக்குள்ளாக இருப்பதும், அவனுக்கு மிகவும் இனிமையான ஒரு யோசனையாக இருக்கிறது. அந்த நரம்பிலேயே நீ தொடர்ந்து வாசி. அந்தப் பெண்ணினுடைய தாக்கத்தைக் கொண்டு, அவள் புத்தியற்றவளாய் இருக்கக்கூடிய தருணங்களிலெல்லாம், கிறிஸ்தவர் அல்லாதவர்கள் சொல்லுகிற விஷயங்கள், அவனுக்கு வேடிக்கையாக இருப்பதைப்போல அவன் பேசும்படி, அவனுக்குக் கற்றுக்கொடு. அவன் சந்திக்கக்கூடிய, தற்கால கிறிஸ்தவ வட்டாரங்களுக்குள்ளே இருக்கிற சில கோட்பாடுகள், இங்கு பிரயோஜனம் உள்ளவைகளாக இருக்கக்கூடும். கோட்பாடுகள் என்று நான் எதை குறிப்பிடுகிறேன் என்றால், இந்த சமுதாயத்தினுடைய நம்பிக்கையை எல்லாம், ஒரு உள்ளான வளையத்துக்குள் இருக்கிற “அலுவலர்கள்” (clerks) மீதும் , சில அனுபவமிக்க, சிறுபான்மையான இறையியல் கோட்பாட்டை சேர்ந்தவர்கள் (theocrats) மீதும் வைக்கிற கோட்பாடுகளைத்தான். இந்த கோட்பாடுகள் எல்லாம் உண்மையானவைகளா, பொய்யானவைகளா என்பதெல்லாம், உனக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை. இங்கு செய்யவேண்டிய பெரிய காரியம் என்னவென்றால், கிறிஸ்தவத்தை ஒரு மர்மம் நிறைந்த

மார்க்கமாகவும், அதில் அவன் தன்னை இணைக்கப்பட்டவனாகவும் உணரவைப்பதுதான்.

இந்த ஐரோப்பிய போரைக் குறித்த, அனாவசியமான காரியங்களை எல்லாம் கூறி, உன்னுடைய கடிதங்களை நிரப்பாதபடி உன்னை வேண்டிக்கொள்கிறேன். அதனுடைய முடிவு, சந்தேகமின்றி முக்கியமானதுதான். ஆனால், அதெல்லாம் மேலிடத்துக்குரிய விஷயங்களாக இருக்கிறது. இங்கிலாந்தில் எத்தனை மனிதர்கள் வெடிகளினால் கொல்லப்பட்டார்கள் என்று அறிந்துகொள்வதில் எனக்கு சிறிதளவும் ஆர்வமில்லை. அவர்கள் எப்படிப்பட்ட மனநிலையில் இறந்து போனார்கள் என்பதை, நான் இங்கு அலுவலகத்திலிருந்து அறிந்து கொள்ளமுடியும். அவர்கள் என்றைக்காவது சாக வேண்டியவர்கள்தான் என்பது, எனக்கு ஏற்கனவே தெரியும். தயவுசெய்து, உன்னுடைய மனதை உன்னுடைய வேலையின் மீது மட்டும் வை.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 25

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளி, சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற, அந்த கும்பலைக் குறித்த உண்மையான பிரச்சனை என்னவென்றால், அவர்கள் சாதாரண கிறிஸ்தவர்கள் என்பதுதான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பங்களும், ஆர்வங்களும் இருப்பது உண்மைதான், ஆனால், அவர்களை இணைக்கிற, அந்த இணைப்பு, வெறும் கிறிஸ்தவம் மட்டுமே. அப்படி, மனிதர்கள் கிறிஸ்தவர்களாகவே மாறிவிடும் பட்சத்தில், நமக்கு வேண்டியது, அவர்களை, “கிறிஸ்தவமும் மற்றும்” என்ற ஒரு மனநிலையில் வைத்திருப்பதுதான். “கிறிஸ்தவமும் அந்தப் பிரச்சனையும்”, “கிறிஸ்தவமும் புது உளவியலும்”, “கிறிஸ்தவமும் அந்த புது சட்டமும்”, “கிறிஸ்தவமும் அற்புத சுகமளிப்பும்”, “கிறிஸ்தவமும் மனநோய் குறித்த ஆய்வுகளும்”, “கிறிஸ்தவமும் சைவமும்”, “கிறிஸ்தவமும் வார்த்தை சீரமைப்பும்” போன்றவைகளை நீ கேள்விப்பட்டிருக்கக்கூடும். அவர்களுக்கு கிறிஸ்தவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்றால், குறைந்தபட்சம், அவர்கள் வித்தியாசப்படுகிற கிறிஸ்தவர்களாக இருக்கட்டும். அவர்களுடைய விசுவாசத்துக்குப் பதிலாக, கிறிஸ்தவ வர்ணம் பூசப்பட்ட சில நாகரீகங்களை, நீ மாற்றி வை. ‘அதே பழைய விஷயத்தின்’ மேல், அவர்களுக்கு இருக்கிற பயத்தைக் கொண்டு, நன்றாக வேலைசெய்.

‘அதே பழைய விஷயத்தின்’ மேல் உள்ள திகில் என்பது, நாம் மனிதர்களுடைய இருதயத்திற்குள் உருவாக்கின, மிகவும் மதிப்புள்ள, கட்டுக்கடங்காத உணர்ச்சிகளில்

ஒன்றாகும்- அது மதத்திற்குரிய மதவெறிகளையும், ஆலோசனைகளில் உள்ள முட்டாள்தனங்களையும், திருமணங்களில் உள்ள துரோகங்களையும், நட்பில் இருக்கக்கூடிய சீரற்ற தன்மைகளையும் குறித்த, ஒரு முடிவில்லாத ஆதாரமாகும். மனிதர்கள், காலவரையறைக்குள் வாழ்ந்து, யதார்த்தத்தை அடுத்தடுத்தபடியாக அனுபவிக்கிறார்கள். அதில் அதிகபட்சமானதை அனுபவிக்கவேண்டும் என்றால், அவர்கள் நிறைய வித்தியாசமான விஷயங்களை, அனுபவித்தாகவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், அவர்கள் மாற்றத்தை அனுபவித்தாக வேண்டும். அவர்களுக்கு மாற்றம் தேவையாக இருப்பதால், எதிரியானவன் (இருதயத்தில் மகிழ்ச்சியை விரும்புகிறவனாக இருக்கிறபடியால்), சாப்பிடுவதை மகிழ்ச்சியான ஒன்றாக மாற்றியதைப் போலவே, மாற்றத்தையும், அவர்களுக்கு மகிழ்ச்சியான ஒன்றாக ஆக்கிவிட்டான். ஆனால் சாப்பிடுவதைப் போல, அவர்களுக்கு மாற்றம் என்பது, தன்னில்தானே முடிவாக இருப்பதை அவன் விரும்பாததால், அவர்களுக்கு மாற்றத்தின் மேலுள்ள விருப்பத்தோடு, நிரந்தரத்தின் மேலுள்ள ஒரு விருப்பத்தையும் தந்து, அதை சமநிலைப்படுத்தியிருக்கிறான். அவனே உருவாக்கின இந்த உலகத்திலே, இந்த இரு சுவைகளையும் சேர்த்து திருப்திபடுத்துவதற்கு, சீர்நிலைப் பிரமாணம் (rhythm) என்று நாம் அழைக்கிற, மாற்றம் மற்றும் நிரந்தரத்தின் இணைப்பை உருவாக்கியிருக்கிறான். அவன் அவர்களுக்குப் பருவ காலங்களை தருகிறான். ஒவ்வொரு பருவமும் வேறுபட்டதாக இருக்கிறது, ஆனாலும், ஒவ்வொரு ஆண்டும் அதே பருவம் மீண்டும் வருகிறது. இதனால், வசந்த காலம் ஒரு புதிதானதாக உணரப்பட்டாலும், அது எப்பொழுதுமே, காலகாலமாக இருந்துவந்த ஒரு கருத்தின் மறுநிகழ்வாகவே இருக்கிறது. தன்னுடைய சபையிலே அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய ஆண்டை, அவன் தருகிறான்.

அவர்கள் உபவாசத்திலிருந்து, விருந்துக்கு மாறுகிறார்கள், ஆனால், எப்போதும் இருப்பதைப் போலவே ,அது, அதே விருந்துதான்.

சாப்பிடுவதன் மகிழ்ச்சியை நாம் தனியாகப் பிரித்தெடுத்து, அதிலிருந்து பெருந்தீனித்தனத்தை உருவாக்குவது போலவே, இப்போதும், நாம் அந்த மாற்றத்திற்குரிய இயல்பான மகிழ்ச்சியை மட்டும் பொறுக்கி எடுத்து, அதை திரித்து, ஒரு அவசியமான மாற்றத்திற்கான ஒரு கோரிக்கையாக வைக்கப்போகிறோம். இந்தக் கோரிக்கை, முழுக்க முழுக்க நம்முடைய வேலைப்பாடாகும். இதில் நம்முடைய கடமையை நாம் புறக்கணித்துவிட்டால், மனிதர்கள் திருப்தியடைவது மட்டுமல்ல, இந்தக் கலவையான புதுமையினாலும், அவர்களுக்கு மிகவும் பழக்கப்பட்ட ஜனவரி மாதத்து பனித்துளிகளாலும், காலையில் எழும் சூரியனாலும், கிறிஸ்துமஸ்கால ப்ளம் கேக்குகளினாலும், அவர்கள் மெய்மறந்த இன்பத்தையே அடைந்துவிடுவார்கள். குழந்தைகளுக்கு நாம் இன்னும் நன்றாக கற்றுக்கொடுத்தால் ஒழிய, கோடைகாலத்துக்குப் பின் வழக்கமாக வருகிற இலையுதிர் காலத்தைப்போல, நொண்டி விளையாட்டுக்கு அடுத்து கோலி விளையாட்டு என்று, அந்தந்தக் காலகட்டங்களில் விளையாடுகிற விளையாட்டுகளிலேயே, அவர்கள் முற்றிலும் மகிழ்ச்சியாக இருந்துவிடுவார்கள். நம்முடைய ஓயாத உழைப்பினால் மட்டும்தான், முடிவில்லாத, சீரற்ற, மாற்றத்திற்கான கோரிக்கைகளைத் தக்கவைக்கமுடியும்.

இந்தக் கோரிக்கை, பல்வேறு வழிகளில் விலைமதிக்கமுடியாததாக இருக்கிறது. முதலாவது, அது விருப்பத்தை அதிகரிக்கிற அதே வேளையில், மகிழ்ச்சியை குறைத்துவிடுகிறது. வேறு எதைக்காட்டிலும், புதுமையின் மீதுள்ள மகிழ்ச்சி என்பது, தன்னுடைய

சொந்த இயல்பினாலேயே, குறைவான பலன்களை அளிக்கிற ஒரு விதிக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. மேலும், புதுமை தொடர்ச்சியாகத் தேடப்படும்போது, அது அதிக செலவுள்ளதாக இருக்கின்றது. எனவே, அதன் மேல் உள்ள விருப்பம், பேராசை அல்லது மகிழ்ச்சியின்மை, அல்லது இவை இரண்டையுமே கொடுக்கிறது. மீண்டுமாக, இந்த ஆசை எவ்வளவு அதிக ஆவேசமாக இருக்கிறதோ, அவ்வளவு சீக்கிரம், அது மகிழ்ச்சிக்கான எல்லா களங்கமற்ற ஆதாரங்களையும் எடுத்து முழுங்கிவிட்டு, எதிரியானவன் தடை செய்திருக்கிற மற்ற ஆதாரங்களுக்குச் கடந்துசெல்லுகிறது. இப்படியாகத்தான் 'அதே பழைய விஷயங்களின்' மேலுள்ள திகிலை வீக்கமடையச் செய்திருக்கிறோம். உதாரணத்துக்கு, சமீப காலங்களில், கலை என்பதை, அது இதுவரையில் இருந்து வந்ததைக்காட்டிலும், நமக்குக் குறைவான ஆபத்தாக இருக்கும்படி, மாற்றிவிட்டோம்-அதாவது "நுட்பமற்ற கலைஞர்கள்" மற்றும் "கைதேர்ந்த கலைஞர்கள்" இருவருமே, ஒன்றுபோல, புதிது புதிதாக எழும்புகிற, மிகைப்படுத்தப்பட்ட காமம், அறிவற்ற விஷயங்கள், கொடுமை மற்றும் பெருமை இவைகளுக்குள், ஒவ்வொரு நாளும் இழுக்கப்படும்படியாக வைத்துவிட்டோம். முடிவாக, நாம் நாகரீகங்களையும் நடைமுறைகளையும் உருவாக்கவேண்டும் என்றால், அதற்குப் புதுமைக்கான விருப்பம் என்பது இன்றியமையாததாக இருக்கவேண்டும் என்றாகிவிடுகிறது.

சிந்தனையில், நாகரீகங்களுக்கான பயன் என்னவென்றால், அவைகளின் மூலம், மனிதர்களை அவர்களுடைய உண்மையான ஆபத்துகளிலிருந்து, நாம் திசை திருப்புவதுதான். ஒவ்வொரு தலைமுறையினருக்கும், அவர்களுக்கு இருக்கக்கூடிய குறைந்தபட்ச ஆபத்து எதுவோ, அந்தத் தீமைக்கு எதிராக, அவர்கள் பகட்டாக குரல் எழுப்பும்படி நாம் அவர்களை வழிநடத்தி, நாம் எந்த

இடங்களில், அந்தத் தீமையை உருவாக்கவேண்டும் என்று முயற்சிக்கிறோமோ, அந்தத் தீமைக்கு மிகவும் அருகில் இருக்கக்கூடிய நற்குணத்தை, அந்தத் தலைமுறையினர் அங்கீகரிக்கும்படியாக வைக்கிறோம். இதிலுள்ள விளையாட்டு என்னவென்றால், எப்பொழுதெல்லாம் ஒரு வெள்ளம் வருகிறதோ, அப்பொழுது அவர்கள் எல்லாரும், தீயணைக்கக்கூடிய தீயணைப்புச் சாதனங்களை கையில் எடுத்துக்கொண்டு, அங்குமிங்கும் ஓடும்படியாகவும், ஒரு படகில், ஏற்கனவே மூழ்கிக்கொண்டிருக்கிற அந்தப் பகுதிக்கு, எல்லோரும் கூட்டமாக ஓடிச்செல்லும்படியாகவும் வைக்கிறோம்.இப்படியாக,அவர்கள்எல்லோரும்உண்மையில், உலகத்துக்குரியவர்களாகவும், குளிருமின்றி அனலுமின்றி வெதுப்பானவர்களாகவும் மாறிக்கொண்டிருக்கிற அதே நொடியில், அதீத ஆர்வத்தின் ஆபத்துகளை வெளிப்படுத்துவதை, நாம் நாகரீகமாக்குகிறோம். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, அவர்களை எல்லாம் பைரன்களைப் (Byron) போல (வழக்கமான ஒழுக்கத்தை அவமதிக்கிறவர்களாகவும், அதற்கு எதிராகக் குரல் எழுப்புகிறவர்களாகவும்), உணர்ச்சிக் குடிபோதையினால் நிரம்பினவர்களாகவும் ஆக்கும்போது, அப்பொழுது இருக்கிற அந்த பகட்டான குரல் எழுப்புதல்கள் எல்லாம், சாதாரண “புரிந்துகொள்ளுதலின்” ஆபத்துகளுக்கு எதிராகத், திசை திருப்பப்பட்டிருக்கும். உணர்ச்சிவசப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க, அதற்கு எதிராக கொடூரமான காலகட்டங்களும், மரியாதைக்குரிய தன்மைக்கு எதிராக, பயனற்ற, செயலற்ற தன்மைகளும், தூய்மைவாதத்துக்கு எதிராக, கேவலமானவைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், எப்பொழுதெல்லாம் மனிதர்கள் அடிமையாவதற்கோ அல்லது கொடூரனாவதற்கோ, உண்மையாக அவசரப்படும்பொழுது, நாம் பிரதானமாக வைக்கிற குறும்புத்தனமான மனநிலை, ‘தாராளமயம்’ தான்.

ஆனால், இவை எல்லாவற்றிலும் இருக்கக்கூடிய மிகச்சிறந்த வெற்றி எதுவென்றால், ‘அதே பழைய விஷயத்தை’ குறித்த திகிலை இன்னும் மேன்மைப்படுத்தி, அதை ஒரு தத்துவமாக மாற்றி, அதன் நிமித்தம், அறிவாற்றலில் உள்ள முட்டாள்தனத்தினாலே, விருப்பங்கள் கெட்டுப்போவதை மேன்மேலும் பலப்படுத்துவதுதான். இந்த இடத்தில்தான், பொதுவான பரிணாமம் அல்லது நவநாகரீக ஐரோப்பிய சிந்தனையினுடைய வரலாற்றுக் கதாபாத்திரங்கள் (இது ஓரளவு நம்முடைய வேலைதான்), நமக்குப் பிரயோஜனமாக உள்ளே வருகின்றன. எதிரியானவனுக்குப் பயனற்ற பேச்சுகள் மிகவும் பிடிக்கும். எனக்குத் தெரிந்த வரையில், ஒரு தொடர்ச்சியான நடவடிக்கைகள், முன்மொழியப்படும் பொழுது, மனிதர்கள், இது நீதியானதா? இது அறிவானதா? இது சாத்தியமானதா? என்று கேட்கவேண்டும் என, அவன் விரும்புகிறான். ஆனால் இப்பொழுது, நாம், மனிதர்கள் வேறுவிதமாக கேட்டுக்கொண்டே இருக்கும்படியாக வைத்துவிட்டால், அதாவது, இது இப்பொழுது இருக்கிற காலகட்டத்தின் பொதுவான போக்குக்கு ஏற்றதாய் இருக்கிறதா? இது முன்னேற்றத்திற்குரியதா அல்லது பிற்போக்குத்தனமானதா? இந்த வழியில்தான் வரலாறு சென்று கொண்டிருக்கிறதா?, என்ற கேள்விகளை கேட்கவைத்து விட்டால், அவர்கள் அந்தப் பொருத்தமான கேள்விகளை எல்லாம் புறக்கணித்து விடுவார்கள். மேலும், அவர்கள் கேட்கக்கூடிய கேள்விகள் எல்லாம், நிச்சயமாக பதில் இல்லாதவைகளாக இருக்கும். ஏனென்றால், அவர்களுக்கு எதிர்காலம் தெரியாது, மேலும் எவற்றைத் தெரிந்து கொள்ளும்படியாக, எதிர்காலம் இப்பொழுது தங்களுக்கு உதவும்படி வேண்டிக் கேட்டுகொள்ளுகிறார்களோ, அதிகபட்சம், அந்தத் தேர்வுகளைச் சார்ந்துதான், அவர்களுடைய எதிர்காலம் அமையப்போகிறது. இதன் விளைவாக, அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம் இந்த

வெறுமைக்குள் சுற்றிக் கொண்டிருக்கும்பொழுது, நாம் உள்ளே நுழைந்து, நாம் தீர்மானித்து வைத்திருந்த அந்தச் செயல்களுக்கு ஏற்றபடி, அவர்களை வளைப்பதற்கு, நமக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. மேலும், இதில் ஏற்கனவே மிகப்பெரிய வேலைகள் எல்லாம் சாதிக்கப்பட்டு இருக்கின்றன. முன்னொரு காலத்திலே, சில மாற்றங்கள் நன்மைக்காகவும், வேறு சில மாற்றங்கள் மோசத்துக்காகவும், மற்றவைகள் எந்த பாதிப்பும் உண்டாக்காதவைகள் என்றும், அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். இந்த அறிவை நாம் இப்பொழுது பெரும்பாலும் அகற்றிவிட்டோம். ‘மாற்றம் இல்லை’ என்ற விளக்கப் பெயரடைக்குப் (descriptive adjective) பதிலாக, நாம் ‘தேக்கம்’ என்ற உணர்ச்சிப் பெயரடையை (emotional adjective) வைத்துவிட்டோம். எதிர்காலம் என்பது அவர்களுக்கு விருப்பமான கதாநாயகர்கள் அடைகிற, ஒரு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடமாக அவர்கள் சிந்திக்கும்படி நாம் அவர்களுக்குப் பயிற்சியளித்து விட்டோம்- அதாவது, மணிக்கு அறுபது நிமிடங்கள், என்ற வேகத்தில் செல்லக்கூடிய யார் வேண்டுமானாலும், அவர்கள் என்ன வேலை செய்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அங்கு போய் அடைந்துவிடமுடியும் என்று அவர்கள் நினைக்காதபடி செய்துவிட்டோம்,

இப்படிக்கு உன் அன்பு மாமா,<br>
திருக்கன்

# கடிதம் 26

என் அன்பு எட்டி,

ஆமாம்; பத்து வருடங்களுக்குப் பிறகு, குடும்பத்துக்குள் வெறுப்பாக முளைக்கக்கூடிய விதைகளை விதைப்பதற்கான சரியான நேரம் காதலிக்கிற அந்த நேரம்தான். திருப்தி செய்யப்படாத ஆசைகள் என்கிற மாயை உண்டாக்குகிற விளைவுகளை எல்லாம், மனிதர்கள் அன்பின் விளைவுகளாக தவறாகப் புரிந்துகொள்ளும்படி வைக்கமுடியும். “காதல்” என்கிற அந்த வார்த்தையில் இருக்கக்கூடிய தெளிவின்மையை நீ புரிந்துகொள்: உண்மையில், அந்த மாயையினுடைய தாக்கத்தின் கீழ் அவர்கள் தள்ளுபடிசெய்த அல்லது தள்ளிவைத்த பிரச்சனைகளை எல்லாம், அவர்கள் காதலின் மூலம் தீர்த்துவிட்டதாக நினைத்துக்கொள்ளட்டும். இந்த நிலை நீடித்திருக்கும் பொழுது, அந்தப் பிரச்சினைகளை எல்லாம் இரகசியமாகத் தூண்டிவிட்டு, அவைகளை நாள்பட்ட பிரச்சினைகளாக வழங்குவதற்கான வாய்ப்பு, உனக்குக் கிடைக்கிறது.

“சுயநலமின்மை” தான், இங்குள்ள மாபெரும் பிரச்சனையாகும். மீண்டுமாக, எதிரியினுடைய நேர்மறையான இரக்கத்திற்குப் பதிலாக, எதிர்மறையான சுயநலமின்மையை வைக்கிற, நம்முடைய ‘மொழியியல் கரத்தின்’ பாராட்டத்தக்க வேலையை குறித்துக்கொள். நல்ல வேளையாக, துவக்கத்தில் இருந்தே, இதன் மூலம், தனக்குப் பிரயோஜனமாக இருக்கக்கூடிய நன்மைகளை, ஒரு மனிதன் மற்றவர்களுடைய சந்தோஷத்துக்காக விட்டுக்கொடுக்காமல், தன்னுடைய சுயநலமின்மையினால் அவைகளை விட்டுக்கொடுக்கும்படியாக, நாம் அவர்களுக்குக்

கற்றுக் கொடுக்கமுடியும். அது நமக்குச் சாதகமாக, நாம் பெற்றுக்கொண்ட ஒரு மிகப்பெரிய புள்ளியாகும். மற்றொரு பெரிய உதவி என்னவென்றால், எங்கே சம்பந்தப்பட்டவர்கள் ஆணும் பெண்ணுமாக இருக்கிறார்களோ, அங்கே அந்த இரு பாலினருக்கும் இடையே, நாம் கட்டி எழுப்பியுள்ள, சுயநலமின்மையைக் குறித்த வேறுபட்ட கோணங்கள் ஆகும். ஒரு பெண்ணை பொறுத்தவரையில், சுயநலமின்மை என்பது, பிரதானமாக மற்றவர்களுக்காகத், தான் கஷ்டப்படுவது என்பதுதான். ஆனால் ஒரு ஆணுக்கு சுயநலமின்மை என்பது, மற்றவர்களுக்கு எந்த கஷ்டமும் கொடுக்காமல் இருப்பது என்பதுதான். இதன் விளைவாக எதிரியினுடைய சேவைக்குள் மிகவும் அழமாகச் சென்றுவிட்ட ஒரு பெண், நம்முடைய பிதா முற்றிலுமாக ஆக்கிரமித்துவிட்ட மனிதர்களைத் தவிர, மற்ற எந்த மனிதனைக் காட்டிலும் ஒரு மிகப்பெரிய அளவுகோலில், தன்னை ஒரு பெரிய பிரச்சனையாக காண்பிப்பாள். மாறாக ஒரு மனிதன், எதிரியினுடைய பாளையத்தில் நீண்ட நாட்கள் இருந்த பிறகே, ஒவ்வொரு பெண்ணும் அன்றாடம் செய்வதைப் போல, மற்றவர்களை மகிழ்ச்சி அடையச்செய்யும்படியான தன்னிச்சையான வேலைகளைத் தன்னால் முடிந்தமட்டும் மேற்கொள்வான். இப்படியாக அந்தப் பெண் அன்றாட அலுவல்களைத், தான் செய்துகொண்டிருப்பதாக நினைக்கும்பொழுதும், அந்த மனிதன் மற்ற மனிதர்களுடைய உரிமைகளைத், தான் மதிப்பதாக நினைக்கிறபொழுதும், அந்த ஒவ்வொரு பாலினத்தவரும், எந்த ஒரு வெளிப்படையான காரணமும் இல்லாமல், அடுத்த பாலினத்தவரை முற்றிலும் சுயநலமானவர்களாகக் கருதக்கூடும், அப்படி கருதிக்கொண்டும் இருக்கிறார்கள்.

இந்த குழப்பங்களுக்கு மேலாக, நீ இன்னும் சிலவற்றை இப்பொழுது அறிமுகம் செய்யமுடியும். அந்த சிற்றின்ப மாயை, அவர்கள் இருவரும் உண்மையாகவே

அடுத்தவருடைய விருப்பங்களுக்கு விட்டுக்கொடுப்பதில் மகிழ்ச்சி அடையும்படியான, ஒரு பரஸ்பர அன்பினிமித்தம், மன்னிக்கும் தன்மையை உருவாக்குகிறது. எதிரியானவன் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு இரக்கத்தோடு இருப்பதை கோரிக்கையாக வைப்பதையும், ஒரு வேளை அவர்கள் அந்த அளவை அடைந்துவிட்டால், அது அதற்கு ஒத்த செயல்களை (பலனாக) விளைவிக்கும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். அவர்கள் தங்களுடைய முழு திருமண வாழ்க்கையிலும், அந்த அளவிலான, பரஸ்பர சுய-தியாக உணர்வை ஒரு விதியாக நிலைநிறுத்திக் கொள்ளும்படி, நீ வைக்கவேண்டும். அது, இப்பொழுது அந்த மாயையின் மூலமாக இயல்பாகவே வளர்கிறது என்றாலும், அந்த மாயை ஒழிந்துபோன உடனே, அதைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு, அவர்களுக்குப் போதுமான அளவு இரக்கருணம் இல்லாமல் போய்விடும். இந்தப் பொறியை (trap) அவர்கள் பார்க்கமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் இரண்டு விதமான குருட்டாட்டத்தின் கீழ் இருக்கிறார்கள். ஒன்று, அவர்கள் அந்தப் பாலியல் ஆர்வத்தை, இரக்கம் என்று நினைத்துக்கொள்வது, மற்றொன்று, இந்த உற்சாகம் எப்பொழுதும் நீடித்திருக்கும் என்று நினைப்பது.

ஒருவகையான அதிகாரப்பூர்வமான, சட்டப்பூர்வமான, அல்லது பெயரளவிலான சுயநலமின்மையை, ஒரு விதியாக, ஒருமுறை ஏற்படுத்திவிட்டால்- அதாவது, ஒழிந்துபோகிற அவர்களுடைய உணர்ச்சியின் ஆதாரங்களையும், இன்னும் வளர்ச்சியடையாத நிலையில் உள்ள அவர்களுடைய ஆவிக்குரிய ஆதாரங்களையும் வைத்துக் கொள்ளும்படியான, ஒரு விதியாக ஏற்படுத்திவிட்டால்- அதீத மகிழ்ச்சியளிக்கக்கூடிய விளைவுகள், பின் தொடரும்.

எந்த ஒரு கூட்டு நடவடிக்கையையும் விவாதிக்கும்போது, A என்ற நபர், B என்ற நபர் விரும்புகிற விஷயங்களுக்குச்

சாதகமாக வாதாடி, தன்னுடைய சொந்த விருப்பத்துக்கு எதிராக பேசுவார். அதேநேரம், B என்ற நபர் இதற்கு எதிர்மறையானதைச் செய்யவேண்டும் என்பது கட்டாயமாகிறது. இவர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விருப்பமும் என்ன, என்பதைக் கண்டறிவது, பல நேரங்களில் மிகவும் கடினமாகிவிடுகிறது; காரியம் கைகூடினால், அவர்கள் இருவருமே, தாங்கள் விரும்பாத ஒன்றை செய்துமுடிக்கிற அதே வேளையில், அவர்கள் ஒவ்வொருவரும் சுயநீதியின் பிரகாசத்தைப் பெற்றவர்களாகத் தங்களை நினைத்துக்கொண்டும், தாங்கள் காண்பித்த சுயநலமின்மைக்காக, தாங்கள் விசேஷித்தவர்களாக நடத்தப்படவேண்டும் என்ற ஒரு இரகசியத்தை உள்ளே வைத்துக்கொண்டும், அந்த அடுத்த நபர், தங்களுடைய தியாகத்தை மிக இலகுவாக ஏற்றுக்கொண்டதற்காக, அவர்களுக்கு எதிராக ஒரு மறைவான வெறுப்பையும் வைத்துக்கொள்வார்கள். தாராளத்தின் முரண்பாட்டு மாயை (Generous Conflict Illusion) என்ன என்பதை, நீ பின்னர் தெரிந்துகொள்ளலாம். இந்த விளையாட்டு, இரண்டு நபர்களுக்கும் அதிகமானவர்கள் இருக்கும்பொழுதுதான் சிறப்பாக விளையாடப்படுகிறது. உதாரணத்துக்கு, வளர்ந்த பிள்ளைகள் இருக்கின்ற ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். தோட்டத்தில் தேநீர் பருகுகிற, மிகவும் சிறு விஷயத்தைப் போல ஒன்று, முன்மொழியப்படுகிறது.

அப்போது, ஒரு உறுப்பினர், தான் தேநீர் போடுவதை விரும்புவதில்லை என்றாலும்கூட, “சுயநலமின்மையின்” காரணத்தினாலே, அப்படிச் செய்வதற்கு நிச்சயம் ஆயத்தமாக இருப்பதாக, மிகவும் தெளிவாக (மற்றும் சுருக்கமாக) சொல்லிக்கொள்ளுகிறார். உடனே மற்றவர்கள், தாங்களும் அப்படிச் செய்ய முன்வந்ததை, வாபஸ் பெற்றுக்கொள்கிறார்கள். இதுவும், வெளிப்படையாகவே தங்கள் “சுயநலமின்மையின்” காரணத்தால்தான். ஆனால்,

உண்மையில், முதலாவதாக பேசின நபர் தன்னுடைய அந்த அற்பமான தியாகத்தை, தங்கள் மீது பயன்படுத்தும்படி, தாங்கள் ஒரு விதமான, செயலற்ற உருவமாக இருக்க விரும்பாததால்தான், அப்படிச் செய்கிறார்கள். ஆனால், அவனும் தன்னுடைய அந்த இழிவானச் சுயநலமின்மையால், இதை விட்டுவிடுவதாகத் தெரியவில்லை. “மற்றவர்களுக்கு என்ன வேண்டுமோ” அதையே, தான் செய்யப்போவதாக அவன் வலியுறுத்துகிறான். ஆனால் அவர்களோ, “அவனுக்கு என்ன வேண்டுமோ”, அதையே செய்யும்படியாக வலியுறுத்துகிறார்கள். உணர்ச்சிகள் இங்கே தலைதூக்க ஆரம்பிக்கின்றன. வெகு சீக்கிரத்திலேயே, அவர்களில் ஒருவர், “சரி அப்படியானால் எனக்கு தேநீரே வேண்டாம்!” என்று கூறுகிறார். பின்னர் கசப்பும் வெறுப்பும் நிறைந்த ஒரு உண்மையான சண்டை, இரு பக்கங்களில் இருந்தும் தொடருகிறது. இது எப்படி வேலைசெய்கிறது என்று பார்த்துக் கொண்டாயா? இந்த இரு தரப்பினரும், தங்களுடைய உண்மையான விருப்பத்திற்காக வெளிப்படையாக வாதாடியிருந்தால், அவர்கள் எல்லோருமே புத்தி மற்றும் மரியாதையின் எல்லைகளுக்கு உள்ளாகவே, இருந்திருந்திருப்பர்; ஆனால் இங்கே, இந்தப் பிரச்சனை தலைகீழாகத் திரும்பி, ஒவ்வொரு தரப்பினரும் அடுத்தவருடைய பிரச்சினைக்காக வாதாடுகிறார்கள் என்பதினாலேயே, முறியடிக்கப்பட்ட சுயநீதிகளிலும் பிடிவாதங்களிலிருந்தும், உண்மையாக வெளிவருகிற எல்லா கசப்பும், கடந்த பத்து வருடங்களாக அவர்கள் தங்களுக்குள் சேர்த்துவைத்த வெறுப்பும், ஆகிய இவையெல்லாம், அவர்கள் சாதாரணமாக, அதிகாரப்பூர்வமாக, “சுயநலமின்மை” என்ற பேரில் செய்துகொண்டும், குறைந்தபட்சம் அதை சாக்காகச் சொல்லிகொண்டும் இருக்கும்போது, இவையெல்லாவற்றையும் மறைத்துவிடுகிறது. அந்த ஒவ்வொரு தரப்பினரும், உண்மையாகவே, தங்கள்

எதிராளியுடைய அந்தச் சுயநலமின்மைக்கும், அவன் தங்களை எதற்குள் தள்ள முயற்சிக்கிறானோ, அந்தப் பொய்யான நிலையையும் நன்றாகவே உணர்ந்து, அறிந்திருக்கிறார்கள்.ஆனால்,ஒவ்வொருவரும்இதில்தங்கள் மேல் எந்த குற்றமும் இல்லை என்பதாகவும், அவனுடைய அந்த முயற்சிக்கு தங்களை பயன்படுத்திவிடாதபடியும் பார்த்துக்கொள்கிறார்கள்; இதை இவர்கள், மனிதனுக்கே வரக்கூடிய அந்த இயல்பான நேர்மையின்மையை வைத்துதான் செய்கிறார்களே தவிர, வேறெதினாலும் அல்ல.

ஒரு விவேகமான மனிதன், ஒரு முறை இவ்வாறு கூறினான்- “எவ்வளவு கெட்ட உணர்ச்சிகள் உருவாகும்படியான சந்தர்ப்பங்களை, சுயநலமின்மை எழுப்புகிறது என்று மனிதர்கள் அறிந்திருந்தால், அது, பிரசங்க மேடையிலிருந்து, இத்தனை அதிகமாக பரிந்துரைக்கப்பட மாட்டாது” என்று. மேலும், "அவள் மற்றவர்களுக்காகவே வாழுகிற, அந்த வகையான ஒரு பெண் ஆவாள்- இதை நீ மற்றவர்களுடைய, அந்த வேட்டையாடப்பட்ட முகபாவத்திலிருந்து சொல்லிவிடலாம்" என்றும் கூறுவார்கள். இவை யாவையும், அவர்கள் காதலிக்கிற அந்த காலகட்டத்திலேயே தொடக்கிவிடலாம். உன் நோயாளிக்கு, நான் உனக்கு இப்போது விவரித்த, அந்த வகையான ஒரு ‘சுயநலமின்மையாக’ என்றாவது ஒரு நாள் மலரக்கூடிய, தொடக்கக்காலத்தில் இருந்த, பரந்துவிரிந்த, சுயநினைவோடு தான் கொண்டிருந்த, அந்த சுயநலமின்மையைக் காட்டிலும்,அவனுடைய ஆத்துமாவைப் பாதுகாப்பதில், அவனுடைய பங்காக இருக்கக்கூடிய, அந்த சிறிய, உண்மையான சுயநலம், பெரும்பாலும், தொலை நோக்குப்பார்வையில் உதவாது. ஓரளவுக்கு பரஸ்பர பொய்த்தன்மையையும், தான் எவ்வளவு சுயநலம் இல்லாமல் இருக்கிறான் என்பதை, அந்தப் பெண் கண்டுகொள்ளாமல் இருப்பதைப் பற்றின சில ஆச்சரியங்களையும், நாம் வெகு

சீக்கிரமே கள்ளத்தனமாக உள்ளே கொண்டுவந்துவிடலாம். இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் மனதில் வைத்து மகிழு. எல்லாவற்றுக்கும் மேலாக, அந்த இளம் முட்டாள்கள், இதை கவனித்துவிடாதபடி பார்த்துக்கொள். அவர்கள் அதை கவனித்துவிட்டால், தங்களுடைய “காதல்” போதவில்லை என்பதைக் கண்டுபிடிக்கும் பாதையில் போய்விடுவார்கள். பின்னர், இரக்கம், இன்னும் தேவைப்படுகிறது என்றும், அதைப் போதுமான அளவு தாங்கள் வழங்கவில்லை என்பதையும், அதனுடைய இடத்தை, வேறு எந்த விதமான வெளிப்புற விதியாலும் நிரப்பமுடியாது என்பதையும் அறிந்துகொள்ளுவர். அந்த இளம் பெண்ணின், பொருத்தமற்ற, உணர்வைக் குறைப்பதற்கு, சேரியன் ஏதாவது செய்தால் நன்றாய் இருக்கும்

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 27

என் அன்பு எட்டி,

இப்போதைக்கு, நீ மிகவும் குறைவான அளவே முன்னேறுவதாகத் தோன்றுகிறது. அவனுடைய அந்தக் "காதலை" பிரயோஜனப்படுத்தி, எதிரியிடமிருந்து அவனுடைய மனதைத் திசை திருப்பலாம் என்பது நிச்சயமாகவே வெளிப்படையானதுதான், ஆனால், அந்தத் திசை திருப்புதல், மற்றும் அவனுடைய மனம் அலைபாய்கிற அந்தக் காரியமே, அவனுடைய ஜெபத்துக்கான, மிகவும் முக்கியமான ஒரு தலைப்பாக மாறிவிட்டது என்று சொல்லும்போது, நீ அதை எவ்வளவு மோசமாக பயன்படுத்தி இருக்கிறாய் என்பது தெரியவருகிறது. இதன் அர்த்தம், நீ பெரிய அளவிலே தோல்வி அடைந்துவிட்டாய் என்பதுதான். இந்த எண்ணமோ, அல்லது வேறு எந்த கவனச்சிதறலோ, அவனுடைய மனதுக்கு வரும்பொழுது, அவன் அதை, வெறுமென தன்னுடைய மனதின் தீர்மானத்தினாலே தள்ளிவிடும்படியும், அப்படிச் செய்துவிட்டு, அவனுடைய வழக்கமான ஜெபங்களை, ஒன்றுமே நடக்காததுபோல அவன் தொடர்ந்து செய்யவும், நீ அவனை உற்சாகப்படுத்தவேண்டும். அந்த கவனச்சிதறல்களை, இப்போது தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையாக, அவன் ஒருமுறை ஏற்றுக்கொண்டுவிட்டு, அதை எதிரியின் முன்பாக சமர்ப்பித்து, அதை அவனுடைய ஜெபங்கள், மற்றும் முயற்சிகளுக்கான முக்கியமான தலைப்பாக்கிவிட்டான் என்றால், பிறகு நீ நன்மை செய்யவில்லை என்பதற்கும் அதிகமாக, தீமைதான் செய்துவிடுவாய். எதிரிக்கு மிகவும் அருகில் அவனை நகர்த்திச் செல்லும்படி, மொத்த விளைவையும் ஏற்படுத்தக்கூடிய எதுவாக இருந்தாலும், அது பாவமாக

இருந்தால்கூட, தொலைநோக்குப் பார்வையிலே அது நமக்கு எதிராகத்தான் அமைந்துவிடும்.

தொடர்ந்து வருகிற வரி, நம்பிக்கை அளிக்கக்கூடியதாய் இருக்கிறது. அவன் இப்பொழுது காதல் வசப்பட்டிருப்பதால், ஒரு உலகப் பிரகாரமான மகிழ்ச்சிக்குரிய ஒரு புது யோசனை, அவனுடைய மனதில் எழும்பியிருக்கிறது. ஆதலால், முழுக்கமுழுக்க விண்ணப்பங்கள் மட்டுமே நிறைந்திருந்த அவனுடைய ஜெபங்களில்- அதாவது, இந்தப் போரைக் குறித்தும் மற்றும் அதுபோன்ற பல விஷயங்களைக் குறித்ததுமான ஜெபங்களில், ஒரு புது அவசரம் தென்படுகிறது. அப்படி, ஜெபங்களைக் குறித்த, அறிவு சார்ந்த பிரச்சனைகளை எழுப்புவதற்கு, இதுதான் சரியான நேரம். பொய்யான பக்தி எப்பொழுதுமே ஊக்கப்படுத்தப்படவேண்டிய ஒன்றாகும். “துதியும் தேவனோடு உறவாடுவதும்தான், உண்மையான ஜெபம்” என்ற, பார்ப்பதற்கு பக்தியாகத் தெரிகிற அந்தத் தளத்தில், மனிதர்களை பெரும்பாலும் நாம் வசப்படுத்தி, எதிரியானவன் (அவனுடைய வழக்கமான சமமான, சராசரியான, ஆர்வமற்ற வழியிலே) அவர்களைத் தங்கள் அன்றாட உணவுக்காகவும், வியாதிபட்டவர்கள் சுகம் அடைவதற்காகவும் ஜெபிக்கவேண்டும் என்று நிச்சயமாகக் கூறியிருக்கும்போது, அவர்கள் அதற்கு நேரடியாகவே கீழ்படியாதபடி செய்ய வைக்கமுடியும். ஆவிக்குரிய அர்த்தத்திலே விளக்கப்படும்போது, அன்றாட உணவுக்கான ஜெபமும்கூட, வேறு எந்த அர்த்தத்தில் பார்க்கும்போதும் இருப்பதைப்போல, உண்மையாகவே, முற்றிலும் ஒரு விண்ணப்பம்தான் என்கிற அந்த உண்மையை, நீ அவனிடமிருந்து கண்டிப்பாக மறைத்துவிடவேண்டும்.

ஆனால், உன்னுடைய நோயாளி, கீழ்ப்படிதல் என்கிற அந்த பயங்கரமான பழக்கத்தை பிடித்துக் கொண்டபடியால், அவன் பெரும்பாலும், தன்னுடைய அவ்வகையான

“பண்படாத” ஜெபங்களை, நீ என்ன செய்தாலும் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பான். ஆனால், நீ அவனுக்கு, அடிக்கடி ஏற்படுகிற சந்தேகத்தினாலே, அந்தப் பழக்கம் மிகவும் அபத்தமானது என்றும், அதற்கு, எந்த குறிப்பிட்ட விளைவும் இருக்கமுடியாது என்றும், அவன் கவலைப்படும்படியாக செய்யமுடியும். “தலை விழுந்தால் எனக்கு வெற்றி, பூ விழுந்தால் உனக்கு தோல்வி” என்ற அந்த வாதத்தை பிரயோஜனப்படுத்துவதற்கு மறந்துவிடாதே. அப்படிச் செய்யும்போது, அவன் ஜெபிக்கிற அந்த விஷயம் நடைபெறாவிட்டால், பின்னர், அது விண்ணப்ப ஜெபங்கள், வேலைசெய்வதில்லை என்பதற்கான, ஒரு கூடுதல் ஆதாரமாகிவிடும்; ஒருவேளை நடந்துவிட்டால், அது தானாகவே நடக்கும்படியாக வழிவகுத்த, இயல்பான காரணங்களை அவன் பார்த்து, “எப்படி இருந்தாலும் இது நடந்திருக்கத்தான் போகிறது” என்று கூறமுடியும். இவ்வாறாக, பதில் கிடைத்த ஜெபங்களும்கூட, பதில் மறுக்கப்பட்ட ஜெபங்களைப் போலவே, ஜெபங்களுக்கு எந்தப் பயனும் இல்லை, என்பதற்கான ஒரு நல்ல ஆதாரமாக அமைந்துவிடும்.

நீ, ஒரு ஆவியாக இருப்பதால், அவன் இப்படி ஒரு குழப்பத்துக்குள் எப்படி விழுகிறான் என்பதைப் புரிந்துகொள்வது, உனக்குக் கடினமாக இருக்கும். ஆனால் ஒரு முடிவான யதார்த்தத்திற்காக, அவன் நேரம் எடுத்துக்கொள்கிறான் என்பதை நீ நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவன், எதிரியும் தன்னைப்போலவே, சில விஷயங்களை தற்பொழுது இருப்பவைகளாகவும், மற்ற சில விஷயங்களை கடந்தகாலத்தில் இருந்ததாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டும், இன்னும் சிலவற்றை, எதிர்காலத்தில் வருவதாக எதிர்பார்ப்பதாகவும் எண்ணிக்கொள்ளுகிறான், அல்லது ஒருவேளை, தான் பார்க்கிற அந்த வழியிலே எதிரியானவன் பார்ப்பதில்லை என்று அவன் நினைத்தாலும்கூட, தன்னுடைய

உள்ளான இருதயத்தில், அதை, எதிரியின் உணர்வுமுறை-யில் உள்ள ஒரு தனித்தன்மையாகவே எண்ணுகிறான். எதிரியானவன் சில விஷயங்களை, அவைகள் இருக்கிற வண்ணமாகவே பார்க்கிறான் என்று, அவன் உண்மையில் எண்ணுவதில்லை (ஒருவேளை அவன் வாயினால் அப்படி சொன்னாலும் கூட இருதயத்தில் அப்படி நினைப்பதில்லை). நீ அவனிடம், மனிதர்கள் இன்று செய்கிற ஜெபங்களெ-ல்லாம், எண்ணிலடங்காத ஒருங்கிணைப்புகளில் ஒன்று என்றும், அதைக் கொண்டுதான் எதிரியானவன், நாளை-யதினத்திற்கான வானிலையை ஒழுங்குபண்ணுகிறான் என்றும், நீ விளக்க முயற்சித்தால், அதற்கு அவன், எதிரிக்கு ஏற்கனவே மனிதர்கள் அந்த ஜெபங்களைச் செய்யப் போகிறார்கள் என்பது தெரியும் என்று பதில் கூறுவான். மேலும், இது இப்படியானால், அவர்கள் தற்செயலாக இந்த ஜெபங்களை செய்யவில்லை என்றும், அவர்கள் ஏற்கனவே அப்படி செய்யும்படியாக முன்குறிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும் கூறுவான். மேலும், இவ்வாறாகவும் அவன் சொல்ல-க்கூடும்- அதாவது, ஒரு குறிப்பிட்ட நாளுக்கான வானி-லையினுடைய மூலகாரணங்களின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து பார்க்கும்பொழுது, அது பொருள் சிருஷ்டி-க்கப்பட்ட அந்த துவக்கத்திற்கே சென்றுவிடும்- இவ்வாறாக இந்த முழு விஷயமும், மனிதர்கள்சார்ந்த அந்தப் பங்கிலும் சரி, பொருள்சார்ந்த அந்தப் பகுதியும் சரி, இவையெல்லாமே, ஆதி துவக்கத்திலிருந்து ஏற்படுத்தப்பட்டது என்றும் அவன் சேர்த்துச் சொல்லுவான். அவன் என்ன சொல்லியிரு-க்க வேண்டும் என்பது நிச்சயமாகவே, நமக்கு நன்றாகத் தெரியும்; என்னவென்றால், அந்த குறிப்பிட்ட ஜெபங்க-ளுக்கு ஏற்றவாறு, அந்த குறிப்பிட்ட வானிலை மாறுவது என்பது, முழு ஆவிக்குரிய பிரபஞ்சத்தையும், முழு பொரு-ள்சார்ந்த பிரபஞ்சத்துக்கு ஏற்றவாறு தழுவுகிற, அந்த முழு பிரச்சனையை குறித்த, அவனுடைய உலகப்பிரகாரமான

உணர்வுமுறையில் உள்ள இரண்டு குறிப்பிட்ட இடங்களில், அது சாதாரணமாக எப்படித் தோன்றுகிறது என்கிற, அந்த பிரச்சனைதான்; அதாவது, சிருஷ்டிப்பு முற்றிலும் முழுவதுமாக, இடம் மற்றும் நேரத்தின், ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதியிலும் வேலை செய்கிறது என்பது ஒன்று, அடுத்து, அவர்களுடைய இப்படிப்பட்ட சுயநினைவு, இந்த முழு சுயசீரான படைப்புச் செயலையும், தொடர்ச்சியான நிகழ்வுகளாகப் பார்க்கும்படி அவர்களை வற்புறுத்துகிறது என்பது மற்றொன்று. இந்தப் படைப்புச் செயல், ஏன் அவர்களுடைய சொந்த தீர்மானத்துக்கு இடம் கொடுக்கிறது என்பதுதான், எல்லா பிரச்சினையிலும் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. இதுதான், எதிரியினுடைய முட்டாள்தனமான “அன்பை” குறித்த இரகசியமாகும். அது எப்படி இவ்வாறு செயல்படுகிறது என்பது பிரச்சனையே இல்லை; ஏனென்றால், எதிரியானவன் மனிதர்கள் தங்களுடைய சுதந்திரமான பங்களிப்புகளை, எதிர்காலத்தில் செய்வதை அவன் முன்னறிந்து பார்ப்பதில்லை, ஆனால், அவர்கள் இப்படிச் செய்வதை, தன்னுடைய எல்லையில்லாத “தற்காலம்” என்கிற நிலையில் பார்க்கிறான். மேலும் எல்லோருக்கும் தெரிந்தவண்ணம், ஒரு மனிதன் ஏதோ ஒன்று செய்வதைக் கவனிப்பது என்பது, அவனை அப்படிச் செய்யவைப்பதாக இருக்கமுடியாது.

சில ஆர்வக்கோளாறுள்ள மனித எழுத்தாளர்கள், குறிப்பாக போத்தியஸ் (Boethius), இந்த இரகசியத்தை வெளிப்படுத்திவிட்டார்கள் என்று கூறமுடியும். ஆனால், நாம் உருவாக்க நினைத்து, கடைசியில் வெற்றிபெற்ற, முழு மேற்கத்திய ஐரோப்பாவிலுமுள்ள அறிவுசார்ந்த வானிலையை பார்க்கும்போது, இதைக் குறித்து நீ கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. கற்றுத் தேர்ந்தவர்கள்தான், பழைய புத்தகங்களை வாசிப்பார்கள். ஆனால், எல்லா மனிதர்களைக் காட்டிலும், கற்றுத் தெர்ந்தவர்கள்தான், அப்படி செய்வதின் மூலம் மிகக்

குறைவான ஞானத்தை பெற்றுக்கொள்ளும்படியாக, நாம் அவர்களை மாற்றிவிட்டோம். இதை நாம் “வரலாற்றுக் கண்ணோட்டம்” (The Historical Point of View) என்பதை புகுத்தியதன் மூலம் சாதித்திருக்கிறோம். “வரலாற்றுக் கண்ணோட்டம்” என்றால் என்னவென்று, சுருக்கமாக இவ்வாறு சொல்லலாம், ஒரு கற்றறிந்த மனிதனிடம், ஒரு பழைய காலத்து எழுத்தாளர் எழுதின, ஒரு வாக்கியம் வழங்கப்படும்பொழுது, அவன் ஒருபோதும், இந்த வாக்கியம் உண்மைதானா என்ற கேள்வியைக் கேட்பதே இல்லை. அவன் கேட்பதெல்லாம், இந்தப் பழங்காலத்து எழுத்தாளர், இவ்வண்ணமாக எழுதுவதற்கான தாக்கம் யாரிடமிருந்து உண்டானது? அவர் கூறின இந்த வாக்கியம், அவருடைய மற்ற புத்தகங்களில் அவர் கூறினதோடு, எந்த அளவுக்கு ஒத்துப்போகிறது? அந்த எழுத்தாளருடைய வளர்ச்சியின் எந்த பகுதியை, அது வெளிப்படுத்துகிறது? அல்லது பொதுவான சிந்தனையின் வரலாற்றில், அது எதை வெளிப்படுத்தினது? பின்னாக வந்த எழுத்தாளர்களுக்கு அது எந்த வகையில் தாக்கத்தை உண்டுபண்ணினது? (குறிப்பாக, அந்த கற்றறிந்த மனிதனுடைய சக ஊழியர்களால்) அது எவ்வளவு அதிகமாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது? மேலும், கடந்த பத்து வருடங்களாக, அதை குறித்த விமர்சனங்களின் பொதுவான போக்கு, எவ்வாறு இருந்தது? என்றும், அந்தக் கேள்விக்கான தற்போதைய நிலை என்ன? என்பதையும், அவன் கேட்கிறான். அந்தப் பழங்காலத்து எழுத்தாளர், அறிவின் ஆதாரமாக இருப்பதற்கு சாத்தியம் உள்ளவர் என்று கருதுவதையும்- அவர் என்ன சொல்லி இருக்கிறாரோ, அந்த விஷயங்கள், நம்முடைய சிந்தனையையும், நம்முடைய நடத்தைகளையும் மாற்றுவதற்கான, சாத்தியங்கள் உள்ளவைகள் என்பதை எதிர்பார்ப்பதும்- ஆகியவையெல்லாம், சொல்லமுடியாத அளவுக்கு முட்டாள்தனமானதாக புறக்கணிக்கப்படும். இந்த முழு மனித இனத்தையும், எல்லா நேரத்திலும்

வஞ்சிப்பது என்பது, நம்மால் செய்யமுடியாத ஒன்று என்பதால், ஒவ்வொரு தலைமுறையினரையும், மற்ற எல்லா தலைமுறையினரிடமிருந்தும் வெட்டிவிடுவதுதான், மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. ஏனென்றால், கற்றறிதல், காலங்களுக்கு இடையேயுள்ள, ஒரு இலவசமான வர்த்தகமாக இருக்கும் என்றால், அங்கே ஒரு குறிப்பிட்ட தலைமுறையுடைய தவறுகள், மற்றொரு காலகட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட தலைமுறையுடைய உண்மைகளினாலே, சரி செய்யப்படக்கூடிய ஆபத்து, எப்பொழுதும் இருக்கிறது. ஆனால், நம்முடைய பிதாவுக்கும், இந்த வரலாற்று கண்ணோட்டத்துக்கும், நாம் நன்றி சொல்லவேண்டும், ஏனென்றால், இதன்மூலமாக, “வரலாறெல்லாம் அனாவசியமானது” என்று நினைக்கிற ஒரு அறியாமை நிறைந்த மெக்கானிக்கைப்போல, மாபெரும் அறிஞர்களும்கூட, சரித்திரத்தை குறித்து மிகவும் குறைவாகவே ஊட்டமளிக்கப்பட்டு இருக்கின்றனர்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 28

என் அன்பு எட்டி,

போரைப் பற்றின வீணான காரியங்களைக் கொண்டு, உன்னுடைய கடிதங்களை நிரப்பவேண்டாம் என்று நான் உனக்குக் கூறினபோது, நான் எந்த அர்த்தத்தில் சொன்னேன் என்றால், மனிதர்களுடைய அழிவைக் குறித்த, உன்னுடைய சிறுபிள்ளைத்தனமான உணர்ச்சிக் கொந்தளிப்புகளையும், இந்த நகரங்களின் அழிவுகளையும் எனக்கு எழுதவேண்டாம் என்றுதான். ஆனால், இந்தப் போர், உன்னுடைய நோயாளியினுடைய ஆவிக்குரிய மனநிலையை, எந்த அளவுக்கு பாதிக்கிறது என்பதைக் குறித்து, இயல்பாகவே, எனக்கு முழு அறிக்கைகளும் வேண்டியதாயிருக்கிறது. இந்த அம்சத்திலே, நீ குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு, மழுங்கிய நிலையில் இருக்கிறாய். அதனால்தான், இந்த உயிரினம் வாழுகிற அந்தப் பட்டணத்தின் மேல், கனமான விமானத் தாக்குதல் நடைபெறுவதற்கான காரணங்கள் இருக்கின்றன என்பதை, மிகுந்த சந்தோஷத்துடன் கூறுகிறாய். இது உன்னைப்பற்றி, நான் ஏற்கனவே முறையிட்டிருக்கிற சில காரியங்களுக்கான, ஒரு வேதனையான எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதாவது, மனிதர்களுடைய பாடுகளில் நீ மகிழ்ச்சியடைகிற அந்தத் தருணத்திலே, முக்கியமான விஷயத்தை நீ மிக விரைவாகவே மறந்துவிடுகிறாய் என்பதுதான். வெடிகுண்டுகள், மனிதர்களைக் கொல்லும் என்பது உனக்குத் தெரியாதா? குறிப்பிட்ட இந்தத் தருணத்தில், இந்த நோயாளியினுடைய சாவுதான், நாம் மிகவும் முக்கியமாகத் தவிர்க்கவேண்டியது என்பதை, நீ உணர்ந்துகொள்ளவில்லையா? நீ, எந்த உலகப்பிரகாரமான நண்பர்களோடு அவனைச் சேர்த்து,

சிக்கவைக்க வேண்டும் என்று நினைத்தாயோ, அவர்களிடமிருந்து அவன் தப்பித்துவிட்டான், அவன் மிகவும் கிறிஸ்தவளாக இருக்கக்கூடிய ஒரு பெண்ணோடு "காதலில் விழுந்து", தற்போதைக்கு அவனுடைய கற்பின் மேலான, உன்னுடைய எல்லா தாக்குதல்களுக்கும் எதிராகத், தற்காப்போடு இருக்கிறான், மேலும், அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் கெடுக்கும்படியாக, நாம் இதுவரையில் மேற்கொண்ட, வெவ்வேறு விதமான முயற்சிகளும் தோல்வியடைந்துவிட்டன. இப்போது இருக்கிற தருணத்திலே, இந்தப் போரின் முழுத் தாக்கமும் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த வேளையில், அவனுடைய உலகம் சார்ந்த நம்பிக்கைகளெல்லாம், அவனுடைய மனதில், ஒரு குறிப்பிட்ட அளவு கீழ்நிலையில் இருக்கும்பொழுது, அவன் (நாட்டைப்) பாதுகாக்கும் வேலையில் முழுவதும் ஈடுபட்டு, அந்தப் பெண்ணினுடைய நினைவுகளினாலே நிரப்பப்பட்டு, தான் இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாத வகையிலே, பிறருக்குச் சேவை செய்யும்படியான கட்டாயத்துக்குள்ளானாலும், தான் நினைத்ததற்கும் அதிகமாக, அதை விரும்புகிற இந்த சூழ்நிலையிலே, மனிதர்கள் சொல்லுகிற பிரகாரம் "முற்றிலும் மற்றவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த" இந்த நேரத்திலே, ஒவ்வொரு நாளும், தெளிவான மனநிலையோடு, எதிரியின் மேல், அதிகமதிகமாக சார்ந்துகொண்டிருக்கையிலே, அவன் இந்த இரவில் கொல்லப்பட்டால், அவனை நிச்சயமாக நாம் இழந்துவிடுவோம். இதை குறித்து எழுதுவதற்குக்கூட நான் வெட்கமடைகிறேன். ஏனென்றால், இது மிகவும் வெளிப்படையாகத் தெரியக்கூடிய ஒரு விஷயம் ஆகும். இப்போதெல்லாம், எனக்கு இருக்கக்கூடிய சந்தேகம் என்னவென்றால், உங்களைப் போன்ற குட்டி பிசாசுகள் எல்லாம், உங்களுக்குரிய சோதனை வேலைகள் கொடுக்கப்பட்டு, தேவைக்கும் அதிகமான நேரம், நீங்கள்

வெளியில் இருக்கவேண்டிய அவசியம் வருகிறதோ என்றும்-நீங்கள் வேலைசெய்து கொண்டிருக்கிற அந்த மனிதர்களுக்கு மத்தியிலே நீங்கள் இருப்பதால், அவர்களுடைய உணர்வுகளினாலும், அவர்களுடைய மதிப்புகளினாலும், நீங்கள் தொற்றப்பட்டு, ஒருவித ஆபத்திலே இருக்கிறீர்களோ என்பதும்தான். நிச்சயமாக, அவர்கள், சாவை ஒரு மேலான தீமையாகவும், வாழ்வை, ஒரு மிகப்பெரிய நன்மையாகவும் கருதுவது உண்டு. ஆனால், அது ஏனென்றால், நாம் அவ்வாறாக அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறோம். நம்முடைய சொந்த பிரச்சாரத்தினாலேயே, நாம் தொற்றப்படுவதற்கு, இடமளிக்கக்கூடாது. நான் சொல்லுவது, உனக்கு விசித்திரமாக இருக்கக்கூடும் என்றாலும், இப்போதைக்கு உன்னுடைய முக்கியமான நோக்கம் எதுவென்றால், உன் நோயாளியின் காதலியும், அவனுடைய தாயும், எதற்காக ஜெபிக்கிறார்களோ அதே நோக்கம்தான்-அதாவது, அவனுடைய சரீரப் பிரகாரமான பாதுகாப்பு. ஆம், இப்பொழுது நிலைமை அப்படித்தான் இருக்கிறது. நீ அவனை, உன் கண்ணின் மணியைப்போல பாதுகாக்கவேண்டும். அவன் இப்பொழுது இறந்துபோய்விட்டால், நீ அவனை இழந்துவிடுவாய். ஒருவேளை, அவன் இந்தப் போரில், தாக்குப்பிடித்து வாழ்ந்துவிட்டால், நமக்கு எப்போதும் ஒரு நம்பிக்கை இருக்கிறது. எதிரியானவன், சோதனைகளின் அந்த முதல் மிகப்பெரிய அலைகளில் இருந்தே, அவனை உன்னிடம் இருந்து பாதுகாத்துக் கொண்டிருக்கின்றான். ஆனால், அவனை உயிரோடுமட்டும் வைத்துவிட்டால் உனக்கு நேரமும் காலமுமே ஒரு கூட்டணியாக இருக்கக்கூடும். அந்த நீண்ட, மங்கிய, எந்த மாற்றமும் இல்லாத, நடுத்தர வயது செழிப்பான வாழ்க்கையோ, அல்லது நடுத்தர வயது துன்பமான வாழ்க்கையோ, நாம் பிரச்சாரம் செய்வதற்கான மிகச்சிறந்த வானிலை ஆகும். நீ கவனித்திருந்தால், இந்த உயிரினங்களுக்கு எல்லாம், விடாமுயற்சியோடு

தாக்குப்பிடித்து வாழ்வது, மிகவும் கடினமான ஒரு விஷயமாக இருக்கிறது. அன்றாடத் துன்பங்களும், தங்கள் இளமைக்கால காதல்கள், மற்றும் இளமைக்கால நம்பிக்கைகளின் படிப்படியான அழிவும், திரும்பத் திரும்ப நாம் அவர்களைத் தோற்கடிக்கும்படியாக கொடுத்த, அந்த நாள்பட்ட சோதனைகளை, ஒருபோதும் மேற்கொள்ள முடியவில்லை என்ற, (வலியாக உணரப்படாத) அந்த அமைதியான விரக்தியையும், அவர்களுடைய வாழ்க்கையில் நாம் உருவாக்குகிற அந்த மந்தமான தன்மையையும், இவைகளுக்கு பதில்கொடுக்கும்படியாக, உச்சரிக்க முடியாத வெறுப்புகளை நாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதும்-ஆகிய இவையெல்லாம், ஒரு ஆத்துமாவை, தேய்மானத்தின் மூலமாக, தேய்ந்துபோகச் செய்வதற்கான போற்றத்தக்க வாய்ப்புகள் ஆகும். ஒருவேளை, மற்றொரு புறம் அந்த நடுத்தர வருஷங்கள் எல்லாம் செழிப்பானதாக இருக்கும் என்றால், நம்முடைய நிலை இன்னும் பலமானதாகிவிடும். செழிப்பு, ஒரு மனிதனை இந்த உலகத்தோடு பின்னிப் பிணைத்துவிடுகிறது. அவன் தன்னுடைய இடத்தை இந்த உலகத்திற்குள் கண்டுபிடித்துவிட்டதாக உணருகிறான், ஆனால் உண்மையில், உலகம்தான் அவனுக்குள், தன்னுடைய இடத்தைக் கண்டுபிடித்துவிடுகிறது. கூடிக்கொண்டே வருகிற அவனுடைய புகழ், விரிவடைந்து வருகிற அவனுடைய அறிமுகமானவர்களின் வட்டம், தான் முக்கியமானவன் என்கிற அவனுடைய உணர்வு, தான் ஈடுபடுகிற, மற்றும் ஏற்றுக்கொள்ளுகிற அந்த வேலையின், அதிகரிக்கிற பளு, இவையெல்லாம், அவனுக்குள், தான் இந்த உலகத்தில், உண்மையாகவே தனக்கான இடத்திலே வந்து சேர்ந்துவிட்ட, ஒரு உணர்வைக் கட்டி எழுப்புகின்றன. இதுதான் நமக்கும் வேண்டும். நடுத்தர வயது மனிதர்களையும் வயதானவர்களையும் காட்டிலும், வாலிபர்கள்தான், பொதுவாகவே சாகக்கூடாது என்ற எண்ணம், மிகக்

குறைவாக உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள் என்பதை நீ கவனிக்கக்கூடும்.

உண்மை என்னவென்றால், எதிரி, இந்தச் சாதாரண மிருகங்களை, தன்னுடைய சொந்த, நித்திய உலகத்தின் வாழ்வுக்கென்று, ஒரு விந்தையான முறையிலே விதித்திருப்பதால், அவர்கள் வேறு எந்த இடத்திலும், ஒரு நிரந்தரமான வீட்டின் உணர்வைப் பெற்றுக்கொள்ளும் ஆபத்திலிருந்து, மிகத் திறம்பட அவர்களைப் பாதுகாத்திருக்கிறான். அதனால்தான், நம்முடைய நோயாளிகளின் நீண்ட வாழ்க்கையை, நாம் கண்டிப்பாக எப்பொழுதும் விரும்பவேண்டும். பரலோகத்திலிருந்து அவர்களுடைய ஆத்துமாக்களைப் பிரித்தெடுத்து, உலகத்தோடு ஒரு நிலையான பிடிப்பை அவர்களுக்குள் கட்டியெழுப்புகிற, அந்த கடினமான வேலையைச் செய்வதற்கு, எழுபது வருடங்கள் என்பது, மிகவும் குறைவான நேரமே ஆகும். அவர்கள் இளமையாக இருக்கும்போது, ஒரு வட்டத்துக்குள் இருந்து அதிவேகமாக வெளியேறுவதை, நாம் எப்பொழுதும் காணமுடியும். அவர்களைத் தெளிவான பக்தியிலிருந்து விலக்கி, அறியாமையோடு இருக்கும் வண்ணமாக வைப்பதற்கு நாம் திட்டமிட்டாலும்கூட, கற்பனை, இசை, கவிதை, ஆகிய தீர்மானிக்கமுடியாத காற்றுகளினாலும், ஒரு பெண்ணினுடைய வெறும் முகம், ஒரு பறவையின் பாடல் அல்லது அடிவானத்தின் ஒரு காட்சி, இவையெல்லாம், எப்பொழுதும் நம்முடைய முழு கட்டமைப்பையும், அடித்துச்சென்றுவிடுகின்றன. அவர்கள், இந்த உலகத்தின் முன்னேற்றத்துக்கோ, அல்லது விவேகமான தொடர்புகளுக்கோ, அல்லது “முதலில் பாதுகாப்பு” என்ற கொள்கைக்கோ, தாமாகவே முயற்சிசெய்து, தங்களை நிலைப்படுத்திக் கொள்ளமாட்டார்கள். பரலோகத்துக்கான அவர்களுடைய பசி, மிகவும் ஆழமாக பதிந்திருப்பதால், இந்த நிலையிலே, அவர்களை இந்த உலகத்தோடு

இணைப்பதற்கான நம்முடைய சிறந்த செயல்முறை எதுவென்றால், அரசியல், அல்லது யூஜெனிக்ஸ் (Eugenics- இனப்பெருக்கத்தின் மூலம் சில பண்புகளை பெருக்கக்கூடிய வகைமுறைகள்), அல்லது விஞ்ஞானம், அல்லது உளவியல், அல்லது வேற எதுவாக இருப்பினும், அதைக்கொண்டு, எதிர்காலத்தில், ஒரு நாளிலே, பூமியை மோட்சமாக மாற்றமுடியும் என்று அவர்களை நம்பவைப்பதுதான். உண்மையான உலகப்பற்று என்பது, காலத்தின் ஒரு வேலையாக இருக்கிறது- நிச்சயமாக, அதற்கு உதவும்படி பெருமையும் இருக்கிறது, ஏனென்றால், பயமுறுத்துகிற அந்த சாவைக்கூட, ஒரு நல்ல உணர்வாகவோ, முதிர்ச்சியாகவோ அல்லது ஒரு அனுபவமாகவோ விளக்கிக்காட்டும்படி, நாம் அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறோம். அனுபவத்தை, எப்படி வழங்கவேண்டும் என்று, நாம் அவர்களுக்கு கற்றுக்கொடுத்த, அந்த தனிப்பட்ட உணர்விலே வைத்துப் பார்க்கும்பொழுது, அது ஒரு மிகவும் பிரயோஜனமான வார்த்தையாகும். ஒரு மாபெரும் மனித தத்துவ மேதை, நற்குணங்கள் சம்பந்தப்பட்டிருக்கும்பொழுது, “அனுபவம் என்பது ஒரு கற்பனையின் தாயாகும்” என்று சொல்லி, நம்முடைய இந்த இரகசியத்தை உடைத்துகாட்டும் அளவுக்குச் சென்றுவிட்டார். ஆனால், மாறி வருகிற நாகரீகத்துக்கும், நிச்சயமாக, அந்த வரலாற்று கண்ணோட்டத்துக்கும்கூட, நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும், ஏனென்றால், அவைகளைக் கொண்டு, நாம், அவருடைய புத்தகத்தைத், தீங்கற்றதாக்கிவிட்டோம்.

எதிரி, நமக்கு மிகக் குறுகிய நேரத்தையே கொடுத்திருக்கிறான் என்கிற உண்மையை வைத்து பார்க்கும்பொழுது, நேரம் நமக்கு எவ்வளவு விலைமதிக்க முடியாததாய் இருக்கிறது என்று அளவிட்டுப் பார்க்கமுடியும். மனித இனத்தில், பெருபான்மையினர் குழந்தை பருவத்திலேயே இறந்து விடுகிறார்கள். அப்படி உயிர்

வாழ்பவர்களில் அதிகம் பேர், தங்கள் வாலிப காலத்திலேயே மரித்துவிடுகிறார்கள். எதிரிக்கு, மனிதனுடைய சாவுக்கான மிகவும் முக்கியமான தகுதி என்னவென்றால், மனிதனுடைய பிறப்புதான். மரணம் என்பது அந்த மற்றொரு வகையான வாழ்வுக்கான, ஒரு நுழைவாயில் மட்டுமே. ஒரு “சராசரியான வாழ்க்கை” என்று மனிதர்கள் அழைக்கிறார்களே, அந்த வாழ்க்கை வாழ்கிற, ஒரு தெர்ந்தெடுக்கப்பட்ட சிறுபான்மையினரான, அந்த மனிதர்களின் மேல்தான், நாம் வேலை செய்யும்படியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். எல்லோருக்கும் தெரிந்த வண்ணமாக, இவ்வுலகத்து வாழ்க்கையில் அறுபது அல்லது எழுபது வருடங்களாக, நம்மை எதிர்த்துக் கொண்டேயிருக்கிற அனுபவத்தைப் பெற்ற, சில மனிதமிருகங்கள் மோட்சத்தை நிரப்பும்படியாக, அவனுக்கும் தேவைப்படுகிறார்கள், ஆனால், அது மிகவும் குறைவான சிலரே. அப்படியானால், அங்கு தான் நம்முடைய வாய்ப்பு இருக்கிறது. அது எவ்வளவு குறைவோ, அவ்வளவு அதிகமாக நாம் அதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நீ என்ன செய்தாலும் சரி, உன்னுடைய நோயாளியை, உன்னால் முடிந்தமட்டும் பாதுகாப்பாக வைத்துக்கொள்.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 29

என் அன்பு எட்டி,

உன்னுடைய நோயாளியுடைய பட்டணத்தின் மேல், ஜெர்மானிய மனிதர்கள், வெடிகுண்டு தாக்குதலை நடத்தப்போகிறார்கள் என்பது, இப்பொழுது உறுதியாகி விட்டதாலும், அவனுடைய கடமைகள், அவனை எப்படியும் ஆபத்து அதிகமாக இருக்கிற இடத்திலேயே வைத்திருக்கும் என்பதாலும், நம்முடைய கொள்கையை நாம் சற்று கருத்தில் கொள்ளவேண்டிய அவசியம் வந்திருக்கிறது. நாம் இலக்காக வைக்கவேண்டியது, கோழைத்தனமா- அல்லது வீரமும், அதைத்தொடர்ந்து வருகிற பெருமையுமா?- அல்லது ஜெர்மானியர்கள் மீதான வெறுப்பா?

எப்படியானாலும், அவனை வீரமிக்கவனாக்க முயற்சியெடுப்பதில், எந்த நன்மையும் இல்லை என்று நான் அஞ்சுகிறேன். நம்முடைய ஆராய்ச்சித் துறை, (வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடுவார்கள் என்றாலும்) இதுவரைக்கும், ஒரு நற்குணத்தை எப்படி உருவாக்குவது என்று, கண்டுபிடிக்கவில்லை. இது ஒரு தீவிரமான முட்டுக்கட்டை ஆகும். ஒரு மனிதன், மிகப்பெரிய திறமைமிக்க கெட்டவனாக இருப்பதற்கு, சில நற்குணங்கள் தேவையாக இருக்கின்றன. அட்டில்லா (Attila the Hun-ஊணப் பேரரசன், கிபி 434-453 ), தன்னுடைய தைரியம் இல்லாமல் என்னவாக இருந்திருப்பான் அல்லது ஷைலாக் (Shylock-ஷேக்ஸ்பியருடைய நாடகம் ஒன்றில் வரும் கதாபாத்திரம்) தன்னுடைய மாம்சம் குறித்த சுய-மறுப்பு இல்லாமல் என்னவாக இருந்திருப்பான்? ஆனால், இப்படிப்பட்ட குணநலன்களை, நாமாகவே அவர்களுக்கு வழங்கமுடியாது

என்பதால், எதிரி அவர்களுக்கு வழங்கியிருப்பதை வைத்துதான், நாம் பிரயோஜனப்படுத்திக் கொள்ளமுடியும். இதற்கு என்ன அர்த்தம் என்றால், அந்த மனிதர்களுக்குள், எதிரிக்கு ஒரு வகையான பிடிப்பைத் தரவேண்டியுள்ளது. அப்படி இல்லாவிட்டால், அந்த மனிதனை முழுக்க நம்முடையவனாக்கிவிடலாம். இது நமக்கு மிகவும் அதிருப்தியான ஒரு ஒப்பந்தம்தான் என்றாலும், என்றாவது ஒருநாள் நாம் சிறப்பாகச் செய்வோம் என்ற நம்பிக்கை, எனக்கு உண்டு.

வெறுப்பை நம்மால் கையாளமுடியும். அதிக இரைச்சலின்போதும், ஆபத்து அல்லது சோர்வின்போதும், மனித நரம்புகளில் உள்ள அமைதியற்ற நிலை, எந்த ஒரு வன்முறையான உணர்ச்சிக்கும், அவர்களை எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக வைத்திருப்பதால், இந்த பாதிக்கப்படக்கூடிய தன்மையை, எந்த சரியான வாய்க்காலின் வழியாகத் திருப்பிவிடுகிறோம் என்பதுதான், இங்கு இருக்கக்கூடிய கேள்வியாய் இருக்கிறது. அவனுடைய மனசாட்சி இதை எதிர்த்து நின்றால், அவனை குழப்பிவிடு. இந்த வெறுப்பின் உணர்வு, தனக்காக உண்டாயிராமல், பெண்களுக்காகவும் குழந்தைகளின் சார்பாகவும், தான் உணர்வதாக அவன் சொல்லிக்கொள்ளட்டும். மேலும், ஒரு கிறிஸ்தவன், தன் எதிரிகளுடைய தவறுகளைத்தான் மன்னிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறானே ஒழிய, மற்ற மனிதர்களுடைய எதிரிகளை மன்னிக்கும்படியாக சொல்லப்படவில்லை என்று அவன் நினைத்துக்கொள்ளட்டும். வேறு வார்த்தைகளில், சொல்ல வேண்டுமென்றால், பெண்கள் மற்றும் குழந்தைகளின் சார்பாக, அவர்களுடைய வெறுப்பின் உணர்ச்சியோடு, தன்னைப் போதுமான அளவு அடையாளப்படுத்திக்கொள்ளட்டும், ஆனால், அவர்கள் சார்பாக, அவர்களுடைய எதிரிகளை மன்னிக்கும்படியான

உணர்ச்சியோடு, தன்னைப் போதுமான அளவு அடையாளப்படுத்திக்கொள்ளாமல் இருந்து, அவர்கள் மன்னிக்கப்பட வேண்டியவர்கள் என்று கருதாமல் இருக்கட்டும்.

ஆனால் வெறுப்பு, மிகச்சரியான வகையிலே, பயத்துடன் இணைகிறது. எல்லாத் தீமைகளிலும், கோழைத்தனம் ஒன்றே ஒன்றுதான் முழுக்க முழுக்க வேதனையைத் தரக்கூடியதாய் இருக்கிறது – அதாவது, அதை எதிர்பார்ப்பதில், அதை உணர்வதில், அதை நினைவுபடுத்திப் பார்ப்பதில், எப்போதும் பயங்கரம் உண்டாகிறது. வெறுப்புக்கென்று, தனிப்பட்ட இன்பங்கள் உண்டு. ஆதலால், பல்வேறு வகையிலே ஒரு பயந்த மனிதன், தன் பயத்தினால் அடைந்த எல்லா வேதனைகளுக்கும் சமமாகத், திரும்பப் பெற்றுக்கொள்ளும்படியான இழப்பீடாய், வெறுப்பு இருக்கிறது. எவ்வளவு அதிகம் அவன் பயப்படுகிறானோ, அவ்வளவு அதிகம் அவன் வெறுப்பான். அதுமட்டுமல்லாமல் வெறுப்பு, அவமானத்துக்குரிய ஒரு மிகப்பெரிய வலிநிவாரணியாய் இருக்கிறது. ஆதலால், அவனுடைய இரக்ககுணத்தில் ஒரு ஆழமான காயத்தை ஏற்படுத்துவதற்கு, முதலாவதாக, நீ அவனுடைய தைரியத்தைத் தோற்கடிக்க வேண்டும்.

இப்பொழுது இது ஒரு தந்திரமான வேலை. (என்னவென்றால்) மனிதர்கள் எல்லாரும், பெரும்பாலான தீயகுணங்களினாலே பெருமைப்படும்படியாக நாம் செய்துவிட்டோம். ஆனால் கோழைத்தனத்தை, அப்படியாக நாம் செய்யவில்லை. எப்பொழுதெல்லாம், நாம் அதையும் அப்படியாக மாற்றிவிடுவதில், வெற்றிபெறுவதற்கு, மிகஅருகில் சென்றிருக்கிறோமோ, அப்பொழுதெல்லாம் எதிரி, ஒரு போரையோ அல்லது நிலநடுக்கத்தையோ அல்லது வேறு ஏதாவது ஒரு பேரழிவையோ அனுமதிப்பான்.

உடனேயே, தைரிய குணம், எல்லா மனிதர்களுடைய கண்களுக்கும் வெளிப்படையாகவே, விரும்பப்பட்டதாகவும் மிகவும் முக்கியமானதாகவும் தெரிந்துவிடும். இதனால் நம்முடைய எல்லா உழைப்பும் அழிந்துபோய், மீண்டுமாக, மனிதர்கள் குறைந்தபட்சம் ஒரு தீயகுணத்தையாவது உண்மையான அவமானத்தோடு கருதும்படியான அந்த நிலைக்கு, திரும்ப வந்துவிடுகிறோம். ஆதலால், நம்முடைய நோயாளிகளுக்குள், பயத்தை திணிப்பதன் அபாயம் என்னவென்றால், நாம் அவர்களுக்குள் உண்மையான சுய-அறிவையும், மனந்திரும்புதலையும், தாழ்மையை விளைவிக்கக்கூடிய சுய-வெறுப்பையும், உண்டாக்கி விடுவோமோ என்பதுதான். உண்மையில் பார்க்கப்போனால், கடைசியாக நடந்த போரிலே, ஆயிரக்கணக்கான மனிதர்கள், தங்களுடைய சொந்த கோழைத்தனத்தை கண்டறிந்ததன் மூலமாக, முதல்முறையாக ஒழுக்கம் என்ற முழு உலகத்தையும் கண்டறிந்தார்கள். சமாதானம் இருக்கக்கூடிய காலங்களில், அவர்களில் பலரையும், நன்மை தீமை ஆகியவற்றை, முற்றிலும் அறியாமல் இருக்கும்படியாக, நம்மால் வைக்கமுடியும். ஆனால், ஆபத்து காலங்களில் இந்த பிரச்சனை, அவர்களுடைய கண்களை நாம் குருட்டாட்டம் செய்யமுடியாதபடியான ஒரு உருவத்திலே, அவர்கள் மேல் திணிக்கப்படுகிறது. இங்கே நமக்கு முன்பாக, ஒரு கொடூரமான தடுமாற்றம் வைக்கப்படுகிறது. மனிதர்களுக்குள்ளே நாம் நியாயத்தையும் இரக்கத்தையும் ஊக்கப்படுத்தினால், நாம் நேரடியாகவே எதிரியினுடைய கரங்களுக்குள் செயல்படவேண்டியதாயிருக்கும்; ஆனால் ஒருவேளை, இதற்கு எதிர்மறையான நடத்தைக்கு நாம் அவர்களை வழிநடத்தினால், அது விரைவாகவோ அல்லது தாமதமாகவோ, ஒரு போர் அல்லது ஒரு கிளர்ச்சியை உருவாக்கிவிடும் (அப்படி உருவாகும்படியாக எதிரியே அனுமதிக்கிறான்). அப்படி ஆகும்போது, மறைக்கப்பட

முடியாத பிரச்சனையாக கோழைத்தனமோ அல்லது தைரியமோ உருவாகி, ஆயிரக்கணக்கான மனிதர்களை, அவர்களுடைய ஒழுக்க உணர்ச்சியிண்மையில் இருந்து எழுப்பி விட்டுவிடும்.

உண்மையாகவே, இதுதான், எதிரியானவன் ஒரு ஆபத்து நிறைந்த உலகத்தை உருவாக்குவதற்கான, மிக முக்கியமான நோக்கமாய் இருக்கிறது. அதாவது, ஒழுக்கப் பிரச்சனைகள், நிஜமாகவே மையத்தில் வந்து நிற்கக்கூடிய ஒரு உலகம். தைரியம் என்பது, சாதாரணமாக நற்குணங்களில் ஒன்று மட்டுமல்ல, ஒவ்வொரு நற்குணமும் சோதிக்கப்படும்போது- அதாவது, யதார்த்தத்தின் உச்சத்தில் எடுத்துக்கொள்ளும் உருவமும் அதுதான். ஒரு கற்போ, அல்லது நேர்மையோ, அல்லது இரக்கமோ, ஆபத்து வரும்பொழுது விட்டுக்கொடுக்கப்படும் என்றால், அது நிபந்தனையான சூழ்நிலைகளின் கீழ் மட்டும்தான், கற்பாகவும் நேர்மையாகவும் இரக்கமாகவும் இருக்கமுடியும். பிலாத்து இரக்கமுள்ளவராகத்தான் இருந்தான், அவனுக்கு ஆபத்தான சூழ்நிலை உண்டாகும் வரையில்.

ஆதலால், உன்னுடைய மனிதனை ஒரு கோழையாக ஆக்குவதின் மூலம், நாம் எவ்வளவு லாபமடைகிறோமோ, அவ்வளவு நஷ்டப்படுவதற்கும் சாத்தியம் உண்டு. அவன் தன்னைக் குறித்து நிறைய விஷயங்களை அறிந்துகொள்ளுவான். ஆனால், அவமானத்தை, மயக்கமருந்தைக் கொடுத்து மூடிமறைக்காமல், அதை மிகைப்படுத்தி, விரக்தியை உருவாக்குவதற்கு, நிச்சயமாகவே எப்பொழுதும் வாய்ப்புகள் உள்ளன. இது ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமையக்கூடும். இது எப்படி தன்னைக் காண்பிக்கும் என்றால், அவன் தன்னுடைய பாவங்களை குறித்த, முழுமையான பாவ உணர்வை பெற்றுக்கொள்ளாததினால்தான், அவைகளுக்கு

எதிரியானவன் வழங்கின மன்னிப்பை, அவன் முழுமையாக ஏற்றுக்கொண்டதாகக் காண்பிக்கும்- அதாவது எந்த ஒரு தீமையை, அவன் முழுமையாக புரிந்துகொண்டு, அதன்மூலம் ஏற்படுகிற அவமானத்தின் முழு ஆழத்தையும் புரிந்துகொள்ளுகிறானோ, அந்த தீமைக்காக அவன் ஒருபோதும்இரக்கத்தைநாடவோ,அதைபெற்றுக்கொள்ளவோ முடியாது என்பதாக அது காண்பிக்கும். ஆனால், நீ அவனை ஏற்கெனவே எதிரியினுடைய பள்ளிக்கூடத்தில், நீண்டதூரம் சென்றுவிட அனுமதித்துவிட்டாய் என்று நான் அஞ்சுகிறேன். ஆதலால், விரக்தியடைவதுதான், அதைத் தூண்டிவிடுகிற மற்ற எல்லாப் பாவங்களைக் காட்டிலும், மிகப்பெரிய பாவம் என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

கோழைத்தனத்தை உருவாக்குகிற சோதனைகளுக்கான திட்டவட்டமான தொழில்நுட்பத்தைப் பற்றி, அதிகம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால், முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள், பயத்தை அதிகப்படுத்துகிற தன்மையுடையவைகளாய் இருக்கின்றன என்பதுதான். ஆனால், உன்னுடைய நோயாளியின் மீது விதிக்கப்பட்ட, வெளிப்படையான முன்னெச்சரிக்கைகள் எல்லாம், அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மிக விரைவிலேயே மாறிவிடுவதால், இந்தத் தாக்கம் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடுகிறது. நீ செய்யவேண்டியது, அவனுடைய கடமையின் கட்டமைப்புக்குள், அவனைச் சற்று பாதுகாப்பாக உணரவைக்கின்ற,அவன் செய்யக்கூடிய மற்றும் செய்யமுடியாத, எல்லாவிதமான விஷயங்களின் தெளிவற்ற யோசனைகளையும் (ஒரு பக்கம் தன்னுடைய கடமையைச் செய்யவேண்டும் என்ற தெளிவான எண்ணத்தோடு சேர்த்து) அவனுடைய மனதிலே ஓட்டிக்கொண்டே இரு. (“நான் இங்கேயிருந்து, இந்த வேலையைச் செய்தாகவேண்டும்”

என்ற) எளிதான விதியை அவனுடைய எண்ணத்திலிருந்து நீக்கி, அதைக் கற்பனையான, இன்றியமையாத வேலைகள் என்ற ஒரு தொடர் சிந்தனையாக மாற்றிவிடு ("A என்பது நிகழ்ந்துவிட்டால்- அப்படி நடக்காது என்றே நம்புகிறேன், ஒருவேளை நடந்துவிட்டால்- நான் B யை செய்யலாம்- ஒருவேளை அதுவும் நினைத்தபடி நடக்கவில்லை என்றால்- நான் வழக்கம்போல், C யை செய்யலாம்" என்பதாக). மூடநம்பிக்கைகளை, அவை அவ்வாறாக அடையாளம் கண்டுகொள்ளப்படாவிட்டால், அவனுக்குள் எழுப்பிவிடலாம். இங்கே குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், எதிரியையும், அவன் வழங்குகிற அந்த தைரியத்தையும் தவிர, தான் சார்ந்து இருப்பதற்கு மற்றொன்றும் உள்ளது என்கிற அந்த உணர்வை, அவன் பெற்றுக்கொள்ளுவதுதான். இப்படிச் செய்யும்போது, கடமைக்கான முழு அர்ப்பணிப்பு என்ற நோக்கத்தோடு செய்யப்படுகிறவை எல்லாம், அவன் அறியாத வகையிலே, அங்கங்கு ஒதுக்கிவைக்கப்பட்ட விஷயங்களினாலே வலுவற்றதாக்கப்படுகின்றது. "நடக்கக்கூடாத ஒன்று நடந்துவிடுவதை" தவிர்ப்பதற்காக, நீ அவனுக்குள் கட்டியெழுப்புகிற, அந்த கற்பனையான, சூழ்நிலைக்கு ஏற்ப அமைத்துக்கொண்ட விஷயங்களின் தொடர்ச்சியினாலே, அவனே அறியாத வகையில், அவனுடைய உறுதியின் நிலையில், நடக்கக்கூடாத ஒன்று ஒருபோதும் நடந்துவிடாது என்ற ஒரு உறுதியை, உன்னால் அவனுக்குள் உருவாக்கமுடியும். பின்னர், உண்மையிலேயே அந்த பயங்கரமான நொடி வரும்பொழுது, இவை எல்லாவற்றையும் அவனுடைய நரம்புக்குள்ளும் தசைகளுக்குள்ளும் அதிவேகத்தில் நீ அனுப்பி, நீ என்ன செய்கிறாய் என்பதை அவன் அறிந்துகொள்ளும் முன்பே, அந்த அபாயகரமான செயலை (கோழைத்தனமான செயல்), நீ செய்து முடித்துவிடு. ஏனென்றால், நன்றாக நினைவில் வைத்துக்கொள், கோழைத்தனத்தின் அந்தச் செயல்தான்

எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமானது. பயம் என்கிற உணர்ச்சி, தன்னில்தானே பாவமானது அல்ல. அதனால் நாம் மகிழ்ச்சியடைந்தாலும், அது எந்த நன்மையையும் நமக்குச் செய்வதில்லை.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 30

என் அன்பு எட்டி,

நீ உன்னுடைய சொந்த சந்தோஷத்துக்காகத்தான் இந்த உலகத்தில் அனுப்பப்பட்டிருப்பதாக நினைக்கிறாயோ என்று, நான் சில வேளைகளில் சிந்திப்பதுண்டு. உன்னுடைய பரிதாபகரமான, அரைகுறையான அறிக்கைகளிலிருந்து அல்ல, நரகத்தின் காவல்துறையிடமிருந்து, நான் எதை அறிந்து கொண்டேன் என்றால், முதல் தாக்குதலின்போது, உன்னுடைய நோயாளியின் நடவடிக்கை மிகவும் மோசமானதாக இருந்தது என்பதை. அவன் மிகவும் பயந்தவனாய், தன்னை ஒரு பெரிய கோழையாக நினைப்பதால், அவனுக்குள் எந்தப் பெருமையுமே இல்லை, ஆனால், அவனுடைய கடமை எதையெல்லாம் கேட்டதோ, அவை எல்லாவற்றையும் அவன் செய்து, அதற்கு அதிகமாகவும்கூட செய்திருக்கிறான். இந்தப் பேரழிவுக்கு எதிராக, உன்னால் வழங்கக்கூடிய நல்ல விஷயங்கள் என்னவென்றால், தன்னை தடுக்கி விழச் செய்த ஒரு நாயின் மேல், அவன் காட்டிய திடீர் கோபமும், அதிகப்படியான புகைபிடிப்பும், ஒரு ஜெபத்தை செய்வதற்கு அவன் மறந்ததும் மட்டுமே. உன்னுடைய கஷ்டங்களைக் குறித்து, என்னிடத்திலே நீ புலம்புவதினால் என்ன பயன்? எதிரியினுடைய யோசனையாகிய நியாயத்தை நீ முன்வைத்து, உன்னுடைய வாய்ப்புகளையும் நோக்கங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்று பரிந்துரைப்பாயானால், பின்னர் உன்னைக் குறித்து நான் கேள்விப்பட்ட ஒரு புகார், உனக்கு எதிராகப் பொய் சொல்லவில்லையோ என்று நான் யோசிக்கிறேன். எது எப்படி இருந்தாலும், நரகத்தின் நியாயம் என்பது முழுக்க

முழுக்க யதார்த்தமானது என்றும், அது பலன்களைக் குறித்து மட்டுமே கவலைப்படுகிறது என்பதையும், நீ விரைவில் தெரிந்துகொள்ளுவாய். (அதன் கொள்கை இதுதான்) எங்களுக்கு உணவைக் கொண்டுவா, அல்லது நீயே உணவாக மாறிவிடு.

உன்னுடைய கடிதத்தில் இருக்கிற, முன்னேற்றத்துக்குரிய ஒரே பகுதி எதுவென்றால், உன் நோயாளியுடைய சோர்விலிருந்து, நீ இன்னும் சில நல்ல பலன்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறுவது மட்டும்தான். இப்போதைக்கு, அது போதுமான நன்மைதான். ஆனால், அது உன்னுடைய கரங்களில் தானாகவே வந்து விழாது. சோர்வு, அதீத அமைதியையும், மென்மையையும், மன அமைதியையும், தரிசனம் போன்ற ஒன்றையும்கூட உருவாக்கக்கூடும். சில மனிதர்கள், பல நேரங்களில் அதன் மூலமாக கோபத்துக்கும், தீமைக்கும், பொறுமையின்மைக்கும் வழிநடத்தப்பட்டதை நீ கண்டிருப்பாய், அதற்குக் காரணம், அந்த மனிதர்களுக்கு திறமைவாய்ந்த சோதனையாளர்கள் இருந்தார்கள். இங்குள்ள முரண்பாடு என்னவென்றால், முன்கோபத்தை ஏற்படுத்துவதற்கு, முழுமையான சோர்வைக் காட்டிலும், மிதமான சோர்வுதான் நல்ல நிலமாய் இருக்கிறது. இது, ஒரு பகுதி, உடல் சார்ந்த காரணங்களையும், மற்றொரு பகுதி இன்னொன்றையும் சார்ந்திருக்கிறது. (என்னவென்றால்) சோர்வு மட்டுமே, சாதாரணமாக கோபத்தை ஏற்படுத்துவதில்லை, ஆனால், ஏற்கனவே சோர்வாக இருக்கிற ஒரு மனிதன் மேல் வைக்கப்படுகிற, எதிர்பாராத கோரிக்கைகள், அதை ஏற்படுத்துகிறது என்பதுதான். மனிதர்கள் எதையெல்லாம் எதிர்பார்க்கிறார்களோ, அதைப் பெற்றுக்கொள்ள, தங்களுக்கு உரிமை இருப்பதாகவும் சீக்கிரத்திலேயே நினைத்துவிடுகிறார்கள். இதனால் ஏற்படுகிற ஏமாற்றத்தின் உணர்வு, நம்முடைய பங்கான ஒரு மிகச் சிறிய வேலைப்பாட்டினாலே, காயப்பட்ட உணர்வாக

மாற்றப்படக்கூடும். மனிதர்கள் விடுதலைக்காக காத்திருந்து, அதனால் விரக்தியடைந்து, தங்களால் மாற்றமுடியாத ஒன்றை விட்டுக்கொடுத்துவிட்டு, அதைப் பற்றிய எந்த ஒரு சிந்தனையும் இல்லாமல் இருக்கும்பொழுதுதான், அந்த அடக்கமான, மென்மையான சோர்வுக்குரிய ஆபத்துகள் ஆரம்பமாகின்றன. ஆதலால், உன் நோயாளியுடைய சோர்விலிருந்து சிறந்த விளைவுகளை உருவாக்கவேண்டும் என்றால், நீ பொய்யான நம்பிக்கைகளை அவனுக்கு ஊட்டிக்கொண்டே இருக்கவேண்டும். அவனுடைய எண்ணத்தில், அந்த விமானத் தாக்குதல்கள் மீண்டுமாக நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதாக, அவனுக்கு சில நம்பத்தகுந்த காரணங்களைக் கொடு. அடுத்த நாள் இரவு, தன்னுடைய படுக்கையை அவன் எவ்வளவு சந்தோஷமாக அனுபவிப்பான் என்ற எண்ணத்தைக் கொடுத்து, அவன் தன்னைத்தானே தேற்றிக் கொண்டிருக்கும்படியாக வைத்துக்கொள். அவனுடைய சோர்வை மிகைப்படுத்தி, இவையெல்லாம் சீக்கிரமே முடிந்துவிடும் என்று அவன் நினைக்கும்படியாகச் செய். ஏனென்றால், மனிதர்கள் பொதுவாகவே, தங்களுடைய சிரமத்தை, அது முடிவடைகிற அந்த தருணத்திற்கோ, அல்லது முடிவடைந்துவிடும் என்று அவர்கள் நம்புகிற அந்த தருணத்திற்கோ மேலாக, தங்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது என்றே நினைப்பார்கள். கோழைத்தனத்தில் இருந்த பிரச்சனையைப் போலவே, இதிலும், நாம் தவிர்க்கவேண்டிய முக்கியமான விஷயம், முழுமையான அர்ப்பணிப்புதான். அவன் என்ன கூறினாலும், அவனுடைய உள்ளான மனதில் இருக்கக்கூடிய தீர்மானம், தனக்கு எதிராக எது வந்தாலும் தன்னால் தாங்கமுடியும் என்று இருப்பதைக்காட்டிலும், “என்னால் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே அதைத் தாங்கமுடியும்” என்பதாக இருக்கட்டும்- அந்த குறிப்பிட்ட காலம், தனக்கான அந்த பாடுகள் நீடிக்கக்கூடிய அந்த

காலத்தைக் காட்டிலும் குறைவானதாகவே இருக்கட்டும். அது மிகவும் குறைவானதாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், பொறுமை, கற்பு, துணிவு ஆகியவற்றின் மேல், நாம் நடத்துகிற தாக்குதல்களுக்குரிய வேடிக்கையான விஷயம் என்னவென்றால், அவனுடைய விடுதலை கண்ணில்படுகிற தூரத்தில் இருக்கிறபோது (ஆனால், அவன் அதை இன்னும் அறிந்துகொள்ளாத), அந்த நேரத்திலே, அவன் அந்த நற்குணத்தை விட்டுக்கொடுக்கும்படியாகச் செய்வதுதான்.

அவன் சிரமத்தோடு இருக்கிற இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே, அந்தப் பெண்ணை சந்திப்பது சாத்தியமா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி ஒருவேளை அவன் சந்தித்தால், ‘சோர்வுக்குள்ளாகும்போது பெண்கள் அதிகமாகவும், ஆண்கள் குறைவாகவும் பேசுவார்கள்’ என்ற அந்த உண்மையை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, முழுமையாக உபயோகப்படுத்திக்கொள். காதலர்களுக்கு நடுவிலும் இருக்கக்கூடிய, அதிக இரகசியமான வெறுப்புகள் இதிலிருந்து எழுப்பி விடப்படக்கூடும்.

பெரும்பாலும், அவன் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிற காட்சிகள், நாம் அவனுடைய விசுவாசத்தின் மீது, ஒரு அறிவுப்பூர்வமான தாக்குதலை நடத்துவதற்குரிய மூலப்பொருட்களை வழங்கப்போவதில்லை- உன்னுடைய முந்தின தோல்விகளெல்லாம், உன் ஆற்றலிலிருந்து, அதை வெளியே தூக்கி எறிந்துவிட்டன. ஆனால், அவனுடைய உணர்ச்சிகளின் மேல் நாம் நடத்தக்கூடிய ஒரு வகையான தாக்குதலை, நாம் முயற்சிசெய்து பார்க்கமுடியும். மனித உடலின் பகுதிகள், சுவற்றிலே ஒட்டிக்கொண்டிருக்கிற காட்சியை, அவன் முதன்முறையாகப் பார்க்கும்பொழுது, “இதுதான் நிஜமான உலகம்” என்றும், அவனுடைய மதம் எல்லாம், வெறும் கற்பனைக் கதை என்றும், அது,

அவன் தொடர்ந்து நினைக்கும்படி வைக்கிறது. “நிஜம்” என்ற வார்த்தையின் அர்த்தத்தை, நாம் அவர்களுக்கு முற்றிலுமாக மூடி மறைத்திருக்கிறோம் என்பதை, நீ கவனித்திருக்கக்கூடும். அவர்கள், சில மிகப்பெரிய உணர்வுப்பூர்வமான அனுபவங்களை, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும்போது, “நிஜமாக என்ன நடந்ததென்றால், விளக்குகள் எரிந்து கொண்டிருந்த ஒரு கட்டடத்திலே, ஒரு இசை கேட்கப்பட்டது” என்று சொல்லுவார்கள். இங்கே “நிஜம்” என்பது, மெய்யாகவே அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்ட, வெறும் பொருள் (physical) சார்ந்த உண்மைகளாகும். மற்றொரு புறம், அவர்கள் இவ்வாறாகவும் சொல்லுவார்கள், “நீ இங்கே ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, உயரத்தில் இருந்து (நீச்சல்குளத்தில்) குதிப்பதை விவாதிப்பதெல்லாம், நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், ஒருமுறை நீ அங்கே ஏறி நின்று, நிஜமாகவே அது எப்படி இருக்கிறது என்று பார்” என்பதாக. இங்கே “நிஜம்” என்பது, நேர்மாறான அர்த்தத்தை உணர்த்தும்படியாக பயன்படுத்தப்படுகிறது. இது பொருள் சார்ந்த உண்மைகளை அல்ல (அது அவர்கள் நாற்காலியில் உட்கார்ந்து விவாதிக்கும் பொழுதே அவர்களுக்கு தெரியும்), ஆனால், அந்த (பொருள் சார்ந்த) உண்மைகள், ஒரு மனிதனுடைய மனநிலையின் மீது ஏற்படுத்துகிற உணர்ச்சித் தாக்கத்தைக் குறிக்கிறது. இந்த வார்த்தையினுடைய இரண்டு பயன்பாடுகளும், சரியானவைதான் என்று வாதாடமுடியும். ஆனால் நம்முடைய வேலை என்னவென்றால், இந்த இரண்டையுமே ஒரே நேரத்தில் பயன்படுத்தி, அந்த “ நிஜம்” என்ற வார்த்தையின் உணர்ச்சிக்கான மதிப்பை, ஒரு சமயம் ஒரு பக்கத்திலும், மற்றொரு சமயம் அதை இன்னொரு பக்கத்திலும் வைத்து, அது நமக்கு ஏற்றபடி, எப்படிப் பொருத்தமாக இருக்கிறதோ, அப்படியாக அதை பிரயோஜனப்படுத்துவதுதான்.

அவர்களுக்குள்ளே நாம் மிக நன்றாக ஏற்படுத்திவிட்ட பொதுவான விதி என்னவென்றால், அவர்களை சந்தோஷமாகவும் நன்றாகவும் வைத்துக்கொள்ளுகிற எல்லா அனுபவங்களிலும் இருக்கிற, அந்தப் பொருள் சார்ந்த உண்மைகள் மட்டுமே “நிஜம்” என்றும், உணர்வுப்பூர்வமான பகுதிகள் “மாறக்கூடியவை” என்றும் நினைக்கும்படியாக வைப்பதும், ஆனால் அதே நேரத்தில், அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்காத, அல்லது அவர்களுக்குக் கேடுவிளைவிக்கிற எல்லா அனுபவங்களிலும் உள்ள, அந்த உணர்வுப்பூர்வமான பகுதிகள்தான், முக்கியமாக கவனிக்கவேண்டுய “நிஜம்” என்றும், அதைப் புறக்கணிப்பது, அதிலிருந்து ஓடிஒளிவதைப் போன்ற செயலாகும், என்றும் அவர்கள் நினைக்கும்படியாக வைப்பதும்தான். இப்படியாக, ஒரு குழந்தை பிறக்கும்பொழுது, அந்த இரத்தமும் வலியும் “நிஜம்” என்றும், அந்த மகிழ்ச்சி, ஒவ்வொருவருடைய பார்வைக்கு ஏற்ப “மாறக்கூடியது” என்றும், அவர்கள் நினைக்கும்படி வைத்துவிட்டோம். மரணத்தில் இருக்கிற அந்த பயங்கரமும் அசிங்கமும், மரணம் “நிஜமாகவே என்ன என்பதை” வெளிப்படுத்துவதாக வைத்திருக்கிறோம். ஒரு வெறுக்கப்பட்ட மனிதனுடைய வெறுப்பு “நிஜமானது” என்றும், வெறுப்பில்தான் மனிதர்களை அவர்கள் இருக்கிற வண்ணமே பார்க்கமுடியும், அது கற்பனை அல்ல என்றும் அவர்கள் நினைக்கும்படியும், ஆனால், ஒரு நேசிக்கப்பட்ட மனிதனுடைய நேசம் எல்லாம், அந்தப் பார்வைக்கு ஏற்றபடியாக, வெறுமென மாறக்கூடியது என்றும், அது பாலியல் பசியையோ அல்லது பொருளாதார ஆதாயம் தருகிற சம்பந்தத்தையோ, “நிஜமான” மையப்பகுதியாக வைத்து, அதை மறைப்பதாகவும் காட்டியிருக்கிறோம். யுத்தங்களும் வறுமையும், “நிஜமாகவே” பயங்கரமானவை; அமைதியும் நிறைவும் மனிதர்கள், சில உணர்ச்சிப்பூர்வமான மதிப்புகளை வைக்கும்படியாக (sentimental) இருக்கக்கூடிய

,வெறும் பொருள் சார்ந்த உண்மைகள் என ஆகிவிடுகின்றது. இந்த உயிரினங்களெல்லாம், அடுத்தவர், “இவை இரண்டுமே வேண்டும்” என கேட்பதாக, ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக்கொள்வதை, நாம் காணமுடியும். ஆனால், நல்ல வேளையாக நம்முடைய உழைப்பினாலே, அவர்கள் பெரும்பாலும், ஒன்றுக்கான விலையை செலுத்திவிட்டு, அதை அனுபவிக்கமுடியாத, ஒரு இக்கட்டானநிலையில் இருக்கிறார்கள். உன்னுடைய நோயாளி, சரியான விதத்திலே கையாளப்பட்டான் என்றால், மனிதனுடைய குடல்பகுதிளின் காட்சிகளைப் பார்க்கும்போது, தனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை, “நிஜத்தின்” வெளிப்பாடாகவும், மகிழ்ச்சியான குழந்தைகளின் காட்சிகளையோ, அல்லது நல்ல வானிலையையோ பார்க்கும்பொழுது, வெறுமென தான் உணர்ச்சிவசப்படுவதாகவும் (being sentimental) நினைக்கும்படி செய்வது, கடினமல்ல.

இப்படிக்கு உன் அன்பு மாமா,
திருக்கன்

# கடிதம் 31

என் அன்பிற்குரிய, மிகுந்த அன்பிற்குரிய எட்டியே, என் அழகு பொம்மையே, என் அன்பே,

இப்பொழுது எல்லாம் நாசமாகிவிட்ட இந்த நிலையிலே, நீ என்னை எவ்வளவு தவறாகப் புரிந்துகொண்டு, என்னிடம் சிணுங்கிக்கொண்டே வந்து, நான் உன் மீது வைத்திருந்த அன்பு, முதலிலிருந்தே வெறுமையானதுதானா என்று கேட்கிறாய். நிச்சயமாக இல்லை. நன்றாகப் புரிந்துகொள், நான் உன் மீது வைத்திருக்கிற அன்பும், நீ என் மீது வைத்திருக்கிற அன்பும், இரண்டு பட்டாணிகளைப் போல ஒரே மாதிரியானவைதான். நான் உன்னை எப்பொழுதுமே விரும்பியிருக்கிறேன். (பாவப்பட்ட முட்டாளாகிய) நீ என்னை விரும்பியதைப் போலவே. இதிலுள்ள வித்தியாசம் என்னவென்றால், நான் உன்னைக் காட்டிலும் அதிக பலமுள்ளவன் என்பதுதான். இப்பொழுது, உன்னை அல்லது உன்னுடைய ஒரு பகுதியை, என்னிடம் தந்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன். நான் உன்னை நேசிக்கிறேனா என்றா கேட்கிறாய்? நிச்சயமாகவே. நான் சாப்பிட்டு வளர்ந்த உணவின், மிக அழகான ஒரு சிறு துணுக்கு அளவுக்கு.

உன்னுடைய விரல்களுக்கு நடுவாக ஒரு ஆத்துமாவை நீ நழுவ விட்டுவிட்டாய். அந்த இழப்பினால் உண்டான கூர்மையான பஞ்சத்தின் ஓலம், இரைச்சலின் ராஜ்ஜியத்திலுள்ள எல்லா தளங்களுக்கும் ஊடாக, மீண்டும் மீண்டுமாக ஒலித்து, கீழேயிருக்கிற சிங்காசனத்தையே சென்றடைந்துவிட்டது. அதை நினைக்கும்போது, எனக்கு பைத்தியம் பிடித்துவிடுவதைப் போல் இருக்கிறது. அவர்கள், அவனை உன்னிடமிருந்து பறித்த, அந்த நொடியிலே என்ன

நடந்தது என்பதை, மிக நன்றாகவே அறிவேன். அவன் உன்னை முதல்முறையாகப் பார்த்து, நீ அவன் மேல் வைத்திருந்த அந்த ஆளுகையின் பகுதியை அவன் உணர்ந்துகொண்டு, இதற்குப் பிறகு அது உன்னிடத்தில் இல்லை என்பதையும் அறிந்துகொண்ட போது, அவனுடைய கண்களிலே திடீரென ஒரு தெளிவு ஏற்பட்டது (அப்படித்தானே?). அந்த நொடியிலே, அவன் எப்படி உணர்ந்திருப்பான் என்பதை நினைத்துப் பார், மேலும், அது உன்னுடைய வேதனையின் துவக்கமாக இருக்கட்டும்; இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு பழைய புண்ணிலிருந்து அந்தக் காய்ந்த தோல் விழுவதைப் போலவும், ஒரு அருவருப்பான ஓடு போன்ற தோலிலிருந்து அவன் வெளியேறுவதைப் போலவும், தன்மேல் ஒட்டிக்கொண்டிருக்கிற ஒரு அழுக்கான ஈரத்துணியை, அவன் ஒட்டுமொத்தமாக உதறித் தள்ளிவிடுவதைப்போலவும் அது இருந்தது. அவர்கள் இந்த உலகத்தில் வாழும்போது, தங்களுடைய அழுக்கான, வசதியாக இல்லாத துணிகளை கழற்றியெறிந்துவிட்டு, (குளியல் தொட்டியிலுள்ள) சூடான தண்ணீரில் மூழ்கி, தங்கள் வேதனை நீங்கி இன்பப்பெருமூச்சுவிட்டு, தங்கள் கை கால்களையெல்லாம் நீட்டிக்கொள்ளுவதைப் பார்ப்பதே நரக வேதனையாக இருக்கும்போது, இந்த கடைசித் துகிலுரிதலும், இந்த முழுமையான கழுவுதலும் என்னவெல்லாம் செய்யப்போகிறதோ?

இதைப் பற்றி எவ்வளவு அதிகம் சிந்திக்கிறோமோ, அவ்வளவு அதிகம் அது மோசமாகிக் கொண்டேபோகிறது. அவன் எவ்வளவு எளிதாக நழுவிவிட்டான்! படிப்படியான சந்தேகங்கள் இல்லை, மருத்துவருடைய அறிக்கைகள் இல்லை, மருத்துவமனைகள் இல்லை, அறுவை சிகிச்சை அறைகளில்லை, உயிரைக் குறித்த பொய்யான நம்பிக்கைகள் இல்லை; சுத்தமான, உடனடியான விடுதலை மட்டுமே. ஒரு நிமிடம், அதுதான் நம்முடைய முழு உலகமுமாக

இருந்தது; வெடிகுண்டுகளின் அலறல், வீடுகள் தரைமட்டமாகுதல், உதட்டிலும் நுரையீரலிலும் வெடிமருந்துகளின் நாற்றமும் சுவையும், சோர்வினாலே எரிகிற பாதங்கள், பயங்கரங்களினாலே குளிர்ந்து போன இதயம், ஓடிக்கொண்டேயிருக்கிற மூளை, வலியெடுக்கிற கால்கள்; ஆனால் அடுத்த நொடியே, இவையெல்லாம் மறைந்துவிட்டன. ஒரு கெட்ட கனவைப்போல மறைந்துவிட்டன. இனி ஒருபோதும் அவை இருக்கப்போவதில்லை. எதிர்சூழ்ச்சியினால் தோற்றுப்போன முட்டாளே! ஏதோ அவன் அதற்காகவே பிறந்ததைப்போல, எவ்வளவு இயல்பாக, இந்த பூமிக்குரிய உயிரினமாகிய அந்த பூச்சி, அந்த புது வாழ்க்கைக்குள் நுழைந்தான் என்பதை கவனித்தாயா? கண்சிமிட்டும் நேரத்துக்குள், அவனுடைய எல்லா சந்தேகங்களும், அபத்தமானவைகளாக எப்படி மாறியது என்பதைப் பார்த்தாயா? அந்த உயிரினம் தனக்குத்தானே என்ன சொல்லியிருக்கும் என்பதை நான் அறிவேன். “ஆமாம், நிச்சயமாக எப்பொழுதுமே இது இப்படித்தான் இருந்தது. எல்லா பயங்கரங்களும் இதே வழியைத்தான் பின்பற்றின. தொடர்ந்து மோசமாகிக் கொண்டேவந்து, ஒரு சிறு துளைக்குள்ளாக உன்னை அழுத்தித் தள்ளி, நீ சுக்குநூறாக உடையப்போகிறாய் என்று சிந்தித்த அந்த நொடியிலே, திடீரென, அந்த இடுக்கமான வழியிலிருந்து நீ வெளியேவந்து, சட்டென எல்லாம் நன்றாகிவிடுகிறது. பல்லைப் பிடுங்கும்போது, அதிகமதிகமாக வலித்துக் கொண்டேயிருந்தது, ஆனால் திடீரென அந்தப் பல் வெளியே வந்துவிட்டது. கனவு, கெட்ட கனவாக மாறியது, பின்னர் நீ விழித்துக்கொண்டாய். நீ சாகிறாய், மீண்டும் சாய்கிறாய், பின்னர் நீ சாவுக்கு அப்பாற்பட்டுச் சென்றுவிடுகிறாய். இதை நான் எப்படி சந்தேகப்பட்டிருக்க முடியும்?” என்று கூறியிருப்பான்.

அவன் உன்னை பார்த்ததைப் போலவே, அவர்களையும் பார்த்தான். அது எப்படி இருந்தது என்று எனக்குத் தெரியும்.

அவன் வெடிகுண்டுகளினால் காயப்பட்டதைப் பார்க்கிலும் அதிகமாக, நீ அவர்களால் காயப்பட்டு, மயக்கத்தினாலும் கண்களின் தெளிவின்மையினாலும் பின்னாகச் சுழன்று விழுந்துவிட்டாய். காலம் எவ்வளவு கெட்டுப்போய்விட்டது! ஆவிகளாகிய அவர்களுக்கு முன்பாக, ஒரு ஆவியாக இருக்கிற நீயே பயந்து, குனிந்து, அந்த இடத்தைவிட்டு ஓடிஒளியும்போது, வெறும் மண்ணும் சேரும் கலந்த கலவையாகிய இந்தப் பொருள், அவர்கள் முன்பாக எவ்வளவு தைரியமாக நிமிர்ந்து நின்று, அவர்களோடு பேசுகிறது! அற்புதமும் விசித்திரமுமான இந்த விஷயம், அவனுடைய சந்தோஷத்தைத் தவிடுபொடியாக்கிவிடும் என்று, ஒருவேளை நீ நம்பிக்கையோடு இருந்திருப்பாய். ஆனால், இங்கு சபிக்கப்பட்ட விஷயம் அதுதான். தெய்வீகப் பிறவிகள் எல்லாம், அழிந்துபோகக்கூடிய மனிதகண்களுக்கு விசித்திரமானவர்களாகத் தெரிந்தாலும்கூட, அவர்கள் விசித்திரமானவர்கள் அல்ல. அவன் அவர்களைப் பார்த்த அந்த நேரம் வரைக்கும், அவர்கள் எப்படி இருப்பார்கள் என்று சிறிதளவுகூட நினைத்துப்பார்த்தது இல்லை, உண்மையில் அவர்கள் இருப்பதைக்கூட, சந்தேகப்பட்டுக்கொண்டு இருந்தான். ஆனால், அவன் அவர்களைப் பார்த்தபொழுது, அவர்கள் அவனுக்கு ஏற்கனவே அறிமுகமானவர்கள் என்பதை அறிந்துகொண்டும், தன்னுடைய வாழ்க்கையின் பல நேரங்களிலே, அவர்கள் ஒவ்வொருவரும் செயலாற்றின அந்தப் பகுதியையும் உணர்ந்துகொண்டதால், அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவன் கேட்பது, “நீங்கள் யார்?” என்ற கேள்வியை அல்ல, “அப்படியானால், இத்தனை காலமும் அதைச் செய்தது நீங்கள்தானா?” என்ற கேள்வியைத்தான். அவர்கள் யார் என்பதும், அவர்கள் கூறியவைகளும், இந்த சந்திப்பில், பல பழைய நினைவுகளை எழுப்பிவிடுகின்றன. குழந்தைப் பருவத்திலிருந்து, தான் தனிமையாய் இருந்த நேரத்திலெல்லாம், தன்னைச் சுற்றிலும் நண்பர்கள்

இருப்பதைப் போன்ற, அந்த மங்கலான உணர்வுக்கான விளக்கம், இப்பொழுது கிடைத்துவிட்டது. தன்னுடைய ஞாபகத்திலிருந்து எப்பொழுதும் நழுவிக்கொண்டேயிருந்த, ஒவ்வொரு புனிதமான அனுபவத்தின் மையத்திலும் இருந்த, அந்த இசையை, இப்பொழுது அவன் மீண்டும் பெற்றுக்கொண்டான். தன் சடலத்தினுடைய கைகால்களின் அசைவு அடங்கும் முன்பே, அவர்களை அவன் அடையாளம் கண்டுகொண்டதால், அவன் அவர்களில் ஒருவனாகிவிட்டான். நீ மட்டும்தான், தனித்து நின்றாய்.

அவன் அவர்களை மட்டும் பார்க்கவில்லை; அவனையும் பார்த்தான். இந்த மிருகத்துக்கு, ஒரு படுக்கையின் மேல் பெற்றெடுக்கப்பட்ட இந்தப் பொருளுக்கு, அவனைப் பார்க்கமுடிகிறது. எது உன் கண்களை குருடாக்கி, மூச்சுத் திணறலை கொடுக்கக்கூடிய நெருப்பாக இருக்கிறதோ, அது அவனுக்கு குளிரான வெளிச்சமாகவும், தெளிவு என்பதாகவும்கூட இருக்கிறது. மேலும், அது ஒரு மனிதனுடைய உருவத்தை அணிந்துகொண்டிருக்கிறது. அந்த நோயாளி அந்த பிரசன்னத்துக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுவதையும், அவனுடைய சுய-வெறுப்பையும், தன் பாவங்களை குறித்து அவன் பெற்றுக்கொள்ளுகிற முழு அறிவையும் (ஆமாம் எட்டி, உன்னைக் காட்டிலும் மிகத் தெளிவான அறிவையும்), பரலோகத்தின் இருதயத்திலிருந்து வெளியேறுகிற, அந்த உயிரற்ற காற்றை நீ முகரும்போது, உனக்கு ஏற்படுகிற மூச்சுத் திணறலுக்கும், உன்னை முடமாக்குகிற உணர்ச்சிகளுக்கும் ஒப்புமையாகச் சொல்லுவதற்கு, நீ விரும்பக்கூடும் (அப்படி உன்னால் செய்யமுடிகிற பட்சத்தில்). ஆனால், இவையெல்லாம் அனாவசியமானவைகள். சில வலிகளை, அவன் இன்னும்கூட எதிர்கொள்ள வேண்டியிருக்கும், ஆனால், அந்த வலிகளை, அவர்கள் ஆரத்தழுவிக் கொள்ளுகிறார்கள். அதை உலகத்திலுள்ள எந்த இன்பத்திற்கும் பதிலாக,

ஒருபோதும் பண்டமாற்றம் செய்துகொள்ள மாட்டார்கள். நீ முன்னொரு காலத்தில் அவனைச் சோதிப்பதற்காகப் பயன்படுத்தி இருக்கக்கூடிய, உணர்வு, இதயம், அல்லது அறிவின் மகிழ்ச்சிகளெல்லாம், நற்குணங்கள் தரும் மகிழ்ச்சிகளையும் சேர்த்து, இவையெல்லாவற்றையும், அவன் இப்பொழுது ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எப்படித் தெரிகிறதென்றால், ஒரு மனிதன் தன் வாழ்க்கை முழுவதும் நேசித்த, இறந்துவிட்டதாக நம்பிக்கொண்டிருந்த, தன்னுடைய உண்மையான அன்பிற்குரியவள், உயிரோடு இருக்கிறாள் என்பதையும், இப்பொழுது தன்னுடைய வாசல்படியில் வந்து நிற்கிறாள் என்பதையும் அவன் அறிந்துகொள்ளும்போது, ஒரு அரைமயக்கமான ஈர்ப்பை உண்டுபண்ணுகிற, ஒரு முரட்டுத்தனமான வேசி, அவன் கண்களுக்கு எப்படித் தெரிவாளோ, அப்படியாகத்தான் அது தெரிகிறது. வலியும் இன்பமும் எல்லையற்ற மதிப்புகளைப் பெற்றுக்கொள்ளுகிற ஒரு உலகத்துக்குள், நம்முடைய எல்லா கணிதங்களும் தலைகீழாக மாறுகிற ஒரு உலகத்துக்குள், அவன் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறான். மீண்டுமாக, விவரிக்கமுடியாத ஒன்றை நாம் எதிர்கொள்கிறோம். உன்னைப் போன்ற பயனற்ற சோதனையாளர்களாகிய சாபத்துக்கு அடுத்தபடி, நம்மில் இருக்கக்கூடிய பெரிய சாபம் எதுவென்றால், நம்முடைய உளவுத்துறை ஆகும். அவன் (எதிரி) என்னதான் செய்ய நினைக்கிறான் என்பதுமட்டும் நமக்குத் தெரிந்துவிட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்! ஐயோ, ஐயோ, தன்னில்தானே வெறுக்கப்படத்தக்கதும், மடத்தனமும் அருவருப்பும் நிறைந்ததுமாகிய, ‘அறிவு’ என்பது, வல்லமையோடு இருப்பதற்கு எவ்வளவு அவசியமான ஒன்றாகவும் இருக்கிறது. சில நேரங்களில், நான் விரத்திக்குள்ளாகவே சென்றுவிட்டதைப்போலத் தோன்றுகிறது. என்னைத் தக்கவைப்பதெல்லாம், நம்முடைய யதார்த்தமும், (எல்லா சோதனைகளின் மத்தியிலும்) நமக்கு


மறுக்கப்படுகிற எல்லா முட்டாள்தனமான பேச்சுகளும் மற்றும் கைத்தட்டல்களும், கடைசியில் ஜெயிக்கும் என்ற அந்த நம்பிக்கை மட்டுமே. அதுவரையில், நான் உன்னோடு தீர்த்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கிறது. மிகுந்த உண்மையொடு கையெழுத்திடுகிறேன்.

இப்படிக்கு அதிகமதிகமாகவும் பேராசையோடும் உன்னை நேசிக்கிற, உன் அன்பு மாமா,

திருக்கன்

# திருக்கனின் கடிதங்கள்

**என் அன்பு எட்டி, ....**



நாம் எதிர்கொள்ளும் கிறிஸ்தவ வாழ்க்கையின் மறைந்திருக்கும் போராட்டத்தை நீங்களே உணர விரும்புகிறீர்களா? திருக்கனின் கடிதங்கள்—C.S. லூயிஸ் எழுதிய ஒரு அதிநவீன சிந்தனைக்குரிய கதை. இது மூத்த பேயான திருக்கன், தனது இளைய சீடரான எட்டி என்பவனை, மனிதர்களை தேவனிடமிருந்து திருப்பிக்கொண்டு வருவதற்கான தந்திரங்களை கற்றுக்கொடுத்து எழுதும் கடிதங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது.

இந்த நூல் நகைச்சுவையுடனும் கூர்மையான பார்வையுடனும், மனித மனதின் பலவீனங்களை வெளிப்படுத்தி, நமது ஆன்மீக வாழ்க்கையில் நாம் எப்படி சோதிக்கப்படுகிறோம் என்பதை தெளிவாக காட்டுகிறது. இந்த கடிதங்கள் உங்கள் அனுபவத்தை பிரதிபலிக்கச் செய்யும்!

நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது உங்களின் மனதில் ஏதேனும் தடங்கல்கள் வருகிறதா? நீங்கள் பைபிள் வாசிக்கும்போது கவனம் சிதறுகிறதா? இவையெல்லாம் எப்படி வேலை செய்கின்றன என்பதை நகைசுவையாக இந்நூல் வெளிப்படுத்துகிறது.

> "பிசாசை வெல்வதற்கான ஒரு மிகச்சிறந்த வழி, அவன் உங்களின் இருப்பை எவ்வளவு மெல்லியதாக மாற்ற விரும்புகிறானோ, அதற்கு நேர்மறையாக மாறுவதில் உள்ளது." – C.S. லூயிஸ்

- கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் மறைவான சோதனைகளைக் காட்டும் அதிநவீன புரிந்துணர்வு.
- நமக்கு தெரியாமல் நிகழும் ஆன்மீக போரை வெளிச்சம் பார்க்கச் செய்யும் முக்கியமான படைப்பு.
- பரிசுத்த வாழ்க்கைக்கு அழைப்பும், விழிப்புணர்வும் அளிக்கும் நூல்.

உங்கள் ஆன்மீக வாழ்க்கையின் பின்னணியில் நடக்கும் யதார்த்தங்களை புரிந்துகொள்ள தயாரா?

Publisher: christianityintamil.com